# திருமறைக் களஞ்சியம்



21

தொகுப்புகள்

S.சக்தி தேவதாஸ்

# ஆசரிப்புக்கூடாரமும் அதன் திருஷ்டாந்தங்களும்



# உள்ளடக்கம்

ஆசரிப்புக் கூடாரமும் அதன் திருஷ்டாந்தகளும் என்ற இந்த சிறு புத்தக பிரதியின் உள்ளே, மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது: திருமறைக் களஞ்சியம் என்ற தலைப்பில், ஆசாரிப்புக் கூடாரத்தின் பாடங்களின் பிரசங்கக் குறிப்புகளோடு, படவிளக்கங்களும் சேர்த்து 26 பகுதிகள் உண்டு. இப்பகுதிகள் யாவும் உரைநடையில் புத்தகமாக ஏழுதப்பட்டு, இன்னும் அச்சிட இயலாத நிலைமையில் இருக்கிறது. 1972 முதல் வேதாகம பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இப்பாடங்களின் குறிப்புகளை, அநேக விசுவாசிகள் தங்களுக்கு வேண்டுமென என்னிடம் கேட்டபடியால், அவைகளை எழுதி ஜெராக்ஸ் செய்து, நூற்றுக்கு மேற்பட்ட பிரதிகள் கொடுத்தும் போதாதபடியால், மேற்கூறிய விதமாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது: மெய்ஞான வைத்திய சாலை என்ற இப்பகுதியில் பன்னிரு அதிகாரங்கள் உள்ளன. இவைகள் தொன்னூறு அதிகாரங்கள் கொண்ட ஒரு புத்தகத்தின் முன்னடக்கச் செய்திகளாகும். இந்த சிறு புத்தகத்தில் வெளியிடப்பட்ட இப்பகுதி முழுமையான செய்திகளல்ல! அதினால் இதில் விளங்காத பகுதிகள் புத்தகமாக வெளிவந்தவுடன் மிக எளிதாக விளங்கும் புத்தகமாக இருக்கும்.

மூன்றாவது:- நித்திய ஜீவன் என்ற இப்பகுதியில் இயேசுவாவைருடைய இரகசிய வருகை; வெளியரங்கமான வருகையைப்பற்றின பிரசங்கக் குறிப்புகள் பன்னிரு பகுதிகளாக இருக்கின்றன. இதனுடைய உரைநடை செய்திகள் புத்தகமாக வெளியிட இயலவில்லை.

இவைகள் யாவும், இப்பிரதிகள் பெறக்கூடிய விசுவாசிகள் வாசித்து தங்களுக்கு விளக்கக் கூடுமானால், தாங்கள் இருக்கிற இடங்களில் உள்ள தேவ ஜனங்களுக்காக பயன்படுத்தும் பிரசங்கக் குறிப்புகளாகும். இவைகள் யாவும் முழுமையான செய்திகளல்ல! தேவ சமூகத்தில் விசுவாசிகள் அமர்ந்து, பரிசுத்த வேதாகமத்தை தியானத்தோடு வாசிக்க கூடுமானால், மேலும், அதிகமான செய்திகள் கிடைக்கக் கூடும் என்பது என் நம்பிக்கையாகும்.


112-25/3<br>
தேவராய நகர்,<br>
திருச்சி–620 021.

உங்கள் சகோதரன்<br>
S. சக்தி தேவதாஸ்<br>
17-5-2004

# திருமறைக்களஞ்சியம்

## 1. கி.மு. வருசங்கள்

அதிகாரப்பூர்வமான வருசங்களை, வேதாகமத்தின் வசனங்களோடு ஒப்பிட்டு காட்டப்பட்டிருப்பதோடு, இஸ்ரவேலர்களின் ஏழு நானூற்றி தொன்னூறு வருசங்களும், புறஜாதி அரசர்களின் ஒரு நானூற்றி என்பத்திமூன்று வருசங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| அதிகாரங்களும் வசனங்களும் | பெயர் | வேதாகம வருசங்கள் | கி.மு. வருசங்கள் |
|---|---|---|---|
| ஆதி 5:1-3 | ஆதாம் | 130 | 4019 |
| 6 | சேத் | 105 | 3889 |
| 9 | ஏனோஸ் | 90 | 3784 |
| 12 | கேனான் | 70 | 3694 |
| 15 | மகலாலெயேல் | 65 | 3624 |
| 18 | யாரேத் | 162 | 3559 |
| | சேத்முதல் யாரேத் வரை உள்ள வருசங்கள் | 492 | |
| 22 | ஏனோக்கு | 300 | 3397 |
| 28 | லாமேக் | 182 | 3097 |
| 32 | நோவா | 500 | 2915 |
| | ஏனோக் முதல் நோவா வரை | 982 | |
| | இரண்டு 490 வருசங்கள் | | |
| ஆதி 11:10 | சேம் | 100 | 2415 |
| 12 | அர்பக்சாத் | 35 | 2315 |
| 14 | சாலா | 30 | 2280 |
| 16 | ஏபேர் | 34 | 2250 |
| 18 | பேலேகு | 30 | 2216 |
| 20 | ரெகு | 32 | 2186 |
| 22 | செருகு | 30 | 2154 |
| 24 | நாகோர் | 29 | 2124 |
| 26 | தேராகு | 70 | 2095 |
| ஆதி 21:5 | ஆபிரகாம் | 100 | 2025 |
| | சேம் முதல் ஆபிரகாம் முடிய உள்ள வருசங்கள் | 490 | |
| ஆதி 25:26 | ஈசாக்கு | 60 | 1925 |
| யாத் 12:40,41 | யாக்கோபும், இஸ்ரவேலர்களும் | 430 | |
| | ஈசாக்கு முதல் இஸ்ரவேலர்கள் | | |
| | எகிப்தில் குடியிருந்து விடுதலையானது வரையுள்ள வருசங்கள். | 490 | |
| | 40 வருச இஸ்ரவேல் பயணம் | | 1435 |
| | ❖ யோசுவா | | |
| | ❖ நியாதிபதிகள் | | |
| | ❖ சாமுவேல் | | |
| | ❖ சவுல் | | |
| | ❖ தாவீது | | |
| 1ராஜா 6:1 | எகிப்து முதல் சாலொமோன் வரை ஆட்சித் தொடர்ச்சி | 480 | |
| 38 | ஆலயத்தை கட்டி முடித்தல் | 3 | |
| | இஸ்ரவேல் விடுதலை முதல் | 7 | |
| | சாலமோன் வரையுள்ள வருசங்கள் | 490 | |
| II நாளா 9:30,31 | சாலொமோன் | 40 | 945 |
| 12:13,14 | ரெகொபெயாம் | 17 | 905 |
| 13:1,2 | அபியா | | |
| 14:1 | | 3 | 888 |
| 16:13 | ஆசா | | |
| 17:1 | | 40 | 885 |
| 20:31 | யோசபாத் | 25 | 845 |
| 21:1-5 | யோராம் | 8 | 820 |
| 22:1,2 | அகசியா | 1 | 812 |
| 11 | | | |
| 24:1 | யோவாஸ் | 40 | 811 |
| 24, 27 | அமத்சியா | 29 | 771 |
| 25:1 | | | |
| 26:1-3 | உசியா | 52 | 742 |
| 23 | | | |
| 27:1 | யோதாம் | 16 | 690 |
| 9 | | | |

| அதிகாரங்களும் வசனங்களும் | பெயர் | வேதாகம வருசங்கள் | கி.மு. வருசங்கள் |
|---|---|---|---|
| 28:1 | ஆகாஸ் | 16 | 674 |
| 27 | | | |
| 29:1 | எசேக்கியா | 29 | 658 |
| 32:33 | | | |
| 33:1 | மனாசே | 55 | 629 |
| 20,21 | ஆமோன் | 2 | 574 |
| 25 | யோசியா | 31 | 572 |
| 36:1-5 | யோயாக்கீம் | 11 | 541 |
| 11 | சிதேக்கியா | 11 | 530 |
| 21 | பாபிலோன் சிறையிருப்பு | 70 | 519 |
| | சாலொமோன் முதல் பாபிலோன் சிறையிருப்பு | 496 | |
| | வரையுள்ள வருடங்கள் 490 இவைகளில் | | |
| | ❖ நேபுகாத்நேச்சார் | | |
| | ❖ ஏவில் மெரொதாக் | | |
| | ❖ பெல்ஷாத்சார் | | |
| | ❖ தரியுவின் மேதிய ராஜ்யத்தின் | | |
| | ஒரு வருட காலமும்உட்படும். | | |
| தானி 9:24-27 | பெர்சியரின் 7 வாரமென்ற | | |
| | 49 வருசங்கள் 49 யூபிலிவருசம் | 49 | |
| | பெர்சிய ராஜ்யங்கள்? | 200 | 249 |
| I மக்க 1:1-8 | கிரேக்க ராஜ்ய ஸ்தாபிதமும் | | |
| | மகா அலெக்ஸாந்தரும் ராஜ்ய வருசங்கள் | 1-12 | 248 |
| 1 மக்க 1:11 1 | அந்தியோகு எப்பிபானே எழுச்சி | 137 | 112 |
| 21 | அந்தியோகு இஸ்ரவேலை தாக்குதல் | 143 | 107 |
| 57 | அந்தியோகுவின் அருவருப்பு | 145 | 105 |
| 2:70 | மத்தத்தியாஸ் மரணம் | 146 | 104 |
| 3:37 | அந்தியோகு மேதியா படையெடுப்பு | 147 | 103 |
| 4:52 | யூதாஸ் மக்கபேயு தேவாலயத்தை | | |
| | புதுப்பித்தல்யூதாஸ், ரோமர் உடன்படிக்கை | 148 | 102 |
| 6:16 | அந்தியோகு மரணம் | 149, | 100 |
| 7:1 | தெமெத்திரிஸ் | | |
| | II அந்தியோகுவை கொலை செய்தல் | 151 | 98 |
| 9:1-18 | யூதாஸ் மக்கபேயு மரணம் | 152 | 97 |
| 54 | ஆல்சிமுஸ் யூதர்களுக்கு தூரோகம் பண்ணுதல் | 153 | 96 |
| 10:1 | II அந்தியோகுவின் மகன் | | |
| | II அலெக்ஸாந்தர் தோலெமாயிதைப் பிடித்தல் | 160 | 89 |
| 10:55-58 | எகிப்து அரசன் தெமெத்திரியுஸின் மகள் | | |
| | கிளியோபாத்திராவை II அலெக்ஸாந்தர் | | |
| | விவாகம் பண்ணுதல் | 162 | 87 |
| 67 | எகிப்து அரசனின் மகன் | | |
| | II தெமெத்திரியுஸின் எழுச்சி | 165 | 84 |
| 11:19 | II தெமெத்திரியுஸ் சிங்காசனம் ஏறுதல் | 167 | 82 |
| 13:41 | இஸ்ரவேல் கிரேக்க அரசிடமிருந்து விடுதலை பெறுதல் | 170 | 79 |
| 51 | இஸ்ரவேல் வெற்றி விழா | 171 | 78 |
| 14:1, | 27 II தெமெத்திரியுஸ் மேதியாவில் | | |
| | சிறையாகுதல் இஸ்ரவேல் அறிக்கை | 172 | 77 |
| 15:10-14 | IV அந்தியோகு எழுச்சி | 174 | 75 |
| 16:11-17 | சீமோனும் அவன் குமாரர்களும் கொலை செய்யப்படல் | 177 | 71 |
| | II மக்கெ. 1:10 மக்கபேயு ஆகமம் எழுதுதல் | 188 | 60 |
| | ரோமர்களின் எழுச்சி? | 200 | 48 |
| லூக் 2:1,2 | அகுஸ்துராயன் கட்டளை | 2 | 2 |
| | இயேசுவின் பிறப்பு (மத் 2:16) | 2 | கி.பி.30 |
| 3:23 | இயேசுவானவர் ஞானஸ்நானம் | | |
| 4:16 | நாசரேத் ஜெபஆலயத்தில் வாசிப்பு | 30 | |
| தானி 9:26,27 | சிலுவை மரணம் | | 33.½ |
| மாற் 15:15 | இடையே 2000 வருடங்கள் அனுக்கிரக | 483 | |
| | வருசங்கள் மீதி ஒருவாரமாகிய | 7 | |
| | மொத்த வருசங்கள் | 490 | |

## 2. ஆதாம் முதல் நோவா வரையுள்ள வயது அட்டவணை

| | | ஆதாம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதி 5:5 | ஆதாம் | 930 | | | | | | | | | | ஆதி 5:5 | 930 |
| 3 | ஆதாம் | 130 | சேத் | | | | | | | | | 8 | 912 |
| 5 | சேத் | 235 | 105 | ஏனோஸ் | | | | | | | | 11 | 905 |
| 9 | ஏனோஸ் | 325 | 195 | 90 | கேனான் | | | | | | | 14 | 910 |
| 12 | கேனான் | 395 | 265 | 160 | 70 | மகலாலெயேல் | | | | | | 17 | 895 |
| 15 | மகலாலெயேல் | 460 | 330 | 225 | 135 | 65 | யாரேத் | | | | | 20 | 962 |
| 18 | யாரேத் | 622 | 492 | 387 | 297 | 227 | 162 | ஏனோக் | | | | 23 | 365 |
| 21 | ஏனோக் | 687 | 557 | 452 | 362 | 292 | 227 | 65 | மெத்தூசலா | | | 27 | 969 |
| 25 | மெத்தூசலா | 874 | 744 | 639 | 549 | 479 | 414 | 252 | 187 | லாமேக்கு | | 31 | 777 |
| 28,29 | லாமேக்கு | - | - | 821 | 731 | 661 | 596 | - | 369 | 182 | நோவா | ஆதி 7:6 | 600 |
| 32 | நோவா | - | - | - | - | - | - | - | 869 | 682 | 500 | சேம்காம் யாப்பேத் | ஜல பிர |

## 3. நோவா முதல் ஆபிரகாம் வரையுள்ள வயது அட்டவணை

| | | நோவா | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதி 5:32 | நோவா | 500 | சேம் | | | | | | | | | |
| 11 : 10 | சேம் | 600 | 100 | அர்பக்சாத் | | | | | | | | |
| 12 | அர்பக்சாத் | 635 | 135 | 35 | சாலா | | | | | | | |
| 14 | சாலா | 665 | 165 | 65 | 30 | ஏபேர் | | | | | | |
| 16 | ஏபேர் | 699 | 199 | 99 | 64 | 34 | பேலேகு | | | | | |
| 18 | பேலேகு | 729 | 229 | 129 | 94 | 64 | 30 | ரெகூ | | | | |
| 20 | ரெகூ | 761 | 261 | 181 | 126 | 96 | 62 | 32 | செரூகு | | | |
| 22 | செரூகு | 791 | 291 | 191 | 156 | 126 | 92 | 62 | 30 | நாகோர் | | |
| 24 | நாகோர் | 820 | 320 | 220 | 185 | 155 | 121 | 91 | 59 | 29 | தேராகு | |
| 26 | தேராகு | 890 | 390 | 290 | 255 | 225 | 191 | 161 | 129 | 99 | 70 | ஆபிரகாம் |
| 9 : 29 | நோவா | 950 | 450 | 350 | 315 | 285 | 251 | - | 189 | - | 130 | 60 |

குறிப்புகள் :

- நோவா பின் தலைமுறைகளில் சேம் வம்சத்தில் ஆபிரகாம் வரை எல்லாரையும் பார்த்தான்.
- நோவா மரணத்திற்குப்பின் தேராகு கல்தேயர் தேசம் விட்டு புறப்பட்டான் ; ஆரானுக்கு வந்து 15 வருடங்கள் தங்கினான்
- ஆரானைவிட்டு ஆபிரகாம் 75 வயதில் கானான் தேசம் புறப்பட்டான் (ஆதி 12:4)
- ஆபிரகாமின் பூமிக்குரிய சுதந்திர சந்ததிகள் (எபி. 11:8,9)
  ஆபிரகாமுக்கு 175 வயதாகும்போது ஈசாக்கு 75 வயது, யாக்கோப்பு 15 வயது
- ஆபிரகாமின் வருசங்கள் :

| | | |
|---|---|---|
| முன்னோர்களோடு | 75 | வருசங்கள் |
| கர்த்தரோடு | 25 | வருசங்கள் |
| பின்னோர்களாடு | 75 | வருசங்கள் |
| ஆக | 175 | வருசங்கள் |

## 4. ஆபிரகாம் முதல் மோசே வரையுள்ள வயது அட்டவணை

| ஆபிரகாமின் வயது ஆதி 11:26 | மரணமடைந்த வர்களின் பெயர்கள் | வாக்கியங்கள் | மரணமடைந் தவர்களின் வயது | சம்பவங்கள் | ஈசாக்கின் வயது | சம்பவங்கள் | யாக்.வயது | சம்பவங்கள் | யோ.வயது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | நாகோர் | ஆதி 11:25 | 119 | | | | | | |
| 46 | ரெகூ | 21 | 207 | | | | | | |
| 60 | நோவா | ஆதி 9:27 | 950 | ஆபிரகாம் கல்தேயா விட்டு சீரியா புறப்படுதல், ஆதி 11:31–15:7 | | | | | |
| 71 | செருகு | ஆதி 11:23 | 200 | | | | | | |
| 75 | | | | ஆபிரகாம் சீரியா விட்டு காணான் புறப்படுதல் ஆதி 12:1–4 | | | | | |
| 78 | சாலா | ஆதி 11:15 | 403 | | | | | | |
| 86 | | | | இஸ்மவேலின் பிறப்பு ஆதி 16:16 | | | | | |
| 89 | பேலேகு | ஆதி 11:19 | 280 | | | | | | |
| 100 | | | | ஈசாக்கு பிறப்பு ஆதி 21: 5 | | | | | |
| 110 | சேம் | ஆதி11:11 | 500 | | 10 | | | | |
| 113 | அர்பக்சாத் | ஆதி11:13 | 403 | | 13 | | | | |
| 115 | | | | ஈசாக்கை பலியிட / ரெபேக்காள் பிறப்பு. ஆதி 22:20–23 | 15 | | | | |
| 130 | தேராகு | ஆதி 11:32 | 205 | | 30 | | | | |
| 137 | சாராள் | ஆதி 23:1 | 127 | | 37 | | | | |
| 140 | | | | ஈசாக்கின் விவாகம் ஆதி 25:20 | 40 | | | | |
| 160 | | | | ஏசா, யாக்கோபு பிறப்பு ஆதி 25 :26 | 60 | எபி 11:9 | 1 | | |
| 175 | ஆபிரகாம்<br>ஏபேர் | ஆதி 25:7,8<br>ஆதி 11:7 | 175<br>464 | | 75<br>105 | எபி 11:9 | 15<br>45 | | |
| | | | | ஏசா, யாக்கோபை ஆசீர்வதித்தல் ஆதி 27:1–41 | 131 | யாக்கோபு, லாபனிடம் புறப்படுதல் | 71<br>90 | யாக்கோபு 4 மனைவிகள் விவாகமும் 11 பிள்ளைகள் பிறத்தல் | |
| | ராகேல் மரணம் | | - | | 151 | லாபனிடம் 20 வருசங்கள் தங்கல் | 91-99 | யோசேப்பு பிறப்பு, லாபனை விட்டு புறப்படுதல் | 1-8 |
| | | | | | 167 | ஈசோக்கோடு யாக்கோ வந்து தங்குதல் ஆதி 35:27 | 107 | யோசேப்பு எகிப்துக்கு,கடத்தப்படல் | 17 |
| | ஈசாக்கு மரணம் | | 180 | | 180 | யாக்கோபு ஏசா அடக்கம் செய்தல் ஆதி 35:28,29 | 120 | யோசேப்புக்கு எகிப்துக்கு அதிபதியானது ஆதி 45:11 | 30 |
| | | | | | | யாக்கோபு பார்வோனுக்கு முன்பாக நின்றது ஆதி 47:9 | 130 | செழிப்பும், பஞ்சமும் 9 வருசங்கள் கடந்தன ஆதி 45:11 | 39 |
| | யாக்கோபு மரணம் | | 147 | | | யாக்கோபு மரணம் ஆதி 47:28 | 147 | காணான் அடக்கத்திற்காக புறப்படுதல் | 56 |
| | யோசேப்பு மரணம் | | 110 | | | | | யோசேப்பின் ஆயுசு வருசங்கள் ஆதி 50:24–26 | 110 |
| | மேசே மரணம் | | 120 | | | | | | |

## இஸ்ரவேலின் 7 x 490 வருசங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சேத் முதல் ஏனோக் வரை | 492 வருசங்கள் |
| 2,3. | ஏனோக் முதல் நோவா வரை | 982 வருசங்கள் |
| 4. | சேம் முதல் ஆபிரகாம் வரை | 490 வருசங்கள் |
| 5. | ஈசாக்கு முதல் எகிப்தில் இஸ்ரவேல் விடுதலை வரை | 490 வருசங்கள் |
| 6. | இஸ்ரவேல் விடுதலை முதல் சாலொமோன் வரை | 490 வருசங்கள் |
| 7. | சாலொமோன் முதல் பாபிலோன் சிறையிருப்பு வரை | 496 வருசங்கள் |
| | யாக்கோபின் விடுபட்ட வருசங்கள் | 70 வருசங்கள் |
| | | 3510 வருசங்கள் |
| | புறசாதிகளுக்கு | 490வருசங்கள் |
| | அனுகிரகத்தின் வருசங்கள் | 2000 |
| | மறுஜென்ம வருசங்கள் | 1000 |
| | மொத்த வருசங்கள் | 7000 |

II பேது 3:8, உலகத் தோற்றத்தின் ஏழு நாட்களாகிய 7000 வருசங்கள் நிறைவேறி முடிதல்

**மேற்கூறிய கணக்கில் உட்படாத நிலைமைகளில் யோசேப்புக்கு விசுவாசத்தின் பலன்களாக ஒரு 490 வருசங்கள் கொடுக்கப்பட்டன**

| சம்பவங்கள் யாத் 13:19 எபி 11:22 | வருசங்கள் |
|---|---|
| யோசேப்பின் சரீரம் எகிப்தில் இருந்த காலங்கள் யாத் 12:40, 41 | 430 |
| வானாந்திர பயணம் யோசு 5:26 | 40 |
| அடக்கத்தின் காலம் யோசு 24:32 | 20 |
| | 490 |

## வருசங்களின் அட்டவணையின் விவரச் சுருக்கம் :

**1. ஆபிரகாம் :**

❖ நோவா முதல் தேராகு வரை (ஏபேர் தவிர) மற்றவர்கள் யாவரும் ஆபிரகாமின் காலத்தில் ஏகமாக மரண மடைந்தனர்.

❖ நோவா இறந்தவுடன் ஆபிரகாம் கானான் தேசம் போக கர்த்தரால் அழைப்பு பெற்று, சீரியா தேசத்திலுள்ள ஆரானுக்குப் போய் 15 வருசங்கள் தங்கினான்.

❖ சீரியாவிலிருந்து 75வது வயதில் மீண்டும் கர்த்தரின் அழைப்புப் பெற்று காணான் தேசம் புறப்பட்டான்.

**(உலக வாழ்க்கை)**

25 வருசங்கள் காணானில் பரதேசியாக சஞ்சரித்தான். (ஆவிக்குரிய வாழ்க்கை)

75 வருசங்கள் மகனோடு இருந்தான் (இளைப்பாறுதல் வாழ்க்கை)

175 ஆபிரகாம் ஜீவியத்தின் மொத்த வருசங்கள்

**2. ஈசாக்கு :**

❖ ஈசாக்கின் ஜீவிய மொத்த வருசங்கள் 180

❖ யோசேப்பு எகிப்துக்குக் கடத்தப்பட்டபோது ஈசாக்குக்கு 167 வயது

❖ ஈசாக்கு இறக்கும்போது யோசேப்புக்கு 30 வயது.

❖ யோசேப்பு எகிப்துக்கு அதிபதியானபோது ஈசாக்கு மரணமடைந்தான்.

**3. யாக்கோபு :**

❖ யாக்கோபுக்கு 71 வயதாகும்போது லாபான் வீட்டிற்குப் புறப்பட்டுப்போனான்.

❖ அவனுக்கு விவாகம் ஆகும் போது 78 வயது

❖ யோசேப்பு பிறக்கும்போது யாக்கோபுக்கு 91 வயது

❖ யாக்கோபு ஈசாக்கை விட்டு 22 வருடங்கள் பிரிந்து வாழ்ந்தான்

❖ அவன் யோசேப்பை விட்டும் 22 வருசங்கள் பிரிந்து வாழ்ந்தான்.

❖ யாக்கோபு யோசேப்பை 17 வருசங்கள் வரை பராமரித்தான் (வளர்த்தான்)

❖ அவன் யோசேப்பினால் 17 வருசங்கள் பராமரிக்கப்பட்டான்

❖ யாக்கோபு யோசேப்பை சரியான நிலைமையில் காப்பாற்றி வளர்க்காத காரணத்தினால் 22 வருசங்கள் வரை அவன் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லை (ஆதி 37:33-35, 46:1-4)

**4. யோசேப்பு :**

❖ யோசேப்பின் எலும்புகளை நாலு தலைமுறைகள் வரைக்கும் பாதுகாத்தார்கள்

❖ அவனின் விசுவாசத்தை கர்த்தர் கனம் பண்ணி, காணானில் அவனுடைய அடக்கம் நடைபெற கிருபை செய்தார்,

❖ ஒரு தனிப்பட்ட மனிதனுடைய விசுவாசத்திற்காக ஒரு தொகுதி காலமாகிய 490 வருசங்கள் கர்த்தர் கொடுத்தார்.

❖ ஒரு தொகுதி என்பது 490 வருசங்களாகும். இதுபோல இஸ்ரேலுக்கு 7-490 வருசங்கள் கொடுக்கப்பட்டன. இக்காலங்கள் ஆதாமினுடைய குமாரனாகிய சேத் துவங்கி மல்கியா வரை முடிவு பெற்றது.

**5. மோசே :**

❖ எண்பது வயதில் மரணத்தை எதிர்பார்த்த மோசே, தான் வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்து துன்பத்தைக் கண்ட வருசங்கள் தனக்கு தரவேண்டும் என ஜெபித்தான்.

❖ அதன்படி கர்த்தர் அவனுக்கு 40 வருசங்கள் ஆயுளை நீடித்துக் கொடுத்தார்.

❖ ஆனால் 40 வருச காலங்களாக இஸ்ரேல் புத்திரர்களை கானான் தேசத்தில் கொண்டுபோய் சேர்க்க அவனால் முடியவில்லை.

❖ வணாந்திரத்தில் வைத்து அவனுடைய வருசங்கள் முடிந்து போனதால் அவன் அங்கேயே மரணமடைந்தான்.

❖ பெரிய தீர்க்கதரிசியாகிய மோசேயின் வாழ்க்கைத் தோல்வியாக முடிந்தது.




## மெய்ஞான வைத்தியசாலை:

### ஆக்கியோனின் அறவுரை:

மகா கனம் பொருந்திய உத்தம சீலனுக்கு, நான் பரதேசியாக சஞ்சாரம் செய்யத் துவங்கிய நாள் தொடங்கி, இந்நாள் மட்டும், பூதலத்தினுடைய சகல தேசங்களையும், அதின் பட்டணங்களையும் சுற்றி நடந்து, பற்பல சாதி சனங்களையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், பாஷைகளையும் அறிய நேரிட்டது. அவ்வாறு நடந்து வந்த காலத்தில் நான் பரம நிழல் தேசத்தில் உள்ள உருசாலேம் பட்டணம் வந்து சேர்ந்தேன். அங்கு நான் பிரமிக்கத்தக்க நிலையில் உள்ள சீயோன் மலையரசரின் மெய்ஞான வைத்திய சாலையைக் . கண்டேன். பூதலத்திலுள்ள நானாவித சாதி சனங்களின் சகல வித பாவ பிணிகளுக்கும் விமோசனம் செய்யும் இவ்வைத்திய சாலையைப் பற்றியும், அதன் நடபடிகளைப் பற்றியும் நீர் அறிய வேண்டுமென்று அவைகளை ஒழுங்காக எழுதுவது எனக்கு நலமாகத் தோன்றியது.

எனதருமை உத்தம சீல பிரியனே, இப்பிரபந்தத்தில் நான் மெய்ஞான வைத்திய சாலையைப் பற்றி, உமக்கு அறிவிப்பதற்கு முன்பு, பற்பல சாதி சனங்களின் பழக்க வழக்கங்களையும் அறியப்படுத்த நேரிட்டபடியால், முற்றிலும் கானான் தேச பாஷையில் எழுத முடியாமல், இடை இடையே சாதிகளுடைய பாஷையில் எழுத வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. எனவே எனது மொழி நடைகளை பாஷை புரட்டு என்று புறக்கணியாமல் பொறுப்பீராக

மேலும் இப்பிரபந்த சேதிகளை ஏதோ குப்பை கூளங்கள் என்று எண்ணி தயை செய்து நீர் தூர எறிந்திட வேண்டாம். ஏனெனில் அதற்குள்ளே பொதிந்து மறைந்து கிடக்கும் விலையேறப் பெற்ற முத்துக்களைப் போல, உள்ள காரியங்களை நீர் பார்க்க முடியும்! இருப்பினும் நீர் இவைகளை குப்பை கூளங்களாகவே பாவித்து தூர எறிந்து விடுவீரானால், அதோடு உள்ள விலையேறப் பெற்ற முத்துக்களையும் எறிந்து விட்டு உமது வாழ்க்கையில் உம்மைத் தேடி வந்த தேவ நற்பாக்கியத்தை நீர் இழந்தவராக இருப்பீர்!

மேலும் நான் மறுபடியும் தேச சஞ்சாரம் செய்து, சேதிகளை உமக்குத் தெரியப்படுத்த முடியாத நிலையில் உள்ள வயோதிகனாக இருக்கிறேன். எனவே நீர் பொறுமையுடன் அதிக கவனத்துடன் உமது மனதை ஒருமுகப்படுத்தி நான் எழுதியவைகளை, அதிக சிரத்தையோடு வாசித்து தெளிவடைவீராக! கிருபையானது உம்மோடு கூட இருப்பதாக! ஆமென்!

உமக்கு மிகவும் பிரியமான
தேச சஞ்சாரியன்.

*இறுதிநாளின் இறுதி மாதம்*
*பூர்விக வாதியின் இறுதியாண்டு*
*மெய்ஞான வைத்திய சாலை*
*சீயோன் மலை*
*உருசாலேம் பட்டணம்*
*பரம நிழல் தேசம்.*

## மெய்ஞான வைத்திய சாலை

# 1. உன்னத புரி

### *உன்னத புரி:-*

சர்வ சிருஷ்டி கர்த்தாவாகிய ஏலோகீம் என்ற திரியேக, பரம ஞான பிதாவாகிய சருவேசுரன் என்ற ஏக சக்ராதிபதி வாசம் செய்யும் மகா பரிசுத்த ஸ்தலமே இந்த உன்னதபுரியாகும். இங்கு அவர் தமது வலது பாரிசமாகிய அரியாசனத்தில் வீற்றிருந்து, யுகா யுகங்களாக செங்கோலோச்சி வந்தார்.

அவருடைய அரியாசனம் அக்கினி ஜுவாலையாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவருடைய சந்நதியிலிருந்து அக்கினி நதி ஒன்று புறப்பட்டு ஓடியது. இந்த ஏக சக்ராதி பதியும், சருவேசுரனுமாகிய நீண்ட ஆயுசுள்ளவர், நித்தியானந்த முள்ள ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், நித்திய பிதாவுமாகவும், நரரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக் கூடாதவருமாகவும், சகல கனமும், மகிமையும் பொருந்தினவராய் தமது அரியாசனத்தில் வீற்றிருந்தார்.

இதோ! அவருடைய தோற்றம் வெண்பளிங்கு போன்ற வச்சிரத் தோற்றமும் இளம் ரோஜா வர்ணமான பதுமராகத்திற்கு ஒப்பாகவும் இருந்தது. அவருடைய சிரசு வெண்பனியாகியது போல வெண்மையாக இருந்தது. இதோ! அவருடைய சிரசுக்கு மேலே நீல இரத்தினப் பிரகாசமும், பசுமையான மரகதமும் கலந்த தோற்றம் காணப்பட்டது. அந்த பிரகாசத்தைச் சுற்றிலும் வானவில்லின் பலவிதமான வர்ணங்கள். இரத்தினங்களின் பிரகாசத்தைப் போல காணப்பட்டது. அவருடைய இடுப்புக்கு மேல் அக்கினிமயமான சொருகாவின் பிரகாசமும், அவருடைய பாதங்களின் கீழ் நீலக்கல்லுக்கு ஒப்பான தெளிந்த வானத்தின் பிரபை போலவும் காணப்பட்டது. அவர் சகல உலகத்தையும் தமது பாதத்திற்குக்

கீழ்ப்படுத்தி அரசாட்சி புரிந்து வந்தார். இந்த உன்னத புரியான மகா பரம தேசம் மூன்று மகா பெரிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதலாவது: சருவேசுரன் வாசம் செய்யும் விசுத்தாலய மாளிகை இருக்கும் நாடே இந்த மகா உன்னத புரியாகும். விசுத்தாலய மாளிகையில் சருவேசுரனும், அவருடைய நேச மைந்தனும் சீயோன் மலை இளவரசருமான இமானுவேலரும், தேவனாவிராயருமாகிய திரியேக கர்த்தாவான அவர்கள் தவிர வேறு யாரும் அங்கு வாசம் செய்ததில்லை. நரரும், சுரரும் ஒருகாலும் அங்கு பிரவேசித்ததில்லை. அங்கு பிரவேசிக்க வேறு யாருக்கும் சருவேசுரன் கட்டளையிடவுமில்லை. தாமே ஏக கர்த்தாவாக தம் அரியாசனத்தில் வீற்றிருந்து அரசாட்சி புரிந்து வந்தார்.

## ஏதேன் புரி:

இரண்டாவது இந்த ஏதேன் புரி நாடு மகா விசாலமானதாக இருந்தது. இந்நாட்டில் சருவேசுரனின் ஏழு சிற்றரசர்களாகிய அதிபதிகள் வாசம் செய்தனர். இவர்களுடைய ஆலோசனையன்றி இந்த பரம தேசத்தில் ஒன்றும் நடைபெறுவதில்லை. இவர்கள் பரம தேசத்தை மட்டுமல்ல, பூதல தேசங்களையும் கண்காணித்து வந்தனர். இவ்வேழு அதிபதிகளின் நாமங்களாவன: நித்தியாதிபதி, சர்வ வியாபகனாதிபதி, தூயாதிபதி, நீதியினதிபதி, நேசாதிபதி, சர்வ ஞானாதிபதி, மகிபனாதிபதி, ஆகியவனவாகும். இவர்கள் ஏழு பேரும் சக்ராதிபதியாகிய சருவேசுரனின் ஜீவனோடு ஒன்றியவர்களாகும். எனவே இவர்களுக்கு பரம தேசத்தினுடைய சகல அதிகாரங்களும், கர்த்தத்துவங்களும், வல்லமைகளும், மகத்துவமும், மேன்மையும், மகிமையும் கொடுக்கப்பட்டிருந்தன. இவர்கள் அதரிசனர்களாக எங்கும் வியாபித்திருந்தனர். இந்த ஏதேன்புரியிலிருந்து உன்னத புரிக்கு போகும் மகாவாயிலின் காவலுக்கு நான்கு கேரூபீன்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். நான்சிரங்கள் கொண்ட இவர்கள் ஏக சக்ராதிபதியாகிய சருவேசுரனுக்கு மகிமையுண்டாக, சர்வ வல்ல கர்த்தாவு தூயர், தூயர், தூயர் என போற்றி கொண்டிருந்தனர். இவர்கள் சதா காலமும் இவ்வித நிலைமையில் சருவேசுரனுக்கு மகிமை செலுத்தும் போது, தங்கள் தங்கள் சிறகுகளால் தங்களுடைய முகங்களையும், பாதங்களையும் மூடிக் கொண்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தனர்.

இந்த கேரூபீன்கள் விசித்திர ரூபிகளாக தோற்றமளித்தனர். இவர்களுடைய நான் சிரமானவைகளில் ஒன்று: சிம்ம சிரம் போன்றும், இன்னொன்று இடபசிரம் போன்றும், மற்றொன்று நரர் சிரம் போன்றும், வேறொன்று கழுகு சிரம் போன்றும் இருந்தன. இத்தோற்றங்கள் யாவும் இம்மானுவேலரின் கிரியாதன்மைகளை கொண்டனவாம். அதாவது; கேரூபீன்களின் சிம்ம சிரமானது; இம்மானுவேலர் சீயோன் மலை அரசர் என்றும், இடப சிரமானது; அவர் உன்னதபுரி விசுத்தாலய மாளிகையில், தம்முடைய பிதாவுக்கு முன்பாக எப்பொழுதும் மகா புரோகிதராக நின்று, பூதலத்தாருக்காக பரிந்து வேண்டுகிறார் என்றும், நரர் சிரமானது; அவர் சீயோன் மலைக்கு ஞான வைத்தியராக செல்வதற்காக தமது அரசர் கோலத்தை களைந்து விட்டு, நரர் கோலம் பூண்டு சென்றதையும், கழுகு சிரமானது; அவர் விசுத்தாலய மாளிகையில் இருந்து சருவேசுரனின் நேச மைந்தராக அமர்ந்து, சகலத்தின் மேலும் தமது கூரிய பார்வை கொண்டு பரிபாலித்து வருகிறார் என்பதை காட்டுகிறது.

மேலும் அக்கினி ஜுவாலை போன்ற சேராபீன்களும், ஏவலாவி கணங்களும், அம்பரர்களும், உம்பரர்களும், சுரர்களும், விஸ்வரூபிகளும், வாயு பிரசன்னர்களும் ஆகிய இவர்கள் யாவரும், தேவ சேனைகளாகிய ஜீவிகளாக இருந்து ஆயிரம் பதினாயிரங்களாகவும், கோடாகோடிகளாகவும் நிறைந்து இருந்தனர். இவர்கள் பூதலத்தார்களை காத்தலும், நடத்துதலும், விடுவித்தலும், தேவ காரியங்களை வெளிப்படுத்துதலும், அறிவித்தலும், தேவ ஜனங்களைப் பிரித்தலும், கீழ்ப்படுத்துதலும், பூதலத்தார்களுக்கு ஆக்கினை செலுத்துதலுமாகிய தொழில் கொண்டவர்களாகும், இவர்களுக்கு காபிரியேலும், மிகாவேலும் பிரதான அதிபதிகளாக இருந்து நடத்தினார்.

உன்னத புரியின் விசுத்தாலயத்திலிருந்து, புறப்பட்டு வந்த அக்கினி நதி; இந்த ஏதேன்புரி நாட்டிற்கு இறங்கி, பாய்ந்து, தெளிந்த ஜீவ தண்ணீருள்ள நதியாக கரைபுரண்டு ஒடியது. இந்நதியின் இரு கரைகளிலும் பன்னிரு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சங்கள் இருந்தன. அவைகள் மாதந்தோறும் தங்கள் கனிகளைக் கொடுக்கும் அந்த விருட்சங்களின் இலைகளும் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள்.

மேலும் பூதலத்தினுடைய நரர்கள்; ஏதேன் புரியில் பிரவேசிக்கும் காலத்தில் அவர்களுடைய அக்கிராசனர்களாக இருபத்தி நாலுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் அமர்வதற்கான இருபத்தி நாலு சிம்மாசனங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த அக்கிராசனர்களுடைய நாமங்களாவன: சுபவிசேஷன், உப தேஷ்டகன், சர்வாயுதன், பரமதரிசனன், மகாகவியன், சத்தியவாசகன், உபவாசன், தேவபிரசன்னன், நல்விசுவாசன், திடநம்பிக்கையன், மனோரம்மியன், சகிப்பாளன், உண்மையாளன், தேவ செயலன், தேவபயத்தன், பிரதிஷ்டையன், தேவ சாயலோன், தேவ பிரகாசன், தேவ நேசன், தேவாறுதலன், தேவ சஞ்சாரியன், பரிவாளன், மனத்தாழ்மையன், சமாதானப்பிரியன் ஆகியவர்களே.

இவர்கள் இறுதி காலத்தில் பூதலத்திலிருந்து ஏதேன் புரிக்கு வந்து, பூதலத்தாரின் சகல கனத்தையும், மகிமையையும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு செலுத்துவார்கள், சீயோன் மலையரசர் பூதலத்தாரை நியாயம் விசாரிக்கும் காலத்தில் இவர்களும் சிற்றரசர்களாக இருந்து பூதலத்தாரை நியாயம் விசாரிப்பார்கள்.

## பரதீசு புரி:

மூன்றாவது இந்த பரதீசுபுரி நாடும் மகா விசாலமானதாக இருந்தது. இந்த நாட்டின் மத்தியில் மகாப் பெரிய யாக பீடம் ஒன்று எப்பொழுதும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

மேலும் உன்னதபுரியிலிருந்து புறப்பட்டு வருகிற ஜீவ நதி, ஏதேன்புரி வழியாக கடந்து வந்து, பரதீசுபுரி நாட்டிற்கும் இறங்கிப் பாய்கிறது. இந்நதி மகாயாக பீடம் வரைக்கும் பிரவாகித்து பெருகி, யாதொரு நரரும் ஏதேன்புரிக்கு கடந்து வராத படிக்கு அக்கினிக் கடலாக தேங்கியது. இந்த மகா யாகபீடத்தினடியிலும் பற்பல வாசஸ்தலங்கள் கட்டப்பட்டு இருந்தது. சர்வேசுரனால் அழைக்கப்பட்டவர்கள்; பூதலத்திலிருந்து இங்கு வந்து இந்த வாசஸ்தலத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். பூர்வீகத்திலிருந்து பூதலத்தினுடைய தீர்க்கர்கள் அவ்வப்போது அழைக்கப்பட்டு வந்து, இங்கிருந்து தான் உன்னதபுரி வரை கண்டு களித்தனர். யாக பீட வாசஸ்தலங்களில் தங்கியிருக்கிற பரிசுத்த நரர்கள் ஏதேன் புரிக்கு அழைக்கப்படும் பொழுது அவர்கள் உன்னதபுரி அரசருக்கு பூதலத்திலிருந்து காணிக்கைகளாக கொண்டுவந்த பொருள்களுடன் இந்த அக்கினிக் கடலில் இறங்கி, கடந்து போக வேண்டும், இந்த நரர்களும் அவர்களுடைய காணிக்கைகளும் பூதலத்திலிருந்து மெய்யான நிலைமையில் சருவேசுரனின் சகல சட்ட திட்டங்களுக்குட்பட்ட நிலையில் பரிசுத்தமாக இருக்குமானால் ஒன்றும் எரிந்து போகாமல், ஏதேன்புரிக்குப் பத்திரமாய்ப் போய் சேருவார்கள் அல்லது அவைகளெல்லாம் அக்கினிக் கடலில் எரிந்து போகும். இவைகளெல்லாம் ஞான திருஷ்டிக்காரரின் பிரபந்தத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

தொடரும்........

# நித்திய ஜீவன்

## 1. இயேசுவானவரின் இரகசிய வருகை

### 1. வருகைக்கான முன்னறிவிப்புக (புதிய ஏற்பாடு)

| | | |
|---|---|---|
| தீர்க்க தரிசிகளின் அறிவிப்பு | - | யூதா. 14, 15 |
| இயேசுவானவரின் அறிவிப்பு | - | யோவான் 14:1 - 3 |
| ப. ஆவியானவரின் அறிவிப்பு | - | எபேசி. 4:30 |
| தேவ தூதர்களின் அறிவிப்பு | - | அப்போ.1:9 - 11 |
| அப்போஸ்தலர்களின் அறிவிப்பு | - | I கொரி. 16:22 |
| வேதாகமத்தின் அறிவிப்பு | - | தீத்து. 2:11 - 13 |
| தேவ சபையின் அறிவிப்பு | - | I தெச. 1:6 - 10 |

### 2. வருகையின் இருவித நிலைமைகள்:

| (அ) சபைக்காக வருகை | (ஆ) உலகத்திற்காக வருகை: |
|---|---|
| சபையானது இரகசியமாக எடுக்கப்படுதல் Iதெச.4:14 -16 - | எல்லாரும் காணும்படியாக வருதல் வெளி. 1:7 |
| விடிவெள்ளியாக வருதல் வெளி. 22:12 - 17 - | நீதியின் சூரியனாக வருதல் மல்கி. 4:1,2 |
| மகாபிரதான ஆசாரியராக வருதல் எபி. 9:24 - 28 | இராஜாவாக வருதல் வெளி. 19:11 - 16 |
| அவிசுவாசிகள் கைவிடப் படுதல் மத்தேயு 24:40,41 | உலகத்தார் யாவரும் கைவிடப் படுவதில்லை. மத்.25:32,33 - 13:41,42 |
| ரோமர்.5:9,10 Iதெசலோ. 1:9,10 5:9, வெளி. 3:10 கோபாக்கினைக்கு நீங்கலாக, சபையை காக்கும்படி வருதல் | உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும் படியான வருகை IIதெச. 1:7,8 |
| சபை மறுரூபமடைதல் பிலிப். 3:20,21 | உலகத்தார் அழிதல் IIதெச. 1:9,10 |
| சபைக்கு பலன்கள் கொடுக்கும் படியாக வருதல் வெளி. 22: 12 | உலகத்தாரை நியாயந்தீர்க்க வருதல் அப்போ. 17:30,31 |

### 3. வருகையின் முன்னடையாளங்கள்:

#### *(அ) மகாபிரதான ஆசாரியராக வருதல்:*

| | |
|---|---|
| லேவி 16:11 ஆரோன் | - எபி. 9:14 கிறிஸ்து |
| 12 தூபமிடல் | |
| ம.ப. ஸ்தலத்தில் | 24 வேண்டுதல் பரலோகத்தில் |
| யாத். 28:35 திரும்ப வருதல் | 28 திரும்ப வருதல் |

#### *(ஆ) இரட்சகராக வருதல்:*

| | |
|---|---|
| மத். 14:22 அக்கரைக்கு | - மறுமைக்கு |
| 23 மலையின் மீது | - வலது பாரிசத்தில் |
| | 24 நடுக்கடலில்- வெளி. 17:1;15 |
| | ஜனங்கள் மாற். 6:48 கண்டு |
| 25 நாலாம் சாமத்தில் | - கடைசி காலத்தில் |
| 26,27 அலறுதல், பயம் | - வருகையில் ஏற்படும் பயம் |
| 28,29 எதிர்கொண்டு | - I தெசலோ. 4:15 - 17 எதிர்கொண்டு |

#### *(இ) மீட்பராக வருதல்:*

லூக். 10:35 அதிகமாக செலவழித்தால் (திரும்ப வரும்போது)

ரோமர். 14:10 II கொரி.5:10, வெளி. 22:11, 12 நியாயசனத்தில்

#### *(ஈ). வருகையின் நோக்கங்கள்:*

யோவா 14:1 - 3, I தெசலோ. 4:14 - 16 இயேசுவானவர் தமது சபையை சேர்த்துக் கொள்ள வருகிறார்.

லூக். 1:67 - 75; 24 :21 தமது ஜனமாகிய இஸ்ரவேலை இரட்சிக்க வருகிறார்.

IIதெச. 1:7 - 10உலகத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்க்க வருகிறார்.

வெளி. 20:4 ஆயிரம் வருசங்கள் ஆளுகை செய்ய வருகிறார்.

அப்போ.17: 30,31 மீட்கப்படாதவர்களை நியாயந்தீர்க்க வருகிறார்.

I கொரி. 15:24 - 28 சகலத்தையும் தமது பாதத்திற்குக் கீழ்ப்படுத்த வருகிறார்.

வெளி. 20:10 பிசாசாகிய சாத்தானை அக்கினிக் கடலில் தள்ளுவதற்காக வருகிறார்.

#### *(உ) வருகையின் காலம்:*

மத்தேயு. 24:36 ஒருவனும் அறியான் - தூதர்களும் அறியார்கள்

மாற். 13:32 குமாரனும் அறியார் (ஆனாலும்)

வெளி. 22:20 சீக்கிரமாய் வருகிறார்.

தொடரும் .....

# திருமறைக் களஞ்சியம்

6. இஸ்ரவேலின் பாளையமும், ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பும்:




5. ஆசரிப்புக் கூடார அமைப்பு (எபி. 9:1,5)
பாளையம் எண்.2:1,2




(C) C.B.P. - PUBLISHED BY: S. SAKTHI DEVADOSS; 145/E, - "T.M. COMPLEX" THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013)

# மெய்ஞான வைத்திய சாலை

## 2. பரம நிழல் தேசம்

<u>பரம நிழல் தேசம்</u> : பூதலத்தினுடைய முக்கண்டங்களும் மையமாகவும் அக்கண்டங்களின் இருதயம் போன்றும் பரம நிழல் தேசம் படர்ந்து கிடந்தது. பூர்வ காலத்தில் இத்தேசம் பெலிஸ்தியருடைய தேசமாக அறியப்பட்டிருந்தது. பெலிஸ்தியருடைய காலத்திற்கு முன்பு காமியர்கள் இத்தேசத்தை ஆண்டபடியால் இஃது கானான் தேசம் அறியப்பட்டிருந்தது. இந்த கானான் தேசத்தை சேமிய குலத்தார் சுதந்தரித்த போதும், இத்தேசத்தின் பெயர் மாற்றப்படாமல் இருந்தது. இந்த சேமிய குலத்தார் சீயோன் மலையரசரை வஞ்சகமாகக் கொலை செய்த பின்பு உள்ளூர் சாதிக் கலகம் செய்தபடியால் உரோமையர்கள் வந்து, இந்தேசத்தை அழித்து விட்டனர். இவைகளை அறிந்த உன்னதபுரி அரசரான சருவேசுரன் சீயோன் மலையரசை உயிர்பித்து, மீண்டும் அத்தேசத்திற்கு அவரை அதிபதியாக ஏற்படுத்தினார். எனவே, சீயோன் மலையரசர் தமக்கென்று ஏற்படுத்திய தம்முடைய பன்னிரு அடியார்களுக்கு, இந்த கானான் தேசம் இருந்த இடத்தில் பரம நிழல் தேசத்தை கட்டும்படியாக கட்டளையிட்டார். அதன்படி அவர்கள் பன்னிரு நாடுகள் உண்டாக்கினர். அந்நாடுகளின் தலைமைப் பட்டணமாக பரம உருசாலேம் பட்டணமும் கட்டப்பட்டது. சீயோன் மலையரசரின் பன்னிரு அடியார்களின் நாமங்களாவன : இராயப்பனடியார், பெலவேந்திரனடியார், வலிய யாகப்பனடியார், அருளப்பனடியார், பிலிப்பு அடியார், பர்தொலோமேயு அடியார், தோமையனடியார், ஆயப்பனடியார், யாகப்பனடியார், ததேயினடியார், தேவ கொடையடியார், சின்னப்பனடியார் ஆகியோராகும்.

இந்த பன்னிரு அடியார்களுக்கும் அத்தியட்சராக இருப்பதற்காக, தேவனாவிராயரை அனுப்புவதாக கூறி, தாம் உன்னதபுரிக்குச் சென்றுவிட்டார். பின்பு தேவனாவிராயர் வந்தவுடன் அவரது மேற்பார்வையில் சின்னப்பரும், இராயப்பரும் தலைமையாக நின்று மற்ற பத்து அடியார்களோடு சேர்ந்து இந்த உருசாலேம் பட்டணம் கட்டத் துவங்கினர். இப்பட்டணம் கட்டிமுடிப்பதற்குள் சீயோன் மலையரசரிடமிருந்து பன்னிரு அடியார்களுக்கு அழைப்பு வந்ததில் அவர்கள் யாவரும் உன்னதபுரிக்குச் சென்று விட்டனர். ஆயினும் தேவனாவிராயர் அவ்வப்போது சில கை தேர்ந்த சிற்பிகளை வைத்து, இன்னும் அப்பட்டணத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார். இஃது பரிபூரணமாக கட்டி முடிந்தவுடன் சீயோன் மலையரசர் தாம் வருவதாக வாக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறார்.

சீயோன் மாலையரசரின் பன்னிரு அடியார்கள் : பரமநிழல் தேசத்தில் இருக்கும் போதே அத்தேசத்தை பன்னிரு நாடுகளாக பிரித்தனர். அந்த ஒவ்வொரு நாடுகளுக்கும் அதனதன் தலைமைப் பட்டணங்களும், பூர்வீக கானான் தேசத்துப் பட்டணங்களின் பெயர்களையே ஞாபகார்த்தமாகச் சூட்டினர். அந்நாடுகளும், அதன் தலைமைப் பட்டணங்களின் பெயர்களுமாவன :

- முதலாவது : நியாயப் பிரமாணிக்க நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் ராமோத்.
- இரண்டாவது : அகங்கார நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் செபா.
- மூன்றாவது : சிறுமை நீக்கும் நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் கில்கால்.
- நான்காவது : விசுவாச துறை நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் பெத்லகேம்.
- ஐந்தாவது : தேவ இணக்க நாடு; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் சீலோ.
- ஆறாவது : ஆசீர்வாத நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் கர்மேல்
- ஏழாவது : தேவ சிநேக நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் சீகேம்.
- எட்டாவது : மெய் பாக்கிய நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் கேதேஸ்.
- ஒன்பதாவது : தேவபிரிய நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் பெத்தேல்.
- பத்தாவது : துதியானந்த நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் எபிரோன்.
- பதினொராவது : இளைப்பாறுதல் நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் சூனேம்.
- பன்னிரண்டாவது : மெய் மறதி நாடு ; அதன் தலைமைப் பட்டணத்தின் பெயர் கோலான்.

இந்நாடுகளிலும் அதன் பட்டணங்களிலும் தேவனாவிராயரின் அடையாள முத்திரையும், அனுமதி பத்திரங்களும் பெற்றவர்கள் மட்டுமே குடியேறினதோடு, திருட்டளவாய் குடியேறினர். நானாவித சாதி, சனங்களும் இருந்தனர். இதனால் பரம நிழல் தேசத்தின் மகிமையும், பரிசுத்தமும் இழந்து போய், பூதலத்தாரின் பிறதேசங்களைப் போல் அதிக மாசு படிந்து அல்லோ கோலப்பட்டது.

(–தொடரும்)

### சிறிய குறிப்புகள்

<u>விசுவாசம்</u> : விசுவாசம் அறிவுமல்ல காண்பது மல்ல, பகுத்தறிவு மல்ல, கர்த்தருடைய வார்த்தைகளை அப்படி நம்புவதாகும் !

<u>பொறுப்பு</u> : பொறுப்புகள் எல்லாம் அவரைச் சார்ந்ததே என்று தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் !

<u>விசுவாசம்</u> : நாம் கவலை கொள்ள துவங்குவதே விசுவாசத்தின் இறுதி; கவலையின் இறுதியே விசுவாசத்தின் துவக்கம் !

<u>கஷ்டங்கள்</u> : மக்களிடமிருந்து உதவி பெறும் எண்ணத்தைக் கைவிடச் செய்து, உன்னை சர்வ வல்லமையுள்ள தேவனிடம் அடைக்கலம் புகச் செய்வதற்காக பெரிய கஷ்டங்கள் உனக்கு உண்டாகி இருக்கலாம்!

<u>விசுவாசம்</u> : நீ சார்ந்து ஒன்றும் இல்லாத போது, அரண்கள் இடிந்து தூளாகும் போது, தேவ ஆட்சியை தவிர்த்து, வேறு ஒன்றும் நிச்சயம் இல்லாதபோது, அதுவே அவரை விசுவாசிப்பதற்கு ஏற்ற சமயம் ! காண்பதைவிட விசுவாசித்துப் நடப்பதே, நமது பாதைக்கு ஏற்றது !

# திருமறைக் களஞ்சியம்.

## 7. ஆசரிப்புக் கூடாரப் பொருள்களும், அதன் அர்த்தங்களும்.

| பொருள்கள் | அர்த்தங்கள் | பொருள்கள் | அர்த்தங்கள் |
|---|---|---|---|
| 1. இரத்தினம், இந்திர நீலம், கெம்பு, கோமேதகம், சுகந்தி, படிகப்பச்சை, பத்மராகம், புஷ்ப ராகம், மரகதம், மாணிக்கம், யஸ்பி, வச்சிரம், வைடூரியம் | விலையேறப்பெற்ற மகிமை | 15. மகா பரிசுத்த ஸ்தலம் – | பரலோகம் |
| 2. பொன் – | தேவ மகிமை | 16. பரிசுத்த ஸ்தலம் – | தேவனுடைய சபை |
| வெள்ளி – | மீட்பு | 17. பிராகாரம் – | இரட்சிப்பின் திட்டம் |
| வெண்கலம் – | நியாயத்தீர்ப்பு | 18. பாளையம் – | உலக வாழ்க்கை |
| 3. இள நீல நூல் – | பரலோகத் மகிமை | 19. அபிசேக தைலம் – | அதிகார உரிமையளித்தல் |
| இரத்தாம்பர நூல் – | இராஜரீகம் | 20. தூப வர்க்கம் – | ஜெப வேண்டுதல் |
| சிகப்பு நூல் – | இரட்சண்யம் | 21. ஆசாரிய வஸ்திரங்கள் – | கிறிஸ்துவின் தன்மைகள் |
| பஞ்சு நூல் – | பரிசுத்தம் | 22. வாசஸ்தல பலகைகள், தூண்கள் – | விசுவாசிகள் |
| 4. ஒலிவ எண்ணை – | பரிசுத்த ஆவியானவர் | 23. கேருபீன்கள் – | தூதர்கள் |
| கருவாப்பட்டை – | வெளியான பாடுகள் | 24. கிருபாசனம் – | எற்றுக் கொள்ளும் இடம் |
| வசம்பு – | உள்ளான பாடுகள் | 25. இரத்தம் – | ஜீவன் |
| இலவங்கம் – | நற்குணங்கள். | 26. ஊற்று நீர் – | பரிசுத்த ஆவியானவர் |
| 5. குங்கிலியம் – | பாடுகளில் உறுதி | 27. சுத்திகரிப்பு பலிகள் – | பரிசுத்தமாக்கப் படல் |
| வெள்ளைப் போளம் – | மனக் கசப்பு | 28. பிரதிஷ்டை பலி – | பிரித்தெடுத்தல் |
| அல்பான் பிசின் – | பாதுகாத்தல் | 29. சர்வாங்க தகனப்பலி – | நீதி நிறை வேறுதல் |
| சாம்பிராணி – | போற்றுதல் ஸ்தோத்திரம் | 30 பாவ நிவாரணபலி – | ஜென்மபாவங்கள், ஆவிக்குரிய பாவங்கள், நிவாரணமாக்குதல் |
| 6. வெள்ளாட்டு மயிர் – | இரட்சண்யம் | 31. குற்ற நிவாரண பலி – | கரும பாவம் நிவாரணமாக்குதல் |
| சிகப்புத்தீர்த்த ஆட்டுக்கடாத்தோல் | பாடுகள் | 32. போஜன, பான பலி – | நினைவு கூர்தல் |
| தகசுதோல் – | மகிமையில்லாமை | 33. சமாதான பலி – | ஒப்புரவாகுதல் |
| 7. சித்தீம் மரம் – | மகிமையில்லாமை | 34. ஸ்தோத்திர பலி – உற்சாக பலி | மனப்பூர்வ காணிக்கை |
| 8. உடன்படிக்கைப் பெட்டி – | பிராயச்சித்தம் | 35. பண்டிகைகள் – | எதிர்கால சம்பவங்கள் |
| 9. தூப பீடம் – | பரிந்து வேண்டுதல் | 36. நியாயப் பிரமாணங்கள் – | பாவ உணர்வையும், கிருபையும் வெளிப்படுத்துதல் |
| 10. குத்து விளக்கு – | வேத வெளிச்சம் | 37. மன்னா – | போசிப்பு |
| 11. மேஜை அப்பங்கள் – | உடன்படிக்கை | 39. ஆரோனின் துளிர்த்த கோல் | உயிர்த்தெழுதல் |
| 12. வெண்கலத் தொட்டி – | சுத்திகரிப்பு | 40. ஓய்வு நாள் – | மறுமை இளைப்பாறுதல் |
| 13. பலி பீடம் – | பாவ நிவர்த்தி | | |
| 14. திரைச்சீலைகள் – | மறைக்கப்பட்ட இரகசியம் | | |

குறிப்புகள் : ஆசரிப்புக் கூடார சம்பந்தப்பட்ட வாக்கியங்களோடு, புதிய ஏற்பாட்டின் ஒத்த வாக்கியங்களைச் சேர்த்தால், இங்கு கூறப்பட்டுள்ள அர்த்தங்களைக் கொடுக்கும்!

இவ்வித அர்த்தங்களை மனதில் வைத்துக் கொண்டு, யாத்திராகமம் முதல் உபாகமம் வரை வாசித்தால் அதன் பாகங்கள் எல்லாம் நன்றாக விளங்கக் கூடும்

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அர்த்தங்கள் விளங்க அரிதாக இருக்குமானால், ஒத்த வாக்கியங்கள் மூலமாக அர்த்தங்களை அறிய முயற்சி செய்யலாம்

இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு பொருள்களும் வசனங்கள் குறிக்கப்படவில்லை. அவைகள் பிற அட்டவணைகளைப் பார்த்து அறியவும்

இங்கு கொடுக்கப்பட்ட பொருள்களாகிய பதங்கள் ; யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் ஆகிய புத்தகங்களில் உள்ளன.

## 8. ஆசரிப்புக் கூடாரமும் தேவாலயமும்

யாத் 25 : 40 I நாளா 28:19 எபி 8:5





## 9. ஆசரிப்புக் கூடார அமைப்பு

எபி 9:1-5



# நித்திய ஜீவன்

## 2. இயேசுவின் இரகசிய வருகை! (சபை எடுக்கப்படுதல்)

6. எக்காள சத்தங்கள் :

| முன்னடையாளங்கள் : | நிறைவேறுதல் |
|---|---|
| எண் 10 = 5 பிரயாணம் புறப்படும்போது.. | I தெசலோ 4 = 16 சபை இரகசியமாக எடுக்கப்படும் போது. . . |
| எண் 29 = 1 சபை கூடும் போது | |
| நியாய 7 = 20,21 யுத்தத்திற்கு . . . | வெளி 8:2 உலகத்திற்கு உபத்திரவம் உண்டாகும் போது . . . |
| லேவி 25 = 9 பாவநிவாரண நாளுக்காக | மத்தே 24 = 31 வெளியரங்கமாக வரும்போது |

7. ஆரவாரம் :

I தெச 4 = 16 ஆரவாரம் என்பது வார்த்தைகளின் சத்தங்கள் வெளி 19 = 1

- ஏசா 26 = 19 மண்ணில் தங்கியிருக்கிறவர்களே . . . என்ற சத்தமாக இருக்கும்
- சபை எடுத்துக் கொள்ளப்படுகிற சமயத்தில் தாறுமாறான நிகழ்ச்சிகள் நடக்காது.
- மத் 27 = 50-53 எந்த வித அசாம்பாவித நிகழ்ச்சிகளும் நடைபெற வில்லை.

8. பிரதான தூதர்கள் :

I தெச 4=16 வானத்திலுள்ள பொல்லாத ஆவிகள் சபையை தடை செய்யாத படிக்கு பாதுகாக்க தூதர்கள் வருகிறார்கள் (எபேசி 6 =12)

- முன்னடையாளங்கள் : யூதா - 9 மோசேயின் சரீரத்தை காத்தல்
- தானி 6 = 22 தானியேல் பாதுகாத்தல்.

9. (அ) மரித்தவர்கள் எடுக்கப்படுதல் : (அடக்கம் பண்ணப்படாதவர்கள்)

I தெச 4 = 16 அடக்கத்திற்கு முன் ஜீவன் பெற்று மறுரூபமாகி எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

- முன்னடையாளங்கள் : மாற் 5 = 38, 39 சிறுமி எழுநதிருக்குதல் (வீட்டில்)
- லூக் 7 = 12 வாலிபன் எழுந்திருக்குதல் (வழியில்)

(ஆ) மரித்தவர்கள் எடுக்கப்படுதல் : (அடக்கம் பண்ணப்பட்டவர்கள்)

I தெச 4 = 16 அடக்கத்தில் சரீரம் அழிந்து போனவர்களும் சேர்க்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

- முன்னடையாளங்கள் :
- யோவா 11 = 39 லாசரு கெட்டுப் போன சரீரம் நீங்கி உயிரடைதல்
- எபேசி 4 = 30 சரீரம் அழிந்து போனாலும் பரிசுத்த ஆவியானவர் புதுப்பிப்பார்.
- II சாமு 21 = 9,10 ரிஸ்பாள் சவுலின் பிள்ளைகளின் சரீரத்தை பாதுகாத்தல் போல, பரிசுத்த ஆவியானவரும் பாதுகாத்து உயிர்ப்பிப்பார்.

10. உயிரோடு இருப்பவர்கள் எடுக்கப்படுதல்

I தெச 4 = 17 உயிரோடு இருப்பவர்கள் மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

- முன்னடையாளங்கள் ;
- எபி 11 = 5 ஏனோக்கு காணப்படாமல் போனான். (இரவில் நடந்து)
- II ராஜா 2 = 11 எலியா எடுக்கப்படுதல் (பகலில் நடந்தது)
- சபை எடுத்துக் கொள்ளப்படுவது எந்த நேரமாக இருந்தாலும் உலகின் ஒரு பக்கம் பகலாகவும் மறுபக்கம் இரவாகவும் இருக்கும்.

- தொடரும்

© C.B.P. PUBLISHED BY
**S. SAKTHI DEVA DOSS.**
145 / E `T.M. COMPLEX' THIRUVENGIDA NAGAR
THIRUVERUMBUR. P.O. TRICHY 620 013

## சிறிய குறிப்புகள்

உதவிகள் : நமக்குத் தேவையான யாவும் பரத்திலிருந்து அருளப்படுகின்றன.

உபத்திரவங்கள் : கர்த்தர் அனுப்பும் மலைகளைப் போன்ற உபத்திரவங்கள்; நம்முடைய எதிரிகளுக்கு முன்பாக நம்மைப் பாதுகாக்கும் அரண்களாகும்!

முன்னேறுதல் : "இருள் நீங்கி கதிரவன் எழும் வரையிலும், இருள்நிறைந்த நிழல் மறையும் வரையிலும், அருள் நாட்டில் நீ சென்று விழிக்கும் மட்டும், கிருபாசனம் முன்பாக நிற்கும் மட்டும் முன்னேரிச்செல்!"

தகாதது : தாபோரின் மலையுச்சி நமக்கு முன்பாக இருக்கையில், நாம் பள்ளத்தாக்கின் பனியின் மறைவில் இளைப்பாறியிருத்தல் தகாது!

முயற்சியின்மை : நம்மாலான வரையில் உன்னத ஜீவியம் செய்ய, நம்மில் அநேகர் முயற்சி எடுப்பதில்லை. மலை ஏறப் பயந்து, சமவெளியில் தங்குகிறவர்களாக இருக்கிறோம். மலையின் உயரமும் அதன் கரடுமுரடான பாதைகளும் நம்மைக் கலங்கச் செய்கின்றன. ஆகையால் பனிமூடியிருக்கும் பள்ளத்தாக்கில் தங்கி விடுகிறோம்.!


PRINT LANDS, Trichy - 1 Pager. # 9628 - 935373

## மெய்ஞான வைத்திய சாலை

# 3. பரம உருசாலேம் பட்டணம்

உருசாலேம் : பரம நிழல் தேசத்திலிருக்கும் பன்னிரு நாடுகளின் மத்தியில், மகா உயரமும், உன்னதமுமான இடத்தில் உள்ள, நாலு குன்றுகளின் மேல் உருசாலேம் பட்டணம் கட்டப்பட்டிருந்தது. இப்பட்டணத்தில் மகா சிறப்புப் பெற்ற இந்நாலு குன்றுகளின் பெயர்களாவன: முதலாவது குன்று மோரியா; இது கிழக்கு எல்லையில் நிற்கிறது. இரண்டாவது குன்று ஓபேல்; இது தெற்கு எல்லையில் நிற்கிறது. மூன்றாவது குன்று மில்லோ; இது மேற்கு எல்லையில் நிற்கிறது. நாலாவது குன்று சீயோன்; இது வடக்கு எல்லையில் நிற்கிறது. இந்த நாலு குன்றுகளை சுற்றிலும் மகா பிரமாண்டமான அலங்கங்கள் சுற்று மதிலாக இசைவாக இணைக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்தது.

இந்த அலங்கத்தை சுற்றிலும் எட்டு வாயில்கள் மட்டுமே இருந்தன. அவைகளின் பெயர்களாவன; முதலாவது: விழி வாயில், இரண்டாவது; செவி வாயில், மூன்றாவது; சுவாச வாயில், நாலாவது; சுவையுணர்வு வாயில், ஐந்தாவது; மெய்வாயில், ஆறாவது; ஊருணி வாயில், ஏழாவது; கழிவு நீர் வாயில், எட்டாவது; குப்பை மேட்டு வாயில். இந்த வாயில்கள் வழியாகத் தான் நகரத்திற்குள் யாரும் பிரவேசிக்கக் முடியும். மற்றபடி திருட்டளவாய் நகரத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

மோரியா குன்றின் மேல் சீயோன் மலையரசருக்குள்ள மெய்ஞான வாசஸ்தலமும், வெண் மாளிகையும் கட்டப்பட்டிருந்தன. இந்த வெண்மாளிகையில் தான், தேவனாவிராயர் இப்பொழுது தங்கி வருகிறார். ஓபேல் குன்றின் மேல் மெய்யாறுதல் சாலைக் கட்டப்பட்டிருந்தது. மில்லோ குன்றில் மெய்தூப சாலைக் கட்டப்பட்டிருந்தது. சீயோன் குன்றின் மேல் மெய் ஞான வைத்திய சாலை கட்டப்பட்டிருந்தது.

இப்பட்டணம் மிகவும் அரணிப்பான நிலையில் கட்டப்பட்டிருந்தது. அதின் அலங்கங்கள் மகாப் பெரிய மதிலரணாக நின்றது. இவ்வலங்கத்தின் மேல் பற்பல கோட்டைகளும், கொத்தளங்களும் கட்டப்பட்டிருந்தன. இது அப்பட்டணத்திற்கு சருவேசுரனார் பாதுகாப்பாக இருக்கிறதைக் காட்டுகிறது. இரண்டாவது: இந்த மதிலரணுக்கு வெளியே நரர்கள் கடக்க முடியாத ஆழம், அகலம் உள்ள அகழிகள் வெட்டி நீர் நிரப்பட்டிருந்தது. இது அகழியரண் எனப்பட்டது. இது அப்பட்டணத்தாரை தேவனாவிராயர் நீர் அரணாக இருந்து பாதுகாப்பு செய்வதைக்காட்டுகிறது.

மூன்றாவது: இந்த அகழியரணையடுத்து, அப்பட்டணத்தைச் சுற்றிலும் வெற்று நிலபரப்புகளாக பள்ளத்தாக்குகள் இருந்தன. இது நிலவரணாக இருந்து, அப்பட்டணத்தை பாதுகாத்தது. இந்த நிலவரண் அப்பட்டணத் தார்களின் பிரிந்த வாழ்க்கையைக் காட்டுகிறது. நாலாவது: இந்த பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் சிறு, சிறு கன்மலைக் குன்றுகள் அப்பட்டணத்தைச் சுற்றிலும் தொடர்ச்சியான பர்வதங்களாக நின்றன. இவைகள் மலையரண்களாக இருந்து, அப்பட்டணத்தைப் பாதுகாத்தது. இது சீயோன் மலையரசர் அப்பட்டணத்திற்கு ஞானக் கன்மலையாக நின்று பாதுகாப்பதைக் காட்டுகிறது. ஐந்தாவது: இந்த கன்மலைக் குன்றுகளில் ஏறி அப்புறம் இறங்கியவுடன் அடர்த்தியான காடுகள் அப்பட்டணத்தைச் சுற்றிலுமாக இருந்தது. இவைகள் வேலியரணாக இருந்து, அப்பட்டணத்தைப் பாதுகாத்தது. இது சருவேசுரனார் ஆதிவாக்குகளினால் அப்பட்டணத்திற்குப் பாதுகாப்புச் செய்வதைக் காட்டுகிறது.

இப்பட்டணத்தின் முகத்துவாரத்தில் இரு உயர்ந்த பர்வதங்கள் நின்றன. ஒன்று: வடகிழக்கில் நாச மலையும், தென் கிழக்கில் ஒலிவமலையும் நின்றன. பூதலத்தினுடைய நானாவித தேசங்களிலிருந்து, பிணியாளிகளாக வருபவர்களுக்கு இந்த நாசமலையில் மகாப்பெரிய வைத்திய சாலை ஒன்று கட்டப்பட்டிருந்தது. சீயோன் மலையில் உள்ள மெய்ஞான வைத்திய சாலையில், பரம நிழல் தேசத்தார்கள் வந்து சுகமடைந்து போவார்கள். நாசமலையில் இருக்கும் வைத்திய சாலையின் பெயர் ஜீவ இரட்சனை வைத்தியசாலை என்பதாகும். இந்த இரு உன்னத வைத்திய சாலைகளுக்கும் தேவனாவிராயரே அக்கிராசனராக இருந்து பரிபாலித்து வந்தார்.

பின்னும் பரம நிழல் தேசவாசிகள் உன்னதபுரிக்கு வர வேண்டும் மென்று சீயோன் மலையரசரால் அழைப்பு பெறும் போது, அவர்கள் தேவனாவிராயரின் அதிகார முத்திரைப் பத்திரம் பெற்று, கெதரோன் தோடு வழியாக கெத்சமனே கடந்து ஒலிவமலை சிகரத்தில் ஏறி, அங்கிருந்து மேல் நோக்கிச் செல்லும் ராஜ பாதையில் உன்னத புரிக்குப் புறப்பட்டுப் போவார்கள்.

இந்த பரம உருசாலேம் பட்டணத்தைச் சுற்றிலும், உள்ள அரண்கள் எல்லாம் குறிஞ்சி நிலத்தில் தான் கட்டப்பட்டிருந்தன. மருத நிலங்களானது; உருசாலேம் பட்டணத்திற்குள் நான்கு குன்றுகளுக்கு மையத்தில் விசாலமாகக் கிடந்தன. இங்குதான் பயிர் நிலங்களும், பற்பல பண்ணை களும், தோட்டங்களும் இருந்தன. பட்டணத்துக்குப் புறம்பே இருந்த நிலவரண்கள் பாலை நிலங்களாக இருந்தன. காடுகளைக் கொண்ட முல்லை நிலங்களே வேலியரண்களாக இருந்தன. பட்டணத்தின் கடல் துறைகளைச் சார்ந்த இடங்கள் நெய்தல் நிலங்களாக இருந்தன.

இவ்விதமாக இறை நூலார் தொகுத்தபடி உரு சாலேம் பட்டணம் சகல . சட்ட திட்டங்களுடன் பரம நிழல் தேசமாக காட்சியளித்தது.

பின்னும் உருசாலேம் பட்டணம் கட்டப்பட்டவுடன், ஜீவரட்சண்ய வைத்திய சாலையும், மெய்ஞான வைத்திய சாலையும் தோற்றுவிக்கப் பட்டதால் பல்லாயிரக்கணக்கானோர் அங்கு பணியிலமர்த்தப்பட்டனர். இவர்களுடைய போசிப்புக்கான சகலவித தேவைகளையும் கொடுக்கும் படியாக, பூதலத்தில் உள்ள தமது ஆதினத்திற்குட்பட்ட யாப்பேத்திய ராஜ்யங்களுக்கு சருவேசுரனார் கட்டளையிட்டார். அவருடைய ஆளுகைக் குட்பட்ட தேசங்களும், அரசர்களும், அவர்களுடைய காரியக்காரர்களுடைய நாமங்களுமாவன: முதலாவது: அருள் புரி தேசம்; அதனுடைய அரசர் விண்ணக வேந்தனார், இவருடையக் காரியக்காரன் உத்திரவாதன். இரண்டாவது: இரக்கபுரி தேசம்; அதனுடைய அரசர் அருளரசனார், இவருடைய காரியக்காரன் நல் சமர்த்தன். மூன்றாவது: இரட்சண்ய புரிதேசம்; அதனுடைய அரசர் தாவீதின் கிளையினார். இவருடைய காரியக்காரன் மன நிர்ணயன். நாலாவது: உத்தம புரி தேசம்; அதனுடைய அரசர் ஜீவ கிரீடனார். இவருடைய காரியக்காரன் நிர்வாகன். ஐந்தாவது: ஐசுரிவரிய புரிதேசம் அதனுடைய அரசர் இஸ்ரேலின்ராசனார். இவருடையக் காரியக்காரன் நேர்த்தியன். ஆறாவது: சகாயபுரி தேசம்; அதனுடைய அரசர் அரசர் பூபதியினார். இவருடைய காரியக்காரன் சம்பிரதியின். ஏழாவது: சத்தியபுரி தேசம்; அதனுடைய அரசர் சேனைகளின் கர்த்தனார். இவருடைய காரியக்காரன் மணியக்காரன். எட்டாவது: சந்தோசபுரி தேசம்; அதனுடைய

அரசர் பார்த்திபனார். இவருடைய காரியக்காரன் சுயம்பாகியன். ஒன்பதாவது: சமாதானப்புரி; தேசம் அதனுடைய அரசர் சாலேமின் இறையனார், இவருடைய காரியக்காரன் சேர்வைக்காரன். பத்தாவது: சாந்தபுரி தேசம்; அதனுடைய அரசர் பரமராயனார். இவருடைய காரியக்காரன் உக்கிரானன். பதினொராவது: ஞானபுரி தேசம் அதன் அரசர் மேன்மையாசனனார், இவருடைய காரியக்காரன் உதாரத்துவன். பன்னிரண்டாவது: துயவுபுரி தேசம்; அதன் அரசர் செங்கோலனார், இவருடைய காரியக்காரன் துரிதன். பதிமூன்றாவது : நம்பிக்கைபுரி தேசம்: அதன் அரசர் தியாகராசனார், இவருடைய காரியக்காரன் ஜாக்கிரதையோன். பதினாலாவது : நற்குணபுரி தேசம்; அதன் அரசர் தேவாதிபத்ய இறையனார், இவருடைய காரியகாரன் கவனப்பிரியன். பதினைந்தாவது: நித்தியபுரி தேசம்: அதன் அரசர் ஞாலத்தின் இறையனார், இவருடைய காரியக்காரன் உபகாரன். பதினாறாவது: நியாயபுரி தேசம்; அதன் அரசர் மகுடவர்த்தனார், இவருடைய காரியக்காரன் தீர்மானப் பிரியன். பதினேழாவது: நீதி புரி தேசம்; அதன் அரசர் தளகர்த்த இறையனார், இவருடைய காரியக்காரன் துணிவுடையான். பதினெட்டாவது: நேசபுரி தேசம்; அதன் அரசர் அன்பரசனார். இவருடைய காரியக்காரன் நற்கிரியன். பத்தொன்பதாவது: பரிசுத்த புரி தேசம்; அதன் அரசர் ஆதிபனார், இவருடைய காரியக்காரன் காலம் தவறான். இருபதாவது: பொறுமா புரி தேசம்; அதன் அரசர் கோமானிரையனார்; இவருடைய காரியக்காரன் மனோவேகன். இருபத்தொன்றாவது: மகத்துவபுரி தேசம்; அதன் அரசர் ராசராசனார், இவருடையக் காரியக்காரன் பகிர்ந்து கொடுப்போன். இருபத்திரண்டாவது: மகிமாபுரி தேசம்; அதன் அரசர் ஜீவராசனார், இவருடைய காரியக்காரன் பட்சமுடையான். இருபத்தி மூன்றாவது : மெய் புரி தேசம் : அதன் அரசர் பரமராசனார். இவருடைய காரியக்காரன் திடகாத்திரன். இருபத்தி நாலாவது: விசுவாசபுரி தேசம்: அதன் அரசர் யூதராசனார், இவருடைய காரியக்காரன் பராமரிப்பேன். உருசாலேம் பட்டணத்திற்கு தங்களுடைய உதவிகளை அனுப்பவேண்டுமென்று, சருவேசுரனாரால் கட்டளை பெற்ற தேசங்களும், அதன் அரசர்களும் இவர்களே! இவர்களுடைய காரியக்காரர்கள் உருசாலேம் பட்டணத்திற்கு வேண்டிய தானிய வகைகளும், எண்ணையும், திராட்சையும், வேண்டிய உப்பும், வெள்ளியும், பொன்னும் வாரந்தோறும், மாதந்தோறும், வருசந்தோறும் மின்னல் வேகப்பரிகளிலும், துரிதமான பாலைவனக்கப்பல்களிலும் வாயு வேகத்திலும், மனோ வேகத்திலும் வந்து, உருசாலேம் பட்டணத்தில் தங்கள் அரசர்களின் காணிக்கைகளை கொடுத்துவிட்டு போவார்கள்.

(–தொடரும்)

## திருமறைக் களஞ்சியம்

**10. ஆசரிப்புக் கூடார பணிமுட்டுகள் :**

| காணிக்கைப் பொருள்கள் | பணி முட்டுகள் | பொருள்களும் பணி முட்டுகளும் |
|---|---|---|
| 1. பத்மராகம், புஷ்பராகம், மாணிக்கம், மரகதம், இந்திரநீலம், வச்சிரம், படிகப்பச்சை, கெம்பு, வைடூரியம், சுகந்தி, கோமேதகம், யஸ்பி, இரத்தினம் | 1. உடன்படிக்கைப்பெட்டி, கிருபாசனம், கேருபீன்கள், தூப கலசம், தூபகரண்டி, அபிசேக தைலம், தூப வர்க்கம், பூரிகை | 1. பொன்னினாலும் இரத்தினங்களிலும் செய்யப்பட்டவைகள் : மார்பதக்கம், ஊரீம், தும்மீம் |
| 2. பொன், வெள்ளி, வெண்கலம் | 2. தூபபீடம், மேஜை, பானபலி பாத்திரங்கள், கரண்டிகள், குத்துவிளக்கு, கத்தரி, சாம்பல் பாத்திரங்கள். | 2.. பொன்னினால் செய்யப்பட்டவைகள் : கிருபாசனம், கேருபீன்கள், தூபகலசம், பொன் குத்துவிளக்கு, எண்ணை, சாம்பல் பாத்திரங்கள், கத்திரி, பானபலி பாத்திரங்கள், கரண்டிகள், நெற்றிப்பட்டம் |
| 3. இளநீலம் நூல், இரத்தாம்பரநூல், சிவப்பு நூல், மெல்லிய பஞ்சு நூல், சணல் நூல் | 3. பரிசுத்தஸ்தல தூண்கள், பலகைகள், பாதங்கள், கொக்கிகள், இணைப்புத் தாழ்ப்பாள்கள், தொங்கு திரைகள், மூடுதிரைகள், காதுகள், வளையங்கள் | 3. பொன்னினாலும், சீத்தீம் மரத்தினாலும் செய்யப்பட்டவைகள்: உடன்படிக்கைப்பெட்டி, தூபபீடம், மேஜை, வாசஸ்தல தூண்கள், பலகைகள், வளையங்கள், தண்டுகள். |
| 4. ஒலிவ எண்ணை, கருவாப்பட்டை இலவங்கம், வசம்பு | 4. வெண்கலத் தொட்டி | 4. வெள்ளியினால் செய்யப்பட்டவைகள் : வாசஸ்தல பலகைகள், தூண்களின் பாதங்கள், பிராகாரத்தூண்களின் குமிழ்கள், கொக்கிகள், பூரிகைகள் |
| 5. குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி, வெள்ளைப் போளம் | 5. பலிபீடம், சாம்பல் சட்டி, நெருப்புச் சட்டி, கிண்ணி, கரண்டி, முள்துறடு | 5. வெண்கலத்தினால் செய்யப்பட்டவைகள் : பிராகாரத்தூண்கள், பாதங்கள், வெண்கலத் தொட்டிகள், பலிபீடபணி முட்டுகளாகிய சாம்பல், நெருப்புச் சட்டிகள் கிண்ணி, கரண்டி, முள் துறடு |
| 6. வெள்ளாட்டு மயிர், சிவப்புத் தீர்த்த ஆட்டுக் கடாத் தோல் தகசுத் தோல், | 6. பிராகாரத்தூண்கள், சுற்றுப் புறத் திரைச் சீலைகள், வாசல் தொங்கு திரை பாதங்கள், கொக்கிகள், கயிறுகள் | 6. வெண்கலத்தினாலும், சீத்தீம் மரத்தினாலும்செய்யப்பட்டவை : பலிபீடம் |
| 7. சீத்திம் மரம் | 7. ஆசாரிய வஸ்திரங்கள் ஏபோத்து, மார்ப்பதக்கம், அங்கி, உள்சட்டை, பாகை, இடைக்கச்சை, சல்லடம், நெற்றிப்பட்டம், ஊரீம், தும்மீம் | 7' பஞ்சு நூலினால் செய்யப்பட்டவைகள் : ஆசாரிய வஸ்திரங்களாகிய ஏபோத்து, உள்அங்கி, வெளி அங்கி, பாகை, இடைக்கச்சை, சல்லடம் |
| | | 8. தோலினால் செய்யப்பட்டவைகள் : ஆட்டுக் கடாத்தோல், தகசுத்தோல் மூடுதிரைகள். |
| | | 9. மயிரினால் செய்யப்பட்டவைகள் : ஆட்டு மயிரினால் செய்யப்பட்ட மூடுதிரை |

# 11. பலிகள்

பெரிய பலிகள் (அடிக்கடி செலுத்த வேண்டும்) | சிறிய பலிகள் (குறிக்கப்படும் நேரத்தில் செலுத்துதல்)

(முற்றிலும் தகனமாகும் பலிகள்)

1. சர்வாங்க தகன பலி
லேவி 1, 6, 7, 9, 16 அதி

2. பாவ நிவாரண பலி
யாத் 29 அதி
லேவி 4, 6, 16 அதி

3. குற்ற நிவாரண பலி
லேவி 5, 6, 7, 14 அதி

4. சமாதான பலி
லேவி 3, 7, 10, 19 அதி
எண்ணா 10, 15 அதி

5. போஜன பான பலி
யாத் 29 அதி
லேவி 2, 6, 23 அதி

பலி பீடத்தில் தகனம் ஆகாத பலிகள்

இரத்தம் சிந்தாத பலிகள்

1. பிரதிஷ்டை பலி
லேவி 7, 8, 16, 17 அதி

2. சுத்திகரிப்பு பலி
லேவி 14 அதி

3. தீட்டுக்கழிக்கும் பலி
எண் 19 அதி

4. ஸ்தோத்திர பலி
லேவி 7,22 அதி

5. உற்சாக பலி
லேவி 7,22 அதி
எண் 15, அதி
உபா 12, 23 அதி

பலிகளில் புசிக்க
செலுத்துபவருக்கு
பங்கு கிடைக்கும்




இரத்தம் சிந்துதல்
1. மகா பரிசுத்த ஸ்தலத்தில்
2. பரிசுத்தஸ்தலத்தில் (அன்றாட பாவ நிவாரண பலியின் இரத்தம்)
3. பிராகாரத்தில் (பலிபீடத்தினடியில்)



# நித்திய ஜீவன்

## 3. மறுரூப நிலைமைகள்.

| இம்மை | இடைக்காலம் | மறுமை |
|---|---|---|
| 11. <u>தூதிகள்</u> : | | |
| பிலிப் 3 = 20, 21. அற்பமான சரீரம் | | மகிமையான சரீரம் |
| II கொரி 4 = 6,7. மண்பாண்டம் | | II திமோ2=20,21 பொற்பாத்திரம் |
| 16, புறம்பான மனிதன். | சிதைவு | உள்ளான மனிதன் |
| II கொரி 5 = 8,9. விரும்புகிறோம். | | நாடுகிறோம். |
| 12 <u>ஆலயம்</u> : | | |
| IIகொரி 5 = 1,2 கூடாரம் | | நித்திய வீடு, பரம வாசஸ்தலம் |
| பூமிக்குரியவர்களல்ல. | மாற்றுதல் | பரலோரத்திற்குரியவர்கள் |
| ஆசரிப்புக் கூடாரம் போல. | | தேவாலயம் போல |
| 13. <u>மேனி</u> : | | |
| I கொரி 15 = 33 -38 விதை | | புதிய மேனி |
| 42.அழிவுள்ளது (மண்) | அடக்கம் | அழிவில்லாதது (பொன்) |
| 14. <u>சாயல்</u> : | | |
| I கொரி 15 = 42 - 44 ஜென்ம சரீரம் | | ஆவிக்குரிய சரீரம் |
| 45 - 49 ஆதாம் சாயல் | அழிவு | கிறிஸ்துவின் சாயல் I யோவா 3 = 1 |
| 54 இரத்த சரீரம் | | ஜீவனுள்ள சரீரம் மகிமையுள்ளது. |
| கனவீனமுள்ளது | | |
| 15. <u>மறுரூபம்</u>: | | |
| II கொரி 5 = 3 | நிர்வாணிகள் | |
| | II ராஜா 2 :1 11 - 13 | |
| | சால்வை விழுதல் | |
| <u>மகிமை</u> : | | |
| II கொரி 5 = 4 போர்வை | மறுரூபம் | விழுங்குதல் மத் 17 = 1,2 |
| -வாசஸ்தல மூடு திரைகள் போல | | மாற்கு9 = 2,3 |
| | | தேவாலயத்தின் மேல் |
| | | தளமாகிய பொன் போல |
| 16. <u>நிலைமை</u> : | | |
| II கொரி 5 = 5-8 தேகத்தில் | I தெச 4 = 14 | கர்த்தரிடத்தில் |
| மத்தே 28 = 20 கர்த்தர் நம்மோடு | எடுத்துக்க கொள்ளப் படல் | I தெச 4 = 17 நாம் அவரோடிருப்போம். |

<u>17. மறுரூபமடைதல்</u> :

பிலிப் 3 = 20,21. நம்முடைய அற்பமான சரீரம் மறுரூபம் ஆகும் போது மூன்றுவித நிலைமையில், சிப்பிக்குள் முத்துப் போல மகிமையாக இருக்கும்.

(அ) நட்சத்திரங்கள் போல பிரகாசமடைவோம். தானி 12 = 1 -3 I கொரி 15 = 41

(ஆ) தூதர்களைப் போல (சந்திரனைப் போல பிரகாசமடைவோம்) லூக் 20 = 35, 36

(இ) இயேசுவானவரைப் போல, (சூரியனைப் போல பிரகாசமடைவோம்.) மத் 17 = 1 அப் 26 = 13 I யோவா 3 = 1,2

இவ்விதமான மகிமைகள் பிதா, மாதா, பிள்ளைகள் போல ஒரு குடும்பத்திற்கு ஒப்பாக இருக்கும். அவரவர் பூமியில் கிரியைகளுக்கு தக்க மகிமையாக இருப்பார்கள் (- தொடரும்)

(© C.B.P. PUBLISHED BY : S SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX" THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013)



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

## 4. ஜீவரட்சனை வைத்திய சாலை

உருசாலேம் பட்டணத்தின் வடகிழக்கு மூலையில் உள்ள நாசமலையின் மேல் இந்த ஜீவரட்சனை வைத்திய சாலை கட்டப்பட்டிருக்கிறது. இந்த நாசமலையில் வைத்துதான் சீயோன் மலையரசரை, பூர்வீக உருசாலேம் பட்டணத்தார் கொலை செய்து, அவருடைய ஜீவனை அறுப்புண்டு போகச் செய்தனர். பின்பு சருவேசுரனால், உயர்ப்பிக்கப்பட்ட சீயோன் மலையரசர், இந்த இடத்தில் தமது சிந்தையை வைத்து, பூதலத்தார்கள் கொடிய பாவத்தோடு வியாதிக்குட்பட்டு சாவுக் கேதுவாயி இங்கு வரும் போது அவர்களுக்கு ஜீவன் கொடுத்து மீட்கும்படியாக, இந்த ஜீவ ரட்சண வைத்திய சாலையை கட்டும்படி அருள் புரிந்தார். அன்று முதல் இந்நாள் வரைக்கும் பூதலத்திலுள்ள பற்பல தேசத்தார்களில் கோடா கோடி சாதி சனங்கள் இங்கு வந்து, குணமாக்கப்பட்வர்களாக பரம நிழல் தேசத்தில் குடியேறி, அவர்கள் உன்னதபுரி தேச சுதந்தரவாளிகளாக மாறியிருக்கின்றனர்.

இந்த ஜீவரட்சனை வைத்தியசாலை ஏழு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவைகளில் பணிபுரியும் வைத்திய சித்தர்கள் அனைவரும், சீயோன் மலையரசரால் பயிற்றுவிக்கப்பட்டு, இந்த மருத்துவ சாலையில் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களும், இவர்களுடைய பணிவிடைக்காரர்களுடைய நாமங்களாவன :

<u>முதல் பகுதி :</u> மருத்துவ அலுவலக சாலையாகும் இதில் தேவன்பு சித்தர் தலைமை வைத்தியராகவும், அவருக்கு உதவியாக நல் விசேஷனும், ஆதரவாளனும் இருந்தனர். இவர்கள் செம்பருத்த இரத்தாம்ரபர உடைகள் அணிந்திருந்தனர்.

<u>இரண்டாவது பகுதி :</u> தெளிவு வரைபட சாலை. இங்கு பிராணணாத்துமாவுக்கு பற்பல சிகிட்சை செய்து, நோய்கள் இன்னது என்று கண்டறிப்பட்டன. அதாவது ; தெளிவு வரைபட பரிசோதனை, மின்னல், ஒளி, நீர், வாயு, காந்தம் ஆகியவைகளின் மூலம் சிகிட் சையளித்தல். இவைகளில் நிறை காந்த சித்தர், ஜெய பால சித்தர், புண்ணிய நாத சித்தர் ஆகியோர் வைத்தியர்களாவும், இவர்களுக்கு உதவியாக தேவபயத்தனனும், தேவ வைராக்கியனும் இருந்தனர். இவர்கள் சூரிய காந்தி வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

<u>மூன்றாவது பகுதி :</u> அறுவை சிகிட்சை சாலை. இங்கு வியாதியஸ்தர்களுக்குள்ள புரையோடியது, கட்டி, முறிவு, சதைப்பு ஆகியவைகளை அறுவை சிகிட்சை மூலமாக குணமாக்குபடி, அறுவை சிகிட்சை நிபுணர்களாக ஏழு சித்தர்கள் இருந்தனர். முதலாவது: பாவ நாச சித்தர், இரண்டாவது: பாவ பரிகார சித்தர், மூன்றாவது: பாவ விமோசன சித்தர், நாலாவது: சீரேசு சித்தர், ஐந்தாவது: முதற்பல சித்தர், ஆறாவது: சாவாமை சித்தர், ஏழாவது: மகானுபாவ சித்தர் ஆகியோர் வைத்தியர்களாகவும், இவர்களுக்கு உதவியாக மனமாற்றன், மனதுருக்கன், திடமனதன், மனப்பூர்வன், ஜாக்கிரதையோன், எச்சரிக்கையோண், சீர்திருத்தன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் சிவந்த அல்லி வர்ண உடைகள் த்ரித்திருந்தனர்.

<u>நாலாவது பகுதி :</u> சுத்திகரிப்பு சாலை, இங்கு மாசனுகாத சித்தர், மறுரூப சித்தர் ஆகியோர் வைத்தியர்களாகவும், இவர்களுக்கு உதவியாக, நல்வினையனும் நல்லொழுக்கனும் இருந்தனர். இவர்கள் சாம்பல் நிற உடைகள் அணிந்திருந்தனர்.

<u>ஐந்தாவது பகுதி :</u> மருத்துவ சாலை, இங்கு தர்ம உபகார சித்தர் வைத்தியராகவும் அவருக்கு உதவியாக இணங்கு நெஞ்சனும், பராமரிப்போனும் இருந்தனர். இவர்கள் மல்லிகை வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

<u>ஆறாவது பகுதி :</u> உணவு சாலை: வியாதியஸ்தர்களாக இருந்தவர்கள் சரியான குணம் ஆகும் வரை, அவர்களுக்கு இதமான உணவுகள் கொடுக்கும் படியாக அருளாதார சித்தர், தேவ சகாய சித்தர் ஆகியோர் வைத்தியர்களாகவும், இவர்களுக்கு உதவியாக உபசாரனும், தர்ம சகாயனும் இருந்தனர். இவர்கள் கிக்கிலி வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

<u>ஏழாவது பகுதி :</u> பொது ஒய்வு சாலை, இது வியாதியஸ்தர்கள் இளைப்பாறும் சாலை எல்லாருக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட வில்லை. அவர்கள் சேர்ந்திருந்து பொது சாலையிலேயே இளைப்பாறினர். இவர்களை அடிக்கடி பரிசோதனை செய்வதற்காக தேவாறுதல் சித்தர், தேவ சமாதான சித்தர் ஆகியோர் வைத்தியர்களாகவும், இவர்களுக்கு உதவியாக தேவ புயனும், தேவ சிநேகனும் இருந்தனர். மேலும் இந்த பொது ஒய்வு சாலையை இரவு பகலாக காவல் செய்யும் படி சர்வாயுதனும், தேவ செயலனும் காவலுக்கு மாறி மாறி நின்றனர். இவர்கள் யாவரும் குருத்தோலை வர்ண உடைகளை அணிந்திருந்தனர்.

(—தொடரும்)

## <u>சிறிய குறிப்புகள்</u>

***சோதனைகள் :*** "அலை அலையாக சோதனைகள் இதயத்தையும், உள்ளத்தையும் தாக்கினாலும், அவைகளெல்லாம் நம்மை மேற்கொள்ளமாட்டாது ; தேவனின் வாக்குத் தத்தம் உண்மையுள்ளது; வெள்ளத்தையும், அலைகளையும் கடந்து அவர் நம்மை அழைத்துச் செல்லுவார் !

***கிரியைகள் :*** பிறர் பெரிய காரியங்களைச் செய்யலாம் நீ, செய்ய வேண்டிய கடமையுண்டு; தேவனுடைய ராஜ்யத்தில் நீ மாத்திரம் அதை நன்றாய்ச் செய்ய முடியும்!

***ஒப்புவித்தல் :*** முற்றிலுமாக தங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்தவர்கள் எந்த நிலைமையிலும் திருப்தியாயிருப்பார்கள்!

## 12. ஆசரிப்பின் கூடாரமும் அதன் திருஷ்டாந்தங்களும்

| ஆசரிப்பின் கூடாரம் | பரலோகம் | கிறிஸ்து | சபை | விசுவாசிகள் | உலகம் | காலங்கள் |
|---|---|---|---|---|---|---|
| எண் 12:7 எபி 3:2<br>யாத் 40:34<br>தேவனுடைய வீடு | எபி 8=1–5; 9=11,12<br>ஏசா 6=1–6, எண் 7:89<br>வெளி 4=1–3 | எபி 3=1–3; யாத் 40:35;<br>I ராஜா 8=10,11; லூக் 9:34 | எபி 12;22–24<br>எபேசி 2;19–22 | எபி 3:6; I கொரி 3:16,<br>யாத் 25=8; –40:35 | எபி 10;5–9 | எபி 9:8,9 |
| மகா பரிசுத்தஸ்தலம்<br>எபி 9:3, யாத் 25:22<br>தேவ பிரசன்ன இடம் | உன்னதம் (வலது பாரிசம்)<br>ஏசா 57=15, எபி 12:1,2 | (ஆவி) யோவா 10:30<br>யோவா 14=9 பிதாவின் வாசம் | யாத் 40:34, மத் 18:20<br>எபி 4=16 ம.ப.ஸ்தலம்<br>தேவ பிரசன்ன இடம் | (ஆவி) I கொரி 3=16<br>எபி 4=16 தேவனுடைய<br>பிரசன்ன இடம் | | மறுமை நித்தியம் |
| உடன்படிக்கைப் பெட்டி<br>கிருபாசனம்<br>கேரூபீன்கள்<br>நியாயப்பிரமான பலகைகள்<br>மன்னா<br>துளிர்த்த கோல் | சிங்காசனம்<br><br>ஜீவன்கள்<br>தேவசித்தம்<br>கிறிஸ்து<br>கிறிஸ்து | கிறிஸ்து<br><br>தன்மைகள்<br>கிரியைகள் (பலி)<br>கிறிஸ்து பிறப்பு<br>கிறிஸ்து உயிர்த்தெழுதல் | தேவ பிரசன்னம்<br><br><br>விடுதலை<br>ஆவிக்குரிய போசிப்பு<br>உயிர்த்தெழுதல் நம்பிக்கை | தேவ பிரசன்னம்<br><br><br>விடுதலை<br>ஆவிக்குரிய போசிப்பு<br>உயிர்த்தெழுதல் நம்பிக்கை | சுவிசேஷம் அறிவித்தல் | |
| பரிசுத்த ஸ்தலம்<br>எபி 9=1,2 | ஏதேன் (தூதர்கள் வாசம்)<br>எசேக் 28=13 | (ஆத்துமா) யோவா 20:22<br>பரிசுத்த ஆவியானவரின்வாசம் | அப்போ 13=1,2 ஆராதனை<br>பரிசுத்த ஸ்தலம் | (ஆத்துமா) யோவா 4=23,24<br>பிலிப் 3=3 ஆராதனை | (சபை) ஆராதனை இடம் | எபி 9=8 சபையின் யுகம் |
| தூப பீடம்<br>தூப வர்க்கம்<br>குத்துவிளக்கு அகல்கள்<br>மேஜை அப்பங்கள்<br>வாசல் தூண்கள்<br>பலகைகள்<br>மூடு திரைகள் | ஜீவன்கள்<br>ஸ்தோத்திரம்<br>ஏழு ஆவிகள்<br>24 மூப்பர்கள்<br><br><br>மறைவு | தன்மைகள்<br><br>கிறிஸ்து<br><br>தன்மைகள்<br><br>கிறிஸ்து | கிறிஸ்து<br>ஜெபம்<br>உபதேச வெளிச்சம்<br>ஆராதனை<br><br>இரகசியம்<br>இரகசியம் | கிறிஸ்து<br>ஜெபம்<br>உபதேச வெளிச்சம்<br>ஆராதனை<br>ஐம்புலன்கள்<br>விசுவாசிகள்<br>மறைவு | | |
| பிராகாரம்<br>யாத் 27=17,18 | பரதீசு (மனிதர்கள் வாசம்)<br>வெளி 2:7 லூக் 23=43<br>II கொரி 12=2 | எபி 10=5–10 (சரீரம்)<br>குமாரனாகிய தேவன் | I பேது 2;5 ஊழியம்<br>பிராகாரம் | I தெச 5=23 (சரீரம்)<br>ரோம 12=1 பிரதிஷ்டை | உலக இரட்சிப்பின்<br>திட்டம் (ஊழியங்கள்) | இயேசுவானவரின்<br>33½ வருசங்கள்<br>எபி13=10–13 |
| வெண்கலத் தொட்டி<br>தண்ணீர்<br>பலிபீடம்<br>வாசல் தூண்கள் திரை<br>பிராகாரத் தூண்கள்<br>சுற்றுப்புற திரை | அக்கினிக் கடல்<br><br>பலிபீடம் (கிறிஸ்து)<br>மறைவு (ஒரே வழி) | கிறிஸ்து<br><br>கிறிஸ்து<br>கிறிஸ்து | சுத்திகரிப்பு பரிசுத்த<br>ஆவியான வரால்<br>சுய வெறுப்பு<br>இரட்சிப்பு<br>விசுவாசிகள்<br>பரிசுத்தம் | சுத்திகரிப்பு (ப.ஆ)<br><br>சுயவெறுப்பு<br>இரட்சிப்பு<br>விசுவாசிகள்<br>பரிசுத்தம் | | |
| பாளையம் எண் 1=52 | உலகம் | இயேசுவானவரின் உலக<br>வாழ்க்கை | சபையாரின் உலக<br>வாழ்க்கை | விசுவாசியின்<br>உலக வாழ்க்கை | உலகம் | பழைய ஏற்பாட்டின்<br>காலம் |

குறிப்புகள் : ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி எபிரெயு நிருபத்தில் ஆறு விதங்களில் திருஷ்டாந்தகளாக பரிசுத்த ஆவியானவர் அறிவிக்கிறார்

இவ்வித திருஷ்டாந்த உவமைகளைப் பற்றி இந்த அட்டவணையில் விபரமாக குறிப்பிடவில்லை.

தேவனுடைய வாசஸ்தலத்தைப் பற்றியுள்ள ஒவ்வொரு அட்டவணையிலும் உள்ள திருஷ்டாந்தங்களை மொத்தமாக சேகரித்து தொகுத்த பின்பு முழுமையான அர்த்தங்களை அறிய முயற்சிக்கவும்!

## 13. தேவாலயமும் - பரலோகமும்

யாத் 25 : 40 I நாளா 28:19 எபி 8:5

1. தேவாலயம் : யாத் 40=16-35, I நாளா 28 = 10 -21 II நாளா 3:3-17- 5=11=14
2. பலிபீடம் : II நாளா 4:1,16 வெளி 6=9- 8=5
3. கடல்தொட்டி : II நாளா 4:2-6, 10,14,15, வெளி 4=6, - 15:2
4. குத்துவிளக்கு : II நாளா 4:7,20,21 வெளி 4:5




5. மேஜை : II நாளா 4=8, 19 வெளி 4:4
6. தூபபீடம் : II நாளா 4:19 வெளி 4: 6-8
7. உடன்படிக்கைப் பெட்டி : II நாளா 5:1-10 வெளி 4:1-3

## 4. இரகசிய வருககை (நியாயாசனம்!)

**பரிசோதனை :**

ரோம 14 = 10 பிறரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமை. – (ஜீவியம்)

II கொரி 5 = 10 நன்மை, தீமைகள் – (கிரியைகள்)

I கொரி 3 = 10 – 15 கட்டுதல் – (ஊழியம்)

பொன் – தெய்வீக மகிமை
வெள்ளி – மீட்பு
கல் – விசுவாச உறுதி } (ப.ஆவியானவரின் சித்தம்)

மரம் – உளுத்துப் போகுதல்
புல் – உலர்ந்து போகுதல்
வைக்கோல் – எரிந்து போகுதல் } (மனுஷ சித்தம்)

**அக்கினி பரிசோதனை :**

யாத் 30 = 18 – 21 வெண்கலத் தொட்டியில் ஆசாரியர்கள் சுத்திகரிப்பது போல,

வெளி 4 = 6 – 15 = 2. அக்கினிக் கடலில் சுத்திகரிக்கப்படல்

அக்கினி கடல் கடந்து நியாயாசனத்தை அடைய வேண்டும்.

**19 கிரியைகளுக்கான பலன்கள் :**

வெளி 22 = 12

சீமோன் பேதுரு ஒரு படவுக்கு – இரண்டுபடகு நிறைய மீன்கள்

கானா ஊரில் கொஞ்சம் திராட்சரம் – ஆறு ஜாடி நிறையக் கொடுத்தல்

500 பேருக்கு அப்பங்கள் பரிமாறிய சிஷர்களுக்கு – 12 கூடை நிறைய அப்பங்கள்

மார்த்தாள், மரியாள் உபசரிப்புக்கு – லாசருவை எழுப்புதல்

ஒரு கலசம் தண்ணீருக்கும் – பலன்கள்.

ஏதாகிலும் இழந்து போனால் – நூறு மடங்கு பலன்கள்.

**20 ஊழியத்தின் பலன்கள் :**

மத்தே 20 = 1,2,8,9. திராட்சத் தோட்டத்தில் வேலை செய்தவர்கள்

3,6,9,11 மணிக்கு வேலைக்கு அமர்த்துதல்

சபை ஊழியர்களுக்கு சம பலன்கள்

மத்தே 25 = 14 – 30 தாலந்து வியாபாரம்

10, 5, 2, 1 திறமைக்குத் தக்க பலன்கள்

சுவிசேஷ ஊழியர்களுக்கு இரட்டிப்பான பலன்கள்.

**21. ஜீவியத்திற்கான பலன்கள் :**

I கொரி 9 = 24, 25 அழிவில்லாத கிரீடம் – (பரிசுத்தர்களுக்கு)

I தெசலோ 2 = 19, 14. மகிழ்ச்சியின் கிரீடம் – (பாடுகளுக்கு)

II தீமோ 4 = 8 நீதியின் கிரீடம் – (விசுவாசிகளுக்கு)

I பேது 5 = 3, 4, வாடாத கிரீடம் – (சபையை காத்தவர்களுக்கு)

யாக் 1 = 12 ஜீவகிரீடம் (சாத்தானை – சோதனையை ஜெயித்தவர்களுக்கு)

**22. தீமைகளுக்கான பலன்கள் :**

மத்தே 18 = 23 – 25 பதினாயிரம், நூறு தாலந்து கடன்பட்டவர்கள்.

லூக் 12 = 41 – 48 உடன் ஊழியரை அடித்துப் புசித்தல்

35 – 38 காத்திருக்கிற ஊழியர்களை பந்தியிருக்கச் செய்தல்.

(– தொடரும்)

© C.B.P.

- PUBLISHED BY : S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX"
THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O TRICHY - 620 013

## 5. மெய்ஞான வாசஸ்தலம்

உரு சாலேம் பட்டணத்தின் முகத்துவாரத்தில் கிழக்கில் நின்ற மோரியாக் குன்றின் மேல் இந்த மெய் ஞான வாசஸ்தலம் கட்டப்பட்டிருந்தது. இது சீயோன் மலையரசருக்காக கட்டப்பட்ட வாசஸ்தலம். எனவே, சீயோன் மலையரசர் இங்கு வருகிற வரைக்கும் தேவனாவிராயர் ஒவ்வொரு நாளும் இந்த வாசஸ்தலத்தில் பிரசன்னராகி தம்மைத் தேடி வரும் உரு சாலேம் பட்டணத்தாருக்கு, அவரவர் செய்யும் வேலைகளை அவ்வப்போது கட்டளையிட்டு வந்தார். இந்த வாசஸ்தலம் உன்னதபுரியின் சாயலிலே கட்டப்பட்டிருந்தது என்று தேவனாவிராயரே ஒரு முறை கூறி இருக்கிறார்.

மகா விசாலமான இந்த வாசஸ்தலத்தின் வெளிப்பிரகாரம், உள்பிராகாரம், பரிசுத்தஸ்தலம், மகாபரிசுத்தஸ்தலம் என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதன் வெளிப்பிராகாரம் உருசாலேம் பட்டணத்தார் அளவளாகும் இடமாகும். இந்த வாசஸ்தலத்தில் தேவனாவிராயரோடு சேர்ந்து, சீயோன் மலையரசருக்கு ஆராதனை முறைமைகளை நிறைவேற்றுவதற்கு ஏழு மகா ஆசாரியர்கள் இருந்தனர். இவர்களும், இவர்களுடைய பணிவிடையாளர்களின் நாமங்களுமாவன: வாசஸ்தலத்தில் வெளிப்பிராகாரத்தில் சீர்திருத்தன், ஏக சிந்தையின் என்ற இரு பணிவிடைக்காரர்கள் காவலுக்கு நின்றனர். வாசஸ்தலத்தில் பிரவேசிக்கும் உருசாலேம் பட்டணத்தார் யாவரும், இவர்களிடம் கையொப்பமிட்டு அதிகாரப் பத்திரம் பெற்றுக் கொண்டு தான் உள்ளே பிரவேசிக்க முடியும். பின்பு உள் பிராகாரத்தின் வாசலுக்கு முன்பு, ஜீவ பலிபீடம் ஒன்று எப்பொழுதும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அங்கு ஜீவபலி செலுத்த வருபவர்களுக்காக தேவ பிரசன்ன ஆசாரியரும், அவருக்கு உதவியாக மனப்பூர்வனும், நல்மனதனும் ஊழியம் செய்து வந்தனர். அதற்கு அடுத்த ஜீவ தண்ணீர் சுத்திகரிப்புத் தொட்டியில் ஞானமங்கல ஆசாரியரும், அவருக்கு உதவியாத மாசில்லானும், மறுரூபனும் ஊழியம் செய்தனர். அதற்கு அடுத்து பரிசுத்த ஸ்தலத்தின் வாசலில் வைக்கப்பட்டிருக்கும் தசாம்சம் பெட்டகத்தில் ஆசிர்வாத ஆசாரியனாரும், அவருக்கு உதவியாக மனோ உற்சாகனும், தேவப் பிரியனும் ஊழியம் செய்தனர். இவர்கள் மூலம் அன்றி வேறுயாரும், தாங்கள் சுயமாக சீயோன் மலையரசருக்கு காணிக்கைகளை செலுத்தினால் அது அங்கிகரிக்கப் படுவதில்லை என்று தேவனாவிராயர் கட்டளையிட்டிருந்தார்.

பின்பு பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசித்தவுடன், இடது பக்கமாக தேவமறை விளக்கு மிகப் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும். அதற்கு தேவபிரகாச ஆசாரியனாரும், அவருக்கு உதவியாக உணர்வாளனும், விழிப்பாளனும் ஊழியம் செய்தனர். இந்த பரிசுத்த ஸ்தலத்தின் வலது பக்கத்தில் இராபோஜன மேஜையும், பாத்திரமும் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு மெல்கிசேதேக் ஆசாரியனாரும் அவருக்கு உதவியாக பயபக்தியனும், நிதானனும் ஊழியம் செய்தனர். வாரத்தின் முதல் நாள் மட்டும் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பவர்களுக்கு மட்டும், ஜீவ அப்பமும், மெய் முந்திரரசமும் பிரசாதமாக இவர்கள் கொடுத்தனர். இந்த தேவ மறை விளக்கிற்கும், இராபோஜன மேஜைக்கும் நடுவாக உள்ள இடத்தில் தோத்திர தூப பீடம் வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அநுகிரக ஆசாரியரும் அவருக்கு உதவியாக துப்புரவாளனும், பரிமளனும் ஊழியம் செய்தனர். இந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு போகும் வாயிலில் ஒரு உபதேச பீடம் வைக்கப்பட்டிருந்தது. இங்கு தேவனாவிராயர் பிரசன்னமாகிற சமயத்தில் எல்லாம், அவருக்கு உதவியாக வெளிப்படுத்துனனும், வியாக்கியானனும் அருகே நின்று, சீயோன் மலையரசரின் ஞான பிரபந்தத்தை உயர்த்திக் காண்பிப்பார். அதிலிருந்து தேவனாவிராயர் இளம் புல்லின் மேல் பனியைப்போல தமது வாக்குகளை அருள் மாரி பொழிவார்.

அடுத்து மகா பரிசுத்த ஸ்தலத்தில், புதிய உடன்படிக்கை பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதற்கு கிருபாசன ஆசாரியர் மட்டும் ஊழியம் செய்து வந்தார். இவருக்கு உதவியாக யாரும் வேண்டியதில்லை. தேவனாவிராயர் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திற்கு வரும்போது, கிருபாசன ஆசாரியரும் சேர்ந்து வந்து ஏகமாக பிரசன்னமாவார்கள். பின்பு அங்கிருந்து, மீண்டும் மகா பரிசுத்த ஸ்தலம் சென்று அங்கிருந்து, மேல் நோக்கிச் செல்லும் சுற்றுப்படிக்கட்டுகள் வழியாக தேவனாவிராயர் மட்டும், தாம் வாசம் செய்யும் வெண்மாளிகைக்குச் சென்று விடுவார். கிருபாசன ஆசாரியனார் மட்டும் அங்கு தனித்து தங்கியிருப்பார்.

ஒவ்வொரு நாளும் மூன்றாம் சாமம் பின்னிரவு முதல், நாலாம் சாமம் பின்னிரவு வரை மெய்ஞான வாசஸ்தலம் திறக்கப்பட்டிருக்கும். அதற்கு பின்பு அதன் கதவுகள் அடைக்கப்பட்டுப் போகும். கால தாமதமாக வருகிறவர்கள் வாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. பின்பு தேவனாவிராயரை தரிசிக்க முடியாமல் வெளிப்பிராகாரத்தில் குந்தி, குந்தி முகங்குப்புற விழுந்து விட்டுப் போவார்கள். இப்படி அநேக மாதங்கள், ஏன் வருசங்களாக தேவனாவிராயரைப் பார்க்காமலே இருப்பவர்கள் உருசாலேம் பட்டணத்தில் இருக்கிறார்கள் என்று சொல்வதுண்டு. ஆனால் உத்தம விசுவாச மார்க்கத்தார் மட்டும் தினந்தோறும் மூன்றாம் சாமத்தில் வந்து, தங்களுக்குரிய கடமைகளைச் செய்ய தேவனாவிராயரின் ஆசி பெற்று தேவ பிரசன்னத்தோடு போவார்கள் என்றும் சொல்வதுண்டு. இவர்களாலே தான் இன்னும் உரு சாலேம் பட்டணம் நிலைத்து நின்று வருகிறதாம்!

இந்த மெய் வாசஸ்தலத்தின் முகத்துவாரத்தில் இரு வானளாவ கோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கோபுரங்கள் பன்னிருவடியார்கள் காலமுதல் இன்று வரை கை தேர்ந்த சிற்பிகளால் கட்டப்பட்டு இன்னும் முடியாதிருக்கிறது. இக் கோபுரங்களில் பற்பல பல கனிகள் உண்டு. இந்த வலது புறம் உள்ள கோபுரத்திற்கு அற்புதவானன் என்றும், இடது புற கோபுரத்திற்கு அதிசயவானன் என்றும் தேவனாவிராயர் அவைகளுக்கு பெரியிட்டிருந்தார். அற்புதவானன் கோபுரத்தில் ஏறி அதன் பலகனி வழியாக பார்ப்பவர்களுக்கு பூதலத்தினுடைய சகல காரியங்களும் தெரியவரும். பின்பு அதிசயவானன் கோபுரத்தில் ஏறிப் பார்ப்பவர்களுக்கு பாதாளத் தேசத்தினுடைய காரியங்கள் யாவும் தெரிய வரும். இதுவரை சீயோன் மலையரசரும், மரித்தோர்களும் தவிர வேறு யாரும் பாதாள தேசத்திற்கு சென்றதுமில்லை, அதனைப் பார்த்ததுமில்லை. இந்த கோபுரங்கள் இன்னும் சரியாக கட்டப்படாதபடியால் யாரும் அவைகளில் ஏறி சரியாக பார்க்க முடிகிறதில்லை. இக் கோபுரங்களில் தற்காலத்தில் சாமக் காரரும், எக்காளக் காரரும் தங்கி அவ்வப்போது, பூதலத்தார், பாதாள தேசத்தார் ஆகியோரது காரியங்களை உருசாலேம் பட்டணத்தார்க்குச் சொல்லும் போது, அவர்கள் அவைகளை நம்புகிறதில்லை. இதற்கு காரணம் உருசாலேம் பட்டணத்தார் தவிர, பல சாதி, சனங்கள் திருட்டளவாய் அந்த பட்டணத்தில் குடியிருந்தது தான். ஆனால் உருசாலேம் பட்டணத்து மெய் விசுவாச மார்க்கத்தார் மட்டுமே, கோபுரங்களைக் கட்டும் சிற்பிகளைப் பார்த்து இவ்வாறு அடிக்கடி பாடுகின்றனர். அதாவது :

"சிற்பியாரே, சிற்பியாரே!
சர்வவல்ல கர்த்தருக்கு
வடித்திடுவீர் கோபுரத்தை
ஜெபித்திடுவோர் சீர்பெறவே
கட்டுவீரே சிற்பியரே!

இயேசுவென்ற மூலைக்கல்லு
அடியாரென்ற பாரக்கல்லு
விசுவாசனென்ற சீவக்கல்லு
முக்கற்களின் கோபுரத்தை
முடித்திடுவீர் சிற்பியாரே!

வைக்கோற் புல்லும் வெந்து போகும்,
பொன்னு வெள்ளி கல்லுகளை
பொதிந்து வைத்து பின்னும்கலை
தூரிதமாக பாரறிய பக்தியுடன்
செய்திடுவீர் புத்தியுள்ள சிற்பியாரே!

அன்பு என்ற தளத்தைக் காட்டி
தின்மை என்ற தூண்கள் நாட்டி
உண்மை என்ற கூரை நீட்டி
வெண்மை என்ற சுன்னம் தீட்டி
ஊர் அறிய செய்திடுவீர் சிற்பியாரே!

மகிமை என்னும் கோபுரத்தில்
கருணை என்னும் பலகணிக்கு
நம்பிக்கை என்னும் படிகளிட்டு
சீவ ஒளி வாசலையே
திறந்து வைப்பீர் சிற்பியாரே!

தொடரும்

## நித்திய ஜீவன்

### 5 இயேசுவின் இரகசிய வருகை(உள்ளான நிலைமைகள்)

23 <u>சுத்திகரித்தல்</u> :

I யோவா 3 : 2, 3 சுத்திகரித்துக் கொள்ளுகிறான்

I யோவா 1 : 7 – 9 . . . ஆத்துமாவை (பலியின் இரத்தத்தினால் போல)

– II கொரி 7 = 1 சரீரத்தை (பூரணப் படுத்துதல்)

– வெண்கலத் தொட்டியில் சுத்திகரிப்பது போல,

– II தீமோ 2 : 20 ,21. உபயோகமான பாத்திரம்

24 <u>துப்புரவு</u> :

பிலிப் 1–11 தூபவர்க்கத்தைப் போல

I தெச 3=13 பரிசுத்தமாக

25 <u>கலங்காதிருத்தல்</u> :

II தெச 2:1–3

I தெச 1=9,10 – 5=9 – ரோம 5= 9,10, வெளி 3=10

கோபாக்கினைக்கு நீங்கலாகக் காத்தல்

26 <u>சந்தோசம்</u> :

I தெசலோ 2=19,20

– எபி 12=2 அப்போ 5=41 அவமானத்தில்

– II கொரி 8=2 தரித்திரத்தில்

– கொலொ 1=24, பாடுகளில்

– எபி 10=34 பரலோக சுதந்தரத்தில் . . ..

27 மகிமை :

கொலொ 3=4

I தெச 2=11 ராஜ்யத்தின் 19 கிரீடம்

தீத்து 2=13 மகிமையின் பிரசன்னம்

யூதா = 24, 25 சந்நிதானம்

(தொடரும்)

# திருமறைக் களஞ்சியம்

**தேவனுடைய வாசஸ்தலம் (யாத்திராகமம்; I இராஜாக்கள்; II நாளாகமம்**

| யாத்திராகமம் | ஆசரிப்புக் கூடாரம் | I இராஜாக்கள் தேவாலயம் | II நாளாகமம் தேவாலயம் | தேவாலய அழிவு | செருபா பேல் கட்டின தேவாலயம் | ஏரோது கட்டின தேவாலயம் |
|---|---|---|---|---|---|---|
| யாத் 25=10–22<br>யாத் 37=1–9 | உடன்படிக்கைப் பெட்டி | I இராஜா 8=1–9 | II நாளா 5=1–10 | எரேமி 3=16 | | |
| 25:23–30<br>37=10–16 | மேஜை | - " -<br>II இராஜா 7=48 பொன் மேஜை | II நாளா 4=8,19 பத்து மேஜைகள் | | | |
| 25:31–40<br>37:17–24 | குத்து விளக்கு | I இராஜா 7=49<br>பசும் பொன் விளக்கு | I நாளா 4=7, 20–22<br>பத்து பொன் விளக்குகள் | | | |
| 30=1–10<br>37=25–29 | தூப பீடம் | I ராஜா 7=50<br>தூப கலசங்கள் | II நாளா 4=19<br>பொற் பீடம் | II ராஜா 25=15<br>எரேமி 52=19 | | லூக் 1=9–11 |
| 30=17–21<br>38=8 | வெண்கலத் தொட்டி | I ராஜா 7=23–40, 43,44<br>கடல் தொட்டிகள் | II நாளா 4=2–6,10,14,15<br>கடல் தொட்டிகள் | II ராஜா 25=13–16<br>எரேமி 52=17 | | |
| 27=1–8<br>38=1–7 | பலிபீடம் | I ராஜா 7=45, 48<br>பொன் பலிபீடம் | II நாளா 4=1,11,16<br>வெண்கல பலிபீடம் | II ராஜா 25=14<br>எரேமி 52=18 | எஸ்றா 3=2,3<br>6–17,18 | மத் 5=23 |
| 26=1–14,31,36<br>36=8–19 35–37 | திரைச் சீலைகள் | I ராஜா 6=31–35<br>மடக்குக் கதவுகள் | II நாளா 3=14<br>திரைச் சீலைகள் | | | மத் 27=51 |
| -26=15–37<br>36=20–38 | வாசஸ்தலத்தின் பலகைகளும் தூண்களும் | I ராஜா 6=1–30 கற்கள்<br>பலகைகள், பொன்தகடுகள் | II நாளா 3=1–13 கற்கள்<br>பொன் தகடுகள் | II ராஜா 25=9<br>II நாளா 36=18,19 | எஸ்றா 6=14–16 | யோவா 2=13–21 |
| 27=9–19<br>38=9–20 | பிராகாரத்தின் தூண்கள் | | II நாளா 4=9<br>பெரிய பிராகாரம் | | | மத் 21=12,13 |
| 28=1–43<br>39=1–31 | ஆசாரிய வஸ்திரங்கள் | | | | | |
| 30=22–33<br>34–38 | அபிசேக தைலம்<br>தூப வர்க்கம் | | | | | |
| 40=1–38 | ஆசாரிப்புக் கூடார ஸ்தாபிதம் மகிமை தங்குதல் | I ராஜா 8=10,11<br>மகிமை தங்குதல் | II நாளா 5=1,11–14<br>மகிமை தங்குதல் | | | |
| | வாசலின் இருதூண்கள் | I ராஜா 7=15–22, 41,42<br>யாகீன், போவாஸ் | II நாளா 3=15–17<br>II நாளா 4=12,13 | II ராஜா 25=16,17<br>எரேமி 52=20–23 | | |

**குறிப்புகள் :** ஆசரிப்புக் கூடாரம் உருவாக்கின பின்பு ஏறக்குறைய நானூறு வருசங்களுக்குப் பின்பு தேவாலயம் கட்டப்பட்டது. தேவாலயம் கட்டப்பட்ட பின்பு ஏறக்குறைய நானூறு வருசங்களுக்குப் பின்பு அது இடிக்கப்பட்டது. தேவாலயம் இடிக்கப்பட்டு எழுபது வருசங்களுக்குப் பின்பு செருபாபேல் தலைமையில் அது கட்டப்பட்டது. செருபாபேல் கட்டின தேவாலயம் ஏறக்குறைய நானூறு வருசங்களுக்குப் பின்பு ஏரோதுவினால் சீர்திருத்திக் கட்டப்பட்டது. இயேசுவானவரின் காலத்தில் இருந்த இந்த தேவாலயம் கி.பி. எழுபதில் ரோமர்களில் இடிக்கப்பட்டது. ஆசரிப்புக் கூடாரம் மோசேயினால் உருவாக்கப்பட்டது. தேவாலயம் சாலொமோன் அரசனால் கட்டப்பட்டது. அதை பாபிலோனியர் தரைமட்டமாக இடித்தனர். பின்பு செருபாபேல் அதைக் கட்டினார் பின்பு ஏரோது அதை பழுது பார்த்துக் கட்டினான்

## 14. ஆசரிப்புக் கூடாரமும் பரலோகமும்




## 15. ஆசரிப்புக் கூடாரமும் - கிறிஸ்துவும்

எபி 9:1-5

1. மகா பரிசுத்த ஸ்தலம்
2. பரிசுத்த ஸ்தலம்
3. பிராகாரம்
4. உடன்படிக்கைப் பெட்டி
5. தூப பீடம்
6. குத்துவிளக்கு
7. மேஜை
8. வெண்கலத் தொட்டி
9. பலிபீடம்
10. பாளையம்
11. திரைச்சீலைகள்










PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

© C.B.P PUBLISHED BY S. SAKTHI DEVA DOSS 145/E `T.M.COMPLEX' THIRUVENGIDA NAGAR THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013

# 6. மெய்ஞான வைத்திய சாலை

உருசாலேம் பட்டணத்தில் வடதிசையில் உள்ள சீயோன் குன்றின் மேல் இந்த மெய் ஞான வைத்திய சாலை கட்டப்பட்டிருந்தது. இந்த வைத்திய சாலை பரம நிழல் தேசத்தின் குடிமக்களுக்காக கட்டப்பட்டது. நாசமலையில் உள்ள ஜீவ ரட்சனை வைத்திய சாலையோ பற்பல தேசத்தாருக்காகக் கட்டப்பட்டது. இந்த மெய் ஞான வைத்திய சாலையும் ஏழு பெரும் பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. தலைமையாக உள்ள மருத்துவ அலுவலக சாலையில் பெருமானார் சித்தரும், திவ்விய நாத சித்தரும் விசாரனை கர்த்தர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் இருந்தனர். இவர்களுக்கு உதவியாக உண்மையாளன் மனத் தாழ்மையன், பிரதிஷ்டையன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் யாவரும் நீல சாமந்தி வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

இம்மருத்துவ சாலையின் முதல் பகுதி : பெயர் பதிவு சாலை. இதற்கு இங்கித சித்தர், தேவஞான சித்தர் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக சுப விசேஷன், உபதேஷ்டகன், நல்விசுவாசன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் பொற்றாமரை வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

இரண்டாவது : பரிசோதனை சாலை இங்கு சுபாவ பரிசோதனை செய்ய குறையணுவிலாத சித்தரும், கிரியா நடத்தைகளை பரிசோதனை செய்ய பொறிவினை யுராத சித்தரும் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தேவநேசன், தேவபக்தியன், பரிவாளன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் வாடாமல்லிகை வர்ண உடைகளை அணிந்திருந்தனர்.

மூன்றாவது : பொது மருத்துவ சாலை. இங்கு பற்பல வியாதிகளுக்காக மனதுருக்க சித்தரும் ஒப்புரவாள சித்தரும் வைத்தியர் களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தேவ பிரசன்னனும், திட நம்பிக்கையனும் இருந்தனர். இவர்கள் மரிக்கொழுந்து வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

நாலாவது : பிள்ளைகள் மருத்துவசாலை. இதற்கு ஞானபால சித்தரும் தேவ இரக்க சித்தரும் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஞான குண சீலனும், மனோரம்மியனும் இருந்தனர். இவர்கள் குறிஞ்சி வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

ஐந்தாவது : ஏவாலாட்களின் வைத்தியசாலை இதற்கு நசரேய சித்தரும், நரதேவ சித்தரும் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக சத்திய வாசகனும், உபவாசனும் இருந்தனர். இவர்கள் தாழை மடல் வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

ஆறாவது : குணவதிகளின் வைத்திய சாலை. இங்கு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை தெரிவை, பேரிள பெண்டீர், கன்னிகைகள், தாதியர்கள், கைம் பெண்கள் யாவருக்கும் வினோத சித்தரும், ஜெய மங்கல சித்தரும் வைத்தியராகவும் இவர்களுக்கு உதவியாக ஞான சௌந்தரியும், மாசிலாமணியாளும், விவேகசீலியும் இருந்தனர். இவர்கள் சாரோனின் ரோஜா வர்ண உடைகளை அணிந்திருந்தனர்.

ஏழாவது : மருந்து சாலை, இங்கு மருந்துகள் உண்டாக்கவும், பிணியாளிகளுக்கு மருந்துகளை கொடுக்கவும் நன்மை சொரூப சித்தரும், ஜெயநாம சித்தரும் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக நல்வினையாளன், ஞானசம்பந்தன், தேவாறுதலன் ஆகியோர் இருந்தனர். இவர்கள் மல்லிகை வர்ண உடைகள் அணிந்திருந்தனர்.

இவ்வித நிலைமைகளில் வைத்திய சாலையில் உள்ள சித்தர்களுக்கும், செவிலி தாதையர்களுக்கும், தாதிகளுக்கும் விதவிதமான வர்ண ஜாலமளிக்கும் வான வில்லின் நிறங்களைப் போல, உடைகளை அணிவித்த காரணமென்னவெனில், இவர்கள் யாவருடைய வர்ண உடைகளை வைத்தே இன்ன இன்ன வைத்தியசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அறிந்து, விரைவில் பிணியாளிகள் யாவரும் உதவிகளைப் பெற்று கொள்ளும் படியாக சீயோன் மலையரசரே இவ்வித முறைமைகளை ஏற்படுத்தினார்.

இவ்விரு மகா வலிய வைத்திய சாலைகளை கேள்வியுற்ற நானாவித தேசத்தார்களும் சுகம் பெற வேண்டி திரள், திரளாக வந்து, இங்கு சுகம் பெற்ற பின்பு, இங்கிருந்துத் திரும்ப போக மனதில்லாமல் பரம நிழல் தேசத்திலே குடியேறினர். எத்தேசத்தாராக இருந்தாலும் முதலில் ஜீவரட்சனை வைத்திய சாலைக்குத் தான் வரவேண்டும். பின்பு அவசியமானால் அங்கு அனுமதிப் பத்திரம் பெற்று மெய்ஞான வைத்தியசாலைக்குப் போகலாம். எனவே முதலில் ஜீவரட்சனை வைத்திய சாலைக்கு வருகிற பிணியாளிகளுக்கு மிகவும் அவசியமாகும் போது மிகவும் அதிக கசப்பான மருந்துகள் கொடுக்கப்படுகிறது. சிலருக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. ஆனால் இவைகளை ஏற்றுக் கொள்ள மனதில்லாதிருக்கிற பல பிணியாளிகள் தங்கள் பிணிகளிலிருந்து சுகமாகி விட்டதாக கூறி, பொய் அதிகாரப் பத்திரங்கள் பெற்று பரம நிழல் தேசத்தில் குடியேறிவிட்டனர். பரம நிழல் தேசத்தில் பாலும், தேனும், நெய்யும் நதி போல ஓடி தேசத்தில் செழிப்புண்டாக்கிறபடியால் அதன் மீது ஆசை கொண்ட பூதல பட்டண பிணியாளிகள் மேற்கூறிய வண்ணமாக திருட்டளவாக குடியேறினர். காலப் போக்கில் இவர்களுக்குரிய சகல வியாதிகளும் பரம நிழல் தேசத்தாருக்கும் தொற்று வியாதியாக பரவியது. மேலும் பரம நிழல் தேசத்தாருக்கு மெய் ஞான வைத்திய சாலைக்கு போக உரிமை இருக்கிறபடியால் இந்த பரம நிழல் தேசத்து பிணியாளிகள் யாவரும் அங்கு சென்றதுமல்லாமல், அங்கு பணிவிடை செய்து வருகிற தாதி தாதையர்களுக்கும் தங்கள் வியாதிகளை பரவச் செய்தனர்.

தொடரும்

## சிறிய குறிப்புகள்

**சோதனைகள் :** "அலை அலையாக சோதனைகள் இதயத்தையும், உள்ளத்தையும் தாக்கினாலும், அவைகளெல்லாம் நம்மை மேற் கொள்ள மாட்டாது; தேவனின் வாக்குத் தத்தம் உண்மையுள்ளது; வெள்ளத்தையும், அலைகளையும் கடந்து அவர் நம்மை அழைத்து செல்வார்!

# திருமறைக் களஞ்சியம்

16. பிராகாரத்தின் பணிமுட்டுகள் செய்யும் முறைகள் : (திரைச் சீலைகள்; பலிபீடம்; வெண்கலத் தொட்டி)

| திரைச்சீலைகள் | அர்த்தங்கள் | பலிபீடம் | அர்த்தங்கள் | வெண்கலத்தொட்டி | அர்த்தங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. யாத் 27=16 | | | | | |
| பிராகாரத் தொங்குதிரை | நாலு வர்ண திரைச்சீலைகள் | 1. உண்டாக்குதல் | | 1. பொருள்கள் : | |
| யாத் 26=36, 37 | கிறிஸ்துவைக் காட்டுகிறது. | யாத் 38=1 சீத்திம் மரம் | கிறிஸ்துவின் மனிதத்தன்மை | யாத் 38=8 ஸ்திரீகளின் தர்ப்பணங்கள் | கலாத் 4=5 ஸ்திரீயின் |
| பரிசுத்த ஸ்தல தொங்குதிரை | | வெண்கலத்தினால் மூடுதல் | நியாயத்தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுதல் | வெண்கலக் கண்ணாடி | சந்ததியாக கிறிஸ்து |
| யாத் 26=31–33 | கேருபின்களின் வேலைப்பாடு | 5 முழ நீளம் | | தன் சாயலை காணுதல் | பிறத்தல் |
| மகா பரிசுத்த ஸ்தல | ஏசா 6=1–3 பரலோகத்தில் | 5 முழ அகலம் | | உருவக்குலைக்கப்பட்டு | |
| தொங்குதிரை | | 3 முழ உயரம் | | தொட்டியாகுதல் | |
| | லேவி 4=6 இரத்தம் தெளித்தல் | 2 – நாலு கொம்புகள் | இரட்சண்ய கொம்பின் நாலுவித | 2. அபிஷேகம் | |
| | மத் 27=51 கிழிதல் | | தன்மைகள் | யாத் 40=11 பிரதிஷ்டை | மத் 3=16 பரிசுத்த அவியானவரால் |
| | எபி 10=19 மாம்சமாகிய திரை | | மகிமை, இராஜரீகம், இரட்சிப்பு, | 3. தண்ணீர் | |
| 2. வர்ணங்கள் : | | | ஆசாரியத்துவம் | யாத் 30=18 வார்த்தல் | யோவா 7=37–39 |
| நீலம் – மகிமை | தேவ குமாரன் (தீர்க்கதரிசி) | 4. உட்புற சல்லடை | | | II தெச 2=13 |
| இரத்தாம்பரம் – இராஜரீகம் | இராஜா | 5–7 நாலு வளையங்கள் | நாலு சுவிசேஷங்கள் | | பரிசுத்த அவியானவர் |
| சிகப்பு – இரட்சண்யம் | மனுஷ குமாரன் (இரட்சகர்) | இருதண்டுகள் | மரணம் உயிர்த்தெழுதல் | 4. இடம் : | |
| வெண்மை – பரிசுத்தம் | மகா பிரதான ஆசாரியர் | 2. இரட்சிப்பின் திட்டம் | | யாத் 30=18 நடுவே | பலிபீடம் – ஊழியம் |
| 3. மூடு திரைகள் : | | யாத் 40=6 பிராகாரத்தில் | தேவனுடைய நீதிக்கு ஒருகுறைவும் | | ப:ஸ்தலம் – அராதனை |
| யாத் 26=1. | இயேசுவானவரின் நாலு தன்மைகள் | | வராமல், மனிதனுடைய பாவத்தை | | நடுவே – சுத்திகரிப்பு |
| நாலு வர்ணத் திரைச்சீலை | மறைக்கப்படுதல் | | நிவர்த்தி செய்யும் முதல்படிதான் | 5. சுத்திகரிப்பு : | |
| ஒரு திரைக்கு 28 முழ நீளம் | ரோம 16=25 அடக்கம் | | பலிபீடம் | | கைகள் – கிரியைகள் |
| 4 முழ அகலம் | I கொரி 2=7 இரகசியம் | 3. பிரதிஷ்டை | | யாத் 30:19, 20, கைகளையும் | கால்கள் – நடத்தைகள் |
| 10, திரைகள் 280 முழ நீளம் | | யாத் 40=10 அபிஷேகம் | எபி 13=10 கிறிஸ்து | கால்களையும் கழுவுதல் | பரிசுத்தமாகுதல் |
| 40 முழ அகலம் | | 4. நியாயத் தீர்ப்பு : | | சாகாதபடிக்கு | அவிக்குரிய நிலையிலும் |
| யாத் 26=7 | ஆட்டுமயிர் வஸ்திரமாகுதல் | லேவி 6:9 அக்கினி எரிதல் | தேவனுடைய கோபத்தை வெளிப் | யாத் 30=21 நித்திய கட்டளை | எபேசி 5=26,27 |
| ஆட்டு மயிர்த் திரைகள் : | ஏசா 61=10 இரட்சிப்பு | 12,13 அவியாமல் | படுத்தி, மனுஷருடைய பாவத்தை | | யோவா 15=3 |
| ஒரு திரைக்கு 30 முழ நீளம் | | | சுட்டெரித்தல் | | பரிசுத்த மாகுதல் |
| 4 முழ அகலம் | | லேவி 9=24 கர்த்தருடைய அக்கினி | இரத்தம் தோய்ந்த கத்திகள் துண்டிக்கப் | 6. கடல் தொட்டி. | |
| 11 திரைகளுக்கு 330 முழ நீளம் | | | பட்டக் கடாக்கள் பாவத்தின் அகோ | I ராஜா 7=23–31 | அப்போஸ்தலர் உபதேசம் |
| 44 முழ அகலம் | | | ரத்தைக் காட்டுகிறது | 12 ரிஷபங்களின்மேல் | உயிர்த்தெழுதல் சாட்சி |
| யாத் 26=14 | பாடுகள் – அடிக்கப்படல் | 5. பாவ நிவர்த்தி | | லீலி புஷ்ப வேலைகள் | |
| சிவப்புத் தீர்த்த ஆட்டுக் கடாத் | | யாத் 40=29 பலியிடல் | பிராய சித்தம் | ஆதாரம் சிங்கம் | இராஜா |
| தோல் | | லேவி 1=5 இரத்தம் தெளித்தல் | | காளை | ஆசாரியன் |
| யாத் 26=14 | மகிமை மறைக்கப்படுதல் | 7–9 தகனித்தல் | சாம்பல் பாவநிவர்த்தியின் | கேருபின்கள் | தேவகுமாரன் |
| தகசுத்தோல் திரை | பிலிப் 2=6–8 மனுஷீகத்தினால் | | பரிபூரணத்தைக் காட்டுதல் | தண்ணீர் வார்த்தல் | பரிசுத்த மாகுதல் |
| | தெய்வீகத்தை மறைத்தல் | சங் 118=27 கொம்புகளில் | | II ராஜா 25:13 உடைத்தல் | கிறிஸ்துவின் மரணம் |
| 4. பிராகார சுற்றுத் திரை | | பலியைக் கட்டுதல் | கிறிஸ்து பலியாகுதல் | 7. கண்ணாடிக் கடல் | |
| யாத் 27=9–15 வெண்மை | பரிசுத்தம் | லேவி 4=18 இரத்தம் பூசுதல் | | வெளி 4=6 | I கொரி 3=13–15 |
| தெற்கு 100 முழம் நீளம் | | 6 ஐக்கியம் : | | வெளி 15=2 அக்கினி | பரிசோதனை |
| வடக்கு 100 முழம் நீளம் | | எண் 18=8, உபா 18=1 | I கொரி 9=13 பங்கு | எசேக் 47=1–9 நடத்துதல் | |
| மேற்கு 50 முழம் நீளம் | | | I கொரி 10=18 ஐக்கியம் | கணுக்கால் அளவு | சுத்திகரிப்பு |
| கிழக்கு 30 முழம் நீளம் | | 7. இளைப்பாறுதல் : | | முழங்கால் அளவு | ஜெபம் – அராதனை |
| அக 280 முழம் நீளம் | | சங் 84=3 குருவிதங்குதல் | வெளி 6=9 பாதுவில் | இடுப்பளவு | ஊழியம் |
| 5. துப்பட்டிகள் | | | இளைப்பாறுதல் | கடக்க முடியாத அளவு | மரணம் |
| எண் 4=1–15 | | | | | |
| இளநீலம், சிவப்பு இரத்தாம்பரம், | மகிமையை மறைத்தல் | | | | |
| தகசுத்தோல் ஆகிய துப்பட்டி | | | | | |
| களால் மூடி கட்டுதல் | | | | | |

குறிப்புகள் : பிராகாரத்தில் உள்ள சுற்றுப்புற திரைகள் தவிர, மற்ற வாசஸ்தலத்தின் திரைகள் யாவும் கிறிஸ்துவின் தன்மைகளையே வெளிப்படுத்துகிறது. மூடு திரைகள் வாசஸ்தலத்தில் நடை பெறுகிற கிரியைகள் யாவும் இரகசியமாக இருக்கும்படி அவைகளை மறைத்துக் கொள்கிறது. – பிராகாரத்தில் உள்ள பலிபீடம்; இயேசுவானவர் தேவ கோபாக்கினையை ஏற்றுக் கொண்டு பலிபீடத்தைப் போலிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பலிகளும், அவர் நமக்காக பிராய சித்த பலியானார் என்பதைக் காட்டுகிறது. வெண்கலத் தொட்டியின் தண்ணீரால் ஆசாரியர்கள் தங்கள் சுத்திகரித்துக் கொள்வது, இக்காலத்தில் பரிசுத்த அவியானவரினாலும், வேத வாக்கியங்களினாலும் நம்மை சுத்திகரித்துக் கொள்வதைக் காட்டுகிறது. இந்த சுத்திகரிப்பு மறுமையில் நடை பெறப் போகிற பரிசோதனையாகிய சுத்திகரிப்பையும் காட்டுகிறது. பிராகாரத்தில் உள்ள பலிபீடமும், வெண்கலத் தொட்டியும், இன்று தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்குள்ளே நாம் அடையும் பாவ நிவர்த்தியையும், சுத்திகரிப்பாகிய பரிசுத்தமாகுதலையும் காட்டுகிறது.

## 17. ஆசரிப்புக் கூடாரமும் - சபையும்

(எபி 12 : 22 - 24 - எபேசி 2 : 19 - 22)

1. மகா பரிசுத்த ஸ்தலம்
2. பரிசுத்த ஸ்தலம்
3. பிராகாரம்
4. உடன்படிக்கைப் பெட்டி
5. தூப பீடம்
6. குத்து விளக்கு
7. மேஜை
8. வெண்கலத் தொட்டி
9. பலிபீடம்
10. பாளையம்
11. பலகைகள்
12. தூண்கள்






## 18' ஆசரிப்புக் கூடாரமும் - விசுவாசியும்

எபி 3 : 6 I தெச 5 : 23

1. மகா பரிசுத்த ஸ்தலம்
2. பரிசுத்த ஸ்தலம்
3. பிராகாரம்
4. உடன்படிக்கைப் பெட்டி
5. தூப பீடம்
6. குத்து விளக்கு
7. மேஜை
8. வெண்கலத் தொட்டி
9. பலிபீடம்
10. பாளையம்
11. ம.ப. பலகைகள்
12. ப. தூண்கள்
13. பி. தூண்கள்
14. சுற்றுப்புற திரை
15. உடன்படிக்கை




ஆத்தும உணர்வுகள் ப. தூண்கள் ஐந்து (ஐந்து காரியங்கள்)



IMAGINATON - CONSCIENCE - MEMORY - REASON - AFFECTIONS

கற்பனை OR சிந்தனை - மனசாட்சி - நினைவு - காரணம் OR அறிவு - விருப்பம்

சரீர உணர்வுகள்

TASTE - SIGHT - TOUCH - HEARING - SMELL

சுவை - ஒளி ஊறு - ஓசை - நாற்றம்

## நித்திய ஜீவன்

### 6. இயேசுவானவரின் இரகசிய வருகை! (வெளியான நிலைமைகள்)

28 இடறலற்றவர்களாக (பின் வாங்காமை)

பிலிப்1=11 ரோம விசுவாசிகளின் உபத்திரவங்கள்

12–18 பொறாமை, விரோதம், வஞ்சகம்

II தீமோ 4=1,2 பிரசங்கிக்க, உபதேசிக்க, புத்திசொல்ல

29 குற்றம் சாட்டப்படாதபடி :

I கொரி 1=8

பிலிப் 2=14–16 கபடு, மாசற்ற நிலைமை

I தீமோ 6=13,14 கைக் கொள்ளுதல் (கற்பனை)

யாக் 5=8,9 முறையிடாதிருத்தல்

30. நிலைத்திருத்தல்

I யோவா 2;28

யோவா 8=31 உபதேசத்தில்

யோவா 15:4 என்னில்

9 அன்பில்

அப்போ 14=22 விசுவாசத்தில்

I கொரி 7=20–24 அழைப்பில்

31 எதிர்பார்த்தல்:

பிலிப் 3=20,21 மறுரூபத்திற்காக

I தெச 1=9,10 கோபாக்கினைக்கு நீங்கலாக

32 காத்திருக்குதல்

I கொரி 1:4-7

எபி 9=28 இரட்சிப்பை அருளும்படி

ரோம 8=23–25 சரீர மீட்புக்காக

II பேது 3=10–14 ஜாக்கிரதையாயிருத்தல்

யூதா =21 இரக்கத்தைப் பெற

– தொடரும்

### சிறிய குறிப்புகள்

**பலன்கள் :** எல்லாவற்றையும் தியாகம் செய்து ஒன்றுமில்லாதிருக்கிறவர்கள் தான், தாம் இழந்து போன அனைத்தையும் நூறு மடங்காக தங்களுக்கு திரும்பவும் கொடுப்பதை உணருகிறார்கள்!

**அமர்ந்திருத்தல் :** மனிதர்கள் உன் நோக்கத்தை தவறாக அர்த்தப்படுத்தி, உன் மேல் குற்றம் உண்டு என்று சொல்லுவார்கள். நீ தவறு செய்தாய் என்று சொல்லுவார்கள். நீ அமர்ந்திருந்து உன் வழியே செல்! அவர்களல்ல கிறிஸ்துவே உன் நியாயாதிபதி. திடன் கொள் பயப்படாதே!

**நம்பிக்கை :** துக்கங்கள் மழைபோல் பெய்தாலும், என் கூட்டினில் தேனீக்கள் போல் கஷ்டங்கள் என்னை சூழ்ந்தாலும் சந்தேகியேன். நான் சேர விரும்பும் உயரத்திற்கு கஷ்டங்கள், வேதனைகளின்றி சேர முடியாது என்று நம்புகிறேன். என் சிலுவையின் கீழ் நான் வருந்தித் திகைத்தாலும் என் பெருங் கஷ்டங்களிலும் மிகுந்த நன்மை உண்டென்று காண்பேன்.

© C.B.P. -

PUBLISHED BY :
S. SAKTHI DEVADOSS :
145/E, - "T.M. COMPLEX"
THIRUVENGIDA NAGAR,
THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013



**PRINT LANDS,** Trichy - 1 Pager # 9628 - 935373

# மெய்ஞான வைத்திய சாலை

## 7. மெய்யாறுதல் சாலை

உரு சாலேம் பட்டணத்தில் தென் திசையிலுள்ள ஒபேல் குன்றின் மீது இந்த மெய்யாறுதல் சாலை கட்டப்பட்டிருந்தது. மகா விசாலமுள்ள இந்த மெய்யாறுதல் சாலையினுடைய நிலப்பரப்புகளையும் சேர்த்து, ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன.

மெய்யாறுதலின் சாலையின் வெண் மாளிகையானது; ஒபேல் துவங்கி மோரியா மட்டும் மகா உன்னதமான உயரத்தில் கட்டப்பட்டிருந்தது. இம்மாளிகையிலே தேவனாவிராயர் வாசம் செய்கிறார். அவர் மெய்ஞான வாசஸ்தலம் போவதற்கு கூட இங்கிருந்தே வழி உண்டாக்கப்பட்டிருந்தது. தேவனாவிராயரின் மாளிகையின் சந்நிதானத்திலிருந்து ஒரு ஊற்று பொங்கி தெளிந்த ஜீவ தண்ணீருள்ள நதியாக மாளிகைக்கு வெளியே இறங்கி பட்டணத்திற்குள் பாய்ந்தது. இந்நதி ராசாவின் குளத்திற்குப் போய் சேருமுன்னதாக பல கால்வாய்களாகப் பிரிக்கப்பட்டு, பட்டணத்தின் பல பகுதிகளுக்கு போய் சேர்ந்தது.

உருசாலேம் பட்டணம் முழுவதும் எப்பொழுதும் தூய்மையாக இருக்க தேவனாவிராயர் தன்னோடு கூட இருந்து கவனிக்க நாலு காப்பாளர்களையும் நாலு பணிவிடைக்காரர்களையும் ஏற்படுத்தினார். அவர்களுடைய நாமங்களாவன: மகா புனித சீலனார், அமலானந்த சீலனார், நிமலானந்த சீலனார் தூய பிரிய சீலனார் ஆகிய இவர்கள் காப்பாளர்களாகும். தூய்மையன், சுத்தாங்கன், விசுத்தியன், ஈசோப்பியன் ஆகிய இவர்கள் பணிவிடைக்காரர்களாகும்.

முதலாவது பகுதி : நல்மேய்ப்பன் தொழுவமாகும். இங்கு பற்பல ஜீவராசிகள் ஒருமித்துவாசம் செய்தன. மேலும் எல்லா ஜீவராசிகளையும் மந்தைக்கு ஒப்பாகவே எண்ணப்பட்டு, தொழுவத்தினால் காக்கப்பட்டிருந்தன. அவ்வப்போது அவைகள் நகரத்திற்குள்ளும், நகரத்திற்கு புறம்பேயும் மேய்ச்சலுக்காகப் போய் வரும். இவைகளின் காப்பாளர்களாக, ஜீவ காருண்ய சீலனாரும், கருனாகர சீலனாரும் இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தலையாரியும், கண்காணியனும் இருந்தனர்.

இரண்டாவது : இந்த தொழுவத்திற்கு அடுத்ததாக நல்வினை மருந்துப் பண்ணை இருந்தது. இங்கு பற்பல விருட்சங்களின் மரங்களின் பட்டைகள், வேர்கள், கிளைகளுடன், கொடிகளும், செடிகளும், இலைகளும், துளிர்களும், மலர்களும், கனிகளும், காய்களும், கொட்டைகளும், கீரைகளும், கிழங்குகளும், விதைகளும், தானியங்களும், சேர்க்கப்பட்டு, துப்புரவாக்கி மருந்து சாலைக்கு அனுப்பப்படுகின்றன. இவைகளை மருந்து சாலையில் வைத்து மருந்துகளாக உண்டாக்குகின்றனர். இங்கு தேவஞான சீலனாரும், ஞானபரசீலனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஞானேந்திரியனனும், மெய்ஞானனும் இருந்தனர்.

மூன்றாவது : இந்தப் பண்ணைக்கு அடுத்தார் போல் மெய்யாறுதல் தோட்டம் இருந்தது. இங்கு உணவுக்கான காய்கள், கனிகள், கீரைகள் கிழங்குகள், மலர்களும் பயிராகின்றன. இதற்கு நித்தியானந்த சீலனாரும், பேரானந்த சீலனாரும், பரமானந்த சீலனாரும், தயானந்த சீலனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஜீவவாக்கியனும், வாக்குத்தத்தனும், மெய்சாட்சியனும், நல்யுக்தியனும் இருந்தனர்.

நாலாவது : ராஜபோசன சாலை : இங்கு சீயோன் மலையரசரின் ராஜஸ்திதிக்குத் தக்கதாக உருசாலேம் பட்டணத்தால் யாவருக்கும் விதவிதமான பட்சணங்களும், பாணியங்களும் பரிமாறப்பட்டன. ராஜ விருந்துக் கொப்பான இப்போஜன வேளைகளில் அவரவர் விரும்பும் போஜனங்கள் பரிமாறப்பட்டன. இங்கு அருளானந்தரும், ஏகானந்தரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தேவஈவன், தேவதயாளன் இருந்தனர்.

ஐந்தாவது : ஜீவனாத்மா இளைப்பாறும் சாலை : இங்கு உருசாலேம் பட்டணத்தில் யாவருக்கும் குடியிருப்புகள் கட்டப்பட்டிருந்தன. இங்குள்ள பொது மண்டபத்தில் அனைவரும் கூடி தேவகாரியங்களைக் குறித்து அடிக்கடி அளவளாவி மகிழ்ந்தனர்.

ஆறாவது : அருங்காட்சியாக சாலை : பூர்வீக சேமியர்களின் காலத்தில் உள்ள புதை பொருள்களும், சீயோன் மலையரசரின் காலத்தில் உள்ள புதை பொருள்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன இங்கு தேவசுந்தர சீலனாரும் கருணாபதி சீலனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தாற்பரியனும், அற்புத பிரியனும் இருந்தனர்.

ஏழாவது : தூரதிருஷ்டி தர்பண சாலை : இங்குள்ள வானநோக்கி தர்பணத்தின் வழியாக பார்ப்பவர்களுக்கு உன்னதபுரியின் காரியங்களெல்லாம் அறிய வரும்! இங்கு மகானந்த சீலனாரும், மகிமை பிரதாப சீலனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஞானதிருஷ்டியனும், ஞானக் கண்ணனும் இருந்தனர்.

– தொடரும்.

### சிறிய குறிப்புகள்

**நடத்துதல் :** நம் பாதங்கள் சகிக்கக் கூடிய அளவிற்கு மேல் நம்மை ஒரு அடியும் எடுத்து வைக்கச் செய்யமாட்டார்; அடுத்த அடி எடுத்து வைக்க இயலாது என்று நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. கர்த்தர் நம்மைப் பலப்படுத்துவார் அல்லது திடீரென்று அடுத்த அடி எடுத்து வைக்க அவசியம் இல்லாதபடிச் செய்வார்.

**உதவிகள் :** நாம் வருவதற்கு முன்னே, தேவன் பாதைகளை திறந்து வைக்க மாட்டார்; நமக்கு உதவி தேவையாயிருப்பதற்கு முன்னே உதவி செய்வவேன் என்று வாக்களிக்கிறதில்லை; நமமுடைய வழிகளிலுள்ள தடைகளை நாம் அடையும் முன்னே, அவைகளை நீக்குவதில்லை; ஆனால் அவசியமான போது நமக்கு ஆதரவளிக்கும் பொருட்டு தேவன் தமது கரங்களை நீட்டுகிறார்!

# திருமறைக் களஞ்சியம்

19. பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகள் செய்யும் முறைகள் : (தூபபீடம், குத்துவிளக்கு, மேஜை)

| தூபபீடம் | அர்த்தங்கள் | குத்துவிளக்கு | அர்த்தங்கள் | மேஜை | அர்த்தங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. உண்டாக்குதல் : | | 1. உண்டாக்குதல் : | | 1. உண்டாக்குதல் : | |
| யாத் 30=1 சித்தீம் மரத்தால் | கிறிஸ்துவின் மனிதத்தன்மை | யாத் 25=36 பசும் | கிறிஸ்துவின் தெய்வத் தன்மை | யாத் 25=23 சீத்தீம் மரம் | கிறிஸ்துவின் மனிதத்தன்மை |
| 3. பொன் தகட்டால் | கிறிஸ்துவின் தெய்வத்தன்மை | பொன்னினால் | | 24 பொன் தகடு | கிறிஸ்துவின் தெய்வத்தன்மை |
| 2. ஒரு முழ நீளம் | | அடிப்பு வேலை | பாடுகள் – மரணம் | இரு முழ நீளம் | |
| ஒரு முழ அகலம் | | மொக்குகள், பூக்கள், பழங்கள் | உயிர்த்தெழுதல் | ஒரு முழ அகலம் | |
| இரு முழ உயரம் | | 37. ஏழு அகல்கள் | ஏழு ஆவிகள் (வெளி 4=5) | $1\frac{1}{2}$ முழ உயரம் | |
| நாலு கொம்புகள் | கிறிஸ்துவின் நாலு தன்மைகள் | 38–40 மலையிலே காண்பிக்க | | 25 சட்டங்கள், திரணை | உடன்படிக்கை |
| | தேவகுமாரன் (தீர்க்கதரிசி) | பட்ட மாதிரி | | 26–28 நாலு வளையங்கள் | நாலு சுவிசேஷங்கள் |
| | மனுஷ குமாரன் (இரட்சகர்) | | | இரு தண்டுகள் | மரணம், உயிர்த்தெழுதல் |
| | இராஜா | 2. இடம் : | | 29,30 உபகரணங்கள் | |
| | மகா பிரதான ஆசாரியர் | யாத் 26=35 பரிசுத்த ஸ்தலத்தில் | சபையில் கிறிஸ்து | அப்பங்கள் | |
| 4,5 நாலு வளையங்கள் | நாலு சுவிசேஷங்கள் | தென்புறமாக | | 2. இடம் : | |
| இரு தண்டுகள் | மரணம், உயிர்தெழுதல் | 3. எரிதல் : | | யாத் 26=35 பரிசுத்த | சபையில் கிறிஸ்து வடபுறம் |
| 2. இடம் : | | யாத் 27=20 ஒலிவ எண்ணை | பரிசுத்த ஆவியானவர் | ஸ்தலத்தில் வடபுறமாக | வல்லமையைக் குறிக்கும் |
| யாத் 30=6 பரிசுத்த ஸ்தலத்தில் | சபையில் இயேசுவானவர் | 21 மாலை முதல் காலை வரை | விழிப்புணர்வு | | (ஆராதனையே சபையின் |
| திரைச் சீலைக்குமுன்பு | மூலமாக ஜெபம் | | | | வல்லமை) |
| 3. பிராய சித்தம் : | | 4. பிரமாணம் : | | | |
| யாத் 30=10 கொம்புகளில் | இயேசுவானவரின் மரணத்தை | லேவி 24=1–3 மாலை முதல் | சபையின் இராக் காலம் | 3. அப்பங்கள் : | |
| இரத்தம் | நினைவு கூர்தல் | காலை வரை | | லேவி 24=5,6 பன்னிரு | I கொரி 11–23,–28 |
| 4. நாலு கொம்புகள் : | | | | அப்பங்கள் பன்னிரு கோத்திர | எல்லாருக்கும் ஒரே அப்பமாக |
| யாத் 30=2 | வல்லமை | 5. வெளிச்சம் : | | பிரதிநிதிகளாக | |
| நாலு ஜீவன்கள் | தன்மைகள் (சுபாவங்கள்) | யாத் 35=14 | சபையில் உபதேச வெளிச்சம் | 4. மாற்றுதல் : | |
| நாலு தூண்கள் | ஆதாரம் | | சங்கீ 119=105,130 | லேவி 24=8 ஓய்வு நாள் | அப்போ 20=7 |
| நாலு வர்ண திரைகள் | தன்மைகள் (கிரியைகள்) | 6. ஒழுங்கு : | | | வாரத்தின் முதல் நாள் |
| நாலு தூப பொருள்கள் | ஜெப விதங்கள் | எண்ணா 8=1–3 நேராக எரிய | வெளி 1=4, – 4=5 ஏழு | 5. ஆராதனை : | |
| நாலு அபிசேக தைலப் பொருள்கள் | தன்மைகள் (அதிகாரம்) | வைத்தல் | சபைகளின் கவனிப்பு | லேவி 24=7 தூபவர்க்கமிடல் | I கொரி 11=23–28 |
| நாலுவித திரைகள் | தன்மைகள் (தேவ இரகசியம்) | | | | ஸ்தோத்திரம் செய்தல் |
| 5. அக்கினி | | 7. தூபமிடல் : | | 6. புசித்தல் : | |
| லேவி 6=12,13 பலி பீட அக்கினி | பரிசுத்த ஆவியானவர் மூலமாக | யாத் 30=7,8 தூபங் காட்டுதல் | சங் 119=18 தூபம் ஜெபத்தைக் | லேவி 24=9 பரிசுத்த | I கொரி 11=23,24 |
| யிலிருந்து தூபமிடல் | ஜெபம் எபேசி 6=18 | | காட்டுகிறது. | ஸ்தலத்தில் வைத்து, | சபையில் அப்பம் புசித்தல் |
| லேவி 9=24 கர்த்தருடைய அக்கினி | | | | | |
| 6. தூபமிடுகிற ஒழுங்கு : | | | | 7. நினைவுக் கூர்தல் : | |
| யாத் 30=7 காலை, மாலை | ஒழுங்கான ஜெப வாழ்க்கை | | | எண் 4=7 பிரயாணத்தில் | லூக் 22=19 உலக ஜீவியத்தில் |
| 7. கட்டளை : | | | | அப்பங்கள் வைத்துக் கட்டுதல் | தொடர்ந்து நினைவு கூர்ந்து |
| யாத் 30=9 அந்நிய தூபம் | சுயம் (மாம்சத்தினால்) | | | | ஆராதனை செய்ய வேண்டும். |
| போடக் கூடாது. | ஜெபிக்கக் கூடாது | | | | |

குறிப்புகள் பரிசுத்த ஸ்தலம் தேவனுடைய சபையைக் காட்டுகிறது.

தூப பீடம் : சபையில் கிறிஸ்து பிரசன்னராக இருக்கிறதைக் காட்டுகிறது.

தூபமிடுதல் : இயேசுவானவர் மூலமாக ஜெபத்தை ஏறெடுப்பதைக் காட்டுகிறது.

குத்துவிளக்கு : சபையில் கிறிஸ்து பிரசன்னராக இருக்கிறதைக் காட்டுகிறது.

எரிய வைத்தல் : சபையில் உபதேச வெளிச்சம் இருப்பதைக் காட்டுகிறது.

மேஜை : சபையில் கிறிஸ்து பிரசன்னராக இருக்கிறதைக் காட்டுகிறது.

அப்பங்கள் புசித்தல் : சபையில் அப்பம் பிட்டுகுதல் ஆராதனைக் காட்டுகிறது.

## 20. ஆசரிப்புக் கூடாரமும் - உலகமும் (எபி 10:5)




## 21. ஆசரிப்புக் கூடாரமும் - காலமும் (எபி 10:5)



## 7. இயேசுவானவரின் வருகைக்குரிய அடையாளங்கள் !

### 33. இஸ்ரவேல் துளிர்த்தல் !

மத்தே 24=32 - 35. . . வஸந்த காலம் . . . (4 வித காலங்கள்)

1. **கொண்டல்** : (கீழ்த்திசைக்காற்று) காற்றுகாலம்.
   - அத்தி மரத்தின் இலையுதிர்வு
   - (ரோமர்கள் ஆளுகையில் இஸ்ரவேலர் சிதறல்)
2. **கோடை** : (மேல் திசைக் காற்று) வேனிற் காலம்
   - அத்திமரம் படல்
   - (உலகத்தில் இஸ்ரவேலர்களின் வீழ்ச்சி)
3. **வாடை** : (வடதிசைக் காற்று) மாரிகாலம்
   - நீர்பாய்தல் (இஸ்ரவேலின் உணர்வு)
4. **தென்றல்** : (தென் திசைக் காற்று) வஸந்தம்
   - அத்திமரம் துளிர்விடல் (இஸ்ரவேலின் செழிப்பு)
   - வஸந்த காலத்தின் இறுதியே கனிகாலம்
   - இஸ்ரவேலின் மனந்திரும்புதல் ஏற்படும்

### 34 உலக நிலைமை :

மத்தே 24=6 யுத்தங்களின் செய்திகள்

7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனம் எழுந்திருக்குதல்
- ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யம் எழுந்திருக்குதல்
- பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், பூமியதற்சிகள்

8. வேதனைகளுக்கு ஆரம்பம்

### 35 சபைகளின் நிலைமை :

மத்தே 24=3-5 என் நாமத்தை . . . (வஞ்சித்தல்)

- கள்ள கிறிஸ்து - பொய் அற்புதங்கள் செய்வார்கள்
- கள்ள தீர்க்கதரிசி - துர்போதனைகள் செய்வார்கள்
- கள்ள ஆசாரியன் - ஆராதனைகளை நீக்குவார்கள்

### 36 குடும்ப நிலைமை :

மத்தே 24 = 8,9 கொலை, பகை. . .

மாற் 13=9-13 குடும்பத்தில் எல்லாராலும். . .

லூக் 21=12-18 ஞானத்தின் உதவி

### 37 ஆவிக்குரிய நிலைமை :

லூக் 21 = 34-36 கண்ணியைப் போல

மாற் 13=10 சுவிசேஷம் அறிவித்தல்

மத்தே 24=42-44 விழிப்புணர்வு. . .

மாற் 13=33-37 ஜெபம். . .

### 38. கைவிடப்படல் :

லூக் 17=34 படுக்கையில் இருவரில் ஒருவர் (குடும்பம்)

35 எந்திரம் அறைக்கிற ஸ்திரிகளில். . . (சபை)

36 வயிலில் வேலை செய்கிறவர்களில் (ஊழியர்)

### 39. ஆக்கினைக்குள்ளாகுதல் :

லூக் 17 = 26, 27, - மத்தே 24 = 37-39 நோவாவின் காலத்தில்

28 - 32 லோத்தின் நாட்களில் நடந்தது போல. . .

- லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்

- தொடரும்

(© C.B.P. - PUBLISHED BY :
S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX" THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013)



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

# மெய்ஞான வைத்திய சாலை

## 8. மெய் தூப சாலை

உருசாலேம் பட்டணத்தின் மேல் திசையில் உள்ள மில்லோ குன்றின் மேல், இந்த மெய் தூப சாலை கட்டப்பட்டிருந்தது. மகா விசாலமுள்ள இந்த மெய் தூப சாலையும் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் பகுதி : வஸ்திர சாலை, இங்கிருந்து தான் ஜீவரட்சனை வைத்தியசாலை, மெய்ஞான வாசஸ்தலம், மெய் ஞான வைத்திய சாலை, மெய்யாறுதல் சாலை ஆகிய இடங்களில் இருக்கும் யாவருக்கும் வஸ்திரங்கள் அனுப்பப்படுகின்றன. இங்கு தேவ இரட்சயனாரும், உன்னத மீட்பினாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஜீவமார்க்கனும், தேவ பிரகாசனும் இருந்தனர். இவர்கள் யாவரும் பொன்னிற உடைகளை அணிந்திருந்தனர்.

இரண்டாவது : தஸ்திர சாலை, இங்குதான் சீயோன் மலையரசரின் சகல இரகசியங்களும் அடங்கிய கிரந்தங்கள் இருக்கின்றன. அவைகளாவன: சீயோன் மலையரசரின் நடபடி கிரந்தங்கள், லோக ஸ்தாபன நடபடி கிரந்தங்கள், ஆதி நரர்களின் நடபடி கிரந்தங்கள், நானாவித ஜாதிகளின் ராஜ்யங்களின் நடபடி கிரந்தங்கள், ஞான திருஷ்டிக்காரரின் பிரபந்தங்கள், தோரா வைந்தாகமங்கள், சீயோன் மலையரசரின் உயில் சுருள்கள், அவரின் நானாகமச் சுருள்கள், ராசப் பிரமாணச் சுருள்கள், நபியீம் தீர்க்க பிரபந்தங்கள், கெதுாபீம் நானாவித பிரபந்தங்கள், சீயோன் மலையரசரின் பாமாலை பிரபந்தங்கள், திருமறை பிரபந்தங்கள் விவிலிய ஆகமங்கள், சன்னது பத்திரங்கள், சூரன்மார்களின் யுத்த ஆகமங்கள், அப்போ கிரிப்பா கதைகள் என ஆயிரமாயிரம் கிரந்தங்கள் அங்கு இருந்தன. இங்கு அந்தரங்கனாரும், தத்துவ அற்புதனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக தேவ இரகசியனும், மறைபொருளனும் இருந்தனர்.

மூன்றாவது : வாயன சாலை : இங்கு வார, மாத, வருச, தினப்பத்திரங்கள் வந்து சேருமிடமாகும். இப்பத்திரங்களின் மூலமாக சருவேசுரனாரின் ஆதினத்தில் உள்ள தேசங்களின் செய்திகளை அறியவும், அவர்களோடு தொடர்பு கொள்ளவும் உதவியாக இருக்கும். இங்கு அசரீரி வாக்கனாரும், ஆதி வார்த்தையினாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக நல் விசேஷனும், மெய் வாக்கனும் இருந்தனர்.

நாலாவது : ஞான உரைசாலை : இங்கு தஸ்திர சாலைகளின் கிரந்தங்களின் அடிப்படையிலும், வாயன சாலை பத்திரங்களின் அடிப்படையிலும் அடிக்கடி அளவளாவுதல் நடந்து கொண்டிருக்கும். இங்கு மெய் பொருளினார், ஏக தத்துவனார் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக நற்கந்தனும், மதுரவாக்கனும் இருந்தனர்.

ஐந்தாவது : ஞான பாக்களின் சாலை இங்கு தாவதாசரின் சங்கீர்த்தனங்கள் முதற்கொண்டு, சீயோன் மலையரசரின் ஞான பாக்கள் வரையுள்ள ஞானப்பாட்டுக்களை ஆராய்ந்து, தெரிந்து, மெய்ஞான வாசஸ்தலத்திலும், தேவனாவிராயரின் மாளிகையிலும் பாடுவதற்கான ஆயத்தங்கள் செய்து கொள்வார்கள். இவர்களுடைய ஞானப்பாட்டுகளின் சத்தம் உன்னத புரியிலிருக்கும் சக்கராதிபதி சருவேசுரனார் கூட கேட்டு மகிழ்ந்தாக சொல்லப்படுகிறது. இங்கு ஞானப் பிரகாசனாரும், சொற்குருநாதனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக மகா கவியனும், நாம சங்கீர்த்தனும் இருந்தனர்.

ஆறாவது : தியான சாலை : இங்கு வரும் உருசாலேம் பட்டணத்தார்; தனித்தனி ஆசனத்தில் அமர்ந்து தஸ்திர சாலையின் ஆகமங்களைக் குறித்து ஆய்வுகள் நடத்துவர். இங்கு அருள் வாரியினாரும், கிருபை பிரவாகனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக பரம தரிசனனும், மோட்சானந்தனும் இருந்தனர்.

ஏழாவது : பிரார்த்தனை சாலை : இங்கு வரும் யாவரும் தங்கள் தேவைகளைக் குறித்து சீயோன் மலையரசருக்கு, விண்ணப்பப் படிவங்களை எழுதிக் கொடுப்பார்கள். இங்கு துதியானந்தனாரும், தேவத்வ பரிபூரணனாரும் காப்பாளர்களாக இருந்தனர். இவர்களுக்கு உதவியாக ஜெபப்பிரியனும், துதி தோத்திரனும் இருந்தனர்.

தொடரும்

# நித்திய ஜீவன்

**8. இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை! (மகா உபத்திரவகாலம்)**
**– ( மகா உபத்திரவம், வருகை, மறுமை மூன்றும் ஒரே தொடர் சம்பவங்களாகும் )**

முன்னடையாளங்கள் !

40 <u>ஜலப்பிரளயம்</u> :

எபி 11=7; – மத்தே 24:37–39

– பேழை – கிறிஸ்து
– நோவா – பரிசுத்த ஆவியானவர்
– நோவாவின் குடும்பம் – இஸ்ரவேலர்கள் – ] புதிய ஏற்பாடு
– பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் – சபை ]
– ஜலப்பிரளய அழிவு – மகா உபத்திரவம் அல்லது கோபாக்கினை
– பேழை பாதுகாப்பு – சபை பாதுகாப்பு
– அராரத் மலையில் பேழை – பரலோகத்தில் சபை
– மலையிலிருந்து இறங்குதல் – சபை மறுமைக்காக பூமிக்கு வருதல் –
– இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை

தொடர்ச்சி 39ம் பக்கம்

# திருமறைக் களஞ்சியம்

19 மகா பரிசுத்த ஸ்தலம் : (உடன்படிக்கைப் பெட்டி)

| உடன்படிக்கைப் பெட்டி | அர்த்தங்கள் | உடன்படிக்கைப் பெட்டியின் பெயர்கள் | அர்த்தங்கள் | கேரூபீன்கள் | அர்த்தங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. உண்டாக்குதல்<br>யாத் 25=10 சீத்தீம் மரம்<br>11 பொன் தகடு<br>2½ முழ நீளம்<br>1½ முழ அகலம்<br>1½ முழ உயரம்<br>12-15 நாலு வளையங்கள்<br>இரு தண்டுகள்<br>16-21 சாட்சிப்பலகை<br>17, கிருபாசனம்<br>2½ முழ நீளம்<br>1½ முழ அகலம்<br>18-20 கேரூபீன்கள்<br>சந்தித்தல் | கிறிஸ்துவின் மனிதத் தன்மை<br>கிறிஸ்துவின் தெய்வத் தன்மை<br>நாலு சுவிசேஷங்கள்<br>மரணம், உயிர்த்தெழுதல்<br>ஏற்றுக் கொள்ளும் இடம்<br>தூதர்கள்<br>பிரசன்னம் | 1. தேவனுடையப் பெட்டி<br>I சாமு 3=3<br>2. கர்த்தராகிய ஆண்டவருடையப் பெட்டி<br>I ராஜா 2:26 அருகையைக் குறிக்கிறது<br>3. சாட்சிப் பெட்டி<br>யாத் 25=22<br>4. வல்லமை விளங்கும் பெட்டி<br>சங் 132:8 | I தீமோ 6=15,16 சேரக் கூடாத ஒளியில்<br>ஏசா 6=1-3 கேரூபீன்கள் மத்தியில்<br>பெட்டியின் மேல் வாசம்<br>யாத் 40=36 பிரசன்னம்<br>எண் 7=89 பேசுதல்<br>எபி 9=1-3 சாட்சிப் பலகை,<br>மன்னா, துளிர்த்தகோல்<br>சாட்சியாக வைக்கப்பட்டது.<br>யோசு 3=1-17 யோர்தான் பிரிதல்<br>யோசு 6=1-24 எரிகோ விழுதல் | 1. சாயல்<br>எசேகி 1=45, மனுஷ சாயல்<br>14 அக்கினித் தோற்றம்<br>மின்னல்த் தோற்றம்<br>2. முகங்கள் :<br>எசேக் 1=6 நாலு முகங்கள்<br>9,10 மனிதன், சிங்கம் எருது, கழுகு<br>வெளி 4=8 பரிசுத்தர் என்று போற்றுதல்<br>ஏசா 6=&&3 கூப்பிட்டுச் சொல்லுதல்<br>3. செட்டைகள் :<br>எசேக் 1:16 நந்நான்கு செட்டைகள்<br>8 மனித கைகள் | மகிமை<br>கிறிஸ்துவின் நாலு தன்மைகளை வெளிப்படுத்துதல்<br>மனுஷ குமாரன், இராஜா ஆசாரியன், தேவகுமாரன் போற்றுதல் |
| 2. மகா பரிசுத்த ஸ்தலம்<br>யாத் 26=34 | வெளி 4=1-3 பரலோகம்<br>மத் 1=23 கிறிஸ்து மத் 18=20 சபை<br>I கொரி 3=16 நாம்<br>ஆகியவைகளைக் காட்டுகிறது. | 5. பரிசுத்தப் பெட்டி<br>II நாளா 35=3 | I சாமு 5=1-12 தாகோன் உடைதல்<br>லேவி 16=1,2 வரக்கூடாது<br>- பார்க்கக் கூடாது | 9. உடலை மூடின<br>24 இரைச்சல்<br>ஏசா 6=2 பறத்தல்<br>4. கால்கள் :<br>எசேக் 1:7 கன்றுக்குட்டியின்<br>கால்கள் போல | மகிமையை மறைத்தல்<br>நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துதல் |
| 3. கிருபாசனம் :<br>யாத் 25=16-22 பிரசன்னம்<br>பரலோகத்தில் சிங்காசனம்<br>பூமியில் கிருபாசனம்<br>லேவி 16=14-16 இரத்தம் | நீதியைக் குறிக்கும்<br>இரக்கத்தைக் குறிக்கும்<br>பாவ நிவர்த்தி | 6. உடன்படிக்கைப் பெட்டி<br>எபி 9=4 | I சாமு 6=13-21 பெத்ஷிமேஷ் ஊரரில் 50, 070 பேர் சாவு<br>II சாமு 6=6-10 ஊசா சாவு<br>மரண சாஷணமாகிய பலி பிரமாணங்கள் உடன்படிக்கைகளாகப் பெட்டிக்குள் இருந்தன. | - வெண்கலம் போல<br>5. ஜீவனாவிகள்<br>எசேக் 1=12<br>9 நேர்முகமாக செல்லுதல்<br>17 திரும்புகிறதில்லை<br>20,21 ஜீவனாவி சக்கரத்தில் | உருவமற்றவைகள்<br>கவனிப்பு |
| 4. கேரூபீன்கள் :<br>யாத் 25=18-22<br>கிருபாசன இரு ஓரங்களில்<br>இரு செட்டைகளை விரித்து<br>இரு செட்டைகளால் கிருபாசனத்தை மூடி<br>ஒன்றுக்கொன்று எதிர்முகமாக<br>முகங்கள் கிருபாசனத்தை நோக்கி<br>கர்த்தரின் பிரசன்னம் | எசேக் 10=1-22, பரலோகத்தில்<br>கேரூபீன்கள் மத்தியில் வாசம்<br>நாலு வித முகங்கள்<br>எருது, சிங்கம், மனிதன், கழுகு<br>ஏசா 6=2-6 சேராபீன்கள்<br>வெளி 4=6-9 ஜீவன்கள்<br>கேரூபீன்கள் - காவல்காக்கிறவர்கள்<br>சேராபீன்கள்-எரிந்து பிரகாசிக்கிறவர்கள் | 7. சீத்தீம் மரப் பெட்டி<br>யாத் 25=10 | கிறிஸ்துவைக் காட்டுகிறது.<br>II நாளா 36=17-19 தேவாலயத்தை இடித்தல்<br>எரேமி 3=16 பெட்டியை உடைத்தல்<br>இது கிறிஸ்துவின் மரணத்தைக் காட்டுகிறது. | 6. சக்கரம் :<br>எசேக் 1=15 படிகப் பச்சை நிறம்<br>சக்கரத்திற்குள் சக்கரம்<br>19,20 ஓடுதல், எழுப்புதல்<br>எசேக் 10=13 சக்கரமே<br>எசேக் 1=18 பயங்கரப் பாத்தக்க உயரமாக<br>சுற்றிலும் கண்கள் | நித்தியம் (காலச்சக்கரம்)<br>நீதி |
| 5. பிரசன்னம் :<br>லேவி 16=2 தூப மேகத்தில்<br>எண் 7=89 கர்த்தரின் சத்தத்தைக் கேட்டல் | கிறிஸ்துவின் பரிந்து பேசுதல்<br>I யோவா 2=1 | | | எசேக் 10=2-7அக்கினித்தழல்<br>7. கண்கள்<br>எசே 1 = 18 அக்கினித்தழல்<br>எசே 10 = 12 கைகளிலும் | மறைவானவைகள் இல்லை<br>தேவ கோபம் |
| 6. பிராயச் சித்தம் :<br>லேவி 16=14-16 இரத்தம் வருசத்திற்கு ஒருமுறை | பாவ நிவர்த்தி | | | செட்டைகளிலும்<br>மண்டலங்கள் | |
| 7. உடன்படிக்கைப் பெட்டி :<br>எபி 9=4, கற்பலகை<br>மன்னா<br>துளிர்த்த கோல் | கிறிஸ்துவைக் காட்டுகிறது | | | எசே 1=25 - 28 தலைக்கு மேல்<br>வச்சிரப் பிரகாசம்<br>சிங்காசனத்தில்<br>எசே 10 = 19 தேவ மகிமை | மறைவானவைகள் இல்லை<br>வாகனாதிகள் அல்லது<br>தெய்வீகத்தை<br>வெளிப்படுத்துகிறவர்கள் |

குறிப்புகள் : மகா பரிசுத்த ஸ்தலம் பரலோகத்தைக் காட்டுகிறது ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள மற்ற பணி முட்டுகள் கிறிஸ்துவைக் காட்டுவது போல உடன்படிக்கைப் பெட்டியும் அவரையேக் காட்டுகிறது. கேரூபீன்கள் பரலோகத்திலே ஜீவன்களாக, ஆவிகளாக இருக்கிறபடியால், அவர்களுக்கு உருவங்கள் இல்லை என்று அறிந்து கொள்ளலாம். ஆனால் பூமியில் காணப்படுகிற மனிதன், மிருகங்கள், பறவை ஆகியவைகளின் சிரசுகள் கொண்டவைகளாக கேரூபீன்கள் தோற்றமளிக்கின்றன. இது பூமியிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்க்க தரிசிகளுக்கு காண்பிக்கப்பட்ட விசேஷித்த தரிசனங்களின் காட்சியாகும். இதன் மூலம் அவர்கள் காணக்கூடாத தேவ மகிமையை அறிந்து கொள்வதற்காக இந்த கேரூபீன்கள் விசித்திர ரூபிகளாக காண்பிக்கப்பட்டது என்று அறியலாம். இந்த கேரூபீன்கள் தேவ தன்மைகளையும், கிறிஸ்துவின் தன்மைகளையும் வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள் பாபிலோனியர் எருசலேம் பட்டணத்தை அழித்து, தேவாலயத்தை இடித்துப் போட்ட போது, சகல வாசஸ்தல பணி முட்டுகளும் உடைக்கப்பட்ட பொழுது, உடன்படிக்கைப் பெட்டியையும் உடைத்துப் போட்டார்கள். எரேமி 3 = 16. இக்காலத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருப்பதாகச் சொல்லப்படும் கட்டுக் கதைகளை நம்ப வேண்டுவதில்லை.



# திருமறைக் களஞ்சியம்





ஆசாரியன்



உடன்படிக்கைப் பெட்டி



பிரதான ஆசாரியன்



ஆசரிப்புக் கூடாரம்

41. <u>சோதோம், கொமோரா அழிவு</u> :

லூக் 17=28-32

- சோதோம் - உலகம்
- லோத்து குடும்பம் - இஸ்ரவேல்; சபை
- லோத்து மனைவி - உலகத்தார்கள்
- அழிவு - மகா உபத்திரவம்
- லோத்து பாதுகாப்பு - இஸ்ரவேல்; - சபை பாதுகாப்பு

42. <u>எகிப்து அழிவு</u> :

எபி 11=28, யாத் 12=12, 13, 29, 30

- பஸ்கா ஆட்டுக்குட்டி - கிறிஸ்து
- வீடுகளில் ஆசரிப்பு - சபை
- சங்கார தூதன் வருகை - மகா உபத்திரவம்
- பஸ்காவினால் பாதுகாப்பு - சபைக்கு பாதுகாப்பு
- பார்வோன் - அந்தி கிறிஸ்து
- ஜனங்களின் விடுதலை - ஜனங்களின் விடுதலை (இஸ்ரவேல்)
- செங்கடல் கடத்தல் - மறுமைக்குள்

43 <u>எரிகோ அழிவு</u> :

எபி 11=30,31 - யோசு 6=1-5

- எரிகோ - உலகம்
- சுற்றுதல் - நற்செய்தி அறிவித்தல்
- மனந்திரும்பவில்லை - மனந்திரும்ப மாட்டார்கள்
- எரிகோ அழிவு - மகா உபத்திரவம்
- ராகாப் பாதுகாக்கப்படல் - சபை பாதுகாக்கப்படல்
- ஏழாவது நாளில் - மறுமை துவங்கும் போது
- இஸ்ரவேல் பிரவேசித்தல் - மறுமைப் பிரவேசம்

44 <u>ராஜ்யங்கள் (சிலை) அழிவு</u> : தானி 2:29-45

| <u>மனித உருவச்சிலை</u> | | <u>புறஜாதிகளின் ராஜ்யங்கள் :</u> |
|---|---|---|
| பசும்பொன் (தலை ) | - | மகா பாபிலோன் |
| வெள்ளி (மார்பும், புயமும்) | - | மேதியர், பெர்சியர் பேரரசு |
| வெண்கலம் (வயிறு - தொடை) | - | கிரேக்க பேரரசு |
| இரும்பு (கால்கள்) | - | ரோமப் பேரரசு |
| இரும்பு, களிமண் (பாதங்கள்) | - | முடியாட்சி குடியாட்சி அரசுகள் |
| பாதங்களின் பத்து விரல்கள் | - | முடிவில் தோன்றும் பத்து வல்லரசுகள் |
| கல் உருண்டு வருதல் | - | இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை |
| சிலை அழிவு | - | மகா உபத்திரவங்களால் ராஜ்யங்கள் அழிவு |

45. <u>அப்சலோம் அழிவு</u> :

II சாமு 18=15

- தாவீது எருசலேமை விட்டு வெளியேறுதல் - இயேசுவானவர் புறக்கணிக்கப்படல்
- வழியில் ராஜாவை போசிக்கிறவர்கள் - சபை
- ராஜா அரணிப்பான இடத்தில் தங்குதல் - வலது பாரிசத்தில் கிறிஸ்து
- அப்சலோமின் யுத்தம் - மகா உபத்திரவம்
- ராஜா திரும்ப வருதல் - இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை

46. <u>ஆமான் அழிவு</u> :

எஸ்த 8=15,16,7

- மொர்தெக்காய்க்குத் தூக்குமரம் - இயேசுவானவரின் மரணம்
- மொர்தெக்காய் நகர் வலம் வருதல் - உயிர்த்தெழுதல்
- எஸ்தர் - சபை
- மொர்தெக்காய் சத்துருக்கள் அழிவு - மகா உபத்திரவம்
- மொர்தெக்காய் ராஜ பவனி - வெளியரங்கமான வருகை

(தொடரும்)

© C.B.P. -

PUBLISHED BY : S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX"
THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

# 9. கேரூபன்

யுகா யுகங்களுக்கு முன்பு உன்னத புரியின் மகா சக்ரவர்த்தியான சருவேசுரனார்; தமது ராஜ்யத்தின் எல்லைகளை விசாலமாக்கி, மகா செழிப்புள்ளதும், மகிமையுள்ளதுமாக்கி, தமக்குரிய சேவக கணங்களை தாமே சிருஷ்டித்து யாவையும் பரிபாலித்து வந்தார். அறிவுக் கெட்டாததும், ஆராய்ந்து முடியாததுமான பெரிய காரியங்களை செய்கிற மகா சக்கரவர்த்தியானார்; தாம் உண்டாக்கின சேவக கணங்களிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், மிக நேசமும் வைத்தார்.

அவருடைய சேவக கணங்களோ, அவரின் திரியேக தத்துவத்தை யோ, வல்லமையையோ, மகத்துவத்தையோ, மகிமையையோ, ஐசுவரியத் தையோ, கனத்தையோ முற்றிலுமாக அறிந்தவர்களில்லை.

இப்படியிருக்கும் காலத்தில் சருவேசுரனார் தாம் உண்டாக்கின சேவக கணங்கள் தம்முடைய மகிமை பிரதாபத்திற்கு தலை வணங்க வேண்டும் என்பதற்காக பரிசுத்த தொழுகை முறைமைகளை ஏற்படுத்தினார். எனவே பற்பல சேவக கனங்களுக்கு மேலாக தாம் சிருஷ்டித்த கேரூபன் என்பவனை அதிபதியாக வைத்தார்.

இவன் சிருஷ்டிக்கப்பட்ட நாளில், அவனை மகா ஞானமுள்ள வனாகவும், பூரண அறிவுள்ளவனாகவும், மிகுந்த அழகுள்ளவனாகவும் ஆக்கி, அவனை பற்பல வைரங்களால் மூடி தமக்காக செய்யப்பட்ட விசித்திரமான முத்திரை மோதிரமாக சகல அதிகாரங்களையும் கொடுத்து, தம்முடைய மறு தேசமான ஏதேன் புரியில் உள்ள அக்கினி ஜுவலையாக பிரகாசித்துக் கொண்டிருக்கிற கற்களின் அரண்மனையில் வைத்து, அவன் எப்பொழுதும் அழிக்கப்படாத நிலைமையில் அவனை காப்பாற்றுவதற்காக அபிசேகம் செய்வித்தார்.

இவன் இந்த பரிசுத்த பர்வதத்திலிருந்து, தன்னுடைய கீத வாத்தியங்களாகிய எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித மேள தாளங்களோடு, சர்வ சிருஷ்டி கர்த்தாவும், மகா சக்கரவர்த்தியான சருவேசுரனாரை ஞானப்பாக்களினாலே துதித்து, மகிமைப்படுத்தி, சகல சேவக கணங்களோடும் தொழுது கொள்ளும்படியாக ஏற்படுத்தினார். அதன்படியான உன்னதபுரி என்ற வானலோகம்; சேவக கணங்களால் நிறைந்து, சக்கரவர்த்தியினாரைத் துதித்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

இப்படியிருக்குங் காலத்தில் சர்வ ஞானமுள்ள மகா சக்ராதிபதி யானவர் ஆதியாகிய அக்காலத்தில் வானமும், பூமியும் சிருஷ்டித்தார். இம்மகா வல்லமை பொருந்திய காரியங்களைக் கண்ட சேவக கணங்கள் அதிசயித்து மகிழ்ந்தன. சர்வேசுரனார் தாம் உண்டாக்கின பூமியில் பற்பல ராட்சச கணங்களையும், அரக்கர்களையும் சிருஷ்டித்து, தமது ஆதினத்தில் இருக்கும்படி கட்டளையிட்டார். மகாபலம் பொருந்தினவர்களாகிய இந்த ராட்சச அரக்கர் குலத்தினர், மகா சக்கரவர்த்தியினாரின் உன்னத பலத்தை அறியாது அவருக்கு விரோதமாக கலகம் செய்து அவருடைய ஆதினத்தை விட்டு விலகினர். ஓ! இவர்களுக்கு என்ன நேரிடுமோ என்று உன்னதபுரி சேவக கணங்கள் ஆச்சரியத்தோடு நோக்கி நின்றது. ஆனால் மகா ஞானமுள்ள சக்கரவத்தியினார் அவர்களை ஒன்றும் செய்யாது விட்டு விட்டார். பலவாயிரம் காலங்கள் கடந்தன.

இப்படியிருக்க ஏதேன்புரியில் இருந்து, இவைகளை கவனித்துக் கொண்டிருந்த கேரூபன்; தமது சக்கரவர்த்தியினார் ஒன்றும் செய்ய இயலாத கையாலாகாதவர் என்ற முடிவுக்கு வந்தான் சருவேசுரனாரின் ஞானத்தை அசட்டை செய்தான். தன் அழகினால் மேட்டிமையடைந்து, தன் மினுக்கினால் ஞானத்தைக் கெடுத்தான். அவன் உன்னத புரி சேவக கணத்தை எல்லாம் கூட்டி, மகா, மகா சேவக கணங்களே, நாம் எவ்வளவு நாளைக்கு இப்படி இருப்பது! சருவேசுரனார் பூலோக அரக்கர்களை ஒன்றும் செய்யக் கூடாத பெலனற்றவராக இருக்கிறார். நீங்கள் யாவரும் என் பக்கமாக இருப்பீர்களானால் இதோ நான் வானத்துக்கு ஏறுவேன். சக்கரவர்த்தியினார் நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வட புறங்களிலுள்ள தொழுகைக் கூடம் என்னுடையதாகி, மகா பர்வதத்திலே நான் வீற்றிருப்பேன். அப்பொழுது நான் யார் என்று அறிந்து கொள்வீர்கள் என்றான். உடனே சேவக கணங்கள் இரண்டாகப் பிரிந்தனர். சிலர் அப்படியும், சிலர் இப்படியும் சொன்னார்கள். அப்பொழுது இதோ உன்னத புரியிலிருந்து சர்வேசுரனாரின் பரிசுத்த அக்கினி புறப்பட்டு, ஏதேன் புரியில் பற்றிப் பரவியது. கேரூபனும், அவன் சகல கணங்களும் ஓட ஆரம்பித்தனர். மாசற்ற சேவக கணங்களை அக்கினைப் பற்றி பிடிக்கவில்லை. அவர்கள் கேரூபனைப் பார்த்து, டேய் சூரா உன் வீரம் எங்கேடா போச்சு? என்று நையாண்டி பண்ணினார்கள். இதோ அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என்று எண்ணப்பட்ட கேரூபன் பூலோகத்திற்குத் தள்ளுண்டு விழுந்தான். அவன் சேனைகளும் அவனோடுத் தள்ளப்பட்டன.

உடனே வானங்கள் இடி இடித்து மடமட வென்று சரிந்தன. மலைகள் வெடித்து சிதறின. எங்கும் அல்லோ கோலப்பட்டது. இதோ பூலோக அரக்கர் வானத்தை அண்ணாந்து பார்த்து, இதோ கேரூபனும், அவனுடைய சேனைகளும் தலை கீழாக விழுகிறதைக் கண்டு அவனை சங்கரிக்க ஆயத்தமானார்கள். கேரூபன் தன் வலிமையெல்லாம் ஒன்று கூட்டிப் போரிடத் துவங்கினான். உடனே ராட்சசர்கள் நீயும் எங்களைப் போல பலட்சியம் அடைந்து, எங்களுக்கு சமமானாயோ என்று சூழுரைத்துப் போரிடத் துவங்கினர். வானங்களும், அதன் சேனைகளும், பூமியும், அதன் மலைகளும் யாவும் அழிந்தன. ராட்சச குல அரக்கர்கள் யாவரும் மாண்டனர். கேரூபன் அடி பாதாள தேசத்திற்குத் தப்பியோடி இருளுக்குள் தஞ்சம் புகுந்து ஹ்ஹா. . . ஹ்ஹா . . ஹ்ஹா. . . சருவேசுரன் இங்கே வரட்டும் பார்க்கலாம் என்றான். ஏனெனில் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்யும் சக்கரவர்த்தியினாருக்கு இருளானது மகா அருவருப்பு. எனவே இவனது மூடத்தனமான கொக்கரிப்பு உன்னத புரியில் கேட்கப்பட்டது.

சருவேசுரனாரின் கண்கள் நெருப்பு பிழம்பாகத் தோன்றியது. சர்வ சங்கமாகிய சேவக கணங்கள் கூடியது. யார் நமது காரியமாக போவான் என்று சர்வேசுரனார் விளித்து நின்றார். கேரூபனுக்கு மிஞ்சியவன் சேவக கணங்களில் ஒருவனுமில்லை. எனவே எல்லாரும் அமைதியுற்றனர்.

மேலும் உன்னத புரியில் வைத்து, அவனை காப்பதற்காக அபிசேகம் நடைபெற்றதினால் யார் அவனை அழிக்கக் கூடும் ! என்ன ! உங்களில் ஒருவனுமில்லையா? என்று சருவேசுரனார் வெகுண்டு எழுந்தார். அப்பொழுது திரியேக தத்துவத்தில் ஜனிப்பிக்கப்பட்ட சக்கரவர்த்தியினாரின் ஏக மைந்தனும், இமானு வேலராகிய சீயோன் மலையரசர் எழுந்து நின்று, இதோ நான் வருகிறேன். என் பிதாவே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்றார். உடனே சர்வ சங்கம் கூடியிருக்க, சருவேசுரனார் எழுந்து இதோ! இம்மானுவேலருக்கு சிட்சா அடையாளமிட்டு, கேரூபனை அழிப்பதற்காக இந்த பூதலத்தோற்றத்திற்கு முன்பு அவரை அனுப்பி வைத்தார்.

(தொடரும்)

# திருமறைக் களஞ்சியம்

## 20 உடன்படிக்கைப்பெட்டிக்குள்ளேயுள்ள பொருள்கள் (நியாயப்பிரமாண பலகைகள், மன்னா பாத்திரம், துளிர்த்த கோல்

| நியாயப் பிரமாணங்கள் | அர்த்தங்கள் | மன்னா | அர்த்தங்கள் | துளிர்த்த கோல் | அர்த்தங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. நியாயப்பிரமாண பலகைகள்<br>யாத் 24 = 12 மலைக்கு அழைப்பு<br>உபா 5 : 22 அக்கினியிலிருந்து,<br>யாத் 31 = 18 விரலினால் எழுதப்பட்ட<br>யாத் 32 – 15, 16, உபா 4 = 13 தேவனால் செய்யப்பட்ட<br>யாத் 32 = 19 உடைத்தல்<br>யாத் 34 = 1 – 4, 28, 29,<br>உபா 10 = 1 – 5 திரும்ப எழுதுதல்<br>2. இடம் :<br>உபா 10 = 1 – 5 பெட்டிக்குள்ளே<br>– சாட்சியாக<br>– மகா பரிசுத்தஸ்தலத்தில்<br>3. புத்தகங்கள் :<br>உபா 31 = 24 – 265 பெட்டிக்குள்<br>I ராஜா 8 = 9 II நாளா 5 = 10<br>பலகைகள் தவிர வேறில்லை.<br>4. இருநிலைமைகள் :<br>நீதிப்பிரமாணங்கள்<br>பழிக்குப் பழி பிரமாணங்கள்<br>இரக்கமில்லாமை<br>நீதி<br>புறக்கணித்தல்<br>கைவிடுதல்<br>பாளையத்திற்குப் புறம்பே<br>தண்டனை<br>5. நியாயப்பிரமாணத்தின்<br>பொருள்கள் :<br>விசுவாசம் :<br>ஆடு, மாடுகள் பலியாகுதல்<br>நீதியை வெளிப்படுத்துதல்<br>அன்பை வெளிப்படுத்துதல்<br>சுத்திகரிப்பு, சடங்கு பிரமாணங்கள்<br>கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனை (இம்மையில்)<br>கீழ்படிகிறவர்களுக்கு மன்னிப்பு, விடுதலை.<br>வாக்குத் தந்த சுதந்தரம் பூமிக்குரிய கானான் தேசம் | கலாத் 4 = 11 – 26 பழைய புதிய ஏற்பாடுகள்<br>சங் 40 = 6 – 8, எபி 10=5–10 கிறிஸ்து மனதில் வைத்து நிறைவேற்றுதல்<br>கலாத் 3 = 10 – 13 மீட்பு<br>நியாயப் பிரமாணங்கள்:<br>பலிசெலுத்தும் பிரமாணங்கள்<br>இரக்கம்<br>அன்பு<br>பரிசுத்தமாகுதல்<br>ஏற்றுக் கொள்ளுதல்<br>பாளையத்திற்கு உள்ளே<br>மன்னிப்பும், விடுதலையும்<br>நிறைவேற்றுதல் :<br>இயேசுவானவர் பலியாகுதல்<br>நீதியை நிறைவேற்றுதல்<br>அன்பை விளங்கச் செய்தல்<br>பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்குதல்<br>கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனை( மறுமையில் )<br>கீழ்படிகிறவர்களுக்கு மன்னிப்பு, விடுதலை<br>வாக்குத்தத்த சுதந்திரம் பரம கானான் தேசம். | 1. வருகை :<br>யாத் 16 = 4 வானத்திலிருந்து<br>சங் 78 = 23 – 25 தூதர்களின் அப்பம்<br>2. வெளிப்படல் :<br>யாத் 16 = 14 தரைமீது<br>எண் 1 = 9 பனியின் மீது<br>3. அறியாமை :<br>யாத் 16 = 15 இது என்ன?<br>31. வெண்மையாக<br>4. புறக்கணித்தல் :<br>எண் 11 : 4 – 6, மன்னா வேண்டாம்<br>5. உயர்த்தப்படல் :<br>எண் 11 = 7 – 8 அரைத்து, இடித்து சமைத்தல்<br>யாத் 16 = 32 – 34 மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைத்தல்.<br>6. முடிவு :<br>யோசு 5 = 10 –12 நின்று போயிற்று<br>யாத் 16 = 35 நாற்பது வருசங்களாகப் புசித்தல்<br>7. தேடுதல் :<br>யாத் 16 = 21 உருகிப் போகுதல்<br>16 – 18 அளவுக்குத் தக்கதாக<br>உபா 8 = 3 பிழைத்தல் | யோவா 3 = 13 பரலோகத்திலிருந்து இறங்கினவர்<br>லூக் 2 = 7 முன்னிலையில்<br>லூக் 1 = 35 மத் 1 : 18 – 20<br>பரிசுத்த ஆவியானவரால்<br>யோவா 1 = 10 அறியாமை<br>எபி 7 = 26 பரிசுத்தர்<br>லூக் 23 = 21, யோவா 1 = 11 ஏற்றுக் கொள்ளவில்லை.<br>கிறிஸ்துவின் பாடுகள் மரணம்<br>உயிர்த்தெழுதல், பரலோகத்தில் அமர்தல்<br>I கொரி 13 = 10, எபி 4 =8–10<br>நிறைவானது வரும் போது,<br>குறைவானது நீங்கிப் போகுதல்<br>யோவா 6 = 30,33,48,50,57,58<br>ஜீவ அப்பத்தை தேடுதல்<br>வெளி 2 = 17 கொடுத்தல் | 1. முறுமுறுப்பு (கோராகின் புத்திரர்)<br>எண் 16 = 8 – 11 ஆசாரியப்பட்டத்தை விரும்புதல்<br>ஆரோனுக்கு விரோதமாக,<br>250 பேர் கூட்டமாக,<br>தாத்தான், அபிராம் தலைவர்களாக<br>தூப கலசம் கொண்டு வர கட்டளை<br>அந்நிய அக்கினி<br>பூமி விழுங்குதல்<br>மீதியானவர்களை அக்கினி பட்சித்தல்<br>14, 700 பேர் சாவு<br>2. இணக்கம் :<br>எண் 17 = 12, 13 முறுமுறுப்பு<br>1,2 பன்னிரு கோல்<br>3 ஆரோனின் கோல்<br>3. இயேசுவானவரை நினைவு படுத்துதல்<br>எண் 17 = 6, 7 வெட்டப்பட்ட ஆரோனின் கோல்<br>கர்த்தரின் சந்நிதியில்<br>4. உயிர்த்தெழுதல் :<br>எண் 17 = 8 துளிர்த்து, பூத்து, கனிதருதல்<br>ஆரோனின் கோல் மட்டும்<br>ஆரோனின் ஊழியத்தையே<br>5. தெரிந்தெடுப்பு ;<br>எண் 17 = 8 ஆரோனின் கோல் மட்டும்<br>9. திரும்பப் பெறல்<br>6. ஆசாரியத்துவம்<br>எண் 17 = 8 ஆசாரியத்துவம்<br>தொடருதல் நியாயப்பிரமான பலிகள்<br>ஆரோன் பாவ நிவர்த்தி செய்து<br>திரும்ப வருதல்<br>லேவி 16 = 11 பலியிடல்<br>யாத் 29 = 14 புறம்பே<br>லேவி 16 = 12, 13 மகாபரிசுத்த ஸ்தலத்தில்<br>யாத் 28 = 35 திரும்ப வருதல்<br>7. சாட்சி :<br>எண் 17 = 10, 11 பெட்டிக்குள் | யோவா 11 = 46 – 51<br>ஆசாரியர்களின் பதவி வெறி<br>பாடு, மரணம்<br>உயிர்த்தெழுதல்<br>அப்போ 4 = 12<br>இயேசுவானர் யூதாகோத்திரம்<br>மெல்கிசேதேக் முறைப்படி<br>இயேசுவானவர், திரும்ப வருதல்<br>எபி 9 = 24 – 28<br>–<br>எபி 9 = 4 |

குறிப்புகள் : நியாயப் பிரமாணங்கள் இரு வகைப்படும். 1. நீதிப் பிரமாணங்கள்; இது தண்டனையைக் கொண்டு வருகிறது 2. நியாயப் பிரமாணங்கள் ; இது மன்னிப்பைக் கொண்டு வருகிறது. நியாயப் பிரமாணங்கள் இருவகைப்படும். 1. பலி செலுத்தும் பிரமாணங்கள். 2. அதன் நிறை வேறுதலான இயேசுவானவரின் பலி மரணமாகும். மன்னா பிரித்தெடுக்கப் பட்டவர்களுக்காக கொடுக்கப்பட்ட வான ஆகாரமாகும். இது இயேசுவானவரை நினைவு படுத்துகிறது மல்லாமல், இக்காலத்தில் வேத வாக்கியங்களால் போஷிக்கப் படுவதையும் காட்டுகிறது. ஆரோனுடைய துளிர்த்த கோலினால், அவனுடைய ஆசாரிய ஊழியத்தை மட்டுமே அங்கிகரித்ததாக தேவன் தெரியப்படுத்திய அக்காரியங்கள் ; இக்காலத்தில் இயேசுவானவர் மூலமாக அல்லாமல் வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை எனக் காட்டுகிறது. இந்த நியாயப் பிரமாண பலகைகள், மன்னா பாத்திரம், ஆரோனுடைய துளிர்த்த கோல் ஆகிய மூவித பொருள்களையும், உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைத்து, மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைத்து போல, இயேசுவானவரும் நியாயப் பிரமாணங்களை நிறைவேற்றிய இரட்சகராகவும், தாம ஜீவ மன்னாவாகி, போஷித்து பாரமரிக்கும் இராஜாவாகவும், துளிர்த்த கோலைப் போல, உயிர்த்தெழுந்து மகா பிரதான ஆசாரியராகவும் இப்பொழுது நமக்காக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்



திருமறைக் களஞ்சியம்



வெண்கலத் தொட்டி



பலிபீடம்



ஆசரிப்புக் கூடாரம்

## 9. இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை (மகிமை)

47. <u>பிதாவின் மகிமை</u> :

லூக் 9=26 பொருந்தினவராய்

- யாத் 24=15–18 மேகமும், அக்கினியும்
- யாத் 40=38 பகலும், இரவும்
- **<u>உலகத்தின் இரு நிலைமைகள்</u> :**

1. பகல் – மேகம்
   - அப்போ 1=9–11 எப்படியோ அப்படியோ
   - மத் 24=30 மேகங்கள் மேல் (உபத்திரவம் முடிந்தவுடன்)
2. இரவு – அக்கினி
   - ஏசா 66=15,16 கோபத்தை செலுத்த
   - II தெச 1=7–10 அழிவாகிய தண்டனை

48. <u>தமது மகிமை</u>

மத்தே 25=31 பொருந்தினவராய். . .

- மத்தே 17=1–5 சூரியனைப் போல
- அப்போ 22=6–11 பேரொளி (ஒளியின் மகிமை)
- அப்போ 26=13 சூரிய ஒளியிலும் அதிகமான

49. <u>பரிசுத்தவான்களின் மகிமை</u>

II தெச 1=7–10

- யோவா 17=22 ஒன்றாக இருத்தல்
  24 கூட இருத்தல்
- கொலொ 3=4 வெளிப்படுதல்
- I யோவா 3=1,2 அவருக்கு ஒப்பாக

50. <u>பரிசுத்த தூதர்கள்</u>

மத்தே 25=31

- மத்தே 28=1–4 செத்தவர்களைப் போல
- லூக் 2=8,9 – அப்போ 12=7 பிரகாசம்

51. <u>வல்லமையுள்ள தூதர்கள்</u> :

II தெச 1=7,8

- II ராஜா 19=35 – 185000 பேரை ஒரே அடியில்
- அப்போ 12=23, புழு புழுத்து

–தொடரும்

## சிறிய குறிப்புகள்

**அமர்ந்திருத்தல்**

எல்லாவித கலக்கத்திற்குரிய நிகழ்ச்சிகளிலும் இடை இடையே ஒய்வு நேரமும் உண்டு. ஏனெனில் அவ்வேளையிலேயே புதிய ஆற்றல் உண்டாகிறது. ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் இன்பமயமான துதி, கீதமும் சிறிது நேரம் அமர்ந்திருக்கும். ஆத்துமத்தின் அமைதியிலே தங்கியிரு. சிறிது நேரம், ஜெபம், துதி யாவற்றையும் விட்டுவிடு. நீ முழுவதுமாக அவர் அதிகாரத்தின் கீழில் அமர்ந்திருந்து கர்த்தருடைய சொற்களுக்கும், புன்னகைக்கும் பொருள் அறிந்து கொள்.

போட்டியில் வெற்றி பெறுவதற்காக சிலம்பம் வீசும் பந்தயக் காரனைப் போல் உன் சித்தத்தின் வன்மையில் பரலோகத்தை கைப்பற்றிக் கொள்ளலாம் என எண்ணாதே.

உன் பரம பிதாவின் அருகில் சிறு பிள்ளையைப் போல அமர்ந்து, அவர் அமைதியாயிரு என்று சொல்வதைக் கேட்டு, அதனால் உனக்கு வரும் இன்பத்தை அறிந்து கொள்!

© C.B.P. -

PUBLISHED BY :
S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX"
THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

## 10. ஆதிசேடன்

ஆதியில் பூர்வ உலகத்தை அழித்து, அதில் உள்ள இராட்சத குலத்தையும் அழித்து, பாதாள தேசத்திற்கு தப்பியோடி ஒழிந்த கொண்ட கேரூபன்; இராட்சத குலத்தைச் சேர்ந்த காம சொரூபினி ராட்சசியையும், பேலியாளரக்கினியையும் சிறை பிடித்துக் கொண்டு போய், தனக்கு பெஞ்சாதியாக்கிக் கொண்டான். பின்பு பூர்வ உலகம் சிருஷ்டிக்கப்பட்டவுடன், இவன் ஆதிசேடன் வேஷம் பூண்டு பூதலத்தில் பிரவேசித்து, வேங்கை தேசத்தில் குடியிருந்த போது மகா கொடூரர்களாகிய ஆறு குமாரர்களையும், ஆறு குமாரத்திகளையும் காம சொரூபினி ராட்சசியிடம் பெற்றான். அவர்களின் நாமங்களாவன: ஆதிகேடன், வேதாள ராட்சசன், பூதல அரக்கன், நாசபூதன், அப்பொல்லியோன், லேகியோன் என்ற இவர்களே ஆறு குமாரர்களாகும். ஜெகராட்சசி, புவியரக்கி, காமினி, மயக்கினி, வம்பினி, குசும்பினி என்ற இவர்களே ஆறு குமாரத்திகளாகும்.

பின்பு அங்கிருந்து ஆதிசேடன் குருக்கன் தேசத்தில் குடியேறினபோது மகா தந்திரர்களாகிய ஆறு குமாரரையும் ஆறு குமாரத்திகளையும் பேலியாளரக்கியிடம் பெற்றான். இவர்களுடைய நாமங்களாவன: சாபத்தீடன், மாந்திரீகன், குறிகாரன், மாயவித்தைக்காரன், ஒளிவேஷன், கள்ளத் தீர்க்கன் என்ற இவர்களே ஆறு குமாரர்களாகும். இடும்பினி, பாவநாரி மணி, விபிசாரினி, மினிக்கினி, காம விகாரணி, அடங்காப்பிடாரினி என்ற இவர்களே ஆறு குமாரத்திகள். சருவேசுரனார் பூர்வ உலகத்தை வெள்ளப் பெருக்கினால் அழித்தபோது, இந்த ஆதிசேடனும், அவனுடைய இரு பெஞ்சாதிகளும், பன்னிரு குமாரர்களும் பன்னிரு குமாரத்திகளும், மீண்டும் பாதாள தேசத்திற்கு ஒடி ஒளிந்து கொண்டார்கள். அப்பொழுது ஆதிசேடனுடைய பிள்ளை குட்டிகள் யாவரும் நஞ்சானும், புஞ்சானுமாக இருந்தனர்.

வெள்ளப் பெருக்கு நின்று போனபின்பு, பூர்வ உலகம் சுத்தமான போது, முப்பெரும் சாதிகள் பூதலத்தில் தேச சஞ்சாரிகளாக இருந்தனர். இவர்களில் காமியர்கள் மகா விசாலமான மிஸ்ராயீம் தேசத்தை உண்டாக்கினர். இவர்கள் பட்டணங்களை கட்டுவதில் மகா பிரக்கியாதி பெற்றவர்கள். இவைகளை அறிந்த ஆதிசேடன் பாதாள தேசத்தை விட்டு, பூதலத்திற்கு வந்ததோடு மிஸ்ராயீம் தேசத்தாரோடு யுத்தங்கள் செய்து அத்தேசத்தை தனக்குரியதாக மாற்றிக் கொண்டான். அவனுடைய குமாரர்கள் யாவரும் தங்கள் தங்கள் சகோதரிகளையே தங்களுக்கு பெஞ்சாதியாக்கிக் கொண்டு குமாரர்களையும், குமாரத்திகளையும் பெற்றனர். இவர்களுடைய வம்சங்களாவன: ஆதிசேடன், காம சொரூபினி ராட்சசியிடம் ஆதிகேடனை பெற்றான். இந்த ஆதிகேடன் ஜெகராட்சசியிடம் வலுசர்ப்பனையும், பசாசையும் பெற்றான். வேதாள ராட்சசன் புவியரக்கியிடம் பில்லி சூனியனையும் கொள்ளி வாயனையும் பெற்றான். பூதல அரக்கன் காமினியிடம் நாச காரனையும், சங்காரனையும் பெற்றான். நாச பூதன், மயக்கினியிடம் அழிவுக் கழிம்பனையும், நிக்ரகனையும் பெற்றான். அப்பொல்லியோன் வம்பினியிடம் குட்டி சாத்தானையும், கொடூரனையும் பெற்றான். லேகியோன் குசும்பினியிடம் எதிராளியையும், மரண உபாதியனையும் பெற்றான். இவர்கள் மகா துஷ்டர்களாக இருந்து, மிஸ்ராயீம் தேசத்திலுள்ள ஆறு பட்டணங்களுக்கு பிரபுக்களாக இருந்தனர்.

பின்பு ஆதிசேடன் பேலியாளரக்கியிடம் சாபத்தீடனை பெற்றான். இந்த சாபத்தீடன் இடும்பினியிடம் எத்தனையும், சதியனையும் பெற்றான். மாந்தீரிகன், பாவ நாரி மணியினிடத்தில் இருளனையும், இடும்பனையும் பெற்றான். குறிகாரன், விபிசாரியினிடத்தில் கார்மேகனையும், அந்தகாரனையும் பெற்றான். மாயவித்தைக் காரன், மினிக்கினியிடம் அசுத்த ஆவியனையும், நிஷ்டுரனையும் பெற்றான். ஒளிவேஷன் காம விகாரனியிடத்தில் நாய் தலையனையும், கழுதைத் தலையனையும் பெற்றான். கள்ளத் தீர்க்கன், அடங்காப் பிடாரியிடம் களவுக் கள்ளனையும், நரக பாத்திரனையும் பெற்றான். இவர்கள் மகா தந்திரர்களாக இருந்து, மிஸ்ராயீம் தேசத்திலுள்ள ஆறு பட்டணங்களுக்கு பிரபுக்களாக இருந்தனர். இவர்கள் மூலமாக பற்பல ராட்சத குலத்தினரும், அரக்கக் குலத்தினரும், பசாசு குலத்தினரும் ஆயிரமாயிரமாய் பலத்து, பலுகி பெருகி, பூதலத்திலுள்ள பற்பல தேசங்களில் குடியேறினர். இவர்களால் எல்லா தேசங்களும் நிறைந்தது. அதனால் இவர்கள் பூதல தேசங்கள் யாவையும் தங்களுடைய ஆதினத்திற்குள்ளே கொண்டு வர வேண்டுமென்று பூதலவாசிகளுக்கு தீராத தொல்லை கொடுத்து வந்தனர்.

– தொடரும்

### சிறிய குறிப்புகள்

**அடையாளங்கள் :** நம்மைத் தைரியப்படுத்தும் அடையாளங்களை எப்பொழுது கொடுக்க வேண்டும், எப்பொழுது கொடாதிருக்க வேண்டும் என்று கர்த்தர் அறிவார். நமது புலன்களால் உணரப்படும் அடையாளங்களை விட அவருடைய வார்த்தைகளைப் பற்றிக் கொள்வோம். அவருடைய வாக்குத் தத்தங்களே உறுதியும், நம்பிக்கையுமானவைகள் என்பதை நாம் அறிய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் காணத்தக்கதாக அடையாளங்களை நமக்குக் கட்டளையிட்டால் அதுவும் நல்லதே அடையாளங்களின்றியே அவரை நம்பின நாம் அவற்றை இன்னும் அதிக மேன்மையாக ஏற்றுக் கொள்வோம். அவருடைய வார்த்தைகளையன்றி வேறு அடையாளங்கள் தேடாதவர்கள் அவருடைய அன்பின் அடையாளங்களையும் காணுவர்.

**நினைவுகூர்தல் :** நமக்காக நாமே போராடி நம்மக் காப்பாற்றிக் கொள்ள முன் வந்ததால், கர்த்தருடைய உதவியை அநேக முறை இழந்து போயிருக்கிறோம். அமைதியின் வல்லமையையும், அடங்கிய சிந்தையையும் தேவன் நமக்கு கொடுப்பாராக! அவ்வாறாயின் துன்பமும் போராட்டமும் நிறைந்த நமது உலக வாழ்வு முற்று பெற்ற பின்பு, காலை பணியையும், மென்மையான ஒளியையும், மாலைத் தென்றலையும், கல்வாரிக்கும், உகந்து சென்ற கிறிஸ்து இரட்சகரையும், புறா வடிவில் வந்த சாந்தமான பரிசுத்த ஆவியானவரையும் நாம் நெடிது நினைத்து இருப்பது போல், மக்கள் நம்மையும் நினைப்பார்கள்.

# திருமறைக் களஞ்சியம்

21 தூபவர்க்கம்

| I தூப வர்க்கம் | அர்த்தங்கள் | II தூப வர்க்கம் | அர்த்தங்கள் |
|---|---|---|---|
| 1. ஒழுங்கு : | | 1. வேதவாசிப்பு : | வெளி 8=3,4 |
| யாத் 30=34–38 செய்முறைகள்– | வெளி 5= 8 ஜெபங்கள் | யாத் 30=34&38,7,8 காலை மாலை | ஒழுங்கான ஜெபவாழ்க்கை |
| வெள்ளைப் போளம்–குங்கிலியம்– | அல்பான்பிசின் – சாம்பிராணி | விளக்கு ஏற்றி, அணைக்கும் போது | |
| விண்ணப்பம் – ஜெபம் | வேண்டுதல்–ஸ்தோத்திரம் Iதீமோ 2:1 | | |
| 2. வெள்ளைப் போளம் (கசப்பு) | மத் 27=34, மாற் 15=23 | சங் 119=18 என் கண்களை | |
| I சாமு 1=10 மனங்கசந்து | விண்ணப்பம் | 2. பாவ அறிக்கை : | |
| 12,16,17,26,27 விண்ணப்பம் | | லேவி 5=11,12 போடாமல். . . | I யோவா 1=8,9 அறிக்கை – பாவ |
| 11 கொடுத்(தால்) – | உறுதியற்றச்சொல் | | அறிக்கையில் ஸ்தோத்திரம் கூடாது. |
| 17 கட்டளையிடுவா(ராக) – | மத் 6=9, 10 பரிசுத்தப்படுவ(தாக) | 3. பரிசுத்தம் : | |
| | – வருவ(தாக) | யாத் 30 =35 துப்புரவு | பாவ அறிக்கை ஜெபத்தை |
| | – செய்யப்படுவ(தாக) | தானி 9=4,5,20,21 பாவ அறிக்கை | பரிசுத்தமாக்கும் |
| | மத்–8=1,2 சித்த(மானால்) | 4. பரிசுத்த ஆவியானவரினால் : | |
| | Iயோவா 5=14 அவருடைய சித்தப்படி. | லேவி 10 = 1,2 அந்நிய அக்கினி | எபேசி 6=18 பலிபீட அக்கினி |
| 3. குங்கிலியம் (நொறுக்குதல்) | ஜெபம் : | லேவி 16=12,13 பலிபீட அக்கினி | பரிசுத்த ஆவியானவரைக் காட்டுகிறது. |
| ஏசா 57=15 நொருங்குண்ட -- | மத்தே 6=11 தா(ரும்) உறுதியான சொல் | 5. ஒரு மனம் : | |
| யாக் 5=17,18 எலியா, பாடுகளுள்ள | ரோம 15=32 போராடும்படி.. . | யாத் 30=34 சம நிறையாக | மத்தே 18=19 அப்போ 4=24–31 |
| 4. அல்பான்பிசின் (பாதுகாத்தல்) | வேண்டுதல் | | ஒரே மனமுள்ளவர்களாக |
| யோபு 42=8–10 சிநேகிதர்களுக்காக | மத்தே 6=10 எங்கள் கடனாளிக்கு. . | 6. ஆராதனை : | |
| | பிலிப் 1=11 துப்புரவாக | லேவி 2=1,2 போஜன பலியில் | லூக் 22=19,20 ஆராதனையில் |
| 5 சாம்பராணி (மேல் நோக்கிப் புகைதல்) | ஸ்தோத்திரம் | | ஸ்தோத்திரம் |
| தானி 6=10, 22, 23 பாதுகாப்புக்காக | மத் 16=13 உம்முடையதே. . . | 7. பரிகாரம் : | |
| சங் 50=23 இரட்சிப்பு – | ஸ்தோத்திரம் மறைந்து நிற்கிறது | எண் 16=6,7,17,18,46,47 பரிகரித்தல் | எபேசி 1–23 சபை |
| | II தெச 1=3 துதி | | 16 ஜெபம், 19 வேண்டுதல் |

குறிப்புகள் – தூப வர்க்கம் ஜெபத்தைக் காட்டுகிறது – தூப வர்க்கத்தில் நான்கு பொருள்கள் இருப்பது போல, ஜெபத்திலும் நான்கு பிரிவுகள் உண்டு. – தூப வர்க்கத்தை பயன்படுத்தும் முறைகள்; ஜெப வாழ்க்கையின் முறைமைகளைக் காட்டுகிறது.

## 22. ஆசாரிய ஊழியங்களும் (ஓய்வுநாளும்) (மல்கி 2 : 7, I சாமு 2 : 12-17 உத்திரவாதம்)

| முதலாம் உடன்படிக்கை | புதிய உடன்படிக்கை | ஒய்வு நாள் | அர்த்தங்கள் |
|---|---|---|---|
| யாத் 28=41 அபிசேகம் | II கொரி 1=22,23 | யாத் 20=11 கர்த்தர் ஒய்ந்திருந்தார் | எபி 4=9,10 மறுமை |
| பிரதிஷ்டை | எபி 9=18,–10=19,20 | லேவி 23=3 சபை கூடுதல் | இளைப்பாறுதல் |
| தீட்டுபடக்கூடாது | மத் 8=21,22 I தீமோ 5:22 | எண் 28=9,10 பலி செலுத்துதல் | கொலொ 2=16,17 கலாத் 3=11–13 மீட்பு |
| யாத் 29=1–14 லேவி 4=22–26 | I கொரி 15=3–6, மாற் 16=15,16 | லேவி 24=8–15 அப்பங்கள் | அப்போ 20=7 யோவா 20=1 |
| பாவ நிவர்த்தி செய்தல் | எபி 13=11–13 | அடுக்குதல் புசித்தல் | வாரத்தின் முதல் நாளில் புசித்தல் |
| லேவி 13=1–3,23 தீட்டுக் கண்டுபிடித்தல் | I கொரி 5=11, I யோவா 5=16 | யாத் 20=8–10 வேலை செய்யக் | |
| லேவி 23=10 முதற்பலன்களை வாங்குதல் | I கொரி 16=1,2 | கூடாது | |
| லேவி 27=2–8 பொருத்தனை, மதிப்பீடு | II கொரி 8=12–15 | யாத் 23=12 மிருகங்களும் | |
| யோசு 3=3 பெட்டியை சுமத்தல் | கலாத் 6=15–17 | யாத் 35=1–3 நெருப்பு மூட்டக்கூடாது | II தெச 3=10 சாப்பிடக்கூடாது |
| உபா 17=20 வேதத்தைப் போதித்தல் | மத்தே 28=20 | யாத் 16=23–30 மன்னா சேர்த்துக் | |
| I நாளா 6=10 ஆலயத் திருப்பணி | எபேசி 4=11–13 | கொடுத்தல் | |
| உபா 17=8,9 வழக்குத் தீர்த்தல் | I கொரி 6=1–4 | யாத் 31=13–15 கொலைசெய்யப்பட | லூக் 6=1–5 சீஷர்கள் |
| யோசு 6=4 எக்காளம் ஊதுதல் | I கொரி 14=8,9 | எண் 15=32–35 விறகு | கடைபிடிக்கவில்லை |
| எண் 26=1,2 யுத்த ஆயத்தம் | எபேசி 6=10–13 | பொறுக்கினவன் | 6–11 இயேசுவானவர் குணமாக்குதல் |
| எண் 31=11–13 கொள்ளைப் | I யோவா 4=1 | | லூக் 13=10–17 கூனி சுகமாகுதல் |
| பொருள்களை சோதித்தல் | | | லூக் 14=1–6 நீர் கோவை |
| II ராஜா 12=4,5 ஆலயத்தைப் | I கொரி 3=16,17 ரோம 12=1 | | வியாதியஸ்தன் |
| பழுதுபார்த்தல் | | | யோவா 5=10–16–38 வருச |
| II நாளா 26=18 தூபமிடல் | I தீமோ 2=1 வெளி 5=8 | | வியாதிக் காரன் |
| யாத் 27=21 குத்துவிளக்கு ஏற்றுதல் | II பேது 1=19 | | யோவா 9=14–16 குருடன் சுகமாகுதல் |
| லேவி 24=5–9 I சாமு 21=6 | I கொரி 11=23–25 | | மாற் 2=27,28 உண்டாக்கப்பட்டது |
| மேஜையின் அப்பம் புசித்தல் | | | |

குறிப்புகள் : ஒய்வுநாள் மறுமை இளைப்பாறுதலைக் காட்டுகிறது.

மறுமை இளைப்பாறுதலில் கூன், குருடு, நொண்டி, சப்பானி, குஷ்டம், வியாதி, பாவம், மரணம் இல்லை. எபி 4=1–11

# திருமறைக் களஞ்சியம்



தூப பீடம



குத்து விளக்கு



மேஜை



வாசஸ்தலம்

## 10. இயேசுவானவரின் வெளியரங்கமான வருகை!
## (பூமியில் நடைபெறும் சம்பவங்கள்!)

52 ஒலிவ மலைப் பிரவேசம் :

சகரி 14=1-6

- அப்போ 1=9-12 பரமேறுதல்

53 அழிவு :

சகரி 14=12-15 சதை உருகி அழிதல்

II தெச 1=7-10 அழிவாகிய தண்டனை

54 ஜாதிகளைப் பிரித்தல் :

மத்தே 24=30,31 தெரிந்து கொள்ளப்பட்ட

மத்தே 13=34-43 பயிர்கள், களைகள்

47-50 நல்லவைகள், ஆகாதவைகள்

மத்தே 25=32-34 வெள்ளாடுகள், செம்மறியாடுகள்

41-46 நீதிமான்கள் - சபிக்கப்பட்டவர்கள்

புலம்பல்

- வெளி 1=7 சகல கோத்திரத்தார்களும்

- சகரி 12=10,11 ஆதாத் ரிம்மோன் புலம்பலைப் போல

12 தாவீது குடும்பத்தார்

- நாத்தான் குடும்பத்தார்

13 லேவி குடும்பத்தார்

- சீமேயி குடும்பத்தார்

14 சகல குடும்பத்தார்

55 சிருஷ்டிகளின் விடுதலை :

ரோம 8=19-21 பிரசவ வேதனை

மத் 24=29 உபத்திரவம் முடிந்தவுடன்

ஏசா 13=13 பூமி இடப் பெயர்ச்சி

ஏசா 34=1-4 வானம் அகற்றப்படல்

ஏசா 30=25,26 சூரியனின் ஏழத்தனைப் பிரகாசம்

ஏசா 24=23 சந்திரனின் நானம்

56 மறுமை :

ஏசா 49=8-13 வெளி 7=13-17 இளைப்பாறுதல்

- இஸ்ரவேலர்கள் குடிமக்களாக இருப்பார்கள்

- சபையார் மூன்று வகுப்பினராக இருப்பார்கள்

1. ஆசாரியர்கள் : வெளி 3=4,12, வெண் வஸ்திரம், தேவாலயத் தூண்கள்
2. ராஜாக்கள் : வெளி 2;10,26,27-3=11,21 கிரீடம், இருப்புக்கோல், - அதிகாரம், சிங்காசனம்.
3. குடிமக்கள் : வெளி 2=7-17, மன்னா, ஜீவவிருட்சகனி, வெண்குறிகல்.

முன் அடையாளங்கள்

மத் 14=21-5000 பேர் போசிப்பு - (பசியில்லை)

யோவா 2=7-10 தண்ணீர் திராட்சரசமாக (தாகம், துக்கமில்லை)

மத்தே 9=1,2 பாவ மன்னிப்பு (பாவமில்லை)

யோவா 5=5-8-38 வருச வியாதிக்காரன் சுகமடைதல் (வியாதியில்லை)

லூக் 7=14,15 வாலிபன் எழுந்திருக்குதல் (சாவு இல்லை)

மாற் 5=8-13 லேகியோன் விடுதலை (பிசாசு இல்லை)

லூக் 13=11-16 கூனி விடுதலை (இளைப்பாறுதல்)

- தொடரும்

© C.B.P. - PUBLISHED BY :
S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX"
THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

# 11. சுக போக தேசம்

ஆதிசேடன் மிஸ்ராயீம் தேசத்தாரோடு யுத்தம் செய்து, அதை கைப் பற்றியவுடன், அதற்கு சுகபோக தேசம் என்று பெயரிட்டான். இத்தேசத்தை பன்னிரு பட்டணங்களாகப் பிரித்து தன் குமாரர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்தான். ஆதிசேடன் மட்டும் தனக்காக இருளின் ஆழத்தில் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு வலுசர்ப்பப் பட்டணம் என்று தன் பேறுடைய நாமத்தை அதற்கு சூட்டி, தானும் தன் பெஞ்சாதிகளும், தன் சேனைகளுமாக சேர்ந்து அங்கு குடியிருந்தான்.

சுக போக தேசத்தின் சகல அதிகாரங்களும், அதன் அலுவலகங்களும் அங்குதான் இருந்தது. அந்த பன்னிரு பட்டணங்களாவன: முதலாவது ஆதிகோட பிரபுவின் ஆதிக்கத்தில் மாயத் தோற்றப் பட்டணம் இருந்தது. இரண்டாவது: மாயவித்தை பிரபு ஆதிக்கத்தில், காமிச்சை நோக்காடு பட்டணம் இருந்தது. மூன்றாவது: மாந்தீரீக பிரபு ஆதிக்கத்தில் பூதல மயக்கப் பட்டணம் இருந்தது. நாலாவது: ஒளிவேஷ பிரபு ஆதிக்கத்தில் பாவ கக்குவான் பட்டணம் இருந்தது. ஐந்தாவது: குறிகார பிரபு ஆதிக்கத்தில் வரட்டு வாதப் பட்டணம் இருந்தது. ஆறாவது: பூதல அரக்க பிரபு ஆதிக்கத்தில் மதிகெட்ட நோக்காடு பட்டணம் இருந்தது. ஏழாவது: அப்பொல்லியோன் பிரபு ஆதிக்கத்தில் வஞ்சக சாக்காடு பட்டணம் இருந்தது. எட்டாவது: நாச பூத பிரபு ஆதிக்கத்தில் முரட்டாட்டப் பட்டணம் இருந்தது. ஒன்பதாவது: வேதாள ராட்சச பிரபு ஆதிக்கத்தில் ஆணவப்பட்டணம் இருந்தது. பத்தாவது: லேகியான் பிரபு ஆதிக்கத்தில் சித்த பிரமை பட்டணம் இருந்தது. பதினொறாவது: கள்ளத் தீர்க்கப் பிரபு ஆதிக்கத்தில் மடியன் பட்டணம் இருந்தது. பன்னிரண்டாவது: சாபத்தீட பிரபு ஆதிக்கத்தில் குடி நாற்றப் பட்டணம் இருந்தது. இந்த சுகபோக தேசத்தின் இப்பன்னிரு பட்டணங்களும் வசதியுள்ள பட்டணங்களாகவும், பாழ்க் கடிப்புக்கு ஏதுக்களாகவும் இருந்தன. எப்படியெனில்,

மாயத் தோற்றப் பட்டணத்தில், பிம்ப அர்ச்சனைகளும், பில்லி சூன்யங்களும், மந்திர ஜாலம், இந்திர ஜாலம், மாயா ஜாலம், செப்படி வித்தை, ஸ்தம்பன வித்தை, அஞ்சனம் பார்த்தல் குறி சொல்லுதலாகிய சாத்திரம், சூத்திரம் நிறைந்தவைகளாயிருந்தன.

காமிச்சை நோக்கோடு பட்டணத்தில், பழஞ்சாக்கடைகளும், உளைச் சேறும் நிறைந்ததாகும். இங்கு விபிசாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், அவலட்சணம், அருவருப்பு, காமக்களியாட்டு, பலவித இச்சை ரோகங்கள் ஆகியவைகள் நிறைந்த பட்டணமாகும்.

பூதல மயக்கப் பட்டணத்தில் பற்பல அரங்குகள் கட்டியுள்ளனர் அங்கு பேசபேலின் திரைகளில் ஒளிச்சித்திரப் படங்களைக் காட்டுவார்கள். வீட்டுக்கு வீடு, மூலைக்கு மூலை தூர தர்சன தாகோன் பெட்டிகளை வைத்துக் கொண்டு நரர்கள் இராவும் பகலும் கும்மாளமிடுவார்கள். மேலும் செவிக் குடையும் நார சார சத்த ஒலி பெருக்கி சாதனங்களும், அசுத்த முனு முனுக்கி இசைத்தட்டுகளும், பாகவத கீதா நாறு பெட்டிகளும், பொட்டுகளும், லொசுக்குகளும், ஆங்காரமும், ஓங்காரமுமாக எப்போதும், இடைவிடாமல் அல்லோகோலப்பட்டுக் கொண்டிருக்கும்.

பாவ கக்குவான் பட்டணத்தில் பெருந்தீனியர்களும், பொடித் தூனியர்களும், எச்சில் பொறுக்கிகளுக்கும் பெயர் போன இடமாகும். மேலும் இங்கு பற்பல பலகாரங்கள் செய்து எல்லா பட்டணங்களுக்கும் அனுப்பும் வியாபார ஸ்தலமாகவும் இருந்தது. இப்பட்டணத்தில் உள்ள பல பெயர் பெற்ற அங்காடிகளையும், அதன் உணவுகளையும் பார்த்தால் இது போல எந்த தேசத்திலும் இருந்ததில்லை என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம். இதன் அங்காடிகளாவன: மனக்கஞ்சன் அங்காடி இங்கு வரட்டு வாத ரொட்டிகள் தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

குன ஊசனன் அங்காடி : இங்கே பலவித பாவப் பலகாரங்கள் கிடைக்கின்றன

கள்ள நாவழுகினன் அங்காடி : இங்கே மாய்மால ஊத்துப் பழங்கள் கிடைக்கின்றன

பொய் வாய் புழு புழுத்தன் அங்காடி : இங்கு அடங்காத பச்சைப் பிள்ளை பாயசம் கிடைக்கும்.

செவி கொடா ஊளக்காத்தான் அங்காடி : இங்கு பின்மாற்ற பிசுபிசுத்த மிட்டாய்கள் கிடைக்கும்

அடங்கா வயிற்றுப் போக்கன் அங்காடி : இங்கு திருட்டெலிகளின் வால் சூப்பு கிடைக்கும்

தலை வணங்கா மர மண்டையன் அங்காடி : இங்கு பொதி கழுதையின் பொரியல் கிடைக்கும்.

அந்தி மந்தார கபோதியன் அங்காடி : இங்கு புழு புழுத்த பயற்றங்காய் கிடைக்கும்

திருவாக்கில்லா ஊமையன் அங்காடி : இங்கு கன்னா பின்னா கறிக்கு மிட்டாய் கிடைக்கும்

காமிய கருப்பன் அங்காடி : இங்கு சொறி நாய் இறைச்சி கிடைக்கும்

மதிகெட்ட வெறி மயக்கன் அங்காடி : இங்கு நாற்றப்பழச்சாறு கிடைக்கும்.

சொரனை கெட்ட மடியன் அங்காடி : இங்கு ஊசல் உணவுகள் கிடைக்கும்.

இவ்விதமாக பற்பல ருசியுள்ள பட்சணங்களாக செய்து, பட்டணங்கள் தோறும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

வரட்டுவாதப் பட்டணத்தில் பல வித பொழுது போக்கு மண்டபங்கள் கட்டப்பட்டிருந்தன. அவைகளாவன: சோம்பன் மண்டபம், மடியன் மண்டபம், குசும்பன் மண்டபம், இடும்பன் மண்டபம், வம்பன் மண்டபம், குடியன் மண்டபம், தொத்தன் மண்டபம், கூலன் மண்டபம், குறுக்கன் மண்டபம், ஆகியவனவாகும். இங்கு வாயாடியன், வீணரட்டையன், வெட்டிப் பேச்சான், வம்பளத்தான், நாவடக்கான், தொன தொனப்பன், பல்லிளிச்சான், திண்ண தூங்கியன், உளருவாயன், கோல்பிரியன் ஆகியோர் தங்கள் தங்கள் சகாக்களோடு கூடி, வாக்குவாத சொற்பொழிவு, புறங்கூறும் சொற்பொழிவு திட்டிக் குமிச்சான் சொற்பொழிவு வரட்டுவாத சொற்பொழிவு இப்படி பற்பல பிரசித்த பெற்ற சொற்பொழிவுகள் நடத்தி பேரும், புகழும் பெற்றிருந்தனர்.

மதிகெட்ட நோக்காடுப் பட்டணத்தில் நரர்கள் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் வஞ்சித்து, ஏமாற்றி, பற்பல தந்திரங்கள் செய்து, கொள்வினையும், கொடுப்பினையும் நடத்தினர். மேலும் கொடுக்கலும், வாங்கலும், இடித்தலும், கட்டுதலும், நட்டலும், பிடுங்குதலும் விற்றலும், கொள்ளுதலும், புசித்தலும், குடித்தலுமாகிய இவைகளையே பிரதானமாக வைத்து வாழ்க்கை நடத்தினர்.

வஞ்சக சாக்காடு பட்டணத்தில் திருடுதலும், அபகரித்தலும் மறைத்தலும், வழிப்பறி செய்தலும், கொள்ளையடித்தலும், கொலை செய்தலுமான காரியங்களையே பிரதானமாக வைத்து வாழ்க்கை நடத்தினர்.

முரட்டாட்ட பட்டணத்தில், மதா பேதங்களும், நானாவித கட்சிகளும், கட்டுக்கதைகளும், பகைகளும், விரோதங்களும், சண்டைகளும், வெறிகளும், கொலைகளும், ஆர்ப்பாட்டங்களும், வெறியாட்டங்களும், கூத்தாட்டங்களும் நிறைந்திருந்தன.

ஆனைவப் பட்டணத்தில் வேதாள ராட்சசனுடைய ஏவலாட்களின் அதிகார துர்பிரயோகமும், கைக்கூலி வாங்குதலும், மேட்டிமை, பெருமை, அகங்காரம், மிரட்டல், உருட்டல், புரட்டல், சுருட்டுதல் போன்றவைகள் நிறைந்ததாகும்.

சித்த பிரமை பட்டணத்தில் பைத்தியங்களும், கிறுக்குகளும் நிறைந்து, ஆடம்பரமும், ஊதாரித்தனமும் செய்து, தங்களுக்குள்ளே விநோதமான வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, கந்தலும், கதக்கலுமாக மினிக்கிக் கொண்டு திரிவார்கள். இங்கு அடிக்கடி பொம்மலாட்டம் ஒயிலாட்டம், குமிலாட்டம், குரங்காட்டம், பொய்கால் பரியாட்டம், கோமாளியாட்டம், பக்கிரியாட்டம், பரதாட்டம், களியாட்டம் எனக் கூத்தாடுவார்கள்.

மடியன் பட்டணத்தில் சோம்பனும், சொறியனும், மடியனும், அழுக்கனும், புழுக்கனும், குப்பையனும், கூனனும், அசுத்தனும், ஊளையனும், கந்தையனும், கதக்கனும், பொருக்கனும் இவர்களுடைய சகாக்கள் யாவரும் பகலில் தூங்கி இரவில் அங்குள்ள குப்பைகளை நோண்டிக் கொண்டிருப்பார்கள்.

குடி நாற்றப் பட்டணத்தில் குடியனும், மயக்கனும், வெறியனும், பித்தனும், பேயனும் நாற்றனும், சாக்கடையனும், லாகிரியனும், இரவும் பகலும் தங்களுடைய சகாக்களோடு கூச்சலிட்டு வெறியாட்டம் ஆடுவா.

இப்பன்னிரு பட்டணங்களிலும் நரர்கள் வியாதிப்படும் பொழுது அவர்கள் சீயோன் மலையில் உள்ள மெய்ஞான வைத்திய சாலைக்கு வரும்படி, சீயோன் மலையரசர் அருள் கூர்ந்த செய்திகளை கேள்விப்பட்ட சுகபோக தேசத்தார். அங்கு புறப்பட்டுப் போகும் பொழுது, தங்களின் கொடிய வியாதிகளின் கொடுமைகளினாலே வழியிலே மரிக்கும்படி நேரிட்டது. இவைகளை அறிந்த சீயோன் மலையரசர் அவசர சிகிச்சைக்கான கிளை வைத்திய சாலைகளை வழி நெடுகிலும் ஏற்படுத்தியிருந்தார்.

தொடரும்

## நித்திய ஜீவன்

### 11 மறுமை ஆளுகை (வாக்குத் தத்தங்கள்)

57. நீதியுள்ள ஆளுகை !

லேவி 19=15 முகதாட்சண்யம் இல்லாமல்
உபா 16=18,19 பரிதானம் வாங்காமல்
உபா 17=18-20 வசனத்தின் படி
நீதி 16=12 நீதியாக
நீதி 20=28 தயவு

58 தாவீதுக்கு !

சங் 89=35,36 வானங்கள் உள்ளவரை

59 இஸ்ரவேலுக்கு !

ஏசா 9=6,7 தாவீதின் சிங்காசனத்தில்
ஏசா 16=5 கிருபையும், நீதியும்
எரேமி 23=5,6 நீதியுள்ள

60 கிறிஸ்துவுக்கு !

சங் 2=6-8 அபிசேகம்
சங் 45:6-8 நீதியை விரும்பி
ஆளுகை
- மத்தே 25=31 மகிமையின் சிங்காசனத்தில்
- வெளி 11=15 கிறிஸ்துவுக்குரியவைகளாயின
- வெளி 20=1-4 ஆயிர வருசங்கள் ஆளுகை

61. அப்போஸ்தலர்களுக்கு

மத்தே 19=28 மறு ஜென்ம காலத்தில்
லூக் 22=29,30 சிங்காசனங்களில்

62 சபைக்கு :

I கொரி 6:1-3 பரிசுத்தவான்கள்
வெளி 2:10 கிரீடம்
26-28 இருப்புக் கோல் ஆளுகை
வெளி 3=21 சிங்காசனத்தில்

63 வசன உவமைகள் :

மத்தே 3=12 மணிகள் களஞ்சியத்தில்
மத்தே 13=47-50 மீன்கள் கூடையில்
மத்தே 22=1-12 வஸ்திரம் தரித்தவன் விருந்தில்
மத்தே 25=1-12 ஐந்து கன்னிகைகள் வீட்டிற்குள்

தொடரும்.

23 பிரதான ஆசாரியனும் கிறிஸ்துவும் (ஆசாரியத்துவம் எபி 9=4,16,17)

| பழைய உடன்படிக்கை | புதிய உடன்படிக்கை | பிரதான ஆசாரியர்கள் | இயேசுவானவர் |
|---|---|---|---|
| 1. மாமிச சம்பந்தமான பலிகள்: ஆடு, மாடு, பறவைகளாகும். | புதிய உடன்படிக்கையின் பலி : இயேசுவானவர் ஆவிக்குரிய பலி என்பது : இராபோஜன ஆராதனை ஒழுங்குகளாகும். | 1. எபி 8 = 3 பலி செலுத்தும் படி ஆசாரியர்கள் நியமிக்கப்படுதல் | எபி 7 = 27 இயேசுவானவர் தம்மையே பலி செலுத்தும் ஆசாரியர் |
| 2. பிரதான ஆசாரியனுடைய பிள்ளைகள் அன்றாடக பலி முறைமைகளை நிறைவேற்றுவது போல, | மகா பிரதான ஆசாரியராகிய இயேசுவான வரின் பிள்ளைகள் ஆசாரியர்களாக இருந்து ஆவிக்குரிய பலிகள் செலுத்த வேண்டும். | 2. எபி 10 1–4 பலிகள் பாவ நிவர்த்தி செய்யாததால் தொடர்ந்து பலி செலுத்தப் பட்டது | எபி 10 = 10 இயேசுவானவர் ஒரே தரம் பலியிடபட்டு, பாவ நிவர்த்தி ஏற்பட்டதால் பலிகளெல்லாம் நிறுத்தப்பட்டது. |
| 3. பாவம் உண்டென்று நினைவு கூறும் ஆராதனை முறைமைகள் (எபி10=1–9) | பாவம் நிவர்த்தியானது என்று நினைவு கூறும் ஆராதனை முறைமைகள் (I கொரி 11 = 27 – 32) | 3. எபி 9 = 25 அந்நிய இரத்தங்களை கொண்டு செல்லும் ஆசாரியர்கள் | எபி 9 = 12 இயேசுவானவர் தம் சொந்த இரத்தம் கொண்டு செல்லும் ஆசாரியர் |
| 4. ஒழுங்கற்று ஆராதனை செய்தவர்கள் உடனுக்குடன் தண்டிக்கப்பட்டார்கள் (லேவி 10 = 1 – 7) | ஒழுங்கற்று ஆராதனை செய்கிறவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில்த் தண்டிக்கப்படு வார்கள். 1 கொரி 11 = 27 – 37 | 4. எபி 7 = 16 மாம்ச சம்பந்தமான ஆசாரியர்கள் | எபி 7 = 17 இயேசுவானவர் ஆவிக்குரிய ஆசாரியர் |
| 5. பலி முறைமைகளைக் கொண்டு ஆராதனை நடத்திய நியாயப்பிரமாண சபை பூமிக்குரியது. (எபி 12=18–21) | ஆவிக்குரிய ஆராதனை நடத்தும் விசுவாசிகளுடைய சபையானது பரலோகத் திற்குரியது. (எபி 12 = 22 – 29) | 5. எபி 9 = 6,7 பூமிக்குரிய ஆசாரியர்கள் | எபி 8 = 1 – 4 இயேசுவானவர் பரலோகத்திற்குரிய ஆசாரியர் |
| 6. பழைய உடன்படிக்கையின் ஆராதனை முறைமைகள் குறிப்பிட்ட இடத்தில் தான் செய்ய முடியும். | புதிய உடன்படிக்கையின் ஆராதனை முறைமைகள் எல்லா இடத்திலும் செய்யலாம். | 6. எபி 9 = 18 – 20 பழைய உடன்படிக்கை கொஞ்ச காலத்திற்குரியது. | எபி 13 = 20 புதிய உடன்படிக்கை நித்தியமானது. மாற்ற முடியாதது. |
| 7 பலி முறைமைகளான ஆராதனைகள் இயேசுவானவர் முதல் வருகை மட்டும் நடந்தது போல. | ஆவிக்குரிய பலி முறைமைகளான இராபோஜன ஆராதனை முறைமைகள் இயேசுவானவரின் இரண்டாம் வருகை மட்டும் நடைபெற வேண்டும். | 7. எபி 7 = 11 – 12 = 23 மரணத்தினால் ஆசாரியர்கள் மாற்றப்படுதல் | எபி 8 = 1–4 – 4 =14–16 இயேசுவானவர் மரணமில்லாத ஆசாரியர். |
| | | குறிப்புகள் :<br>நியாயப்பிரமாண பலி முறைமைகள் ; உடன்படிக்கைகள், ஆசாரியத்துவம், தேவனுடைய வாசஸ்தல பணி முட்டுகள் : அதன் ஆராதனை முறைமைகள் யாவும் கிறிஸ்துவையேக் காட்டுகிறது. | |

24 பிரதான ஆசாரியனின் வஸ்திரங்கள் :

| வஸ்திரங்கள் | அர்த்தங்கள் | வஸ்திரங்கள் | அர்த்தங்கள் | வஸ்திரங்கள் | அர்த்தங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. சணல் வஸ்திரங்கள்<br>லேவி 16=4,5. யாத் 28=42 அங்கி, சல்லடம், பாகை, இடைக்கச்சை (பாவ நிவாரண நாளில்)<br>லேவி 6=9–11 சர்வாங்க தகனபலி (சாம்பல் எடுக்கும் போது) | தாழ்மைப்படுதல்<br>வெறுமையாக்குதல்<br>பிலிப் 2;6–8 | 5. கோமேதகக் கல் :<br>யாத் 28=9–12 இரண்டு தோள்களில் இஸ்ரவேல் புத்திரர்களின் நாமங்களை ஞாபகக்குறியாக (இரண்டு வரிசையாக) | மத் 10=6 நினைவுகூர்தல் | 9. பாகை<br>யாத் 28=39 பஞ்சுநூலில்<br>லேவி 21=10 எடுக்கக் கூடாது | மத் 26=62–65 ஊழியம முடிதல்<br>எபி 7=17,20,22,24 கிறிஸ்து |
| 2. உள்ளங்கி :<br>யாத் 28=39 மெல்லிய பஞ்சு நூலில் | எபி 7=26 உள்ளான பரிசுத்தம் | 6. மார்ப்பதக்கம் :<br>யாத் 28=15 ஐந்து வித நூல்களில் (தேவ, மனிதத்தன்மை)<br>16 சதுரமாக – பரிபூரணம்<br>17 நாலுபத்திகளாக<br>பதுமராகம் – புஷ்பராகம் – மாணிக்கம்<br>18 மரகதம் – இந்திரநீலம் – வச்சிரம்<br>19 கெம்பு – வைடூரியம் – சுகந்தி<br>20 படிகப்பச்சை – கோமேதகம் – யஸ்பி | | 10. நெற்றிப் பட்டம் :<br>யாத் 28 = 36 முத்திரை வெட்டு<br>37. பாகையில்<br>38. நெற்றியில் | மத் 3=16 எபி 10=5–9 பிரதிஷ்டை செய்தல்<br>எபேசி 1=23 எபி 2=9 |
| 3. வெளியான நீல அங்கி (அல்லது) ஏபோத்தின் கீழ் அங்கி :<br>யாத் 28=31 இள நீல நூலினால். . .<br>32–34 மாதுளம் பழங்கள் மணிகளின் சத்தம் | எபி4=14 மகிமை<br>கலாத் 5=22,23 யோவா 13=1, ஆவிக்குரிய கனிகள்<br>எபி 9=28, I தெச 4=16 எக்காள சத்தம் | 21. இஸ்ரவேல் புத்திர்களின் நாமங்களை தேவ சந்நிதியில் நினைவு கூர்தல் | எபேசி 2=12–18 ரோம 8=34, I யோவா 2=1 | ஆசாரிய வஸ்திரங்கள் :<br>11. அங்கிகள்<br>யாத் 28 = 40<br>12. இடைக்கச்சைகள் :<br>13. குல்லாக்கள் : | ஏசா61 = 10. எபேசி 6 = 14<br>கலாத் 3 : 27 – 5 22, 23<br>இரட்சிப்பின் வஸ்திரங்கள்<br>எபேசி 6 = 14 சத்தியம்<br>எபேசி 6 = 17 தலைச்சீரா |
| 4. ஏபோத்து (மேல்வர்ண அங்கி)<br>யாத் 25=58 பொன் நூல்<br>நீல நூல்<br>இரத்ததாம்பரநூல்<br>வெண்மை நூல்<br>சிகப்பு நூல் | தேவ ஆவியானவரின் மகிமை<br>மகிமை – தேவகுமாரன்<br>இராஜரீகம் – இராஜா<br>பரிசுத்தம் – ஆசாரியர்<br>இரட்சண்யம் மனுஷகுமரன் | 7. ஊரீம் தும்மீம்<br>யாத் 28=30<br>மார்பதக்கத்திலே<br>எண் 27=21<br>ஆலோசனை கேட்டல்<br>நடத்துதலை அறிவதற்காக<br>8. இடைக்கச்சை<br>யாத் 28 4, 39 சித்திர தையல் வேலை | II தீமோ 3=16,17 வேத வசனம்<br>ரோம 8=14–16 பரிசுத்த ஆவியானவர்<br>ஏசா 11=5 சத்தியம் | குறிப்புகள் :<br>பிரதான ஆசாரியன் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாக இருக்கிறான்<br>பிரதான ஆசாரியனின் வஸ்திரங்கள்: கிறிஸ்துவின் தன்மைகளைக் காட்டுகிறது. | |

# 25 இஸ்ரவேல் பாளையம்

**2 தங்குகிற ஒழுங்கு**

எண்ணா 1:52,- 2:1-16 ஆசரிப்புக் கூடாரத்தை சுற்றிலும் பாளையம் இறங்குவதற்கு 25 மைல் சுற்றளவு வேண்டும்

கிழக்கு: யூதா - இசக்கார் - செபுலோன்
தெற்கு: ரூபன் - சிமியோன் - கத்
மேற்கு: எப்ராயீம் - மனாசே - பென்யமீன்
வடக்கு: தாண் - ஆசேர் - நப்தலி

**3 தேவனோடுள்ள ஐக்கியம்**
எண்ணா 10:34, பிரசன்னம்

**4 அடைக்கல ஜீவியம்**
யாத் 16:13,14 உணவுக்காக கர்த்தரையே சார்ந்திருக்குதல்

**5 பரிசுத்தமான வாழ்க்கை**
உபா 23:14 பிரசன்னம்
எண்ணா 5:2 லேவி 13:46 சுத்திகரிப்பு

**6 பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள்**
எண் 23:9-14 ஜாதிகளோடு கலவாமை

**7 பரதேச வாழ்க்கை**
எண் 33:1-38 நாற்பது வருட பயணத்தில் நாற்பது தடவை பாளையமிறங்குதல்

**8 விசுவாச வாழ்க்கை**
லேவி 20:24 பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு பயணம்




1 எண் 10:1-33 பிரயாண அணிவகுப்பு

## இஸ்ரவேல் கோத்திர பிரயாண அணி வகுப்பு

### ஏறக்குறைய 20 லட்ச ஜனங்களின் அணிவகுப்பு




9 எகிப்திலிருந்து புறப்பட்ட சந்ததி அழிவுக்குப்பின் உள்ள சந்ததி

| | | | | |
|---|---|---|---|---|
| எண் 1:21 | ரூபன் | 46,500 | 43730 | எண் 26=7 |
| 23 | சிமியோன் | 59,300 | 22,200 | 14 |
| 25 | காத் | 45,650 | 40.500 | 18 |
| 27 | யூதா | 74,600 | 76,500 | 22 |
| 29 | இசக்கார் | 54,400 | 64,300 | 25 |
| 31 | செபுலோன் | 57,400 | 60,500 | 27 |
| 33 | எப்ராயீம் | 40,500 | 32,500 | 36 |
| 35 | மனாசே | 32,200 | 52,700 | 34 |
| 37 | பென்யமீன் | 35,400 | 45,600 | 41 |
| 39, | தாண் | 62,700 | 64,400 | 43 |
| 41 | ஆசேர் | 41,500 | 53.400 | 47 |
| 43 | நப்தலி | 53,400 | 45,400 | 50 |
| 46 | மொத்தம் | 603,550 | 601,730 | 51 |



© C.B.P. - PUBLISHED BY S. SAKTHI DEVADOSS 145/E, 'T.M. COMPLEX' THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR PO. TRICHY 620 013



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

# மெய்ஞான வைத்திய சாலை

## 12. கிளை வைத்திய சாலைகள்

சுகபோக தேசத்திலிருந்து உரு சாலேம் பட்டணத்திலுள்ள மெய்ஞான வைத்திய சாலைக்குப் போய் சேருவதற்கு ஏறக்குறைய முந்நூறு காத தூரத்திற்கு மேற்பட்டதாயிருந்தது. அங்கிருந்து வருகிற கொடிய வியாதியஸ்தர்கள் வழியிலே மரித்துப் போகிறார்கள் என்று அறிந்த சீயோன் மலையரசர்; அவர்களுடைய ஜீவனுக்கு மோசம் வராதபடி, வழி நெடுகிலும் நாற்பது காத தூரத்திற்கு ஒரு வைத்தியசாலை வீதமாக எட்டு கிளை வைத்திய சாலைகளை நிறுவும்படி தமது அளவற்ற இரக்கத்தின் பேரில் கட்டளையிட்டார். அதன்படி நிறுவப்பட்ட வைத்திய சாலைகளாவன. சுகபோக தேசத்தைக் கடந்து செங்கடல் கரையோரமாக வந்தவுடன் அங்கு தலைமையாக இரட்சா உபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. அதற்கு தேவாட்டுக்குட்டி சித்தர் வைத்தியராகவும், நல்பிரசித்தனும், மெய் பிரஸ்தாபனும் பணி விடைக்காரர்களாக இருந்தனர்.

செங்கடலைக் கடந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் மாராவில் கசப்பு உபதேச வைத்திய சாலை நிறுவப்பட்டது. அதற்கு ஜீவாலய சித்தர் வைத்தியராகவும் அவருக்கு பணிவிடைக்காரர்களாக சுயம் வெறுப்போனும், நருங்குண்டானும் இருந்தனர்.

அங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன், ஏலீமில் மூல உபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. அதற்கு ஜீவ அப்ப சித்தர் வைத்தியராகவும், அவருக்கு பணிவிடைக்காரர்களாக பக்தி வைராக்கியனும், பக்தி விருத்தியனும் இருந்தனர்.

அங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் ரெவிதீமில் ஜீவதண்ணீர் வைத்தியசாலை நிறுவப்பட்டது. அதற்கு ஞானகன்மலை சித்தர் வைத்தியராகவும், அவருக்கு பணிவிடைக்காரர்களாக பட்சதாபனும், நல் எத்தனனும் இருந்தனர்.

அங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் ஓரேபில் ஜீவனுபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. அதற்கு ஜீவவழி சித்தர் வைத்திராகவும், அவருக்குப் பணிவிடைக்காரர்களாக நியாயப் பிரமாணனும், ஜீவவாக்கியனும் இருந்தனர்.

அங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் கிப்ரோத் அத்தாவாவில், கடின உபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. அதற்கு நல்லாய சித்தர் வைத்தியராகவும் தெளிந்த புத்தியனும், மனசாட்சியனும் பணிவிடைக்காரர்களாக இருந்தனர்.

அங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன், காதேஸ் பர்னேயாவில் பின்மாற்ற உபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. இங்கு ஜீவகனி சித்தர் வைத்தியராகவும் அவருக்கு பணிவிடைக்காரர்களாக மெய்மனஸ்தாபனும், நிறைகுணத்தானும் இருந்தனர். இந்த காதேஸ் பர்னேயாவில் தான் சண்டை மூட்டுதல் தண்ணீர் இருக்கிறது. இங்கு வருகிற வியாதியஸ்தர்களுக்கு இந்த தண்ணீர் குடிப்பதற்கு ஒவ்வாதபடியினால் இங்கேயே அநேக வியாதியஸ்தர்கள் செத்துப் போகின்றனர். தாம் அங்கு செத்துப் போவோம் என்று அறிந்த சில வியாதியஸ்தர்கள்; அங்கே அருகிலுள்ள ஓர், அபாரீம் ஆகிய பர்வதங்களில் நின்று சீயோன் மலையரசரின் மெய் ஞான வைத்தியசாலை தூரமாக கட்டப்பட்டிருப்பதை கண்குளிர கண்ட பின்பு, அவர்களும் அங்கேயே செத்துப் போகின்றனர். இந்த இடத்தில் தப்பிப் பிழைத்தவர்கள் தான் அடுத்த வைத்தியசாலை வந்து சேருகின்றனர்.

காதேஸ் பர்னேயாவிலிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் கில்காலில் நல்லுபதேச வைத்தியசாலை நிறுவப்பட்டது. இதற்கு ஜீவஒளி சித்தர் வைத்தியராகவும், அவருக்கு பணிவிடைக்காரர்களாக பட்ச முனையானும், பாரமரிப்போனும் இருந்தனர். இங்கிருந்து நாற்பது காத தூரம் சென்றவுடன் ஜீவ இரட்சனை வைத்தியசாலையும், மெய்ஞான வைத்திய சாலையும் வந்து சேரும்

தொடரும்

## நித்திய ஜீவன்

### 12. மறுமை ஆளுகை (நியாயத்தீர்ப்பு)

**64. வசன அறிவிப்பு :**

சங்கீ 96 = 13 நீதியோடும், சத்தியத்தோடும்
சங்கீ 98 = 9 நிதானத்தோடு (வழக்காட சமயம் கொடுத்தல்)

**65. இயேசுவானவரின் அறிவிப்பு :**

யோவா 12 = 47, 48 வசனமே
யோவா 9 = 39 நியாயத்தீர்ப்புக்கு
யோவா 3 = 17, 18 உட்பட்டாயிற்று
யோவா 12 = 31 இப்பொழுதே
லூக் 19 = 12, 14, 27 சத்துருக்களை

**66. அப்போஸ்தலர் அறிவிப்பு :**

அப்போ 17 = 30, 31 பூலோகத்தை நீதியாக
II தீமோ 4 = 1 மரித்தோரையும், உயிருள்ளோரையும்
I பேது 4 = 5,6 கணக்கு ஒப்புவித்தல்

**67. பரிசுத்த ஆவியானவர் அறிவிப்பு :**

யோவா 16 = 8 – 11 நியாயத்தீர்ப்பைக்
எபி 10 = 29 கொடிதான ஆக்கினை
II பேது 2 = 1 – 3 மறுதலித்தல்
மத்தே 12 = 32 மன்னிப்பில்லை

**68. பாவத்தின் பிரத்தியட்சம் :**

எபி 9 = 27, 28 மரித்த பின்பு
மத் 12 = 36 வார்த்தைகளைக் குறித்து
பிரச 3 = 17 எண்ணங்கள், செய்கைகளைக் குறித்து
ரோம 2 = 16 அந்தரங்கங்களைக் குறித்து

**69. சாட்சிகள் :**

மாற் 6 = 11 தூசியை
சங் 50 = 4 வானத்தையும் பூமியையும்
II பேது 3 = 7 பக்தியில்லாதவர்கள்
பிலிப் 2 = 10, 11 முழங்கால் யாவும் முடங்கும்

**70. பிசாசுகளுக்கு ஆக்கினை :**

யூதா = 6 மகாநாளின் (வெள்ளை சிங்காசனத்திற்கு)
II பேது 2 = 4 – 9 நரகத்தில்
ஏசா 24 = 21 – 23 உன்னதத்தில் விசாரிப்பு
வெளி 20 = 11 – 15 அக்கினிக் கடலில்

7 இஸ்ரவேலரின் காணான் தேச பிரயாண விபரங்கள் : (யாத்திராகமம் – எண்ணாகமம்)

| வசனங்கள் | ஊர்கள் | சம்பவங்கள் | வசனங்கள் | வாதைகள் – சாவுகள் |
|---|---|---|---|---|
| எண் 33=1–4 | ராம சேசிலிருந்து புறப்படுதல் | தலைச்சன்கள் | யாத் 12=29,30 | தலைச்சன்கள் அடக்கம் |
| 5 | சுக்கோத் | சங்காரம் | | |
| 6 | ஏத்தாம் | | | |
| 7 | மிக்தோல் | | | |
| | ஈரோத் | செங்கடல் பிரிதல் | யாத் 14=1–31 | எகிப்தியர்கள் கடலில் அமிழ்ந்து சாவு |
| | | இஸ்ரவேல் பாடல் | யாத் 15=1–21 | |
| 8 | மாரா | கசப்பு நீர் மதுரமாகுதல் | யாத் 15=22–26 | |
| 9 | ஏலீம் | பன்னிரு நீரூற்றுகள் | யாத் 15=27 | |
| | | 70 பேரீச்ச மரங்கள் | | |
| 10 | சிவந்த சமுத்திரம் அருகே | | | |
| 11 | சீன்வனாந்திரம் | உணவுக்காக முறுமுறுப்பு | யாத் 16=1–36 | |
| | | மன்னா கிடைத்தல் | | |
| 12 | தொப்கா | | | |
| 13 | ஆலூஸ் | | | |
| 14 | ரெவிதீம் | தண்ணீருக்காக முறுமுறுத்தல் | யாத் 17=1–7 | |
| | | அமலேக்கியரின் யுத்தம் | 8–16 | |
| | | மோசேயின்மாமன் | யாத் 18=1–27 | |
| 15 | சீனாய் வனாந்திரம் சீனாய் மலை | (தேவ) அக்கினி பிரசன்னம் | | |
| | | பத்துக்கட்டளைகள் | | |
| | | நியாயப்பிரமாணங்கள் | யாத் 19ம் அதி முதல் | |
| | | தேவதரிசனம் | 31ம் அதி வரை | |
| | | வாசஸ்தலம் உண்டாக்குதல் | | |
| | | பொன்கன்றுகுட்டி | யாத் 32ம் அதி | 3000 பேர் சாவு |
| | | விக்கிரக ஆராதனை | | |
| | | மோசேயின் ஜெபம் | யாத் 33ம் அதி | |
| | | ஆசரிப்புக்கூடாரம் | யாத் 34ம் அதிமுதல் 40ம் | |
| | | ஸ்தாபிதம் | அதி வரை | |
| | | | லேவி 10=1–7 | நாதாப், அபியு சாவு |
| | | நியாயப்பிரமாணங்கள் | லேவி 1ம் அதிமுதல் | |
| | | பலிகள் சுத்திகரிப்புகள் | 27ம் அதி வரை | |
| | | | லேவி 24=10–23 | கர்த்தரை தூஷித்தவன் சாவு |
| | | இஸ்ரவேல் தொகை | எண் 1ம் அதி முதல் | |
| | | யிடப்படல் | 4ம் அதி வரை | |
| | | பாளைய ஒழுங்கு | | |
| | | நியாயப் பிரமாணங்கள் | எண் 5ம் அதி முதல் | |
| | | காணிக்கைகள் | 10ம் அதி வரை | |
| | | லேவியரின் வேலைகள் | | |
| | | பாளைய அணிவகுப்பு | | |
| | | பஸ்கா ஆசரிப்பு | | |
| | | இறைச்சிக்காக முறுமுறுப்பு | எண் 11=1–35 | வாதையினால் சாவு |
| 16 | கிப்ரோத் அத்தாவா | ஆரோன், மிரியாம் கலகம் | எண் 12=1–16 | |
| 17 | ஆஸரோத் | | | |
| 18 | ரித்மா | | | |
| 19 | ரிம்மோன் பேரேஸ் | | | |
| 20 | லிப்னா | | | |
| 21 | ரீசா | | | |
| 22 | கேலத்தா | | | |
| 23 | சாப்பேர் மலை | | | |
| 24 | அரதா | | | |
| 25 | மக்கெலோத் | | | |
| 26 | தாகாத் | | | |
| 27 | தாராக் | | | |
| 28 | மித்கா | | | |
| 29 | அஸ்மோனா | | | |
| 30 | மோசெரோத் | | | |
| 31 | பெனெயாக்கான் | | | |
| 32 | கித்காத் மலை | | | |
| 33 | யாத் பாத்தா | | | |

| வசனங்கள் | ஊர்கள் | சம்பவங்கள் | வசனங்கள் | வாதைகள் – சாவுகள் |
|---|---|---|---|---|
| எண் 34 | எப்ரோனா, | | | |
| 35 | எசியோன் கேபேர் | | | |
| 36 | காதேஸ் | வேவுக்காரர்கள் கலகம் | எண் 13=1–33 | |
| | காதேஸ்பர்னேயா | காலேப், யோசுவா சாட்சி கூறல் | எண் 14=1–45 | துர்செய்திகள் கூறின பத்து பேர் வாதையினால் சாவு |
| | | | எண் 15=32–36 | ஓய்நாளில் விறகு பொறுக்கினவன் சாவு |
| | | கோராகின் கலகம் | எண் 16=1–50 | தாத்தான், அபிராம், குடும்பத்தினரை பூமி விழுங்குதல் கோராகினர் வாதையினால் சாவு |
| | | ஆரோனின் துளிர்த்த கோல் | எண் 17=1–13 | |
| | | மேரிபாவின் தண்ணீர்கலகம் | எண் 20=1–21 | மிரியாம் மரணம் |
| 37-40 | ஓர் மலை | | 22–29 | ஆரோன் மரணம் |
| 41 | சல்மோனா | | | |
| 42 | பூனோன் | வெண்கல சர்ப்பம் | எண் 21=1–10 | கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்து சாவு |
| 43 | ஓபோத் | உயர்த்தப்படல் | | |
| 44 | அபாரீமின் மேடு | | | |
| 45 | தீபோன் காத் | எமோரியர்களின் யுத்தம் | எண் 21=20–35 | |
| 46 | அல்மோன் திப்லத் தாயீம் | | | |
| 47 | அபாரீம் மலை | மோசேயின் வருசங்கள் முடிதல் | எண் 27=12–14 | |
| | | | உபா 32=49–52 | மோசேயின் மரணம் |
| | | | உபா 34=1–12 | |
| 48-49 | மோவாப் சமவெளி | பிலேயாமின் சாபம் | எண் 22ம் அதி முதல் | 24,000 பேர் வாதையினால் சாவு |
| | ஆபேல் சித்தீம் | விக்கிரக ஆராதனை | 25ம் அதி வரை | குத்துண்டு இருவர் சாவு |
| | | வேசித்தனம் | எண் 31ம் அதி | பிலேயாம் சாவு |
| | | மீதியானியரின் யுத்தம் | | |
| | | ரூபன் சுதந்தரம் | எண் 32ம் அதி | மீதியானியர், அவர்கள் ராஜாக்கள் சாவு |
| | | இருவேவுக்காரர்கள் | யோசு 2:1–23 | |
| | | யோர்தான் பிரிதல் | யோசு 4=1–24 | |
| | ஆர்லாத்மேடு | | | |
| | கானானில் பிரவேசித்தல் | விருத்த சேதனம் | யோசு 5=1–15 | |

குறிப்புகள் : இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் காதேஸ் பர்னேயா வந்து சேருகிற வரைக்கும் இரண்டு வருசங்கள் ஆயின. பின்பு அவர்கள் காதேஸ் பர்னேயாவிலிருந்து சேரேத் ஆற்றைக் கடந்து மோவாப் சமபூமி வந்து சேருகிற வரைக்கும் முப்பத்தெட்டு வருசங்கள் ஆயின (யாத் 12=1,2,6,40–42; உபா 2=14; – 1=1–4)

இஸ்ரவேல் புத்திரர்கள் காதேஸ் பர்னேயா சேர்ந்த வரைக்கும், கர்த்தரைப் பத்து முறைக்கு மேல் பரிட்சை பார்த்தவர்கள் மடிந்து போகுமளவும் அவர்கள் 38 வருசங்களாக வனாந்திரத்தில் அலைந்து திரிந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் முதல் சந்ததியில் காலேப், யோசுவா தவிர மற்றவர்கள் மடிந்த பின்பு, அடுத்த சந்ததியினர் கானான் தேசம் சேர்ந்தனர். மோசேயும், ஆரோனும் கூட மரணமடைந்தபடியால், யோசுவா அவர்களை கானான் தேசத்திற்குள் நடத்திக் கொண்டு போய் சேர்த்தான்.

## சிறிய குறிப்புகள்

*பாடுதல்*

கர்த்தரோடு உன் நாளைத் தொடங்கு
அவரே நாளும், ஞாயிறுமாம்
அவரே உன் காலை ஒளி
அவர் மீதே உன் கீதம் பாடு
காலையில் புதுப்பாட்டு பாடு
மலைகளோடும், காடுகளோடும் சேர்ந்து பாடு
பெருங்காற்று, கடல் வெளி இவற்றோடும்
ஒளி, மலரோடும், சிறு ஓடையோடும் பாடு.
உன் முதல் பாட்டை கர்த்தருக்கே பாடு
உன் போன்ற மானிடருக்கன்று
அவருடைய சிருஷ்டிகளுக்கன்று
மாட்சிமை பொருந்திய அவருக்கே பாடு

*அறிதல்*

ஏனையோர் களித்துப் பாடுகையில் நான் ஏன் சோர்வுற்றிருக்கிறேன்?
**பாடுகளின் ஆழத்தைக் காணவே!**
ஏனையோர் ஓய்ந்திருக்க நான் மட்டும் உழைப்பதேன்?
**கர்த்தரின் தேவைகளுக்காய் என் பெலனை பயன்படுத்துவே!**
ஏனையோர் செழிக்கையில் நான் நஷ்டமடைவதேன்?
**தோல்வியின் கூரிய வேதனையை உணரவே!**
உன் நிலை நன்றாக இருக்கையில் நான் கஷ்டப்படுவானேன்?
**கர்த்தர் என்னை வழி நடத்துகிறார் என்ற நிச்சயம் அறியவே!**

# 26 இஸ்ரவேல் கானான் தேச பயண விபரங்கள் எண் 33ம் அதி




© C.B.P. - PUBLISHED BY : S. SAKTHI DEVADOSS : 145/E, - "T.M. COMPLEX" THIRUVENGIDA NAGAR, THIRUVERUMBUR P.O. TRICHY - 620 013



PRINT LANDS, Trichy - 1 Pager # 9628 - 935373

# இலக்கிய ஊழியத்தின் வரலாறு:-

ஏறக்குறைய முப்பத்திரண்டு வருசங்களாக, பல ஆயிரக்கணக்கான தேவனை அறியாத ஜனங்களுக்கும், பல ஆயிரக்கணக்கான தேவனுடைய ஜனங்களுக்குமாக, நமதாண்டவரின் கரங்களில் இருந்து, அளவில்லாத கிருபைகளையும், பொருளுதவிகளையும் பெற்று, இலவசமாக வழங்கிய இலக்கிய ஊழியங்களைப் பற்றின வரலாறு

முதலாவது: பத்துக்கு மேற்பட்ட கைப்பிரதிகள் **10,000** க்கும் மேலாக அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்து வந்தேன். பின்பு மாதாந்திர பத்திரிக்கைகளில் முப்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளும், புத்தகவடிவ செய்திகளும் வெளியிடப்பட்டு, வாசித்த தேவ மக்கள்; கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்றதாக பல நூற்றுக் கணக்கான கடிதங்கள் எழுதித் தெரியப்படுத்தினார்கள். அக்கட்டுரைகளை வேறு சில பத்திரிக்கைகளும் வெளியிட்டு மகிழ்ந்தனர். மேலும், வெளியிட்ட சில கட்டுரைகளை பலமுறை திரும்பத் திரும்ப வெளியிடப்பட்டன. இதனால் குடும்பமாக தற்கொலைக்கு முயன்ற குடும்பத்தினர் கூட காக்கப்பட்டனர். ஏராளமான சகோதர, சகோதரிகள் தங்கள் விசுவாசத்தில், பக்திவிருத்தியில் பலப்பட்டதாக எழுதித் தெரியப்படுத்தினர்.

பின்பு பிற மதங்களின் துர்போதனைகளுக்கு பதிலளிக்கக் கூடிய வகையிலும், சுவிசேஷ ஊழியமாகவும், விசுவாசிகள் மேலும் வளருவதற்காகவும், பல சகோதரர்களின் நல்ல முயற்சிகளினால், இலவச புத்தக ஊழியங்கள் துவக்கப்பட்டன. அதனால் இதுவரை பதினொரு புத்தகங்கள் பதிமூன்றாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு புத்தகங்களும் நூற்றுக்கு கொஞ்சம் குறைவாகவும், அதிகமாகவும் உள்ள பக்கங்களுடன் அச்சிடப்பட்டன. பல ஆயிரக்கணக்கான மக்கள் கடிதங்கள் எழுதி புத்தகங்கள் இலவசமாக பெற்றனர். அநேகர் தாங்கள் இரட்சிப்பை ஏற்றுக் கொண்டதாக எழுதினார்கள். சிலர் சபையின் ஐக்கியம் வரைக்குமாக முன்னேறி வந்து, ஞானஸ்நானம் பெற்றனர். சில வாலிபர்கள் நமது சபைகளில் விவாகம் செய்து, குடும்பமாக இருக்கின்றனர். மற்றும் பிற சபைகளின் மூலமாக, ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புத்தக பிரதிகள் வெளியிடப்பட்டன. என்னுடைய கைப்பிரதிகளையும் பலர் பல ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வெளியிட்டனர்.

தற்போது நூறு பிரசங்கங்கள் என்ற தலைப்பில் எட்டுபகுதிகள் எட்டாயிரம் பிரதிகள் வரை அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் எல்லாம்; தேவனுடைய ஜனங்களாகிய உங்களுடைய ஜெபமும், பொருள் உதவிகளும் மறக்க முடியாத நிலையில் இவ்வூழியத்தை தாங்கின. நித்தியத்தில் உங்கள் பலன்கள் பெருகுவதாக!

மேலும் நான் விபத்தில் சிக்கிய சமயத்திலும், நோயுற்ற சமயத்திலும் பலர் நேரில் வந்து, ஜெபித்தும், தேவைகளை அளித்தும் என்னை கர்த்தர் காப்பாற்றும்படியாக செய்த உதவிகளை நினைத்தும் அதிக நன்றியுள்ளவனாக இருக்கிறேன். மேலும் கர்த்தர் வர தாமதமானால் தொடர்ந்து இவ்வூழியத்தை தாங்கி நடத்தும் படி உங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

**112-25/3**
தேவராய நகர்,
திருச்சி–620 021.

உங்கள் சகோதரன்
**S. சக்தி தேவதாஸ்**
**17-6-2004**

## இதர வெளியீடுகள் :

1. தேவனுடைய திட்டங்களும், தீர்மானங்களும்
2. ஆராதனை
3. கவிழ்க்கப்பட்ட உலக ராஜ்யங்கள்
4. கற்பு நெறி
5. நாத்தீக முறியடிப்பு
6. பிதாவே வேளை வந்தது
7. வந்து பாருங்கள்
8. நீதியானத் தீர்ப்பு
9. தேவ பாலன்
10. மகிமையான இராஜரீகம்
11. ஆசரிப்புக் கூடாரமும் அதன் திருஷ்டாந்தங்களும்
12. நூறு பிரசங்கள் தனித்தனி பிரதிகள்


CB PUBLICATIONS

S. SAKTHI DEVADOSS,
C.B.P.
112-25/3, Devaraya Nagar,
K.K. Nagar Road,
TRICHY - 620 021

# திருமறைக் களஞ்சியம்

## *BIBLE DICTIONARY TAMIL NEWS PAPER*

## பரிசுத்த வேதாகம அகராதிக் குரிய செய்திகள்


**(மலர் 1:)** 1.11.2013 **(இதழ் -1)**



**ஆசிரியர்:**

**S.** ஜீவன்ராஜ் P.hD.,

**மேற்பார்வை:**

**G.S.** இன்பராஜ் M.Sc.,

ஜாய் கிறிஸ்டிராஜ் B.Sc.,

**தொகுப்பு:**

**S.** சக்திதேவதாஸ்

**வெளியிடுபவர்:**

**S.**ஜீவன்ராஜ் P.hD.,

125-19/2 இரண்டாவது தெரு,

தேவராயநகர்,

K.K.நகர்ரோடு

திருச்சி - 620 021.

**அச்சிட்டோர்:**

**பெரியார் சமூக தொடர் கல்வி கல்லூரி - அச்சகம்**

**சுந்தர்நகர், திருச்சி-21.**

**போன்: 2457665**


**பணிதல்:**

நீதி தேவா மகிமைக் கருகா!
பாதம் பணிகிறோம். - உந்தன்
பாதம் பணிகிறோம்.

ஆதி சருவேசா ஈசா-பூதலப்
பிரகாசா நேசா!
சத்திய வாசா,சீரேசு ராசா ஞான போசா நீர்;
உந்தன் பாதம் பணிகிறோம்.

நீதிபாலா, நித்திய குணாலா - சாந்தரூபா
ஞான மணாலா! - வேதநூலா
இம்மனுவேலா, அனுகூலா நீர்;
உந்தன் பாதம் பணிகிறோம்.

பாரேறு நீதா,பொற்பாதா-திரியேக
இயேசு நல் நாதா! - நித்திய
சங்கீதா,தாதா, நேரறு போதா;
உந்தன் பாதம் பணிகிறோம்.

மாணபி மாண, மாறாத - மங்கல
வாண அதி ஞானா பெத்தலேயா
கன்னி மரிசேயா, காணன் நல் தேயா!
உந்தன் பாதம் பணிகிறோம்.



**❶ பூமி:** பூமியில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் நிறைந்திருக்கிறது.

பூமியில் மாத்திரம் உயிரினங்கள் வாழ ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இப்பூமி இரவு, பகல் உண்டாகும்படி 24மணி நேரத்திற்கு ஒருமுறை சரியாக சுற்றுகிறது. இதற்காக $23\frac{1}{2}$ பாகை சரித்து கைக்கப்பட்டிருக்கிறது.

பூமியில் வெப்பம், நீர்நிலை, காற்றுமண்டலம் சமநிலைப் பிரமாணம் உடையதாக இருக்கின்றன.

பூமித் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதோடு, சூரியனையும் சுற்றி வருகிறது. இதற்காக ஒரு வருடத்தை எடுத்துக் கொள்கிறது.

பூமியை சூரிய வெப்பம் தாக்காதபடி சரியான தூரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

பூமியானது அந்தரத்தில் தொங்குகிறது.

பூமியானது முட்டை போன்ற உருண்டை வடிவமுடையது. (யோபு 26.7 ஏசா 40:22)



**❷ சூரியன்:** பூமியானது ஒருவரும் கணித்துக் கொள்ள முடியாத அளவுக்கு பிரமாண்டமானது. மனிதர்கள் பூமியின் மேல் கட்டியிருக்கும் சகல கட்டிடங்களும், பட்டணங்களும் எல்லாம் சேர்ந்து ஒரு வேளை 100 கன மைல் அளவானாலும் ஆகலாம். பூச்சக்கரமோ 26000 கோடி கனமைல் அளவானது. ஆயினும் இப்பூமி கணக்கற்ற நட்சத்திரங்களின் மத்தியில் ஓரணு தூசியைப் போன்றதே. நட்சத்திரங்கள் ஒன்றுக் கொன்று மானிட புத்திக்கு எட்டாத தூரத்திலிருக்கின்றன. உதாரணமாக: மகா வேகமாய் ஓடும் ஒரு ரயில் வண்டி 169 வருடங்கள் நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்தால் மட்டுமே சூரியனில் போய்ச் சேரக் கூடும். சூரியனோ தன்னைப் போன்றே 400 சூரியன்களில் ஒன்றுதான். மேலும் இவைகளுக்கு அப்பால் சொல்லிலடங்காத தூரத்தில், கணக்கில் அடங்காத வேறு நட்சத்திரக் கூட்டங்களும் உண்டு.



**❸ சந்திரன்:** சந்திரனானது தன்னிலே தானே ஒளியில்லாதது என்றும் சூரிய ஒளியைக் கவர்ச்சித்து பிரகாசிக்கிறது என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது ஏற்கனவே வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (யோபு 25:5)



**❹ நட்சத்திரங்கள்:** அறுமீன் நட்சத்திரங்களை சிலர் ஆறாங்கூட்டம் எனக்கூறுவர். இவைகள் ஆங்கிலத்தில் -PLEIADES என அழைக்கப்படுகிறது. மிருக சீரிஷமென்பது -ORION ஆங்கிலத்தில் என அழைக்கப்படுகிறது. இந்த ராசியின் நடுவில் இந்த ஆறு வின்மீன்களையும் காணலாம். அவைகளில் மூன்று ஒரு நேர் கோட்டிலும் மற்ற மூன்று முந்தினதற்கு சரிவான ஒருநேர் கோட்டிலும் அமைந்துள்ளன. இவ்வின் சுடர்கள் சிருஷ்டிப்பின் காலத்திலேயே ஒன்றுக்கொன்று தொடர்போடு அமையப் பெற்றிருக்கின்றன எனவும் அவைகள் காலம் சென்றாலும், இயற்கையினாலும் பிரிக்க முடியாது எனவும் வேத வாக்கியங்கள் கூறுவதோடு, விஞ்ஞானிகளும் இவ்வின்மீன்களுக்குள் ஒன்றுக்கொன்று இடப்பெயர்ச்சி இல்லையென்று வானியல் கொள்கையில் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே உறுதிப்படுத்துகிறார்கள்.(யோபு 38.31-33)



**❺ வெளிச்சம்:** ஒளி நேர் கோட்டில் யாத்திரை செய்வதால் மறைவு கட்டப்படுகிறது. அப்படியில்லாமல் ஒளி பரவினால் எல்லாம் வெளியரங்கமாகிவிடும்.ஆனால் ஒலியோ பரவுகிறது. ஆகையினால் தான் அடுத்த அறையில் உள்ளவரோடு நாம் பேச முடிகிறது. ஒலி ஒளியைப் போல் நேர்கோட்டில் யாத்திரை செய்தால், பிறர் ஆபத்தில் கூப்பிடும் சப்த மறிந்து அவர்களுக்கு நாம் உதவி செய்ய முடியாது. ஒளியானது ஒரு செக்கண்டுக்கு 186000 மைல் வேகத்தில் ஓடுவதால் அது எங்கேயும் தங்க முடியாது என்று தற்காலத்தில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது ஏற்கனவே வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (யோபு 38:19,20)



**❺ பனிக்கட்டி:** முதல் உலக யுத்தத்தில் ஜெர்மனியின் கோட்டையை தகர்ப்பதற்கு முயற்சி செய்த பிரிட்டீசார்; தங்கள் விஞ்ஞானத்தின் துணை கொண்டு வெடி மருந்துகளை தூசிகளால் பக்குவப்படுத்தி எடுத்து சென்ற போது, அவைகள் வெடித்து, நடுக்கடலில் மிகுதியான சேதங்களை பலமுறை அடைந்தார்கள். இதனால் அவர்கள் அமெரிக்க விஞ்ஞானிகளுடைய உதவியை நாடினார்கள் அவர்களோ ஒரு யூத விஞ்ஞானியுடைய ஆலோசனையின் பேரில் யுத்த முறைமைகளை அறிவதற்காக பரிசுத்த வேதாகமத்தை வாசித்த போது அதில்:

உறைந்த மழையின் பண்டசாலைக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழை இருக்கிற பண்டக சாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும் கலகமும் யுத்தமும் வருங்காலத்தில் பிரயோகிக்கும்போது நான் அவைகளை வைத்து வைத்திருக்கிறேன் என்ற தேவனின் வார்த்தைகளைக் கண்டபோது, உடனே வெடி மருந்துகளுக்கு சுற்றி பனிக்கட்டியால் பாதுகாப்பு செய்து கொண்டுபோய் ஜெர்மனியின் கோட்டையைத் தகர்த்துப்போட்டார்கள். யோபு(38:22,23)



**6 ஏதேன்** (ஆதி 2:8-14): ஏதேன் தோட்டம் எந்த இடத்தில் இருந்தது என்று தற்காலத்தில் நிதானிக்க முடியவில்லை. ஆனால் ஐபிராத்து, இதெக்கேல் ஆகிய நதிகளின் உற்பத்திப் பற்றி அங்கு சொல்லப்பட்டிருப்பதால் அர்மீனியா மேற்கு மலை சரிவுக்குக் கீழே இருந்திருக்கலாம் என்றாலும் இடங்களைத் திட்டமாகக் குறிப்பிட முடியவில்லை. இங்கு உற்பத்தியான நாலு நதிகளில் இரண்டுமட்டுமே தற்காலத்தில் இருக்கிறது மற்ற பைசோன், கீகோன் ஆகிய நதிகள் தற்காலத்தில் இல்லை. காரணம்: நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப் பிரளயத்தினால் இவைகள் அற்றுப் போயிருக்கலாம். (அரராத் பார்க்கவும்)



**7 வருகை:** சாத்தான் ஸ்திரீயின் வித்தானவரின் குதிங்காலை நசுக்குவது இயேசு வானவரின் முதல் வருகையாகும். ஸ்தீரியின் வித்தானவர் சாத்தானின் தலையை நசுக்குவது அவரது இரண்டாம் வருகையாகும். (ஆதி 3:15)



**8 அரராத்:** ஜலப் பிரளயத்தின்போது நோவாவின் பேழை இந்த அரரத் மலையில் தங்கியது. இந்த ஆரராத் மலைச்சிகரம் போக, நீண்ட தொடர்ச்சியான இம்மலை ஆசியா, ஐரோப்பா கண்டங்களின் எல்லைக்கோடு போல் அமைந்திருக்கிறது. இக்காலத்தில் இதற்கு அர்மீனியா (ARMENIA)என்று பெயர். இது தற்காலத்தில் ரஷ்யாவின் எல்லைக்குள் இருக்கிறது. அதனுடைய கிழக்கிலுள்ள கீழ்ப்பாகம் அர்மீனியா நாடு எனப்படுகிறது. தற்காலத்தில் ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள குடியரசு மாற்றத்தில் இவர்கள் தங்கள் விடுதலைக்காக போராடுகிறார்கள். இந்த மலையிலிருந்துதான் ஐபிராத்து, இதெக்கேல் ஆகிய நதிகள் உற்பத்தியாகி மேற்கு திசையில் ஓடுகிறது (ஆதி8:4)



**9 ஜலப் பிரளயம் (1பேதுரு 3:18.21 எபி. 11:7 மத்தேயு 24:37.39)**

பேழை - கிறிஸ்து
நோவா குடும்பம் - இஸ்ரவேல்
பல மிருகங்கள் - புறஜாதிகள்
ஜலப்பிரளய அழிவு- மகா உபத்திரவ காலம்
பேழை பாதுகாப்பு - சபை பாதுகாப்பு
அரராத் மலை - பரலோகம்
மலையிலிருந்து இறங்குதல் - மறு ஜென்ம வாழ்க்கை



**10 மொழி:**

ஆதாம் சகல பிராணிகளுக்கும் அதனதன் தன்மைக்கும் ஏற்ற பெயரிட்டான். அவன் அவ்வாறு ஆற்றுவதில் பிரயோகித்த மொழி இயற்கையுலகத்தின் தன்மையை சரியாய் பிரதிபளிக்கும் கண்ணாடிபோன்றது. பாபேல் என்ற இடத்தில் தேவன் அந்தக் கண்ணாடியை உடைத்தார். அதற்குப் பின்பு ஒவ்வொரு ஜாதியாரும் உடைந்த கண்ணாடியாகிய அந்த மொழியின் ஒவ்வொரு பாகத்தையும் வைத்துக் கொண்டு வழங்கினர். அம்மூல பாஷையிலிருந்து சில ஜாதிகள் அதிக மாயும் வேறு சில ஜாதிகள் குறைவாயும் எடுத்துக் கொண்டனர். ஆனாலும் எந்த தேசத்தாராகிலும் அதை முழுமையாகப் பேசுகிற தில்லை என்பது தின்னம் (ஆதி.11:9).



**11 பஸ்கா:** (யாத் 12ம் அதிகாரம்)

| பஸ்கா | பொருள் |
|---|---|
| ஆட்டுக்குட்டி | கிறிஸ்து |
| வீடுகள் தோறும் | புதிய ஏற்பாட்டின் சபை |
| ஓர் இரவு | சபையின் இராக்காலம் |
| பஸ்காவினால் பாதுகாப்பு | கிறிஸ்துவினால் பாதுகாப்பு (சபை) |
| சங்கார தூதன் வருகை | மகா உபத்திரவ காலம் |
| பார்வோன் | அந்தி கிறிஸ்து |
| தலைச்சன் சங்காரம் | சாத்தானை அழித்தல் |
| ஜனங்கள் விடுதலை | இஸ்ரவேல் விடுதலை (மறுமைக்கு) |



**12** **காற்றுகள்:** காற்றுகள் நான்கு வகைப்படும் வெளி.71). மூன்று மாதங்களுக்கு ஒரு காற்று வீதமாக 12 மாதங்களுக்கு நான்கு வகைக் காற்றுகள் பூமியின் மீது வீசும்.

**1. கொண்டல்:** (இது கீழ்த்திசைக் காற்று) இக் காலத்தில் மழை, புயல் உண்டாகும். முன் மாரி இக் காலத்தில் விழும். இக்காலத்தில் ஏற்படும் விஷ பனிகளால் கதிர்கள் தீய்ந்து போகும். மேலும் வெட்டுக்கிளிகள், வண்டுகள், பூச்சிகள் தோன்றி பயிர்களை அழிக்கும் (யோபு 38:24-27. ஆதி. 41:6,23, யாத், 10:13-14-21, சங்கீதம் 48:7)

**2. கோடை:** (இது மேல் திசைக்காற்று) இக்காலம் வேணிற்காலம், தீக் காற்று வீசும்; இலைகள் உதிரும்; பயிர் பச்சைகளெல்லாம் மறையும் (யோபு 38:1)

**3. வாடை:** (இது வடதிசைக் காற்று) இக்காலத்தில் குளிர் அதிகமாக இருக்கும். மேலும் பின் மாரி உண்டாகும் (யோபு 37:9; நீதி,25:23)

**4. தென்றல்:** (இது தென் திசைக் காற்று). இக் காலத்தில் வீசும் காற்று சுகமாக இருக்கும். எங்கும் மலர்கள் பூத்துக் குலுங்கும். வண்டுகளின் ரீங்காரமும், தும்பிகளும், பட்டுப் பூச்சிகளும் அதிகம் காணப்படும். பறவைகள் அதிகமாகப் பாடும். இதுவே கனி காலம். பலவிதமான பழங்கள் அதிகமாகக் கிடைக்கும். மக்கள் மகிழ்ச்சியில் மயங்கியிருப்பர். இக்காலத்தின் இறுதியில் அடிக்கடி சுழல் காற்று உண்டாகும் (யோபு 37;9; உன்னத 4:16; பிரச 1-6).

**13** **காற்று:** காற்றுக்கு கனம் உண்டு என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இதுவும் ஏற்கனவே வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (யோபு 28:5)




**14** **வாதைகள்: பத்துக் காரியங்கள்**

| செய்திகள் | வாதைகள் (யோபு 28:5) |
|---|---|
| 1. நீரைக் கெடுத்தல் | தண்ணீர் இரத்தமாக மாறுதல் |
| 2. உணவைக்கெடுத்தல் | தவளைகள் தேசத்தை மூடுதல் |
| 3. அரித்தல் | புழுதியிலிருந்து பேன்கள்: |
| 4. துளைத்தல் | பலவித வண்டுகள் வருகை |
| 5. மிருகங்கள் அழிவு | கொள்ளை நோய்கள் |
| 6. வேதனைகள் | எரிபந்த கொப்புளங்கள் |
| 7. தேச அழிவு | கல் மழை பெய்தல் |
| 8. தாவரங்கள் அழிவு | வெட்டுக் கிளிகள் வருகை |
| 9. கிரியை செய்ய முடியாமை | மூன்று நாள் இருள் |
| 10. சாவு | தலைச்சன்கள் சாவு |



**15** **எரிகோ: (எபி.11:30,31, யோசு, 6:1.5) மகா உபத்திர காலம்:**

எரிகோ-உலகம்
சுற்றுதல் - சுவிசேஷம் அறிவித்தல்
மனந்திரும்பவில்லை-மனந்திரும்ப மாட்டார்கள்
ஏழாவது நாள்- மறு ஜென்மம் வாழ்க்கை துவங்கும்போது
இஸ்ரவேல் பிரவேசித்தல் - மறு ஜென்மத்தில்
ராகாப் பாதுகாக்கப்படல் - மறுஜென்ம வாழ்க்கையில் சபை



**16** **யோனா:** 1946 நவம்பர் 25ம்-தேதி மாலையில் பம்பாய் கடல்கரையில் 12 அடி நீளமுள்ள மீன் இழுக்கப்பட்டது. பின்பு அதை வெட்டிப்பார்த்தபோது, அதில் மனிதனின் எலும்புக்கூடு ஒன்றும்,அவனுடைய துணிகளும் இருந்தது. அந்த மீனின் எடை 700 பவுண்டு, சென்னையிலும் தஞ்சையிலும் உள்ள மியூசியத்தில் திமிங்கலத்தின் எலும்புக்கூடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதன் வயிற்று பாகத்தில் ஒரு சிறிய குடும்பம் வாழ்க்கை நடத்துவதற்கான போதிய இட வசதிகள் இருக்கின்றன. இதனால் யோனா மீனின் வயிற்றில் இருந்தது உண்மையே என்று உறுதிச் செய்யப்படுகிறது.



**17** **பரிசுத்த ஆவியானவர்:**

| நிறைவு | ஞானஸ்நானம் |
|---|---|
| ஒரு விசுவாசி அடைய வேண்டிய அனுபவம் (ஜீவிய முழுவதும்) | பெந்தே கொஸ்தே நாளில் நடந்த ஒருநிகழ்ச்சி |
| அடையாளங்கள் உண்டு | அடையாளங்கள் இல்லை |
| தொடர்ந்து நாம் பெற வேண்டும் | ஒரு தடவை மட்டும் (இரட்சிப்பில்) |
| நஷ்டப்படும் | நஷ்டப்படாது |
| நிறைவு எல்லா விசுவாசிகளுக்கும் இல்லை | ஸ்நானம் எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு |
| நிறைவு பெற கட்டளை உண்டு | ஸ்நானம் பெற கட்டளையில்லை |
| ஆவியின் நிறைவு பழைய ஏற்பாட்டின் காலத்திலும் இருந்தது | ஸ்நானம்புதியஏற்பாட்டில்மாத்திரம்தான் |

# ஆசிரியர் உரை !

**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,

**திருமறைக்களஞ்சியம்:** இந்தப் பிரதிகள் ஒரு மாதப் பத்திரிக்கைப் போன்றதல்ல இது ஒரு வேத அகராதி உருவாக்கப்படுவதற்காக வெளியிடப்படுகிறது. இவைகளில் சில ஆயிரங்கள் கொண்ட செய்திகள் வெளியாகி விட்டால் பின்பு ஒரு நல்ல வேத அகாதி (BIBLE DICTIONAR) புத்தகமாக வெளியிடப்படும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகள் இவைகளை மனதில் பதிய வைத்துக் கொள்ளவும்; எனவே இந்த பிரதிகளை அதிக செய்திகள் கொண்ட பக்கங்களைக் கூட்டி வெளியிடப்படுவது, வாசகர்களாகிய உங்களுடைய கைகளில் தான் இருக்கிறது.

இந்த திருமறைகளஞ்சிய பகுதிகளுக்கு செய்திகள் எழுத விரும்புகிறவர்கள் பிற புத்தகங்களை வாசித்து வேத அகராதி (BIBLE DICTIONAR) செய்திகளை மட்டும் சரியாக பிரித்து எடுத்து இருபது வரிகளுக்கு மேற்படாத நிலையில் எழுதி அனுப்பலாம். நீங்கள் வாசித்த புத்தகத்தின் பெயர் அதன் பக்க எண்கள், உங்களின் பெயரும் குறிப்பிட்டு அனுப்பலாம்.

இருபது வயதிற்கு மேற்பட்ட சகோதர, சகோதரிகள், முதிர்வயதிற்கு உட்பட்டவர்கள் வரை யார் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒருவர் எத்தனை செய்திகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். சிறுக சிறுக வெளியிடப்படும். வேத அகராதிக்கு உடன் படாத செய்திகள் வெளியிட இயலாது.

வேத அகராதிகளுக்கான செய்திகள்; கீழ்க்கண்ட தலைப்புகளில் எழுதலாம். அதாவது: உலக சிருஷ்டிப்புகள்; சிருஷ்டிகளின் அதிசயங்கள், புதைபொருள் ஆராய்ச்சி, தேசங்கள், பட்டணங்கள், கிராமங்கள் வரலாறுகள்; ராஜ்யங்களுடைய சரித்திரங்கள்,பல பொருள்களுடைய தன்மைகள், வேதாகம முக்கிய சரித்திர சம்பவங்கள், பிறமொழி சொற்களின் அர்த்தங்கள், பெயர் சொற்களின் அர்த்தங்கள் இது போன்ற மேலும் பல தலைப்புகளில் செய்திகளை தொகுத்து அனுப்பலாம்.

போதனை சம்பந்தமாக, உபதேச சம்பந்தமாக, சபைகளின் சம்பந்தமாக செய்திகள் வெளியிட இயலாது. வேத ஆராய்ச்சி என்று எழுதுகிறவர்கள் போதனை சம்பந்தமாக இருப்பதை நீக்கி அனுப்பலாம்.

எல்லா செய்திகளும் வேதாகமத்திற்கு உடன்பட்ட செய்திகளாகவே இருக்க வேண்டும்.

வெளியிட இயலாத செய்திகளை திரும்ப அனுப்ப இயலாது நீங்கள் அனுப்பும் செய்திகளை ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்து உங்களுக்காக வைத்துக் கொள்ளவும்.

**ஞானக்களஞ்சியம் :** இந்த இரண்டாவது பகுதிகளுக்காகவும் செய்திகள் அனுப்பலாம். இந்த பகுதிகளுக்காக வேதாகமத்திற்குவெளியான செய்திகள்; அதாவது: கடல் கடந்து ஊழியங்கள் செய்தவர்கள் வரலாறுகள், உவமைகள், பலமொழிகள் ஆகிய பொதுவான செய்திகளாக, வேதாகமத்திற்கு உடன்படும் செய்திகளை மட்டும் தொகுத்து அனுப்பலாம். வாசகர்கள் அனுப்பும் செய்திகள் யாவற்றிலும் தேவையற்ற வார்த்தைகள் யாவும் நீக்கி வெளியிடப்படும். இப் பிரதிகள் தவறி விடாதபடிக்கு பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

இப்பிரதிகளை உடன் விசுவாசிகளுக்கு அறிமுகப்படுத்தி அவர்களின் முகவரியும் எங்களுக்கு அனுப்ப செய்யுங்கள்.

இப்பிரதிகள் அனுப்புவதற்கு உங்களின் அஞ்சலக தெளிவான முகவரி எழுத வேண்டும். அதாவது: பெயர், வீட்டுஎண், தெரு, ஊர், மாவட்டம், பின்கோடு எண்கள் குறிப்பிடவும். இதோடு உங்கள் தொலைபேசி எண்களை இணைத்துக் கொள்ளவும். உங்கள் முகவரி மாறி இருக்குமானால் இப்பிரதிகள் நஷ்டமடையாதபடி உடனே உங்கள் சரியான முகவரியை தெரியப்படுத்துவதோடு இப்பிரதி கிடைத்த விபரங்களும் தெரியப்படுத்துங்கள்

**செயல்படும் முறைகள் :** இந்த பிரதிகளின் ஊழியத்தை தனித்த நிலையில் செய்ய விரும்ப வில்லை. அதனால் வாசகர்களாகிய நீங்கள் இவ்வூழியத்தை நிறைவேற்றி, தமிழ் கிறிஸ்தவ விசுவாச மக்களுக்கு ஒரு நல்ல வேத அகராதி கொடுக்கும் படி இவ் வூழியத்தை நடத்த உதவி செய்ய வேண்டும்.

இப்பிரதிகளுக்கு சந்தா நிர்ணயம் செய்ய படவில்லை, அதனால் இதனுடைய அச்சுவேலைகள், பேப்பர்கள், தபால்செலவுகள் யாவற்றுக்கும் உங்கள் நிதி உதவிகளை அனுப்பி உடனே உதவி செய்யுங்கள். இப்பிரதிகள் வாசிக்கிறவர்களும், செய்திகள் எழுதுகிறவர்களும் தங்களால் இயன்ற காணிக்கைகள், நிதி உதவிகள் உதாரத்துவமாக, தாராளமாக செய்யக் கூடுமானால், தொடர்ந்து இவைகளை வெளியிட உதவியாக இருக்கும்.

இவ்வூழியத்தின் வரவு செலவுகளை சரிவர வைத்துக் கொள்வதற்காக உங்கள் நிதி உதவிகள், காணிக்கைகள் இவைகளை அனுப்பி உதவி செய்யும்படியாக வேண்டுகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்களின் அனுதினஜெபங்களில் இவ்வூழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி, நினைவு கூரும்படியாக அன்புடன் வேண்டுகிறேன்.

உங்களுடைய கடிதங்கள், செய்திகள், காணிக்கைகள், நிதிஉதவிகள் யாவும் அனுப்ப வேண்டிய முகவரி:

**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,
'திருமறைக்களஞ்சியம்'
125-19/2 இரண்டாவது தெரு,
தேவராயர்நகர், K.K.நகர்ரோடு,
திருச்சி-620 021.
**Cell: 9944005799, 9789197192**
Email: thirumaraikalanjiyam@gmail.com

# ஞானக்களஞ்சியம்

## 1 ஆபிரகாம் லிங்கன் :

✶ விசுவாசத்திற்கும், பக்தி விருத்திக்கும், ஆரோக்கியமான உபதேசத்திற்கும், உணர்த்தப்படுவதற்கும், மனந்திரும்புதலுக்கும், மகிழ்வதற்கும், ஆராய்வதற்கும் ஏதுவான செய்திகள் ஞானக்களஞ்சியமாக மாறுகிறது.

✶ கனி இருக்க காய்களை தின்பவனைப்போல இல்லாமல், பொய்யான செய்திகள், பிரச்சனைக்குரிய செய்திகள், கட்டுக்கதைகள் ஆகியவைகளைத் தவிர்ப்பதோடு அறிவுக்கேற்ற செய்திகளை சேகரிக்க வேண்டும்.

✶ மண்ணிலிருந்து ஆகாரத்தை வெகு நுட்பமாகப் பிரிந்து தன்னுடைய களஞ்சியத்தில் சேர்க்கும் எறும்பைப் போல செய்திகளைச் சேர்ப்பதில் விடா முயற்சி இருக்கவேண்டும்.

✶ தேனீக்கள் தான் உண்டது போக மீதியான தேன்களை சேர்த்து வைப்பதுபோல, ஒவ்வொருவரும் தகுதியான, இனிமையான செய்திகளை சேகரிக்கும் வேலைகளை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

✶ தங்கள் வாழ்க்கையில் ஓய்வு நேரங்களை பயன்படுத்திய ஞானவான்கள் மூலமாக நமக்கு நல்ல வேத அகராதிகள்; வார்த்தை அகராதிகள், வியாக்கியான அகராதிகள் கிடைத்திருக்கின்றன.

✶ அமெரிக்காவின் மக்களை தமது பிரசங்கத்தால் இன்புற வைத்த ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் மறைவுக்குப் பின்பு அவருடைய புத்தக அறையை பரிசோதித்தபோது அவர் தன்னுடைய பிரசங்க குறிப்புகளுக்காக தகுதியான வார்த்தைகளை உபயோகப்படுத்தும்படி 15000 வார்த்தைகள் கொண்ட சொற்களஞ்சிய அகராதி ஒன்று அவரே தயாரித்து வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

## 2 ஜான் பன்யன் :

இவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன் பெட் போர்ட் நகரத்திற்கு சமீபமான எல்ஸ்டோ என்ற ஊரில் கி.பி.1628ல் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் மிகவும் எளியவர்களானதால், இவர் உயர் கல்வி கற்க முடியவில்லை. சிறுவயதிலேயே ஜீவனத்திற்குரிய தேவைகளுக்காக வேலைக்கு அனுப்பப்பட்டார். இவர் பிராயம் ஆனபோது, தன்வாழ்க்கையின் நம்பிக்கையிழந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்தார். அதன் பொருட்டு தெருத்தெருவாக சுற்றத் துவங்கினார். ஓர் இடத்தில் ஒரு திண்ணையில் சில பெண்கள் மகிழ்ச்சியோடு சம்பாசித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட இவர்; அவர்கள் அறியாமல் மறைந்திருந்து நின்று ஒற்றுக் கேட்டார். அந்த ஆவிக்குரிய நல்ல சகோதரிகளின் மறுமையைப் பற்றின சம்பாசனை இவரைக் கவர்ந்தது. இதனால் பெட்போர்ட் நகரில் இருந்த கிப்போர்ட் என்ற போதகரிடம் வழி நடத்தப்பட்ட இவர் தன் வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி, தன் ஆண்டவரின் மீட்பை சுதந்தரித்தார். 1653ல் தனது 25 வது வயதில் சபையார் முன்னிலையில் ஞானஸ்நானம் பெற்றார். இவர் தன்னுடைய உத்தம ஜீவியத்தினாலும், ஆவிக்குரிய ஞானத்தினாலும் தன் சபையாரிடம் நன் மதிப்பைப் பெற்று 1656ல் அச்சபைக்கே போதகரானார். அக்காலத்தில் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த அநேக அரசு அதிகாரிகள்; இவர் கலகம் விளைவிக்கிறவர் என்ற குற்றத்தை சுமத்தி 14 வருடங்கள் சிறையில் அடைத்தனர். அவருடைய சிறையிருப்பின் உபத்திரவ நாட்களில் மோட்சப் பிரயாணம், திருப்போர் என இரு அறிய புத்தகங்களை எழுதி, கையெழுத்துப் பிரதிகளாக தன் சபையாருக்கு அனுப்பினார். மிகவும் வறுமையில் வாடின அவருடைய மனைவி, மக்களைக் குறித்தும், தம் பிள்ளைகளுக்குள் கண்தெரியாத மகளைக் குறித்தும் அதிகம் துயரமடைந்தார். இவைகளை அறிந்த தேவ ஜனங்கள் பெரு முயற்சி செய்து அவரை சிறையிலிருந்து விடுவித்தனர். பின்பு தன்னுடைய சபையாரை மிகுந்த ஆறுதல் படுத்துகிறவராக வாழ்க்கை நடத்தினார். பின்பு ஒரு பிளவுண்ட குடும்பத்தை ஐக்கியப்படுத்த அவர் எடுத்த முயற்சியில் வெற்றி கண்டு, வீடு, திரும்பும்போது, பலத்த மழையில் நனைந்து ஜுரம் கண்டார். ஏறக்குறைய 10 நாட்கள் வரைக்கும் வியாதி படுக்கையில் இருந்து கி.பி. 1688ல் ஆகஸ்ட் 12ம் தேதி தமது 60 வயது வயதில் தம்மை ஆட்கொண்ட அருமை அண்டவரின் திருக்கரங்களில் தமது ஆவியை ஒப்புவித்தார். ஆனாலும் அவர் மரித்து இன்றும் உலகத்தில் நிலைத்து நின்று கோடா கோடி இருதயங்களில் பேசிக் கொண்டிருக்கிறார். அவரை அடக்கம் செய்த பூங்காவில் ஒரு நேர்த்தியான நினைவுச் சின்னம் இன்றும் உள்ளது.

## 3 மோட்சப் பிரயாணம். திருப்போர்:

இவ்விரு புத்தகங்களும் லண்டன் நகரில் உள்ள பெட்போர்ட் சிறைச்சாலையில் வைத்து, போதகர் ஜான் பன்யன் என்பவரால் எழுதப்பட்டது. இவர் இப்புத்தகங்களை கையெழுத்தப் பிரதிகளாக எழுதும்போது, தனது சபையார் ஸ்திரப்படும்படி, வாரந்தோறும் ஒன்று, இரண்டு பக்கங்களாக கொடுத்து அனுப்புவாராம், அவர் மேல் நன் மதிப்புக் கொண்ட சபையார்கள் வாரந்தோறும் அவைகளை சபையில் வாசித்து பத்திரப் படுத்தினர். ஒரு நூற்றாண்டுக்குப் பின்பு அந்தக் கையெழுத்துப் பிரதிகளைக் கண்ட, அடுத்த சந்ததியான தேவனுடைய சபையார் அவைகளை புத்தகமாக அச்சிட்டனர். அச்சிடப்பட்ட பிரதிகள் உடனே செலவழிந்த படியால் மீண்டும், மீண்டும் அச்சிட்டனர். இப்புத்தகம் இன்று 400க்கு மேற்பட்ட மொழிகளில் பரிசுத்த வேதாகமத்திற்கு அடுத்தபடியாக, உலக முழுவதிலும் சுற்றி வந்து, தேவ ஜனங்களை ஸ்திரப் படுத்திக் கொண்டிருக்கிறது. போதகர் ஜான் பன்யன் தன்னுடைய வாழ்க்கையை இரண்டு பகுதிகளாக பிரித்தார். அதாவது: (1) வெளியான கிறிஸ்தவ ஜீவியம், (2) உள்ளான கிறிஸ்தவ ஜீவியம், இந்த இரண்டு பகுதிகளை இரண்டு பெரும் சரிதமாக எழுதி விட்டார். இந்த மோட்சப் பிரயாணம் அவருடைய வெளியான உத்தம கிறிஸ்தவ ஜீவியத்தை எடுத்துக் காட்டுகிறது. அதில் அவர் துர்போதனைகளுக்கும், மாம்ச போராட்டங்களுக்கும், சபைகளின் போராட்டங்களுக்கும், உலக போராட்டங்களுக்கும், பிசாசினால் வந்த போராட்டங்களுக்கும் தப்பி அவர் கிறிஸ்தவ ஜீவியத்தில் முன்னேறிப் போகிறதைக் காட்டுகிறது. இப்புத்தகத்தை இன்றைய சபையில் உள்ள ஊழியர்களும், மூப்பர்களும் சபையினுடைய சட்டப்புத்தகமாக பயன்படுத்தக் கூடுமானால், சபைகளில் உள்ள அநேக தீமைகளை நீக்கக் கூடும்.

திருப்போர் என்ற இப்புத்தகம் அவருடைய உள்ளான கிறிஸ்தவ ஜீவியத்தைக் காட்டுகிறது. அவர் மனதிலே எழுந்த

போராட்டங்களும், பிசாசினால் வந்த போராட்டங்களையும் எடுத்துக் காட்டுகிறது. இந்த இரு புத்தகங்களிலும் உள்ள மேன்மையான விசேஷம் என்னவெனில், பரிசுத்த வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் தேவனுடைய திட்டங்களையும், தீர்மானங்களையும் பிரதிபலிக்கக் கூடிய நிலையில் வேத வசனங்களை தாராளமாக எடுத்து உபயோகப் படுத்தும்போது, வலது, இடது புறம் விலகாது நின்று, தேவனை மகிமைப் படுத்தி இருக்கிறார். இவருடைய மோட்சப் பிரயாண புத்தகத்தை தற்காலத்தில் தோன்றிய பாளையங்கோட்டை திரு. H.A. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் இரட்சண்ய யாத்திரீகம் என்ற தலைப்பில் பெரும் காப்பியமாக இயற்றி இந்நூலை கல்வி மான்களுக்காக மேன்மைப்படுத்தி, இனிமையான தமிழ்மொழிக்கும் அருமையான தொண்டுசெய்திருக்கிறார். அவைகள் இன்றையவரைக்கும் கல்லூரிகளிலும், பல்கலை கழகங்களிலும் தமிழ் பாட நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன.

**4 கிருஷ்ணப்பிள்ளை H.A.:** இவர் 1827-ம் ஆண்டு ஏப்ரல்23-ம் தேதியில் பிறந்தார். 1868-ல் கிறிஸ்தவராகி ஏப்ரல் 18-ம் தேதியில் ஞான தீட்சைப் பெற்று ஹென்றி ஆல்பிரட் (Henry Alfred) என்று மறுபெயர் பெற்றார். இவர் ஜான் பன்னியன் அவர்கள் எழுதிய மோட்சப் பிரயாண புத்தகத்தை இனிய செய்யுள் நடையில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெரும் காப்பியமாக இயற்றி கிறிஸ்தவ கம்பர் H A கிருஷ்ணபிள்ளை என்ற பட்டத்தைப் பெற்றார். இம்மாபெரும் காப்பியத்தை அவர் எழுதிமுடிக்க பதினாலு வருசங்கள் சென்றன. அதற்குப் பின்பு, இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் ஆகிய நூல்களை இயற்றினார். இரட்சணியக்குறள் என்னும் நூல் அச்சுப் பதிப்பாகவில்லை. இவருடைய இரட்சணிய யாத்திரிக பாடல்களை உயர்நிலைப்பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தமிழ் இலக்கியத்தின் பாட நூல்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் 1900 பிப்ரவரி 3-ம் தேதி பிறபகள் ஒரு மணிக்கு தமது 73வது வயதில் இறையடி சேர்ந்தார்.

**5 போப் G.U.:** இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் 1840ல் வாழ்ந்தவர், வெஸ்லியன் சங்கத்தாரால் சமயத்தொண்டு புரிவதற்காக தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டவர். தமிழ் கற்று திருக்குறளையும் திருவாசகத்தையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர், தாம் இறந்த பின்பு தமது சமாதிக் கல்லில் REV :G.U.POPE, A student of Tamil Literature என்று பொறிக்குமாறு வேண்டிக் கொண்டார். அவரது கல்லறையில் அவ்வாக்கியத்தை இன்றும் காணலாம்.

**6 கால்ட்வெல் R.:** இவர் 1838ல் L.M.S. மிஷனரியாக இந்தியாவுக்கு வந்தார். 1841ல் இவர் குரு பட்டம் பெற்று திருநெல்வேலியிலுள்ள இடையன்குடியில் இவர் திருப்பணியைத் துவங்கி, இவர் காலத்தில் 12,000 பேர் கிறிஸ்தவர்களாவதற்கு இவர் காரணரானார், இவருக்கு 19 மொழிகள் தெரியும் என்று சொல்லப்படுகிறது. இவர் 1856-ல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparitive of the Dravidian Languages)என்னும் அரும்பெரும் நூலை வெளியிட்டார். நமது கைகளில் இருக்கும் பரிசுத்த வேதாகமத்தின் தமிழ் மொழி பெயர்ப்பில் இவர் முக்கிய பங்கு கொண்டவராகும்.

**7 D.A. துரோவர்:** இவர் இங்கிலாந்து தேசத்தில் உள்ள பாப்டிஸ்ட் சங்க மிஷினரியாக தமிழகம் வந்து சேர்ந்தார். இவருடைய வரலாறு தெளிவாக தெரியாவிட்டாலும் இவர் தமிழ் மொழியை கற்றதின் விளைவாகவும் பென்யமீன் என்பவரோடு துணைகொண்டு, நமது கைகளில் பழக்கத்தில் இருந்து வரும் பரிசுத்த வேதாகமத்திற்கு ஒத்த வாக்கிய அகராதி ஒன்று எழுதி முடித்தார். இதனுடைய முதற் பதிப்பு 1943ல் வெளியாகியது. இந்த ஒத்த வாக்கிய அகராதியில் ஏறக்குறைய 8,400 பொருட்களும், பெயர்களும் 1,70,000 ஒத்த வாக்கியங்களும் அடங்கி இருக்கிறது. இது தமிழ் கிறிஸ்தவர்களுக்கு விலையேறப் பெற்ற புத்தகமாக அமைந்தது.

**8 யோவான் கிரிட்டன்:** இவர் இங்கிலாந்து தேசத்தில் உள்ள மிகியோன் சங்கத்தின் மிஷினரியாக தமிழகம் வந்து சேர்ந்தார். சென்னைப் பட்டணம்; திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பன்றி குளம்; டோனாவூர் ஆகிய இடங்களில் உள்ள சபைகளை விசாரித்து வந்தார். இவர் தமிழ்மொழி கற்றதின் விளைவாக, புதிய ஏற்பாட்டில் உள்ள ஏறக்குறைய 4000 தலைப்புகளுள்ள வார்த்தைகளைத் திரட்டி ஒத்த வாக்கிய அகராதி ஒன்று 1860 முதல் 1870 வரையுள்ள பத்தாண்டு காலங்களாக எழுதி முடித்தார். இது 1878ல் புத்தகமாக வெளி வந்தது. இது தமிழ் கிறிஸ்தவர்களுக்கு விலைறேப் பெற்ற புத்தகமாக அமைந்தது.

**9 ஏமி கார்மைக்கல் அம்மையார்:** இவர் அயர்லாந்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையாரின் பெயர் டேவிட் கார்மைக்கல்; தாயாரின் பெயர் காதரின் ஜேன் இத்தம்பதியருக்கு பிறந்த ஏழு குழந்தைகளில் மூத்த மகளான ஏமி 1867 டிசம்பர் 16ம் தேதியில் பிறந்தார்.

1895 ஆகஸ்ட் 1ம் தேதியில் ஸ்டீவர்ட் மிஷனரி தம்பதியரும் அவர்களோடு சேர்ந்து, பணியாற்றிய சில மிஷனரி கன்னியரும் சீனாவில் உள்ள ஃப்யூக்கியன் என்ற பணிக்களத்தில் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் இங்கிலாந்திலிருந்து சென்ற வர்களாகும். இவர்களோடு போகவிருந்த ஏமி கார்மைக்கல் தேவ நடத்துதலால் தடை செய்யப்பட்டு காக்கப்பட்டார்கள்.

1893-ல் கெஸ்விக் மிஷனரி சங்கத்தார் மூலம் ஜப்பானுக்கு மிஷனரியாக அனுப்பப்பட்டார். பின்பு அங்கிருந்து உடல் நலக் குறைவால் தன் நாடு திரும்பும்போது, இலங்கையில் சில காலம் ஊழியம் செய்து பின்பு நாடு திரும்பினார். அம்மாள் சுகமடைந்த பின்பு இங்கிலாந்து திருச்சபையின் ஆதரவில் இந்திய மிஷனரியாக 1895 நவம்பர் 9ம் தேதியில் பங்களூர் வந்து சேர்ந்தார். பங்களூரிலிருந்து அம்மாள் சி.எம்.எஸ். மிஷனரி கனம் தாமஸ் உவாக்கர் அவர்கள் மூலமாக திருநெல்வேலிக்கு நடத்தப்பட்டு, தமிழ்மொழி நன்கு கற்றார்கள். பின்பு 1897, ஜூலையில் பண்ணை விளை என்ற இடத்தை மையமாகக் கொண்டு, ஊழியத்தைத் துவக்கினார்கள், இங்கு வைத்து அம்மாள் தன்னுடைய ஐரோப்பிய உடைகளை களைந்து விட்டு, தமிழர்களின் பண்புப்படி உடைகளை அணிந்துக் கொண்டார்கள். பின்பு டோனாவூர் நட்சத்திரக் குழு என்ற ஐக்கியம் ஒன்றை உருவாக்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கௌன்ட் டோனவென்ற ஜெர்மானிய பிரபு ஒருவர் மிஷன் ஊழியத்திற்கு வரையாது வாரி வழங்கினார். 1824ல் சிற்றூர் ஒன்றில் அழகான கிறிஸ்தவ ஆலயம் கட்டுவதற்கு நிதி வழங்கினார். இந்த ஆலயத்தைச் சுற்றியுள்ள சிற்றூர் அந்த வள்ளலின் பெயரைத் தாங்கி டோனாவூர் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு வைத்து ஏழ்மையான பெண்களும், குழந்தைகளும், பையன்களும் அம்மாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு டோனாவூர் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தி ஏறக்குறைய 55 வருசங்கள் ஊழியம் செய்தார்கள். அம்மாள் ஒரு மருத்துவ மனையொன்றையும் நிறுவி வைத்திய வசதிகளை சுற்றிலுமுள்ள சிற்றூர்களுக்கு ஏற்படுத்தினார்கள். இவ்வூழியங்களினால் அநேக பெண்களும், ஆண்களும் இயேசுவின் மீட்பைப் பெற்றார்கள். இவர்களின் நற்சேவையை அறிந்த, சென்னை ஆளுநர் கனம் லார்ட் பென்ட் லாண்ட் 1919ல் அம்மாளை பாராட்டி கைஸரி ஹந்த் என்ற பதக்கம் அளித்து கௌரவித்தார்கள். அம்மாள் தன் ஊழியத்தினால் மீட்கப்பட்டவர்களின் பாடுகளைப் பற்றி அநேக புத்தகங்கள் எழுதி பிரஜரியச் செய்தார்கள். இவர்கள் ஊழியத்திற்காக சென்ற ஒரு இடத்தில் தவறி கீழே விழுந்ததில் இரு கால்களும் முடமாக்கப் பட்டார்கள். ஏறக்குறைய இருபது

வருடங்களாக படுக்கையிலிருந்தே தன் ஊழியத்தைக் கவனித்த அருமையம்மாள் 1951 ஜனவரி 18ம் தேதி தன்னை நேசித்த தன் ஆண்டவரிடம் தம் ஆவியை ஒப்புவித்தார்கள். இவர்களுடைய பின் விசுவாச சந்ததியார் இன்றும் அவ்வூழியத்தை டோனாவூர் ஐக்கிய கூட்டம் என்ற பெயரில் நடத்தி வருகின்றனர்.

**10 ரிச்சர்ட் உம்பிராண்ட்:** 1945 ஆம் ஆண்டு ருமோனியா நாட்டை பொதுவுடைமைக் கொள்கையாளர்கள் கைப்பற்றினர். அப்போதே கிறிஸ்தவ சபைகளை அடக்கி ஒடுக்கி பாழ்படுத்தத் தொடங்கினர். ஏராளமானோர் சிறைகைதிகளாயினர். இரத்த சாட்சிகளாய் மரித்தனர். அந்நாளில் திரு ரிச்சர்ட் உம்பிராண்டு திருச்சபைத் தலைவர்களில் பெயர் பெற்றவராய், எல்லாராலும் நன்கு அறியப்பட்டவராய் இருந்தார். சிறையில் அடைக்கப்பட்டவர்களும் ரஷ்ய போர்வீரர்களுக்கும் இரகசியமாக சுவிசேஷத்தைப் போதிக்கத் துணிந்தார். கம்யூனிச ஆட்சியினர் இவரையும் இவரது துணைவியாரையும் பிடித்து சிறையிலடைத்தனர். 1948ல் இவர் மூன்று ஆண்டுகளாக இனத்தவர், நண்பர் யாரையும் காணக்கூடாதபடிக்குத் தனியாக விடப்பட்டார். கம்யூனிச கொடுமைக்காரர் அவரை விடாது கொடிய சித்திரவதை செய்தனர். வெளிநாட்டுத்தலைவர்கள் பலர் உம்பிராண்ட் அவர்களின் பாதுகாப்பைப் பற்றி விசாரித்தனர். ஆனால் அவர்களுக்கு உண்மை நிலை சொல்லப்படவில்லை. அவர் ஓடிவிட்டார். மரித்துப்போனார் என்றெல்லாம் சொன்னார்கள்.

அவரோ எட்டாண்டுகள் சிறையில் அவதிப்பட்டார். விடுதலை அடைந்த உடனே அந்தரங்கச் சபையுடன் சேர்ந்து ஊழியம் செய்ய தாமதிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் கைது செய்யப்பட்டு 25 ஆண்டுகள் சிறைவாச தண்டனைக்குள்ளானார். சித்திரவதைப் படுத்தினார்கள். ஆனால் தெய்வாதீனமாக ஐந்தாண்டுகளுக்குள் சிறையினின்று விடுதலையாகி அந்தரங்க சபை ஊழியத்தில் மறுபடியும் இறங்கினார். அவர் ருமேனியாவை விட்டு வெளியேற வேண்டுமென நார்வேயிலுள்ள கிறிஸ்தவர்கள் ஏற்பாடு செய்து, அரசாங்கத்தாருக்கு 25,00,000 ரூபாய் விடுதலை விலையாக எண்ணிக்கொடுத்து விடுவித்தார்கள்.

1966-ல் உம்பிராண்ட் அவர்கள் அமெரிக்கா உள்நாட்டு பாதுகாப்புக் குழுவுக்கு முன் நின்று, சட்டையைக் கழற்றி, அவர் சரீரத்தில் கம்யூனிசத்தாரால் உண்டான ஆழமான பயங்கர பதினெட்டு காயங்களைக் காண்பித்தார். ருமேனியா கம்யூனிசத்தார் இவரை எப்படியாகிலும் கொலை செய்ய வேண்டுமென சதி செய்து வருகிறார்கள். இவரை "அந்தரங்க சபையின் குரல்", உயிருள்ள இரத்தசாட்சி", "இரும்புத் திரையின் பவுல்". என்றும் அழைக்கிறார்கள்.

**11 டாக்டர்,ஐடா ஸ்கடர்:** இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர் இவரின் தந்தையின் பெயர் ஜான் ஸ்கடர், தாயின் பெயர் ஸோஃபியா ஸ்கடர். இவருடைய பாட்டனாரின் பெயரும் ஜான் ஸ்கடர்தான். இவருடைய பாட்டனார் 1819ல் அமெரிக்காவிலிருந்து முதல் மருத்துவ மிஷனரியாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இவருடைய பெரியப்பா ஜாரெட்ஸ்கடர். தமிழகத்திலுள்ள வேலூரில் மருத்துவப்பணிகளைத் தொடங்கிய பிறகு இவருடைய குடும்பம் முழுவதுமே வேலூரைச் சார்ந்தது. இவர் விடுமுறைக்காக இந்தியாவுக்கு வந்தார். தன் தகப்பனார் டாக்டராய் இருந்த போதிலும் , பெண்களுக்கு சிகிச்சை செய்ய பெண் டாக்டர்களே தேவை என்பதை அனுபவத்தால் கண்டறிந்து. மிஷனரி டாக்டராக பயிற்சிப் பெற்று மீண்டும் இந்தியாவுக்கே வந்து. தன் வாழ்நாட்களெல்லாம் வேலூரிலேயே முடித்துக் கொண்டார்.

அமெரிக்காவில் செல்வ செழிப்பான ஒரு குடும்பத்தில் பிறந்து, மருத்துவத்துறையைத் தவிர்த்து வேறு துறையில் இவர் பட்டம் பெற்றவர். அனால் டாக்டர் ஐடாஸ்கடரின் குடும்பம் மிஷனெரிப் பணிக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பம். இருப்பினும் மிஷனரி வாழ்க்கையிலிருந்து ஒதுங்க நினைத்த டாக்டர் ஐடா இந்தியாவிலுள்ள நமது தமிழகத்திற்கு வந்து, இங்குள்ள ஏழை எளியவர்களின் நிலையை அறிந்து தன்னைத்தானே மிஷனரி வாழ்க்கைக்கு அர்ப்பணித்துக் கொண்டார்.

இன்று உலகப்புகழ் பெற்ற சி.எம்.எஸ்.மருத்துவ கல்லூரியையும், மருத்துவ மனையையும் உருவாக்கியவர் டாக்டர் ஐடா ஸ்கடரே.

இவர் ஆசிரியர்கள் யாருமின்றி, தாதியர்கள் இன்றி, வைத்தியக் கருவிகள் ஏதுமின்றி, பதினான்கு மாணவிகளைக் கொண்டு, மருத்துவப்பள்ளியொன்றை நடத்தி, அத்தனை பேரையும் தேர்வில் வெற்றி பெறச் செய்த அரும்பெரும் சாதனையையும் நிகழ்த்தியவராகும்.

இன்று வேலூர் சி.எம்.எஸ். மருத்துவ மனையும், மருத்துவக்கல்லூரியும் அவற்றின் ஒவ்வொரு செங்கல்லும் டாக்டர் ஐடா ஸ்கடரின் பெயரை அவனிக்கு அறிவித்துக் கொண்டே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

**12 பிலிப்பு டி.மெல்லோ:** இந்திய மொழிகளில் முதல் முதல் மொழிபெயர்க்கப்பட்ட தனிப்பெருமை தமிழ் மொழிக்கே உரியது. ஒல்லாந்த இராசகுமாரனான உவில்லியம் 1688 ல் இங்கிலாந்துக்கு அரசனான போது இலங்கையிலிருந்த ஒல்லாந்த மிஷனரிகள் மத்தேயு சுவிசேஷத்தைப் போர்த்துக்கேய மொழியில் பெயர்த்துப்பின் அதை வடஇலங்கை மக்களுக்குப் பயன்படுத்துமாறு தமிழில் மொழி பெயர்த்தனர். இந்த ஒல்லாந்த நவீன திருச்சபையின் முதல் மிஷனரியான பிலிப்பு 1748 முதல் 1759 வரை தமிழ் மொழிபெயர்ப்புகளை பதிப்பித்தாரெனத் தெரிய வருகிறது.

**13 பரமானந்தம் போதகர்:** இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பந்தல்புளி என்னும் கிராமத்தில் 1873 ல் பிறந்தார். இவருடைய தகப்பனார் பெயர் இராமசாமி என்ற வஸ்தாதிப்பிள்ளை (மதுரை) தாயார் பெயர் பேச்சியம்மாள் (சங்கரன் கோவில்) இவர்கள் இந்து மதத்தை விட்டு கிறிஸ்தவ மார்க்ககத்தைப் பின்பற்றினர். பரமானந்தம் தன்னுடைய இளமையில் ஜிம்னாஸ்டிக் ஆசிரியராக இருந்த காலத்தில் தன்னுடைய தனி தியானத்தின் மூலமாக தன் ஆண்டவரின் மீட்பைப் பெற்றார். பின்பு கனம், உவாக்கர் என்ற மிஷனரியால் உற்சாகப் படுத்தப்பட்டு, ஆண்டவரின் ஊழியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தார். பிற்காலத்தில் தமிழகத்தில் வல்லமையுள்ள பிரசங்கியாக இவர் எழுப்பப்பட்டார். இவர் ஊழியம் தமிழகம் முழுவதும் பரந்த நிலையில் நடைபெற்றபோது, அநேக மிஷனரிகள் தங்கள் ஊழியங்களில் இவரைப் பயன்படுத்திக் கொண்டனர். மேலும் பர்மா, இலங்கை, யாழ்ப்பானம், கேரளா ஆகிய இடங்களில் இவர் ஊழியம் பரவியது. இவர் திருவாங்கூரிலுள்ள மாராமன் கன்வென்சன்களில் பலமுறை பேசியிருக்கிறார். ஒருமுறை சாதுசுந்தர் சிங்கும் இவரும் சேர்ந்து அங்கு பிரசங்கித்து இருக்கிறார்கள். ஒருசமயம் சென்னையில் உள்ள கிண்டி காந்தி மண்டபத்தில் இவர் பேசும் போது, அக்கால சென்னை கவர்னர் பிரகாச அக்கூடத்திற்கு தலைமை வகித்தார். அப்பொழுது கனம் ராஜ கோபாலச்சாரியார் உள்பட அநேக அரசாங்க உத்தியோகஸ்தர்களும், அநேக சங்கீத வித்வான்களும், சினிமா நடிகர்களும் பெருங் கூட்டமாக இருந்து, இவருடைய பிரசங்கத்தைக் கேட்டனர். இவர் சென்னையில் உள்ள ராயபுரம் சபையில் சேர்ந்து. நாற்பது வருசங்களுக்கு மேலாக போதகராக பணியாற்றினார். இதனால் இவர் பெயரில் பரமானந்தம் ஐயர் ஆலயம் என்று, இன்றும் அந்த இடத்திற்கு பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இவர் 13 புத்தகங்கள் வரை எழுதி வெளியிட்டார். அவைகளில் இன்று வரை சில புத்தகங்கள் பிரசித்தி பெற்ற நிலைமையில் பலராலும் பயன்படுத்தப்படுகிறது. அவைகளில் "கிறிஸ்துவின் ஜீவியம்" "நூறு பிரசங்கள்" "ஏழு வார்த்தைகள்" போன்றவைள் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகள். இவைகளில் கிறிஸ்துவின் ஜீவியம் என்ற புத்தகத்தின் சாரத்தை சில வேதாகமப் பள்ளிகளில் கிறிஸ்தவ விசுவாச அடிப்படை போதனையாக அங்கீகாரம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

# திருமறைக்களஞ்சியம்

## BIBLE DICTIONARY TAMIL NEWS PAPER

### பரிசுத்த வேதாகம அகராதிக் குரிய செய்திகள்

(மலர்1:) 1.12.2013 (இதழ் -2)



**ஆசிரியர்:**

**S.** ஜீவன்ராஜ் P.hD.,

**மேற்பார்வை:**

**G.S.** இன்பராஜ் M.Sc.,

ஜாய் கிறிஸ்டிராஜ் B.Sc.,

**தொகுப்பு:**

**S.** சக்திதேவதாஸ்

**வெளியிடுபவர்:**

**S.** ஜீவன்ராஜ் P.hD.,

125-19/2 இரண்டாவது தெரு,

தேவராயநகர், K.K. நகர்ரோடு

திருச்சி - 620 021.

**அச்சிட்டோர்:**

**பெரியார் சமூக தொடர் கல்வி கல்லூரி - அச்சகம்**

**சுந்தர்நகர், திருச்சி - 21.**

**போன்: 2457665**


**போற்றி புகழ்ச்சியாக்குதல்!**

மகிமைஅற்புதம் இயேசுபாலனின்
மகிமைஅற்புதமே! (மத் 1:21-23)

தாவீதரசரின் பெத்தலை மனையில்
தேவ மைந்தனாய் பிறக்க - முன்னுரைத்தபடி
வந்த போதிலும், புறக்கணித்ததால் மீகா 5:2
தொழுவத்தில் பிறந்த மகிமைஅற்புதமே! லூக் 2:7

கொடிய தரித்திர கோலாமாய் பிறந்த
இயேசு பாலனை தொழுக - விண்ணக தூதர்
மண்ணில் வந்ததும், கண்ட ஆயர்கள் லூக் 2:13-18
களித்துப் போற்றிடும் மகிமைஅற்புதமே! எபி 1:6

யாக்கோபிலே ஒரு விண்ணுடு தோன்ற
இன்புற்ற ஞானவான்கள்; யூத அரசரின்
பாதம் பணிந்திட நெடு பயணத்தில் - தேவ எண் 24-17
சுதனிடம் வந்தது மகிமை அற்புதமே! மத் 2:1,2

வெறுமையான தூய அம்மையப்பன்மார்;
ஆண்டு காலமாய் சுகிக்க, - பொற்காசுகளை
வாரி வழங்கிய, ஞானவான்களின் அதிசய
செய்கையின் மகிமைஅற்புதமே! (மத்2:10)

உருசலையரசன் மனம் பதறியே
பாலகர்களை அழிக்க, திருமறை ஆய்வர்கள்
மாக்களாயிருக்க, இயேசுபாலனின் மத்2:3-8
ஜீவன் தப்பியதும் மகிமைஅற்புதமே! 16-17

தந்தையை மறந்து, மகிமையை துறந்து
தன்னை வெறுத்த இயசுபாலா! - உம்மையேத்
தாழ்த்தி, கடையேனை மீட்க மனதிரங்கிய, - உம்
நேச அன்புதான் மகிமை அற்புதமே! (பிலி 2:6,7)

மானிடர் மேலே பிரியம் வைத்திட
மனதிரங்கிய பிதாவே! உன்னதத்திலே உமக்கு
மகிமையும் பூதலத்திலே மகிழ்ச்சி பெருகிடும்
மகிமைஅற்புதமே! (லூக் 2:13,14)



## ஆசிரியர் உரை!

**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள சகோதர, சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள்

திருமறைக்களஞ்சியத்தின் முதல் பிரதி பெற்றவர்களில் சிலர் இந்த பிரதிகள் பெற்ற விபரங்களை தெரியப்படுத்தினதோடு, இந்த புதிய முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபம் செய்வதாக விபரங்கள் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

தாங்கள் இந்த பிரதிகள் பெற்ற விபரத்தை ஓர் அஞ்சல் அட்டையில் தெரியப்படுத்தி, உங்களின் சரியான முகவரியும் அதில் குறிப்பிட்டு அனுப்ப அன்புடன் வேண்டுகிறேன். உங்கள் முகவரியை நாங்கள் பதிவு செய்து கொண்டு பிரதிகளை தொடர்ந்து உங்களுக்கு அனுப்ப அது உதவியாக இருக்கும்.

மேலும் திருமறைக்களஞ்சிய பகுதிகளுக்கு செய்திகள் சேகரிக்கும் முறைகளைப் பற்றி சற்று விவரிக்க விரும்புகிறேன். பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ புத்தகங்களில், நீங்கள் சேகரித்து வைத்திருக்கிற புத்தகங்களில் இருந்து, வேத அகராதிக்கான செய்திகளைப் பார்த்து எழுதி அனுப்பலாம். பிறமொழி புத்தகங்களிலிருந்து எடுத்தால் தமிழில் மொழி பெயர்த்து அனுப்பவும், தமிழ், ஆங்கில வேதாகம அகராதிகள் இருந்தால் அவைகளிலும் செய்திகள் சேகரித்து அனுப்பலாம். செய்திகள் அனுப்பும் போது, நீங்கள் வாசித்த புத்தகத்தின் பெயர், அதன் பக்கங்களின் எண் உங்கள் பெயருடன் இணைத்து அனுப்பவும்.

மேலும் ஞானக்களஞ்சிய பகுதிகளுக்காகவும் செய்திகள் சேகரிக்கலாம். அதாவது : கல்லூரிகளின் புத்தகங்களும், அவைகளைச் சார்ந்த புத்தகங்களும், பல தமிழறிஞர்களும், பேராசிரியர்களும் படைத்த தமிழ் இலக்கணமும், இலக்கியம், வரலாறு, அறிவியல், கலைக்களஞ்சியங்கள் போன்ற பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளில் கிறிஸ்தவர்களினால் ஏற்பட்ட சமுதாய சீர்திருத்தங்கள்; நமது நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள், நாகரீக மாற்றங்கள், புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பு சாதனங்கள் இவைகள் யாவும் மேற்கூறிய புத்தங்களில் மறைந்து கிடக்கின்றன. முதல் நூற்றாண்டிலிருந்து இந்நாள் வரைக்குமுள்ள சரித்திரங்களும் மறைந்து கிடக்கின்றன. அரசு நூலகங்கள், கல்லூரி நூலகங்களை நாடி புத்தகங்களை தேடி எடுத்து வாசித்து செய்திகளை தொகுத்து அனுப்பலாம்.

மேலும் தாங்கள் யாவரும் பரிசுத்த வேதாகமத்தையும், அது சம்பந்தப்பட்ட புத்தகங்களையும் வாசிக்க முயற்சிகள் எடுக்கும் போது நமக்கு தேவையற்ற வீண் சிந்தனைகள் தவிர்க்கப்படுகின்றன. நாம் சிறந்த ஆவிக்குரியவர்களாக மாற்றப்படுவோம். அதனால் நமது தனி வாழ்க்கை, குடும்பம், வேலை செய்யக்கூடிய இடங்களில் உள்ள உலகத்தார், தேவனுடைய சபை ஆகிய இடங்களில் நமக்கிருக்கும் பிரச்சனைகள் மாறி, சமாதானமும், மகிழ்ச்சியும், பெருகத் துவங்கும். இவ்விதமான மாற்றங்களை ஏற்படுத்த இந்தத் திருமறைக் களஞ்சியப் பிரதிகள் காரணமாக அமையும் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை! முயற்சி திருவினையாக்கும் என்பதனை நினைவுப்படுத்தி இங்கு முடிக்கிறேன்.

திருமறைக் களஞ்சிய செய்திகளை மற்ற பத்திரிக்கைகளில் பயன் படுத்த விரும்புவோர் அனுமதி பெற்று பயன்படுத்தவும்.

ஆசிரியர்.

உங்களுடைய கடிதங்கள், செய்திகள், காணிக்கைகள், நிதிஉதவிகள் யாவும் அனுப்ப வேண்டி முகவரி:

**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,
'திருமறைக்களஞ்சியம்'
125-19/2 இரண்டாவது தெரு,
தேவராயர்நகர், K.K.நகர்ரோடு,
திருச்சி-620 021.
**Cell: 9944005799, 9789197192**
Email: thirumaraikalanjiyam@gmail.com




**18 கலிலேயாக்கடல்:** கானாவூரிலிருந்து கீழ்த்திசை நோக்கிச் சென்றால், சுமார் 18.கி.மீ. தூரத்திலிருந்து கலிலேயாக் கடல் இது 22 கி.மீ. நீளம்; 11.கி.மீ அகலமுள்ளது. இதன் சுற்றளவு சுமார் 50 கி.மீ. அகலமுள்ளது. இதன் சுற்றளவு சுமார் 50 கி.மீ. கடல் மட்டத்திற்கு கீழே 700 அடி தாழ்ந்துள்ளது. ஆழம் சுமார் 200 அடி கடல் என்று அழைக்கப்பட்டாலும், நல்ல குடி தண்ணீர் நிரம்பியது. இயேசு கிறிஸ்துவின் ஊழியம் இந்த பகுதியில் அதிகம் நடைபெற்றது. இதற்கு பல பெயர்கள் உண்டு.

1. கின்னரேத் கடல் எண் 34:11
2. கெனசரேத் கடல் லூக் 5:1
3. திபேரியாக் கடல் யோவா 6:1
4. கலிலேயாக் கடல் மத்தே 4:18
5. தற்போதய பெயர்: கின்னரெட் ஏரி

ஏரோது அந்தி பாஸ் கி.பி.21ல் கலிலேயாகடலின் மேற்குக் கரையில் திபேரியா என்ற பட்டணத்தைக் கட்டினான். அதனால் திபேரியாக் கடல் என்ற பெயர் வந்தது. டைபீரியஸ் இந்த பட்டணத்திற்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் இருந்தது மக்தலா (மத்5:39)

மகதலேனா மரியாளின் சொந்த ஊர் இதுவே (லூக் 8:2) கடலை ஒட்டி வடக்கே சென்றால், மேற்கே தெரியும் சிறிய குன்றுதான் இயேசு மலைப்பிரசங்கம் செய்த இடம்.

நன்றி, வேதாகம, நாடுகள் : பக்கம் 33
S. ஜாய் கிறிஸ்டிராஜ்

**19 சவக்கடல்:** யோர்தான் நதியைத் தொடர்ந்து தெற்கு நோக்கிச் சென்றால் சவக்கடலுக்கு வந்து சேருவோம். இது சுமார் 80 கி.மீ. நீளமும், 16 கி.மீ. அகலமுமுள்ளது. யோர்தான் நதி இதில் பாய்ந்தாலும், தண்ணீர் எங்கும் வெளியே போவதில்லை. எனவே சவக்கடல் என அழைக்கப்படுகிறது. இது கடல் மட்டத்திற்கு கீழே 1300 அடி தாழ்வாக உள்ளது. உலகத்திலேயே தாழ்வான பகுதி இதுதான். வெப்பத்தினாலே நீர் ஆவியாகிறதே தவிர, வேறு தண்ணீர் போக்கு இல்லாத தால், கடல் தண்ணீரைப் போல பத்து மடங்கு உப்புச் சத்துள்ளது. இந்த சவக் கடலின் தண்ணீர் கடலான தண்ணீரைப் போல, ஐந்து மடங்கு அடர்த்தியுள்ளது. யாரும் இதில் மூழ்க முடியாது. சோடியம், குளோரின், சல்பர், பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம் ஆகிய தாதுப் பொருள்கள்; இதில் அதிகம் கிடைப்பதால் இஸ்ரவேல்நாட்டிற்கு மிகுந்த லாபகரமான கடலாக இருக்கிறது.

நன்றி, வேதாகம, நாடுகள் : பக்கம் 35
S. ஜாய் கிறிஸ்டிராஜ்



தர்சுபட்டணம்

**20 பவுல்-சவுல்-தர்சுபட்டணம்:** பவுல் சிலிசியா நாட்டின் தலைநகரான தர்சுப்பட்டணத்தில், கி.பி.5-ம் ஆண்டில் பிறந்திருப்பான் என்பது திருமறை வியாக்கியான நூலில் காணப்படுகிறது. இவன் ஓர் எபிரெயன்; இவனுடைய பெற்றோர்கள் பரிசேய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவன் ரோமர்களுடைய ஆளுகையை ஏற்றுக் கொண்டதினால், இவனுக்கு ரோமக் குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆகவே யூத சமுதாயத்தில் இவனுடைய குடும்பம் மேல் தட்டில் இருந்ததாக தெரிகிறது. பவுல் இயசுவானவரால் தடுதாட் கொள்வதற்கு முன்பு சவுல் என்ற பெயரில் இருந்தான். இவன் சிலிசியா நாட்டிலிருந்த தர்சுபட்டணத்தைச் சேர்ந்த யூதன். இந்த தர்சுபட்டணம் இப்போதைய துருக்கி கடற்கரையில் இருக்கிறது. அக்காலத்தில் மத்தியத் தரைக்கடல் இதன் அருகில் இருந்த தால் அதை தார்சிக்கடல் என அழைத்தனர். அக்கால்த்தில் இந்த பிரதேசம் முழுவதும் ரோம பேரரசின் ஆட்சிக்குள் இருந்தது. அக்காலத்தில் இந்த பிரதேசம் முழுவதும் ரோம பேரரசின் ஆட்சிக்குள் இருந்தது. அக்காலத்தில் ரோமப் பேரரசின் எல்லைலில் எங்கும் யூதர்கள் பரவலாக வாழ்ந்து வந்தனர். (அப்போ 21:30-40)

(I. செந்தமிழ் செல்வி BHEL.14)



அந்தியோகியா:

**21 அந்தியோகியா:**

மகா அலெக்ஸாந்தரின் காலத்திற்குப் பின்பு அவனுடைய சேனாபதிகள் கிரேக்க ராஜ்யத்தை நாலாகப் பிரித்துத் தங்களுக்குப் பங்கிட்டுக் கொண்டனர். அதன்படி

அசீரியா, பாபிலோன் ஆகிய தென்திசை ராஜ்யங்கள் செலுசு (SELUCUS) என்பவரின் வசமாயிற்று. எகிப்திய வடதிசை ராஜ்யங்கள் தொலோமேயு லாகஸ் (PTOLEMYLAGOS) என்பவனின் வசமாயிற்று. மக்கெ தோனியா என்ற கிரேக்க ராஜ்யம் காசாண்டர் (CASSANDER) என்பவரின் வசமாயிற்று. தென் ஐரோப்பாவின் தென் கீழ்பாகங்கள் லிசிமாக்கு (LYSIMACHUS) என்பவனின் வசமாயிற்று. இங்குள்ள சீரியாவின் தலைநகரத்திற்கு அந்தியோகியா என்ற பெயராயிற்று. அதாவது, மக்கேதோனியாவின் அந்தியோகு என்ற பெயர் பெற்ற நான்காவதானவன்: அந்தியோகு எப்பிப்பானே என்பவனே சீரியாவின் தலைநகருக்கு தன் பெயரையிட்டான். மேலும் இஸ்ரவேல் தேசம் இவன் கண்களை உறுத்தினபடியால், அங்கு சென்று யூதர்களை சங்காரம் செய்யத் துவங்கினான். அவர்களை தீ வைத்து கொலை செய்தான். எருசலேம் தேவாலயத்தில் கிரேக்க தேவனின் விக்கிரகத்தை நிறுத்தினான். அங்குள்ள பலிபீடத்தில் பன்றிகளை பலியிட்டு, பன்றி இறைச்சிகளை தின்னும்படி அவர்களை பலவந்தப்படுத்தினான்.

இவன் சின்னக் கொம்பு என்று தானியேல் புத்தகத்தில் இவனைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. இவன் 2300 இராப்பகல் அதாவது, ஆறு வருடங்களும், எண்பது நாட்களும் யூதர்களை மேற்கொண்டு அவர்களைப் பாழாக்கினான். இவன் வரப்போகிற அந்தி கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருந்தான். இவன் மடிந்த பின்பு யூதர்கள் ரோமர்களோடு ஒப்பந்தம் செய்து மார்க்க சுதந்தரம் பெற்றனர். இதனால் யூதர்களுக்கு சீரியாவிலுள்ள அந்தியோகியா அதிக கசப்பாயிற்று, ஆனால் பூதலத்தின் மீட்பு மலர்ந்தபோது, முதல் புறஜாதிகளின் கிறிஸ்தவ சபை, இந்த அந்தியோகியாவில் உதய மாயிற்று, தேவ ஜனங்களை ஒடுக்க முயற்சித்த அந்தியோகு தனக்காக் கட்டினப் பட்டணத்திலிருந்தே தேவ ஜனங்களின் மறுமலர்ச்சி துவங்கியது. முதல் முதல் இங்கு தான் தேவனுடைய சபையாருக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கிற்று. மேலும் யூத தேவ ஜனங்களை பொருளாதார காரியத்தில் தாங்கும் முதல் புறஜாதி சபையாக இருந்தனர்.

மேலும் இங்கிருந்துதான் புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்தப் போகிற அப்போஸ்தலனாகிய பவுலும் பர்னபாவும் ஊழியத்திற்காக அனுப்பப்பட்டனர். புறஜாதிகளையும் ஞான மணவாட்டியாக தேவன் முதலாவது இங்கு தேர்ந்தெடுத்தது, சீரியா தேசத்து லாபானின் சகோதரியாகிய ரெபேக்காளை ஈசாக்குக்குமனைவியாக தேர்ந்தெடுத்த எலியேசரைப் போல, பரிசுத்த ஆவியானவர் இந்த கீர்த்திப்பெற்ற பட்டணத்தைத் திருப்பிக் கொண்டது, அவருடைய மகிகைக்கு ஏற்றதாக இருந்தத என்று கூறலாம்.



இஸ்ரேவல் தேசம் – எருசலேம்

## 22 கானான் (பலஸ்தீனா) இஸ்ரேவல் தேசம்:

இஸ்ரவேல் ஜனங்களைப் போலவே அவர்களுடைய நாடும் பிரத்தியேகமானதாகவும், முழு உலகத்தோடும் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் தேச சுதந்திரத்திற்கு முன்னதாக இது கானான் என்று பெயர் பெற்றிருந்தது. பின்பு இஸ்ரவேல்ர்கள் சிதறடிக்கப் பட்ட பின்பு, ரோமர்கள் இதற்கு பலஸ்தீனா என்று பெயரிட்டனர். பலஸ்தீனா என்றால் பெலிஸ்தியரின் தேசம் என்று அர்த்தம். மத்திய தரைக்கடல் ஓரமாயுள்ள பெலிஸ்தியரின் தேசம் இதற்கு சமீபமாக இருந்ததால் இப்பெயர் பெற்றது. இந்த இஸ்ரேல் தேசத்திற்கு துறைமுகமோ, சிறப்பான நதிகளோ, நில வசதிகளோ ஒன்றும் இல்லாதிருந்தும் உலக ராஜ்யங்களின் கண்களை உறுத்தக்கூடிய தேசமாக இருந்தது. இதன் வரலாறு துவக்க முதல் இன்று வரை பல தேசத்தார்களால் இத்தேசம் பிடிக்கப்பட்டு சீரழிந்திருக்கிறது காரணம்: ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய முப்பெரும் கண்டங்களின் இருதயமாக விளங்கும் பாகத்தில் இத்தேசம் பல தேசங்களை இணைக்கும் பாலமாக அமைந்தது. இதனால் இத்தேசத்தைக் கடந்து போகிறவர்கள். இதன் செழிப்பில் மயங்கி, இதைப் பிடிக்க முயற்சித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. முப்பெருங் கண்டங்களுக்கு மையமாகவும் அடைக்கப்பட்ட திராட்சத் தோட்டத்தைப் போலவும் விளங்கும் இத்தேசம் பரலோகத்தின் தேவனால் இஸ்ரவேலுக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது. அக்கால தொட்டு இன்றுவரை உலகம் அறியவில்லை அதனால் வல்லரசுகளாகிய அசீரியர்,பாபிலோனியர், எகிப்தியர், பெர்சியர், கிரேக்கர், ரோமர், இக்கால நானா வித தேசங்கள் அந்த தேசத்தை ஆளுகை செய்ய முயற்சித்து தோல்வியடைந்தனர்.



## 23 நோவாவின் பேழை:

ஜலப் பிரளயத்திற்கு முந்திய காலத்து மக்களின் திறமையானது நோவா கட்டின பேழையில் சிறந்து விளங்கியது. அந்த மரக்கலம் மகா பெரியது என்பதைக் கவனிக்கவும். அது சுமார் 450 அடி நீளமும், 150 அடி அகலமும், 45 அடி உயரமுமாயிருந்தது. 30 லட்சம் கன அடியுள்ளது. எனவே அந்தப் பேழை தற்கால பெரிய கப்பல்களைப் போன்று பெரிது எனலாம். கி.பி.1609ம் ஆண்டில் பீட்டர் ஜான்சன் என்பவர் ஹாலந்து தேசத்தில் நோவாவின் பேழையைப் போன்றதும் அதில் மூன்றில் ஒரு பங்கு அளவானதுமான மரக்கலம் ஒன்றை கட்டுவித்தார். அம் மரக்கலம் மற்ற கப்பல்களைப்போல வேகமாகச் செல்ல

இயலாவிடிலும் அதன் அளவான மற்ற கப்பல்களில் ஏற்றக்கூடிய சரக்கைக் காட்டிலும் அதில் மூன்றில் ஒரு பங்கு அதிகமான பொருள்கள் ஏற்றக் கூடியதாயிருந்தது. நோவா கட்டின பேழையானது யாத்திரை செய்யதற்கல்ல; பாரம் ஏற்றிச் செல்வதற்கே என்பது கவனிக்கத்தக்கது. 1955ம் ஆண்டு ஜூலை திங்கள் 5ம் நாளில் பெர்னாந்த் நவரா FERNAAND NAVARAஎன்னும் பிரெஞ்சுக்காரரும் அவரது 11 வயதுடைய மகனான ராபேலும் RAPHAEL அரராத் மலை ஏறிச் சென்றனர். இறுதியில் அதன் கொடுமுடியிலிருந்து 3000 அடி தூரத்தில் நோவாவின் பேழையைக் கண்டுபிடித்தனர். அவருடைய கணக்குப்படி அப்பேழையில் எஞ்சியிருக்கும் பாகம் ஏறத்தாழ 500 அடி நீளமுள்ளதாகவும், பனிக்கட்டியின் படலத்தினால் சிதைந்ததாகவும் காணப்பட்டதும். அவர்கள் அதிலிந்து 50 இராத்தல் எடையுள்ள மூன்று மரத் துண்டுகளை வெட்டினர். அதைக் கொண்டு வந்து பிரபலமான அநேக ரசாயனக் கூடங்களில் ஆராய்ச்சி செய்தன் பலனாக அம்மரத்துண்டுகள் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்டதாக கருதப்படும் ஒருவகை மரத்திலுள்ளவைகளென்று முடிவு செய்யப்பட்டது.



## 24 விருட்சங்கள்: (ஏதேன்) (ஆதி2:9):

பூமிக்குரிய ஏதேன் தோட்டத்தில் இரு விசேஷித்த விருட்சங்கள் இருந்தன.

**ஜீவவிருட்சம்:** இதன் கனியைப் புசித்தவர்கள் சாவதில்லை. ஆதாமும், ஏவாளும் இக்கனியை முதலில் புசித்து இருப்பார்களேயானால் இன்றும் உயிரோடு இருந்திருப்பபார்கள். ஆனால் அவர்கள் புசியாதபடிக்கு அங்கிருந்து துரத்திவிடப்பட்டு தோட்டத்திற்கு கேரூபீன்களைக்கொண்டு காவல் செய்யப்பட்டது.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்: இதன் கனியை சாத்தானின் ஏவுதலால் ஏவாளும் ஆதாமும் புசித்தபோது, உலக ஞானத்தைப் பெற்றார்கள். ஆனால் தேவபிரசன்னதை இழந்தார்கள். சாவுக்குட்பட்டார்கள். அவர்கள் தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தம் பாவிகளாக்கப்பட்டார்கள். அவர்கள் ஜென்ம பாவம் அவர்களுடைய சந்ததியை தொடர்ந்து பிடித்தது. அவர்கள் நிமித்தம் உலகமும் சாபத்திற்குட்பட்டது.

இந்த இரண்டு விருட்சங்களும் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய மகாப்பெரிய திட்டங்களை உள்ளடக்கிக் கொண்டு நிற்கிறது. கவனியுங்கள்.

| ஜீவவிருட்சத்தின் கனி | நன்மை தீமை அறியத்தக்கவிருட்சத்தின் கனி: |
|---|---|
| ஆதி 3:22-24-வெளி 2:7 இது கிறிஸ்துவைக் காட்டுகிறது | ஆதி 2:16,17 ரோம 2:17,18 இது நியாயப் பிரமாணத்தைக் காட்டுகிறது. |

நன்மை தீமை விருட்சத்தின் கனியால் சாவுக்குட்பட்டவர்களை ஜீவ விருட்சத்தின் கனியில் உயிர்ப்பிக்கிறது போல நியாயப்பிராமாணத்தினால் சாவுக்குட்பட்டவர்களை, கிறிஸ்துவின் மீட்பினால் உயிர்பிக்கப்படுகிறார்கள். மேலும் ஏவாளும், ஆதாமும் முதலில் நன்மை தீமை அறியக் தத்தக்க விருட்சத்தின் கனிகளையே தெரிந்து கொண்டதினால் முதலில் நியாயப் பிரமாணமே கொடுக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கதாகும்.



## 25 பாபிலோன் (ஆளுகையின் முடிவு):

(கையுறுப்பு எழுதிய சுவற்றின் எழுத்துக்கள், தானி 5:24-28)

MENA MENE TEKEL UPHARSIN
மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்
PERES-பெரேஸ்

- மெனே மெனே என்றால் எண்ணும் அளவான இராத்தல் முறைப் படி பாபிலோனுக்கு கொடுக்கப்பட்ட எழுபது வருஷங்களின் ஆளுகை எண்ணிக்கை அளவில் முடிந்தது.
- தெக்கேல் என்றால் சேக்கல் (SHEKEL) என்ற நிறுவையின் அளவுப்படி,பாபிலோன் ராஜ்யத்தில் தேவன் எதிர்பார்த்த அளவு நிறைவாக காணப்படாமல் குறைவாக இருந்தது.
- உப்பார்சின் என்றால் இராத்தலைப்பிரி என்பதாகும் அதாவது 1/2 இராத்தல்
- பெரேஸ் என்றால் பாபிலோன் ராஜ்யம் மேதியருக்கும், பெர்சியருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்பதாகும்.

## 26 பாபிலோன் (ராஜ்யத்தின் முடிவு):

கி.பி. 70ல் தீத்து இராயனால் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டபோது அங்கிருந்து தப்பிய யூதர்கள் பாபிலோனுக்கு ஓடி அங்கு அடைக்கலமடைந்தனர். அங்கும் ரோமர்கள் படைபெயடுத்துச் சென்று, அப்பட்டணத்தை முற்றிகையிட்டு, அவர்களை சின்னபின்ன மாக்கினர். பின்பு பாபிலோன் பட்டணத்தையும் தரைமட்டமாக இடித்துப்போட்டனர். அன்று முதல் இன்றுவரைக்கும் பாபிலோன் பாழடைந்த மண் மேடுகளாக காட்சியளிக்கிறது. அந்தப் பக்கம் யாத்திரை செய்யும் அரபியன் கூட அங்கு தங்கி தரிக்க விரும்புவதில்லை (ஏசா.13:19,20)

# 27.பூமியின் காலங்கள்!









| | | | |
|---|---|---|---|
| ஆதி | 5:1–3 | ஆதாம் | 130 |
| | 6 | சேத் | 105 |
| | 9 | ஏனோஸ் | 90 |
| | 12 | கேனான் | 70 |
| | 15 | மகலாலெயேல் | 65 |
| | 18 | யாரேத் | 162 |
| சேத் முதல் யாரேத் வரை உள்ள வருசங்கள் | | | 492 |

1

| | | | |
|---|---|---|---|
| ஆதி | 5:22 | ஏனோக்கு | 300 |
| | 28 | லாமேக் | 182 |
| | 32 | நோவா | 500 |
| | | ஏனோக் முதல் நோவா வரை | 982 |

இரண்டு 490 வருசங்கள்

2

3

| | | |
|---|---|---|
| ஆதி | 11:10 | சேம் |
| | 12 | அர்பக்சாத் |
| | 14 | சாலா |
| | 16 | ஏபேர் |
| | 18 | பேலேகு |
| | 20 | ரெகு |
| | 22 | செருகு |
| | 24 | நாகோர் |
| | 26 | தேராகு |
| ஆதி | 21:5 | ஆபிரகாம் |

4

சேம் முதல் ஆபிரகாம் முடிய உள்ள வருடங்கள்




சேம் ஆதியா 1

ஏலாம் – பெர்சிய
அசூர் – அசீரிய
லூத் – லீடியர்
ஆராம் – சீரியர்

காம்

ஆதியா 10:6–15 கூஷ் – நிம்ரோத் – பாபிலோனி

மிஸ்ராயீம் – எகிப்தியர், எத்தியோப்பியர், ஆப்ரிக்
பூத் – பூத்தியர், லீபியர்
கஸ்லுகிம் – பெலிஸ்தியர்
கானான் – காமியர் அல்லது கானானியர். (ஏழு
ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், செ

**COPY RIGHT**
**S.SAKTHI DEVADOSS**
**125-19/2, IInd STREET,**
**DEVARAYAR NAGAR,**
**K.K.NAGAR ROAD,**
**TRICHY - 21.**

யாப்பேத்

ஆதி 10:2–4 யாவான் – கிரேக்கர் → → → →

மேசேக்கு – ரோமர் → → → →

கோமர் – ஆங்கிலேயர், பிரிட்டானியா, இங்கிலாந்து, ஹங்கேரியா,
தீராஸ் – ஐரோப்பியர் – துருக்கி, ஐரோப்பா, அமெரிக்கா. →
மாகோகு – ருஷ்யர் – நார்வே, போலண்ட் → → →
மாதாஸ் – மேதியர். → → → → → →
தூபால் – ஜெர்மானியர் – ஹாலண்ட், ஜெர்மனி, அயர்லாந்து, வால்

# இஸ்ரவேலின் 7 x 490 = வருடங்கள்







...தி 25:26
...த் 12:40, 41

ஈசாக்கு
யாக்கோபும்,
இஸ்ரவேலர்களும்
ஈசாக்கு முதல்
இஸ்ரவேலர்கள்
எகிப்தில் குடியிருந்து
விடுதலையானது
வரையுள்ள வருடங்கள்

| | |
|---|---|
| | 60 |
| | 430 |
| | 490 |

**5**

40 வருட இஸ்ரவேல பயணம்
* யோசுவா
* நியாதிபதிகள்
* சாமுவேல்
1 ராஜா * சவுல்
* தாவீது

| | | |
|---|---|---|
| 6:1 | எகிப்து முதல் சாலொமோன் வரை ஆட்சித் தொடர்ச்சி | 480 |
| 38 | ஆலயத்தை கட்டி முடித்தல் | 3 |
| | இஸ்ரவேல் விடுதலை முதல் | 7 |
| | சாலமோன் வரையுள்ள வருடங்கள் | 490 |

**6**

| | | |
|---|---|---|
| 11 நாளா 9:30, 11 | சாலொமோன் | 40 |
| 12:13, 14 | ரெகொபெயாம் | 17 |
| 13:1, 2 | அபியா | |
| 14:1 | | 3 |
| 16:13 | ஆசா | |
| 17:1 | | 40 |
| 20:31 | யோசபாத் | 25 |
| 21:1–5 | யோராம் | 8 |
| 22:1, 2 | அகசியா | 1 |
| 11 | | |
| 24:1 | யோவாஸ் | 40 |
| 24, 27 | அமத்சியா | 29 |
| 25:1 | | |
| 26:1–3 | உசியா | 52 |
| 23 | | |
| 27:1 | யோதாம் | 16 |
| 9 | | |
| 28:1 | ஆகாஸ் | 16 |
| 27 | | |
| 29:1 | எசேக்கியா | 29 |
| 32:33 | | |
| 33:1 | மனாசே | 55 |
| 20, 21 | ஆமோன் | 2 |
| 25 | யோசியா | 31 |
| 36:1–5 | யோயாக்கீம் | 11 |
| 11 | சிதேக்கியா | 11 |
| 21 | பாபிலோன் சிறையிருப்பு | 70 |
| | | 496 |

சாலொமோன் முதல் பாபிலோன் சிறையிருப்பு வரையுள்ள வருடங்கள் 490

...ம், அர்பக்சாத், ஆபிரகாம், எபிரேயர், இஸ்ரவேல், யூதர்

**7**

வம்சங்களும் – பேரரசுகளும்!

...ர், இந்தியர், சீனர், ஜப்பானியர், பர்மியர்

மாதாய் – மேதியர்

...பியர், எபூசியர்

...ந்து, பிரான்ஸ்.

...லாந்து.



தலை – பாபிலோனிய அரசு

புயம் – மேதிய, பெர்சிய அரசுகள்

இடுப்பு – கிரேக்க அரசு

கால்கள் – ரோம அரசு

பாதங்கள் – புறஜாதிகள் அரசு

# திருமறைக்களஞ்சியம்

## 28. கி.மு. வருசங்கள்

அதிகாரப்பூர்வமான வருசங்களை, வேதாகமத்தின் வசனங்களோடு ஒப்பிட்டு காட்டப்பட்டிருப்பதோடு, இஸ்ரவேலர்களின் ஏழு நானூற்றி தொன்னூறு வருசங்களும், புறஜாதி அரசர்களின் ஒரு நானூற்றி என்பத்திமூன்று வருசங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| அதிகாரங்களும் வசனங்களும் | பெயர் | வேதாகம வருசங்கள் | கி.மு. வருசங்கள் |
|---|---|---|---|
| ஆதி 5:1-3 | ஆதாம் | 130 | 4019 |
| 6 | சேத் | 105 | 3889 |
| 9 | ஏனோஸ் | 90 | 3784 |
| 12 | கேனான் | 70 | 3694 |
| 15 | மகலாலெயேல் | 65 | 3624 |
| 18 | யாரேத் | 162 | 3559 |
| | சேத்முதல் யாரேத் வரை உள்ள வருசங்கள் | 492 | |
| 22 | ஏனோக்கு | 300 | 3397 |
| 28 | லாமேக் | 182 | 3097 |
| 32 | நோவா | 500 | 2915 |
| | ஏனோக் முதல் நோவா வரை | 982 | |
| | இரண்டு 490 வருசங்கள் | | |
| ஆதி 11:10 | சேம் | 100 | 2415 |
| 12 | அர்பக்சாத் | 35 | 2315 |
| 14 | சாலா | 30 | 2280 |
| 16 | ஏபேர் | 34 | 2250 |
| 18 | பேலேகு | 30 | 2216 |
| 20 | ரெகு | 32 | 2186 |
| 22 | செருகு | 30 | 2154 |
| 24 | நாகோர் | 29 | 2124 |
| 26 | தேராகு | 70 | 2095 |
| ஆதி 21:5 | ஆபிரகாம் | 100 | 2025 |
| | சேம் முதல் ஆபிரகாம் முடிய உள்ள வருசங்கள் | 490 | |
| ஆதி 25:26 | ஈசாக்கு | 60 | 1925 |
| யாத் 12:40,41 | யாக்கோபும், இஸ்ரவேலர்களும் | 430 | |
| | ஈசாக்கு முதல் இஸ்ரவேலர்கள் எகிப்தில் குடியிருந்து விடுதலையானது வரையுள்ள வருசங்கள். | 490 | |
| | 40 வருச இஸ்ரவேல் பயணம் | | 1435 |
| | ❖ யோசுவா | | |
| | ❖ நியாதிபதிகள் | | |
| | ❖ சாமுவேல் | | |
| | ❖ சவுல் | | |
| | ❖ தாவீது | | |
| 1 ராஜா 6:1 | எகிப்து முதல் சாலொமோன் வரை ஆட்சித் தொடர்ச்சி | 480 | |
| 38 | ஆலயத்தை கட்டி முடித்தல் | 3 | |
| | இஸ்ரவேல் விடுதலை முதல் | 7 | |
| | சாலமோன் வரையுள்ள வருசங்கள் | 490 | |
| II நாளா 9:30,31 | சாலொமோன் | 40 | 945 |
| 12:13,14 | ரெகொபெயாம் | 17 | 905 |
| 13:1,2 | அபியா | | |
| 14:1 | | 3 | 888 |
| 16:13 | ஆசா | | |
| 17:1 | | 40 | 885 |
| 20:31 | யோசபாத் | 25 | 845 |
| 21:1-5 | யோராம் | 8 | 820 |
| 22:1,2 | அகசியா | 1 | 812 |
| 11 | | | |
| 24:1 | யோவாஸ் | 40 | 811 |
| 24, 27 | அமத்சியா | 29 | 771 |
| 25:1 | | | |
| 26:1-3 | உசியா | 52 | 742 |
| 23 | | | |
| 27:1 | யோதாம் | 16 | 690 |
| 9 | | | |

| அதிகாரங்களும் வசனங்களும் | பெயர் | வேதாகம வருசங்கள் | கி.மு. வருசங்கள் |
|---|---|---|---|
| 28:1 | ஆகாஸ் | 16 | 674 |
| 27 | | | |
| 29:1 | எசேக்கியா | 29 | 658 |
| 32:33 | | | |
| 33:1 | மனாசே | 55 | 629 |
| 20,21 | ஆமோன் | 2 | 574 |
| 25 | யோசியா | 31 | 572 |
| 36:1-5 | யோயாக்கீம் | 11 | 541 |
| 11 | சிதேக்கியா | 11 | 530 |
| 21 | பாபிலோன் சிறையிருப்பு | 70 | 519 |
| | சாலொமோன் முதல் பாபிலோன் சிறையிருப்பு | 495 | |
| | வரையுள்ள வருடங்கள் 490 இவைகளில் | | |
| | ❖ நேபுகாத்நேச்சார் | | |
| | ❖ ஏவில் மெரொதாக் | | |
| | ❖ பெல்ஷாத்சார் | | |
| | ❖ தரியுவின் மேதிய ராஜ்யத்தின் ஒரு வருட காலமும்உட்படும். | | |
| தானி 9:24-27 | பெர்சியரின் 7 வாரமென்ற 49 வருசங்கள் 49 யூபிலிவருசம் | 49 | |
| | பெர்சிய ராஜ்யங்கள்? | 200 | 249 |
| I மக்க 1:1-8 | கிரேக்க ராஜ்ய ஸ்தாபிதமும் மகா அலெக்ஸாந்தரும் ராஜ்ய வருசங்கள் | 1-12 | 248 |
| 1 மக்க 1:11 1 | அந்தியோகு எப்பிபானே எழுச்சி | 137 | 112 |
| 21 | அந்தியோகு இஸ்ரவேலை தாக்குதல் | 143 | 107 |
| 57 | அந்தியோகுவின் அருவருப்பு | 145 | 105 |
| 2:70 | மத்தத்தியாஸ் மரணம் | 146 | 104 |
| 3:37 | அந்தியோகு மேதியா படையெடுப்பு | 147 | 103 |
| 4:52 | யூதாஸ் மக்கபேயு தேவாலயத்தை புதுப்பித்தல்யூதாஸ், ரோமர் உடன்படிக்கை | 148 | 102 |
| 6:16 | அந்தியோகு மரணம் | 149, | 100 |
| 7:1 | தெமெத்திரீஸ் | | |
| | II அந்தியோகுவை கொலை செய்தல் | 151 | 98 |
| 9:1-18 | யூதாஸ் மக்கபேயு மரணம் | 152 | 97 |
| 54 | ஆல்சிமுஸ் யூதர்களுக்கு துரோகம் பண்ணுதல் | 153 | 96 |
| 10:1 | II அந்தியோகுவின் மகன் | | |
| | II அலெக்ஸாந்தர் தோலெமாயிதைப் பிடித்தல் | 160 | 89 |
| 10:55-58 | எகிப்து அரசன் தெமெத்திரியுஸின் மகள் கிளியோபாத்திராவை II அலெக்ஸாந்தர் விவாகம் பண்ணுதல் | 162 | 87 |
| 67 | எகிப்து அரசனின் மகன் | | |
| | II தெமெத்திரியுஸின் எழுச்சி | 165 | 84 |
| 11:19 | II தெமெத்திரியுஸ் சிங்காசனம் ஏறுதல் | 167 | 82 |
| 13:41 | இஸ்ரவேல் கிரேக்க அரசிடமிருந்து விடுதலை பெறுதல் | 170 | 79 |
| 51 | இஸ்ரவேல் வெற்றி விழா | 171 | 78 |
| 14:1, | 27 II தெமெத்திரியுஸ் மேதியாவில் சிறையாகுதல் இஸ்ரவேல் அறிக்கை | 172 | 77 |
| 15:10-14 | IV அந்தியோகு எழுச்சி | 174 | 75 |
| 16:11-17 | சிமோனும் அவன் குமாரர்களும் கொலை செய்யப்படல் | 177 | 71 |
| | II மக்கெ. 1:10 மக்கபேயு ஆகமம் எழுதுதல் | 188 | 60 |
| | ரோமர்களின் எழுச்சி? | 200 | 48 |
| லூக் 2:1,2 | அகுஸ்துராயன் கட்டளை | 2 | 2 |
| | இயேசுவின் பிறப்பு (மத் 2:16) | 2 | கி.பி.30 |
| 3:23 | இயேசுவானவர் ஞானஸ்நானம் | | |
| 4:16 | நாசரேத் ஜெபஆலயத்தில் வாசிப்பு | 30 | |
| தானி 9:26,27 | சிலுவை மரணம் | | $33.^1/_2$ |
| மாற் 15:15 | இடையே 2000 வருடங்கள் அனுக்கிரக | 483 | |
| | வருசங்கள் மீதி ஒருவாரமாகிய | 7 | |
| | மொத்த வருசங்கள் | 490 | |

## 29. ஆதாம் முதல் நோவா வரையுள்ள வயது அட்டவணை

| | | ஆதாம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதி 5:5 | ஆதாம் | 930 | | | | | | | | | | ஆதி 5:5 | 930 |
| 3 | ஆதாம் | 130 | சேத் | | | | | | | | | 8 | 912 |
| 5 | சேத் | 235 | 105 | ஏனோஸ் | | | | | | | | 11 | 905 |
| 9 | ஏனோஸ் | 325 | 195 | 90 | கேனான் | | | | | | | 14 | 910 |
| 12 | கேனான் | 395 | 265 | 160 | 70 | மகலாலெயேல் | | | | | | 17 | 895 |
| 15 | மகலாலெயேல் | 460 | 330 | 225 | 135 | 65 | யாரேத் | | | | | 20 | 962 |
| 18 | யாரேத் | 622 | 492 | 387 | 297 | 227 | 162 | ஏனோக் | | | | 23 | 365 |
| 21 | ஏனோக் | 687 | 557 | 452 | 362 | 292 | 227 | 65 | மெத்தூசலா | | | 27 | 969 |
| 25 | மெத்தூசலா | 874 | 744 | 639 | 549 | 479 | 414 | 252 | 187 | லாமேக்கு | | 31 | 777 |
| 28,29 | லாமேக்கு | - | - | 821 | 731 | 661 | 596 | - | 369 | 182 | நோவா | ஆதி 7:6 | 600 |
| 32 | நோவா | - | - | - | - | - | - | - | 869 | 682 | 500 | சேம்காம் யாப்பேத் | ஜல பிர |

## 30 நோவா முதல் ஆபிரகாம் வரையுள்ள வயது அட்டவணை

| | | நோவா | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதி 5:32 | நோவா | 500 | சேம் | | | | | | | | | |
| 11 : 10 | சேம் | 600 | 100 | அர்பக்சாத் | | | | | | | | |
| 12 | அர்பக்சாத் | 635 | 135 | 35 | சாலா | | | | | | | |
| 14 | சாலா | 665 | 165 | 65 | 30 | ஏபேர் | | | | | | |
| 16 | ஏபேர் | 699 | 199 | 99 | 64 | 34 | பேலெகு | | | | | |
| 18 | பேலெகு | 729 | 229 | 129 | 94 | 64 | 30 | ரெகூ | | | | |
| 20 | ரெகூ | 761 | 261 | 181 | 126 | 96 | 62 | 32 | செரூகு | | | |
| 22 | செரூகு | 791 | 291 | 191 | 156 | 126 | 92 | 62 | 30 | நாகோர் | | |
| 24 | நாகோர் | 820 | 320 | 220 | 185 | 155 | 121 | 91 | 59 | 29 | தேராகு | |
| 26 | தேராகு | 890 | 390 | 290 | 255 | 225 | 191 | 161 | 129 | 99 | 70 | ஆபிரகாம் |
| 9 : 29 | நோவா | 950 | 450 | 350 | 315 | 285 | 251 | - | 189 | - | 130 | 60 |

குறிப்புகள் :

- நோவா பின் தலைமுறைகளில் சேம் வம்சத்தில் ஆபிரகாம் வரை எல்லாரையும் பார்த்தான்.
- நோவா மரணத்திற்குப்பின் தேராகு கல்தேயர் தேசம் விட்டு புறப்பட்டான் ; ஆரானுக்கு வந்து 15 வருடங்கள் தங்கினான்
- ஆரானைவிட்டு ஆபிரகாம் 75 வயதில் கானான் தேசம் புறப்பட்டான் ( ஆதி 12:4)
- ஆபிரகாமின் பூமிக்குரிய சுதந்திர சந்ததிகள் (எபி. 11:8,9)
  ஆபிரகாமுக்கு 175 வயதாகும்போது ஈசாக்கு 75 வயது, யாக்கோப்பு 15 வயது
- ஆபிரகாமின் வருசங்கள் :

| | | |
|---|---|---|
| முன்னோர்களோடு | 75 | வருசங்கள் |
| கர்த்தரோடு | 25 | வருசங்கள் |
| பின்னோர்களாடு | 75 | வருசங்கள் |
| ஆக | 175 | வருசங்கள் |

# ஞானக்களஞ்சியம்

**14 பொக்கிச சாலை:** தாவீதுராஜாவின் அரண்மனை “ஏலா பள்ளத்தாக்கு” என்ற இடத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் ஹீப்ரு பல்கலைகழக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இஸ்ரேல் தொல்பொருள் துறையும் இணைந்து தாவீதின் அரண்மனை கட்டிடங்களுள் இரண்டு பொது கட்டிடங்களை கண்டறிந்துள்ளனர். ‘கிர்பாத் கியாபா’ என்று அழைக்கப்படும் இந்த இடத்தில் இந்த அரண்மனை கட்டிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்த இடம் எருசலேமில் இருந்து தென்மேற்கு திசையில் 30கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இந்த இரண்டு கட்டிடங்களில் ஒரு கட்டிடமானது தாவீதின் அரண்மனை என்று ஹீப்ரு பேராசிரியர் ‘யோசி கார்பின்கல்’ மற்றும் திரு.சார்கானோர் (இஸ்ரேல் தொல்லியல் துறை) ஆகியோரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்ற ஒரு கட்டிடமானது மாபெரும் அரச சேமிப்பறையாக காணப்படுகிறது. தாவீது ராஜாவின் காலத்திய வேதாகம நகரமான ‘செராயிம்’ பட்டிணத்தோடு சேர்ந்ததுதான் இந்த ‘கிர்பாத் கியாபா’ பட்டிணமாகும். கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக நிகழ்ந்து வந்த இந்த அகழ்வாராய்ச்சி பணி இப்போது முடியும் தருவாயில் உள்ளது. இந்த அரண்மனையை சுற்றிலும் காணப்பட்ட அறைகளில் உலோக தொழில் கூடங்கள் இருந்ததற்கான சான்றுகள் மட்பாண்ட பாத்திரங்கள் மற்றும் எகிப்தில் இருந்து கொண்டு வந்த பளிங்கு பாத்திரங்கள் முதலானவையும் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த அரண்மனை மற்றும் சேமிப்பறைகளின் கட்டுமானம் தாவீதின் காலத்திய நிர்வாக அமைப்பிற்கான சான்றுகள் இருப்பதை தெரியப்படுத்துகிறது. இந்த கண்டுபிடிப்பு தாவீது ராஜ்ஜியம் இருந்ததற்கான தெளிவான வரலாற்று ஆதாரம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

நன்றி -வெளியுறவு துறை இஸ்ரேல்
தமிழாக்கம் (18 ஜுலை 2013)
S. ஜீவன்ராஜ்

**15 அதோனிராம் ஜட்சன்:** இவர் மல்தேனிலுள்ள மாசாசூசெட்ஸ் என்ற இடத்தில், 1788ல் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஒரு போதகர். இவர் பிரௌன் பல்கலை கழகத்தில் பயின்ற போது நாத்தீகனாக மாறினார். இவர் தனது படிப்பை முடித்தவுடன் நாடாக நடிகனாக மாறினார். இவர் தன்னுடைய நெருங்கிய நாத்தீக நண்பன் ஒருவனின் மரணத்தால் பயமடைந்து, தன் தகப்பனார் தனக்கு உபதேசித்தக் காரியங்களை நினைத்து தேவ நம்பிக்கைக்குள் வந்தார். பின்பு 1808 டிசம்பர் மாதத்தில் தன் ஆண்டவரின் மீட்பைப் பெற்றார். 1812ல் மேரி ஹசில் டைன் என்பவரை மணந்தார். பின்பு மிஷனெரியாக இந்தியாவுக்கு வந்தார். கல்கத்தாவில் வைத்து மிஷனெரி வில்லியம் கேரியால் தானும், தன் மனைவியும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு, பர்மாவிலுள்ள ரங்கூனுக்கு மிஷனெரியாகச் சென்றார். இவரே பர்மிய மொழியில் பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்த்து வெளியிட்டவர். அக்காலத்தில் பர்மாவுக்கும் பிரிட்டிஸ்கும் யுத்தம் நடந்த படியால், இவர் ஏறக்குறைய இரண்டு வருசங்கள் சிறையிலடைக்கப்பட்டார். மிஷனெரிகளெல்லாம் ஒற்றர்கள் என்று கருதினபடியால், பர்மிய அரசு அவரை சிறையிலடைத்தது. இவர் விடுதலையடைந்த பின்பு, இவரின் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. நூற்றுக் கண்க்கானோர் இரட்சிக்கப்பட்டனர். இவர் தன்னுடைய 62 வது வயதில் 1850ல், ஒரு கடல் யாத்திரை செய்யும் போது, சுகவீனத்தால் மரணமடைந்து, கடலிலே அடக்கம் பண்ணப்பட்டார்.

**16 விரோதமில்லாமை:** டி.எல்.மூடி பிரசங்கியார் தனக்கு இடையூறு பண்ணுகிறவர்கள் மேல், அவருக்கு எந்த வித விரோதமும் இல்லாதிருந்தது. அவருடைய கூட்டங்களில் யாராவது ஒருவன்; தொல்லை கொடுப்பகற்கென்றே வருவதுண்டு. ஒரு நாள் கூட்டம் முடிந்ததும் மூடி வாசலண்டைக்கு வந்து, எல்லாரோடும் கை குலுக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது தொல்லை கொடுத்து வந்த ஒருவன் அவரிடம் வந்த போது அவர்: இயேசு கிறிஸ்து கடைசி விருந்தை துரோகியான யூதாஸ் காரியோத்தோடு ஆசரித்தார். அப்படியானால் நான் ஏன் உன்னுடன் கை குலுக்கக் கூடாது என்று சொல்லி, அவனுடன் கை குலுக்கினார்.

**17 வீரமாமுனிவர்:** இவர் மேனாட்டவர், இத்தாலிய நாட்டிலுள்ள காஸ்திகிலியோ என்று ஊரில் 1680 ஆம் ஆண்டு பிறந்தார். கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி என்பது அவரது இயற்பெயர். அவர் 1706 ஆம் ஆண்டு கத்தோலிக்கக் கிறிஸ்தவ போதகராக பட்டம் பெற்றார். 1708ம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு வந்தார். திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் திருப்பணிகள் செய்தார். தக்க ஆசிரியர்களிடம் தமிழ் மொழியைப் பயின்று கவி பாடும் ஆற்றல் பெற்றார். 1726ம் ஆண்டில் தேம்பாவணியைப் பாடினார். 1729-ல் அதற்கோர் உரையும் எழுதினார். அது முப்பெருங் காண்டங்களையும் முப்பத்தாறு படலங்களையும் 3615 விருத்தப்பாக்களையும் கொண்டது.

இக்காப்பியம் தவிர வேத விளக்கம், சித்தேரி அம்மன் அம்மானை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அடைக்கலமாலை, திருக்காவலூர் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, பரமார்த்த குரு கதை முதலிய நூல்களையும் இயற்றினார். தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலையும், சதுரகராதியையும் இயற்றியவர் இவரே திருக்குறளை இலத்தீன் மொழியில் இவர் பெயர்த்தெழுதினார். (சதுரகராதி பார்க்கவும்)

**18 யாழ்ப்பாணம் :** (லூக் 10:39, யோவா 12:3)

"வீசும் கமிழ் கொண்ட வாசனை தைலத்தை
ஆசையுடன் மரிப்பூசிப் பணிந்த-பெற்ற
பாதம் ஒன்றே வேண்டும்"

இது ஒரு யாழ்ப்பாணபாடல், ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தார் கர்த்தரின் பாதங்களில் அமர்ந்து தங்களுக்குரிய நல்ல பங்கை பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு இந்தப்பாட்டு ஒரு சான்று ஆகும். கடந்த நூற்றாண்டிலிருந்து இன்றுவரைக்கும் இந்தப் பாடல் தமிழக மெங்கும் பாடப்படுகிறது. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் இந்தப் பாடலை படிப்பதற்கு அங்கு யாரும் இல்லை. காரணம் தங்களுக்குரிய நல்ல பங்கை தங்கள் ஆண்டவரின் பாதத்தில் தேடாததினால் தங்களுடைய உலக வாழ்க்கையைக் கேடாக்கி, மறுமையை இழந்தார்கள்.

**19 ஒய்.எம்.சி.ஏ.** (Y.W.C.A.):

துணிக் கடையொன்றில் எழுத்தராகப் பணியாற்றிய சகோ ஜார்ச் வில்லியம்ஸ். லண்டன் மாநகரில் கட்டுப்பாடின்றி, கவனிப்பார் இன்றி வாழும் சில இளைஞர்களைக் கவனிக்கிறார். கிராமப்புறங்களிலிருந்து பட்டணத்திற்குப் பிழைக்க வந்த அந்த இளைஞர்களுக்கு ஒரு விடுதி ஏற்படுத்த வேண்டுமென்ற சிறிய விதை அவரது உள்ளத்தில் விழுகின்றது. நண்பர்கள் 11 பேரும் அவருமாகச் சேர்ந்து, இளைஞர்கள் வசதியாக ஒழுக்கத்தோடு தங்கி வாழ ஒரு விடுதி அமைக்கிறார்கள். இதுவே YWCA பிறந்த கதை. சிறு விதையிலிருந்து இன்று பெரிய மரமாக உலக இயக்கமாக வளர்ந்து விட்டது YWCA.

**20 உயர்வு : (யாக் 4=10)**

* சிறையில் கிடந்த யோசேப்பு எகிப்தியின் அதிபதியாக உயர்த்தப்பட்டு தன் குடும்பத்தாருக்கு கோசேன் பட்டணத்தை சுதந்திரமாகக் கொடுத்தான்.
* ஆடுகளை மேய்த்த தாவீது இஸ்ரவேலின் அரசனாக உயர்த்தப்பட்டு 40 வருஷங்கள் அரசாட்சி செய்தான்
* கைதிகளாக கொண்டு போகப்பட்ட தானியேல், சாத்ராக், மேசாக், ஆபேத்நேகோ பாபிலோன் தேசத்தின் அதிபதியாகவும், மாகாண விசாரிப்புக்காரர்களாகவும் உயர்த்தப்பட்டனர்.
* எஸ்றா, நெகேமியா, மொர்தெக்காய் போன்றோர்களும் இவ்விதமாக உயர்வு பெற்றனர்.
* செம்படவர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயா, ஆயக்காரனாகிய மத்தேயு போன்றோர்கன் அப்போஸ்தலர்களாக உயர்வு பெற்றனர். இவர்கள் எழுதிய புத்தகங்களைப் பற்றிய ஆராய்ச்சி இன்றைய வரைக்கும் முடியவில்லை.
* செறுப்புக்கடையில் பணியாற்றி வில்லியம் கேரி, கல்கத்தாவில் உள்ள செறாம்பூரில் உலக பிரசித்திப் பெற்ற பல்கலைகழகத்தை உருவாக்கவும் இந்திய மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தை திருப்பி வெளியிட்டு அழியாப் புகழும் உயர்வும் பெற்றார்.
* மாடுகள் மேய்க்கும்படியாக அனுப்பப்பட்ட DLமூடி பிற்காலத்தில் இங்கிலாந்து தேசத்தையும், அமெரிக்கா தேசத்தையும் சுவிசேஷத்தைக் கொண்டு அசைக்க முடிந்தது. இன்றும் அவர்பெயரில் வேதாகமக் கல்லூரிகளும், மிகப்பெரிய கிறிஸ்தவ இலக்கிய ஸ்தாபனங்களும் உண்டு.
* லண்டன் பட்டணத்தில் உள்ள ஒரு தகரக் கடையில் பழைய பொருள்களை பழுது பார்த்துக் கொண்டிருந்த ஜான் பண்ணியன் என்பவர் எழுதிய பரதேசியின் மோட்சப் பிரயாணம் என்ற புத்தகம் இன்று பல்கலை கழகங்களிலும், கல்லூரிகளிலும் கட்டாயப் பாடமாக்கப்பட்டு, உலகம் முழுவதிலும் 400க்கு மேற்பட்ட மொழிகளில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.
* முரடனாகிய சுந்தர்சிங் சாதுவாக மாறி, உலக பிரசித்திபெற்ற பரதேசியாக சுற்றித் திரிந்து காணப்படாமற் போனார்.

**21 நீதிமொழிகள்:**

கிரேக்கர் : மனிதனே உன்னைநீயே அறிவாயாக என்பர்
ரோமர் : மனிதனே உன்னை நீயே ஆண்டு நடத்துவாயாக என்பர்.
சீனர் : மனிதனே உன்னை நீயே திருத்திக்கொள்வாயாக என்பர்
பௌத்தர் : மனிதனே உன்னை நீயே நிர்வாணமாக்குவாயாக என்பர்
இந்து : மனிதனே உன்னை நீயே நிர்வாணமாக்குவாயாக என்பர்.
இஸ்லாமியர் : மனிதனே உனக்கே நீ கீழ்ப்படிவாயாக என்பர்.
கிறிஸ்து: மனிதனே உன்னால் என்னையல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்றார்.

**22 திருக்குறள்** (எண்கள் அகராதி):-

1. ஒன்று: 119, 126, 128, 156, 168, 181, 233, 248, 253, 259, 334, 336, 343, 357, 398, 400, 405,454, 634, 797, 875, 932, 1006, 1021, 1146, 1196, 1197, 1247, 1252, 1269.
2. இரண்டு: 5,19, 23, 374, 392, 393, 402, 455, 581, 662, 674, 760, 875, 920, 992, 1022, 1196, 1247.
3. மூன்று 41, 360, 383, 589, 682, 684, 688, 941, 952, 1085,
4. நான்கு: 35, 146, 382, 390, 501, 513, 605, 766, 950, 953
5. ஐந்து : 6, 25, 27, 43, 126, 271, 343, 354, 632, 675, 939,983,1101
6. ஆறு : 381
7. ஏழு: 62, 107,126, 538, 835, 1269, 1278
8. எட்டு: 9
9. ஒன்பது :......................
10. பத்து : 450

100. நூறு : 932-சில 270, பல 270, 275

எல்லாம்: 191, 203, 260, 296, 321, 322, 325, 651, 661,673, 851, 1032.

கோடி: 377, 619, 816, 817, 954, 1005

**23 ஞானக்களஞ்சியம்:** நம்முடைய பரிசுத்த வேதாகமமே நமக்குரிய ஞானக் களஞ்சியமாக இருக்கிறது. இது யோசேப்பின் களஞ்சியத்தில் எடுக்க எடுக்க குறையாமல் இருந்தது போல, தொட்டனைத் தூறும் மணற்கேணியாக இருக்கும்.

**24 புத்தகங்கள்: மார்ட்டின் லூத்தர்: விவாகம்:**

வேத அறிவியல் பொதுமக்களைப் பயிற்றுவிப்பதில் லூத்தர் மிகவும் கவனமாயிருந்தார்.

கட்டாயக் கல்வித் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளுமாறு செய்து, வேதபாட திட்டத்தையும் அமைத்துக் கொடுத்து, சிறுவர்களுக்கான சிறிய ஞானாபதேசத்தையும். பெற்றோருக்கும். ஆசிரியருக்குமெனப் பெரிய ஞானோபதேசத்தையும் எழுதி வெளியிட்டார். 1529, இல்லறத்தை வலியுறுத்தியலுத்தர். மடங்களிலிருந்து வெளியேறிய துறவிகள் மணம் புரிந்து கொள்ளுமாறு அறிவுரை கூறினார். அவர்தாமே கத்தரீனாள் என்ற ஒரு பெண் துறவினை மணந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். (1525) சபையின் ஆளுகை முறையிலும் லூத்தர் சில புதிய சீர்திருத்தங்களையும் ஒழுங்குகளையும் கொண்டு வந்தார்.

**25 யூதர்கள்:**

உலக மக்களின் பண்பாட்டை உருவாக்குவதில் நன்மைக்கும், தீமைக்கும் ஏற்க யூதர்கள் எண்ணிறந்தவற்றைச் செய்திருக்கின்றனர். உலக ஜனத்தொகையில் யூதர் மிகவும் கொஞ்சமாயினும் இயற்பியல், ரசாயணம், மருத்துவத்துறை முதலியவற்றிற்காக புகழ் பெற்ற நோபல் பரிசுகளைப் பெற்றவர்களில் யூதர் பன்னிரண்டு சதவீதமாவார்கள். கீர்த்தி பெற்ற ஆல்பர்ட் இன்ஸ்டெயின், சிக்மண்டபிரூட், பாரக ஸ்பை நோசா, கார்ல் மார்க்ஸ் முதலியவர்கள் யூதர்களானவர்கள், யூதரின் அறிவும் சிந்தனையின் ஆற்றலும் இன்று உலகை நடத்துகின்றன. தீர்க்கதரிசிகள் அறிவித்தபடியே அவர்கள் சிறந்த தனிப்பட்ட இனங்களாயினர்.

**26 கிறிஸ்துமஸ்:**

பொன்வாய் அருளப்பர் என்பர் கி.பி. 345-407ல் போப்பாண்டவராக இருந்தார். இவரே டிசம்பர் 25ம் தேதியை கிறிஸ்துமஸ் பண்டிகை என்று பிரகடனப்படுத்தினார்.

எக்ஸ்-மாஸ்:- மாஸ் என்றால் பூஜை என்று அர்த்தம் எக்ஸ்மாஸ் என்றால் ஆலய பூஜை என்றும் கிறிஸ்துமஸ் என்றால் கிறிஸ்து பூஜை என்றும் அர்த்தமாகும்.

**27 பௌத்த நூல்:**

12ம் நூற்றாண்டில் ஜப்பான் நாட்டில் ஆட்சி செய்த சுடோகு என்ற அரசர் நாடு கடத்தப்பட்டார். காடுகளில் வாழ்ந்த அவர் தன் நேரத்தை வீணாக்கவில்லை. லங்காவ்ரன் சூத்ரா என்ற புத்த மத நூல் முழுவதையும் தன் இரத்தத்தினாலேயே எழுதி முடித்தார். இவ்வாறு செய்வதினால் இழந்த தன் நாட்டை மீண்டும் பிடிக்க முடியும் என்று நம்பினார் சுடோகு. அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. சுடோகு 1144ம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். அதற்குப் பிறகு இருபதாண்டு காலம் ஆட்சியில் இருந்தார் என்று வரலாறு கூறுகிறது.

**28 மருத்துவ நூல்:**

பிரான்ஸ் நாட்டை ஆண்ட 14ம் லூயி, பிரான்ஸ் நாட்டிலிருந்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்த ஒரு புத்தகத்தைப் பெறுவதற்காக தன் சொத்துக்கள் முழுவதையும் அடமானம் வைக்க தயாராக இருந்தாராம். ஹெஸேஸ் என்ற புகழ்பெற்ற அராபிய மருத்துவர் எழுதிய புத்தகம்தான் அது.

**29 கையெழுத்து:**

ஒரு மனிதனின் கையெழுத்தை ஆராய்ச்சி செய்பவரை ஆங்கிலத்தில் 'GRAPHOLOGIST' என்கிறார்கள். ஒரு மனிதனின் கையெழுத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்து அவனது குணத்தைக் கண்டுபிடித்து விடலாம்! ஆனால் அது சுலபமான காரியமல்ல! குறைந்தது அந்த மனிதன் கைப்பட எழுதிய 300 பக்கங்களையாவது இதற்கென ஆராய வேண்டியிருக்குமாம்.

**30 ஐம்புலன்கள்:**

சுவை, ஒளி, ஊறு,ஓசை, நாற்றம் என ஐந்து வகைப்படும்.

**31 நாவு:**

அறுசுவை உணரும்: 1. இனிப்பு 2. உறைப்பு 3. கசப்பு4. கரிப்பு 5. துவர்ப்பு 6. புளிப்பு

**32 முதுமைநிலை : மரணம்:** (பிரசங் 12:1-7)

| | |
|---|---|
| சூரியன், சந்திரன்,நட்சத்திரங்கள் வெளிச்சங்கள், அந்தகாரப்படுதல் | - பார்வை குறைதல் |
| மழைக்குப்பின் மேகங்கள் திரும்ப திரும்ப வராமை | - இளமை திரும்பாமல் குன்றுதல் |
| வீட்டுக் காவலாளிகள் தள்ளாடுதல் | - கை,கால்கள் ஒய்தல் |
| பெலசாலிகள் கூனிப் போகுதல் | - முதுகு வளைதல் |
| எந்திர சத்தம் தாழ்ந்து அடைபடல் | - காது கேளாமை |
| கீத வாத்திய கன்னிகைகள் அடங்குதல் | - குரல் கம்முதல் |
| வாதுமை மரம் பூ பூத்தல் | - முடி நரைத்தல் |
| வெட்டுக்கிளி பாரமாகுதல் | -பெலன்குறைந்துகுன்றுதல் |
| வெள்ளிக் கயிறு கட்டு விட்டு, பொற்கின்னி நசுங்கி, தீபம் அணைதல் | - நரம்புகளின் கட்டுவிடுதல் இருதயம் நின்று ஆவி பிரிதல் |
| ஊற்றி அருகே சால் உடைதல் (தண்ணீர் எடுக்கும் ஏற்ற சாலின் அடித்தூர் விடுதல்) | - சரீரத்தில் ஆவி தங்காமை |
| ஊற்றின் சால் இழுக்கும் உருளை நொறுங்குதல் | - சரீரம் சாகுதல் |

இவ்விதமாக மனிதன் மரணமடைந்து திரும்பி வர முடியாத நித்திய வீட்டுக்குச் செல்லுவான்.

# திருமறைக்களஞ்சியம்

## BIBLE DICTIONARY TAMIL NEWS PAPER

## பரிசுத்த வேதாகம அகராதிக் குறிய செய்திகள்

(மலர்1:) 01.01.2014 (இதழ் -3)



**ஆசிரியர்:**

**S. ஜீவன்ராஜ்** P.hD.,

**மேற்பார்வை:**

**G.S.** இன்பராஜ் M.Sc.,

ஜாய் கிறிஸ்டிராஜ் B.Sc.,

**தொகுப்பு:**

**S.** சக்திதேவதாஸ்

**வெளியிடுபவர்:**

**S. ஜீவன்ராஜ்** P.hD.,

125-19/2 இரண்டாவது தெரு,

தேவராயநகர், K.K. நகர்ரோடு

திருச்சி - 620 021.

**அச்சிட்டோர்:**

**பெரியார் சமூக தொடர் கல்வி கல்லூரி - அச்சகம்**

**சுந்தர்நகர், திருச்சி - 21.**

**போன்: 2457665**


**பாடுதலும் நாடுதலும்!**

உம்மைப் பாடாத நாளில்லை பரமசற் குருவேசா!
செம்மொழி அமுதே செந்தமிழாலே!

தேவரீர் மகத்துவ கர்த்தரும் தத்துவ
பரிசுத்த நீதியை புகழ்ந்தினி நான் பாட
உந்தன் பதபடியில் பணிந்து நான் நாட
நித்திய சத்திய உத்தம வார்த்தையை
மழையென பொழிந்து அருள் புரிந்திடும்!

உன்னத தேவனே! நித்திய ஜீவனே!
ஞானத்தின் அத்தனே, உம் புகழ் நான் பாட,
திருமறைக் களஞ்சிய பொருளை நான் நாட,
ஞானமும், ஒளியும், அறிவும், தெளிவும்
மழையென பொழிந்து அருள் புரிந்திடும்!

இயேசுவே, கிறிஸ்துவே, இம்மனுவேலரே!
இரட்சண்ய வலிமையை மகிழ்ந்தினி நான் பாட
உந்தன் பெலனடைய விரைந்து, நான் நாட
செம்மையும், வெம்மையும், நன்மையும், இனிமையும்
மழையென பொழிந்து அருள் புரிந்திடும்!

இன்பமும், துன்பமும் இணைந்த என் வாழ்வினில்
இணையில்லா உம்திரு மகிமையை நான் பாட
பரிசுத்த நாவினால் உம் அருள் நான் நாட
அன்பும், கிருபையும் தயவும், இரக்கமும்
மழையென பொழிந்து அருள் புரிந்திடும்!



## ஆசிரியர் உரை!

**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,

**அதிசய நூலகம்:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள சகோதர, சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். இந்த திருமறைக் களஞ்சிய பிரதிகளின் ஊழியத்திற்காக நீங்கள் தொடர்ந்து ஜெபம் செய்யவும் செய்திகள் எழுதவும், உதவிகள் செய்யவும் அன்புடன் வேண்டுகிறேன்.

ஒரு நூலகம் என்றால் பல கலைகள் கொண்ட புத்தகங்கள் அங்கே இருக்க வேண்டும் என்று நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லையே! ஆனால் நான் ஓர் அதிசயமான நூலகத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன். இந்த நூலகத்தை உங்கள் வீடுகளில் வைத்து, உங்கள் ஜீவிய நாளளவும் ஆராய்ந்தாலும் முடியாது. அதுவே அறுபத்தாறு புத்தகங்கள் ஒன்றாக இணைந்த பரிசுத்த வேதாகமம் ஆகும். இந்த அதிசய நூலகத்தில் அடங்கியிருக்கும் பல கலைகள் எண்ணிக்கையில் அடங்காது. கவனியுங்கள்:

நீங்கள் இந்த நாட்டை அரசாளப் போகிறீர்களே? நல்லது! அப்படியானால் இதிலுள்ள உலக பிரசித்திப் பெற்ற அரசர்களின் உயர்வுகளையும், வீழ்ச்சிகளையும் நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் மிகப்பெரிய போர் வீரரோ? நல்லது! அப்படியானால் மிகப்பெரிய சேனாபதிகளையும், மிகச் சிறந்த பராக்கிரம சாலிகளையும் அவர்கள் யுத்தத்தில் கையாண்ட முறைமைகளையும் நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் நல்ல அறிஞரோ? நல்லது! அப்படியானால் ஞானத்தின் அதிசயங்களைப் பற்றி, நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் ஒரு வழக்கறிஞரோ? நல்லது! அப்படியானால் நியாயப்பிரமாண சட்டங்களைப் பற்றி, நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் ஒரு விஞ்ஞானியோ? நல்லது! அப்படியானால் சிருஷ்டிப்பின் அதிசயங்களைப் பற்றி நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் ஒரு வைத்திய நிபுனரோ? நல்லது! அப்படியானால் மிகுந்த மன உருக்கத்தோடு பிணியாளிகளை சுகப்படுத்தும் பரம வைத்தியரைப் பற்றி நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் ஒரு பொறியியல் நிபுனரோ? நல்லது! அப்படியானால் தொழில் நுணுக்கங்களைப் பற்றி, நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் நல்ல தேவ பக்தி உள்ளவரோ? நல்லது! அப்படியானால் தேவனோடு தொடர்பு உண்டாக்கும் ஜெப முறைமைகளைப் பற்றி, நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு நல்ல தலைவரோ? நல்லது! அப்படியானால் நூற்றுக்கணக்கான குடும்பத் தலைவர்களைப் பற்றி, நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் தேவனைத் தேடும் தாகம் உள்ளவரோ? நல்லது! அப்படியானால் பரலோகத்தின் தேவனைப் பற்றியும் அவருக்குப் பிரியமானது இன்னதென்றும், நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் தேவ அறிவு இல்லாதவரோ? நல்லது! நமது அறிவுக்கெட்டாத மோட்ச பாக்கியத்தை அடைய தடையாக இருக்கும் பிசாசு என்ற வஞ்சக ஆவிகளிடம் தப்புவது எப்படி என்று நீங்கள் இதில் அறியலாம்.

நீங்கள் துன்மார்க்கம் நிறைந்த மகா பாதகரோ? நல்லது! உங்களைத் தண்டிக்க மனதில்லாமல் தாமே பலியாகிய இரட்சகராகிய இயேசுவானவரை நீங்கள் அறிந்து அவரிடம் சரணடையலாம்.

நீங்கள்இறை நம்பிக்கையற்ற நாத்தீகரோ? நல்லது! அப்படியானால் உங்கள் மனக் கண்கள் திறக்கப்படும் வித்தைகளை நீங்கள் இதில் அறியலாம்.

அன்பர்களே, இப்படியே நான் சொல்லிக்கொண்டு போனால் முடியாது. பரிசுத்த வேதாகமம் என்ற பரிசுத்த தேவனுடைய புத்தகத்தை வாங்கி உங்கள் வீட்டிலே ஒரு அதிசய நூலகமாக பயன் படுத்த அன்புடன் வேண்டுகிறேன்.

**உங்களுடைய கடிதங்கள், செய்திகள், காணிக்கைகள், நிதிஉதவிகள் யாவும் அனுப்ப வேண்டிய முகவரி:**


**S. ஜீவன்ராஜ்** M.Sc., M.Phil., P.hD.,
'திருமறைக்களஞ்சியம்'
125-19/2 இரண்டாவது தெரு,
தேவராயர்நகர், K.K.நகர்ரோடு,
திருச்சி-620 021.
**Cell: 9944005799, 9789197192**
Email: thirumaraikalanjiyam@gmail.com



**31** எபேசு: (அப்போ 19:1-17)

ஆசியாவின் முதல் தேசிய அளவிலான தொடர்பு வசதியுள்ள ஒரு துறைமுக பட்டணமே எபேசுவாகும். இதனுடைய மக்கள் தொகை 2,50,000 பேர் கொண்டதாகும். ரோமர்களின் ஆளுகையில் இது சிறப்பிடம் பெற்றது. மைனர் ஆசியாவின் தலைமை வர்த்தக மையமாக இருந்தது. இன்றைய உலக அதிசயத்தின் ஒன்றான (ARTMIS TEMPLE)அர்தமிஸ் கோவில் அங்குள்ளது. இந்தக் கோவிலை 1486 ல் J.J.WOOD (BRITISH MUSEUM) என்பவரின் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டது.

நன்றி, (ACT: ZONDARRAN ILLUSTRATED BIBLE) PAGE .190
தமிழாக்கம் : G.S. இன்பராஜ் (BHEL.14)

**32** தமஸ்கு (அப்போ 9:2)

எருசலேமிலிருந்து வடக்கே 135 மைல் தொலைவில் உள்ளது. இது ரோமர்களின் ஆளுகையிலிருந்து ஒரு விவசாய நாடு பாபிலோனிலிருந்து எருசலேம் செல்லும் யூதர்களுக்கும், எருசலேமையும் மெசொப்பத்தோமியா சமவெளி பிரதேசங்களையும் இணைக்கும் முக்கியமான வழிகள் இங்கிருந்தன. இங்கு கிரேக்கர்களுடைய கலாச்சாரமும், அவர்களுடைய மொழியும் முதன்மை பெற்றதாக இருந்தது.

நன்றி, (ZIB - PAGE 74.G.S.I)

**33** பரிசுத்த வேதாகமம் (பழைய ஏற்பாடு)

வேதாகமம் அறுபத்தாறு தனித்தனியான நூல்களின் தொகுப்பு ஆகும். வரலாறு, செய்யுள், பாடல்கள் தனிப்பட எழுதப்பட்ட கடிதங்கள், அறிவுரைகள், சொற்பொழிவுகள் ஆகிய பல வகைப்பட்ட செய்திகளின் தொகுப்பு ஆகும்.

பழைய ஏற்பாட்டில் முப்பத்தொன்பது நூல்கள் அடங்கியுள்ளன. இவைகள் தோல் பொருள் படைப்பாக அமைந்தன. இவை யூத சமயத்தின் வரலாறு ஆகும். இவைகள் முதலில் எபிரெய மொழியிலேயும், அரெமேயுக் மொழியிலேயும் எழுதப்பட்டவைகள் 1947ல் பலஸ்தீனாவில் சாக்கடல் அடுத்துள்ள குமரான் பிரதேசத்தில் இருக்கும் குகைகளில் வேதாகமத்தின் கையெழுத்துப் பிரதிகள் கண்டெடுக்கப்பட்டன. எஸ்தர் நூலைத் தவிர, பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் கண்டெடுக்கப்பட்டன. அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட, அவைகள் அப்படியே காணப்பட்டன. எஸ்றா தான் முதல் கண்டெடுக்கப்பட்ட நூல்களை வரிசைப்படுத்தி ஒரு திரட்டாக அமைத்தான் என்பது யூத வரலாறு ஆகும்.

(I. செந்தமிழ்செல்வி. BHEL.14)

**34** பரிசுத்த வேதாகமம் (புதியஏற்பாடு)

புதிய ஏற்பாடு நூல்களில் பல துவக்கத்தில் துறவிகளால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளாக கண்டு பிடிக்கப்பட்டன. செவி வழியாக வந்தவைகளும் உண்டு. புதிய ஏற்பாடு நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. கி.பி.152ல் ஞாஸ்மஸ் என்ற அறிஞர் அவைகளை வடிவமைத்தார். பின்பு 250 ஆண்டுகளாக பல அறிஞர்கள் மிக கவனமாக உழைத்து தான் புதிய ஏற்பாட்டை உருவாக்கினார்கள் அவைகளின் தமிழாக்கம் தான் இப்பொழுது வழக்கிலுள்ள தமிழ் திருமறையாகும். மேலும் தரங்கை பகுதியில் சீகன்பால்க் என்ற ஜெர்மானிய சுவிசேஷகர்; பெயரிசியஸ் முதலானோர் சேர்ந்து துவக்க காலத்து வேதாகமத்தை தமிழாக்கம் செய்தனர்

(I. செந்தமிழ்செல்வி. BHEL.14)

**35** பத்மு தீவு

தற்போதுள்ள துருக்கி நாட்டிலிருந்து எபேசு பட்டணத்திற்கு தென்மேற்கில் அகாயா கடலில் சுமார் 110 கி.மீ தூரத்திலிருக்கிறது. மிலேத்துவிலிருந்து சுமார் 60.கி.மீ தூரத்திலிருக்கிறது. இது சுமார் 12 கி.மீ. நீளமும் சுமார் 9 கி.மீ. அகலமுள்ள சிறிய தீவு. ரோமர் காலத்தில் குற்ற வாளிகளை நாடு கடத்தும் இடமாக இந்த தீவு பயன்படுத்தப்பட்டது. இந்த குற்றவாளிகள் இங்கிருந்த சுரங்கங்களிலே வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். கி.பி.95ல் அப்போஸ்தலனாகிய யோவான் இங்கே நாடு கடத்தப்பட்டார் (டொமீனியன் என்ற ரோம பேரரசன் நாட்களில் இது நடந்தது) யோவான் இங்கு இருக்கும் போதுதான்; தேவ வெளிப்பாடுகளைப் பெற்று வெளிப் படுத்தின விசேஷத்தை எழுதினார். (வெளி 1:9,10) இங்கே யோவான் பெயரில் ஒரு மடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. பத்மு, துருக்கி நாட்டிற்கு பக்கத்திலிருந்தாலும் கிரேக்க நாட்டிற்குத்தான் சொந்தமானது.

நன்றி, வேதாகம நாடுகள் - பக்கம் 84

S. பர்வதமேரி, (திருச்சி -21)

**36 மரியாள்:**

1. இயேசுவின் தாயாகிய மரியாள் (மத் 13:55)
2. மகதலேனா மரியாள் (மத் 27:56)
3. கிலேயோப்பா மரியாள் (யோவா 19:25)
4. பெத்தானிய மரியாள் (லூக் 10:39)
5. மாற்குவின் தாயாகிய மரியாள் (அப்12=12)
6. ரோமபுரி சபைமரியாள் (ரோம 16:5)

நன்றி, ஒத்த வாக்கிய அகராதி (பக்கம் 353)

J. ஆரோன் (விழுப்புரம்)

**37 யோர்தான் நதி: (மத்தே 3:1-6)**

இந்த யோர்தான் நதி எர்மோன் மலையிலிருந்து உற்பத்தியாகி, கலிலேயாக் கடலில் கலந்து, அங்கிருந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து, சவக்கடலில் சேர்கிறது. கலிலேயாக் கடலிலிருந்து, சவக்கடல் வரையிலும் ஒரு நேர்கோடு 104 கி.மீ தான் வரும். ஆனால் இந்த நதி வளைந்து, வளைந்து, செல்வதால், இதன் நீளம் 320 கி.மீ. ஆகிறது. கடல் மட்டத்திற்குக் கீழே 1300 அடி தாழ்வாக ஓடுகிறது. 100 அடி முதல் 200 அடி வரை அகலமுள்ள சிறிய நதிதான் இது. ஆனாலும் அதிகமாக அறியப்பட்ட நதி; அநேக அற்புதங்களை சரித்திர நிகழ்ச்சிகளைக் கண்ட நதி இயேசுவானர் இந்நதியில் ஞானஸ்நானம் பெற்றார். இஸ்ரவேல் நாட்டின் கீழ் எல்லையாக இது அமைந்துள்ளது. இந்த நதிக்கு கிழக்கே ஜோர்டான் நாடு இருக்கிறது

நன்றி, வேதாகம நாடுகள் - பக்கம் 35

S. ஜாய் கிறிஸ்டிராஜ், திருச்சி -21)

**38 இஸ்ரவேல் தேசம்: (டெல் அவில்)**

1909ல் தான் இந்த டெல் அவில் பட்டணம் உதயமாயிற்று இன்று இஸ்ரவேல் நாட்டிலே, ஒரு பெரிய பட்டணமாக வளர்ந்துள்ளது. இது ஒரு கடற்கரை பட்டணம். இதன் மேற்கு எல்லை, மத்தியத்தரைக் கடல் டெல் அவிலிருந்து சுமார் 50 கி.மீ. தென் கிழக்கில் எருசலேம் அமைந்துள்ளது.

- பக்கம் 23

**39 எருசலேம்:**

இஸ்ரவேல் நாட்டில் அதிகமாக மதிக்கப்படும் பட்டணம் இது. கடல் மட்டத்திலிருந்து 2500 அடி உயரமுள்ளது. மத்திய தரைக் கடலுக்கு கீழக்கே 50 கி.மீ தூரத்தில் உள்ளது. சவக் கடலுக்கு மேற்கே 22 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கி.மு.15ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட எகிப்திய, பாபிலோனிய ஏடுகளில் உருசலிமு என்ற இது அழைக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமின் காலத்தில் சாலேம் என்று அழைக்கப்பட்டது. (ஆதி 14:18) சாலேம் என்றால் சமாதானம் என்று பொருள். எபூசியர் இதில் வாழ்ந்ததால் எபூசு என்றும் அழைக்கப்பட்டது. கி.மு. 1000ல் தாவீது அரசன்; தன் நாட்டின் தலைநகரை எபிரோனிலிருந்து, எருசலேமுக்கு மாற்றினான். பின்பு சீயோனுக்கு உடன் படிக்கை பெட்டியைக் கொண்டு வந்தான். சாலொமோனோ அதற்கு மோரியா மலையில் தேவாலயம் கட்டினான். கி.பி.70ல் இதுரோம பேரரசன் தீத்துவால் அழிக்கப்பட்டது. இன்றுள்ள எருசலேமில், பழைய, புதிய எருசலேம் என்று இரண்டு பகுதிகள் உள்ளன.

நன்றி, வேதாகம நாடுகள் - பக்கம் 24

S. ஜாய் கிறிஸ்டிராஜ் திருச்சி -21)



**40 திபேரியா:**

கலிலேயாவின் தலை நகரம் தான் இந்த திபேரியா. திபேரியா என்றால் நாபி என்ற அதாவது தொப்புள் என்ற அர்த்தமாகும். இக் காலத்தில் சிலருக்கு தொப்புளான், காத்தான், மூக்கையா என்ற பெயரிடப்படுவது போல அக்காலத்தில் ரோம இராயனுக்கு திபேரியு என்ற பெயர் இருந்தது. அவனைப் பிரியப்படுத்தும்படி ஏரோது தான் கட்டிய இந்தப் பட்டணத்திற்கு திபேரியா என்று பெயரிட்டான். கலிலேயாவின் உயிர் நாடியான இந்தப் பட்டணத்தில் வைத்து, இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின்பு பேதுருவும், சீஷர்களும் பின் வாங்கி மீன் பிடிக்கச் சென்று விட்டனர். அதே பட்டணத்தில் மீண்டும் கர்த்தர் தரிசனமாகி அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தி திருச்சபை ஊழியங்களை ஒப்படைத்தார் (யோவா 21:-3)

**41 கர்த்தரின் நாமங்கள் – NAMES OF GOD**

1. ELOHIM - 'தேவன்' - இது வேதாகமத்தில் 2570 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய வல்லமையையும் கனத்தையும் குறிக்கிறது.

2. EL - இதோடு கூட நான்கு கூட்டு சொற்கள் வருகின்றன.
   - ELYON - "உன்னதமான தேவன்' (ஆதி14:20; ஏசா14:13,14)
   - ROL - "காண்கிற தேவன்' (ஆதி 16:13)
   - SHADDAI - "சர்வ வல்லமையுள்ள தேவன்' - இது பழைய ஏற்பாட்டில் 48 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (ஆதி17:1; சங் 91:1)
   - OLAM - "அநாதி தேவன் (ஏசா 40:28)

3. ADONAI - 'எஜமானாகிய தேவன்' - (மல் 1:6) (அ) எஜமானாகிய கர்த்தர்

4. JEHOVAH - யேகோவா - கர்த்தர்' இது வேதாகமத்தில் 6823 முறை வருகிறது தேவனாகிய கர்த்தர் (ஆதி 2:4) இதோடு கூட ஒன்பது கூட்டு சொற்கள் வருகின்றன.
   - JIREH - 'பார்த்துகொள்கிற(அ)கொடுக்கிற கர்த்தர்'(ஆதி22:14) (யாத்17: 15)
   - NISSI - 'யேகோவாநிசி'
   - SHALOM - 'சமாதான கர்த்தர்' (நியா 6:23,24)
   - SABBAOTH - 'சேனைகளின் கர்த்தர்'(ஏசா 6:3)
   - MACCADDESHOEM - 'பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர்'(யாத் 31:13)
   - ROHI (RAAH) - 'மேய்ப்பராகிய கர்த்தர்'(சங் 23:1)
   - TSIDKENU - 'நீதியாயிருக்கிற கர்த்தர்'(எரே 23:6)
   - SHAMMAH - 'பிரசன்னமாயிருக்கிற கர்த்தர்'(ஏசேக் 48:35)
   - RAPHA - 'பரிகாரியாகிய கர்த்தர்'(யாத் 15: 26)

நன்றி Cover To Cover (Page 153)
தமிழாக்கம் **S. ஜீவன்ராஜ்** திருச்சி - 21.

**42 வெள்ளைப்போளம் –**

பாறை ரோஜா என்ற அழைக்கப்படும் குட்டையான புதர் செடியில் இருந்து எடுக்கப்படும் விலை உயர்ந்த பிசின் வெள்ளைபோளம் எனப்படும். இந்த பிசின் மூன்று மாதங்களுக்கு பிறகு சிறிய உருண்டைகளாக மாறிவிடுகிறது அதன் பிறகு இதனை பொடியாக செய்தோ அல்லது எண்ணையுடன் இதனை கலந்து நறுமன தைலமாகவோ செய்கின்றனர். இதன் பூக்கள் ரோஜா மலர்களை ஒத்திருக்கும்.வறட்சியிலும் வளமாக வளரும் விநோத செடியாகும். அரேபியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற வளம் குறைந்த நாடுகளில் இருந்து வெள்ளைபோளம் கிடைக்கிறது. வெள்ளைப்போளம் அபிஷேக தைலமாகவும், தூபவர்க்க பொருளாகவும் பயன்படுகின்றன MYRRH என்ற இந்த வார்த்தையானது MURR என்ற அராபிய மொழியில் இருந்து வந்தது. இதன் பொருள் "கசப்பு" என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இந்த வெள்ளைபோளத்தை பற்றி அதிக முறை எழுதப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் வருவதால் இது அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த வெள்ளைப்போளமானது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் மூன்று முறை வேதாகமத்தில் வருகிறது.

**1. இயேசுவானவரின் பிறப்பு (மத்தேயு 2:11)**

இயேசுவானவர் பிறந்த பொழுது அவரை காண வந்த சாஸ்திரிகள் அவருக்கு பொன், தூபவர்க்கம் இதனோடு கூட வெள்ளைபோளத்தையும் காணிக்கையாக கொண்டுவந்தனர். இவர்கள் கொண்டு வந்த காணிக்கையில் உள்ள வெள்ளைப்போளம் ஆண்டவர் இன்னவிதமான கசப்பான பாடுகளிகளின் ஊடாக கடந்து சென்று மரணமடைவார் என்று உணர்த்துகிறது. இந்த வெள்ளைப்போளம் கிடைக்கக் கூடிய இடங்களை வைத்துப் பார்த்தால், கிழக்கில் இருந்து வந்த சாஸ்திரிகள் அரேபியா, பெர்சியா, அல்லது இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வந்திருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் ஊகிக்கின்றனர்.

**2. இயேசுவானவரின் சிலுவை பாடுகள் (மாற்கு 15:23)**

கொல்கதா மேட்டில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அடிக்கக் கொண்டு போகும் போது வெள்ளம்போளம் கலந்த திராட்சை ரசத்தை அவருக்கு குடிக்க கொடுத்தார்கள் (மாற்கு 15:23) வேதனைகளில் இருந்து நமதாண்டவர் விடுபட விரும்பாததால் அவர் அதை ஏற்றுகொள்ளவில்லை. வலிவேதனைகளை குறைக்க வெள்ளைப் போளம்ப பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**3. இயேசுவானவரின் மரணம் (யோவான் 19:39)**

இயேசுவை ஒர் இரவிலே சந்தித்து ஏற்றுகொண்ட நிக்கோதேமு என்பார் இயேசுவின் சரீரத்தை பாதுகாக்க வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு ராத்தல் கொண்டு வந்தார். மூன்று நாள் வரைக்கும் ஆண்டவரின் சரீரம் கெடாமல் இருந்ததற்கு காரணம் இந்த வெள்ளைப்போளமே. வெள்ளைப்போளம் உயிர் நீத்த உடல்களை கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் அருமருந்தாகவும் உபயோகமாகிறது.

நன்றி : www christianity about come
www.medical news today come

**S . பிளெஸ்ஸி,** உதவி பேராசிரியர்,
பெரியார் ஈவே.ரா.கல்லூரி, திருச்சி 21.

# 43. பூமியின் காலங்கள்!
# ஒரு 490 வருசங்கள்!








Copy Right :


**S.SAKTHI DEVADOSS**
125-19/2, IInd Street,
Devaraya Nagar
Trichy - 620 021.
Cell: 9789197192



தீர்க்கதரிசி
வெள்ளை சிங்காசனம்.
வெளி 20 : 11–15.
10
வெளி 21 : 1.
II தெச 1:7–10.
வெளி 12:9,10
9
II பேதுரு 3 : 10.
8
7
6
வெளி 20 : 4
ஆயிர வருச
அருகை
: 23–26 அறுபத்திரண்டு வாரங்கள் என்பது 434 வருசங்கள்
4 : 16–21 இந்த வருசங்கள் நிறை வேறி முடிந்தன. அதனால்
அனுக்கிரக வருசத்தை மேசியா துவக்கி வைத்தார்
பின்பு மேசியாவின் சங்காரம் நடந்து முடிந்து-
இந்த அனுக்கிரக வருசங்கள் சபையின் காலங்களாகும்.
தர்கள், அப்போஸ்தலர்கள் மிக துரிதமாக இயேசுவானவரின்
விசேஷத்தை கொண்டு சென்று, தேவனுடைய சபைகள்
பட்டணங்கள் தோறும் உருவாக ஊழியங்களைச் செய்தனர்.
இதனால் எங்கும் எதிர்ப்பும், கலகங்களும் உண்டாகி
கிறிஸ்தவமார்க்கம் வளர்ச்சியடைய முடியாமல் போனது.
தானி 9 : 27. ஒரு வாரம் என்பது ஏழு வருசங்களாகும்
தானி 8 : 19–28. உலக முடிவின் ராஜ்யங்கள்
வெளி 13 : 1–9. ஏழுதலை சிவிங்கியான மிருகம்,
தானி 2 : 44. சகல ராஜ்யங்களும் அழிக்கப்படும்.
மகா உபத்திரவ காலத்தில் மீதியான யூதர்களும், புற
ஜாதிகளும் மீட்கப்படுவார்கள் பின்பு அந்தி கிறிஸ்து
உலகராஜ்யங்களை தனக்கு கீழாக்கி அருகை செய்வான்.
ஆனால் முடிவில் அழிக்கப்படுவான்
பின்பு இயேசுவானவர்
வந்து 1000 வருசங்கள்
அருகை
செய்வார்.
மிருக ராஜ்யங்கள் அக்கினிக்
கடலில் தள்ளப் படுவார்கள்



**44 கெதரோன் – கீதரோன்:**

கெதரோன் என்றால் கலங்கிய ஓடை என்று அர்த்தம். இது எருசலேமுக்குப் புறம்பே கிழக்கில் தேவாலயத்தின் கீழ்ப்புறமாக ஓடுகிறது. இதில் மாரி காலத்தில் மட்டும் அங்குள்ள குன்றுகளிலிருந்து வழிந்த தண்ணீர்கள் கலங்கிய நிலையில் இதில் ஓடும். மேலும் தேவாலயத்தின் பலிகளின் இரத்தத்தோடு கூடிய கழிவு நீர்களும், எருசலேம் பட்டணத்தின் கழிவு நீர்களும். இதில் வந்து சேருகிறது. சாலொமோன் அரசன் லட்சத்தி இருபதினாயிரம் ஆடுகளை பலியிட்டபோது இந்த ஆறு இரத்த ஆறாக மாறினதாக பாரம்பரியம். எப்பொழுதும் வறட்சியாக இருக்கும் இந்த ஆற்றில் எருசலேமை சுத்திகரித்த ராஜாக்களாகிய ஆசா,யோசியா, எசேக்கியா ஆகியோர்கள் அதன் அசுத்தங்களை இந்த ஆற்றில் போட்டு எரித்தார்கள். தாவீது ராஜாவும், இயேசுவானவரும் இவ்வாற்றைக் கடந்தது, முக்கிய நிகழ்ச்சியாகச் சொல்லப்பட்டிருக்கிறது (யோவா 18:1;2 சாமு 15:23; 1 ராஜா 15:3)



**45 எருசலேம்:**

யோசுவா காலந் துவக்கி தாவீது வரை எபூசியருடைய பட்டண மாகிய எருசலேமைப் பிடிக்க முடியவில்லை. தாவீது இப்பட்டணத்தை பிடிக்க முயற்சி செய்தபோது, எபூசியர்கள் நீ இந்தப் பட்டணத்தைப் பிடிக்க முடியாது. முயற்சித்தால் குருடரும், சப்பாணியும் தடுப்பார்கள் என்றனர். தாவீதின் சேவகர்கள் எருசலேமுக்குள் பிரவேசிக்க அப்பட்டணத்தைச் சுற்றி வந்தபோது அதற்கு தெற்கேயுள்ள ஓபேல் குன்றுமீது ஏறி எருசலேமுக்குப் போகிற சாலகத்தைக் கண்டனர். ஓபேல் குன்றில் கீயோன் என்ற ஓர் ஊற்று இருந்தது. கீயோன் என்றால் கொப்பளித்துப் பொங்குதல் என்று அர்த்தம். எபூசியர் அவ்வூற்றில் தண்ணீர் எடுக்க இந்த சாலகத்திற்கு சுரங்கவழி அமைத்து இருந்தனர். இதன் வழியாக தாவீதின் சேவகர்கள் சென்று பட்டணத்தைப் பிடித்தனர். தாவீது இதை கைவசமாக்கின பின்பு, தாவீதின் நகரம் என்று தன் பெயரை இட்டான். எசேக்கியா ராஜாவின் காலத்தில் அந்தத் தண்ணீர் நேரடியாக எருசலேமுக்குள் வந்து விழும்படிக்கு சீலோவாம் குளமும் கால்வாயும் வெட்டி தண்ணீரைத் திருப்பினான். அக்காலத்தில் இதற்கு ராஜாவின் குளம் என்று பெயர்.




**46 சபை:**

**புறஜாதி சபை: (முதல் சிறப்புகள்)**

| | |
|---|---|
| 1. முதல் இரட்சிப்பு - கொர்நேலியு (செசரியா) | அப்போ 10:1-48 |
| 2.முதல் சபை - அந்தியோகியா - | அப் 11:19-24 |
| 3. முதல் அப்போஸ்தலன் - பவுல் - | அப் 11:25 |
| 4. முதல் பெயர் - கிறிஸ்தவர்கள் - | அப் 11:26 |
| 5. முதல் ஊழியர்கள் - பவுல், பர்னபா - | அப் - 13:1 - 3 |
| 6. முதல் பண உதவி - எருசலேமுக்கு - | அப் - 11: 27 - 30 |
| 7. முதல் நிருபம் - அந்தியோகியாவுக்கு - | அப் - 15 : 22 - 35 |



**47 ரோமர்கள்:**

ரோமர்கள் தங்களுக்குச் சொந்தமாகிவிட்ட தேசங்களிடமிருந்து சகல அதிகாரங்களையும் பறித்துக் கொள்வது. ரோமப் பேரரசிற்கு வழக்கமில்லை. ராஜ தந்திரத்துடன் தாங்கள் கைப்பற்றியத் தேசங்கள்; சுய அரசாங்கம் அமைத்துக்கொள்ள அனுமதித்தது. மத சம்பந்தப்பட்டப் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் பூரண அதிகாரங்களும் கொடுத்தன. ஆனால் மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் மட்டும் கொடுக்கப்பட வில்லை. அத்தகைய பொய் வழக்குகளை ரோம அதிகாரி மீண்டும் ஒரு முறை விசாரிக்க வேண்டுமென்பது சட்டம். மரண ஆக்கினை நிறைவேற்றுவதோ நிராகரிப்பதோ அவன் பொறுப்பு.

# திருமறைக்களஞ்சியம்!



## 48 கலிலேயா:

இயேசுவானவரின் காலத்தில் சமாரியாவுக்கு வடக்கே மத்திய தரைக் கடலோரத்திலுள்ள பெனிக்கியா நாடு துவங்கி கிழக்கில் கலிலேயா கடல் மட்டும் இருந்தது. இதன் நீளம் ஏறக்குறைய அறுபது மைல்களும், அகலம் இருபத்தைந்து மைல்களும் இருந்தன. லீபனோன் மலையிலிருந்து இந்த நாட்டுக்கு அநேக ஆறுகள் பாய்கிறதினால் இது அதிக செழிப்பான இடமாக இருந்தது. (கலிலேயா என்றால் வட்டம் என்று அர்த்தம்)

## 49 கலிலேயாக் கடல்:

இது கடல் போன்ற பெரிய ஏரியாகும். இதில் யோர்தான் நதி வந்து சங்கமம் ஆகிறபடியால் இதன் தண்ணீரில் உப்பு இல்லாதிருந்தது. இதன் நீளம் ஏறக்குறைய பதிமூன்று மைல்களும், அகலம் எட்டு மைல்களும் இருந்தது. இந்தக் கடல்கரையின் ஓரத்திலே கப்பர் நகூம், கெனசரேத், பெத்சாயிதா, திபேரியா ஆகிய கிராமங்கள் இருந்தன.

## 50 மைல்கள்:

| | | | |
|---|---|---|---|
| கல்தேயா ஊர் என்ற இடம் முதல் சீரியா பதான் அராம் வரை | ... | 600 | மைல்கள் |
| பதான் அராம் முதல் கானான் எல்லை வரை | ... | 300 | மைல்கள் |
| கானான் கிழக்கு எல்லை முதல் மேற்கு எல்லை வரை | ... | 200 | மைல்கள் |
| கானான் முதல் எகிப்து வரை | ... | 250 | மைல்கள் |
| கானான் முதல் தெற்கு வனாந்திர வழியாக கல்தேயர் பாபிலோன் வரை | ... | 800 | மைல்கள் |

* * *

| | | | |
|---|---|---|---|
| எருசலேம் முதல் பெத்லகேம் வரை | ... | 5 | மைல்கள் |
| எகிப்து முதல் பெத்லகேம் வரை | ... | 250 | " |
| எருசலேம் முதல் பெத்தானியா வரை | ... | 1½ | " |
| எருசலேம் முதல் சமாரியா வரை | ... | 36 | " |
| எருசலேம் முதல் நாசரேத்து வரை | ... | 80 | " |
| கப்பர் நகூம் முதல் நாயீன் வரை | ... | 25 | " |
| எருசலேம் முதல் யோப்பா வரை | ... | 54 | " |
| லித்தோ முதல் யோப்பா வரை | ... | 11 | " |
| யோப்பா முதல் செசரியா வரை | ... | 32 | " |
| எருசலேம் முதல் அந்தியோகியா வரை | ... | 300 | " |
| அந்தியோகியா முதல் பெர்கே வரை | ... | 110 | " |
| அந்தியோகியா முதல் இக்கோனியா வரை | ... | 30 | " |
| லீஸ்திரா முதல் இக்கோனியா வரை | ... | 20 | " |
| பெர்கே முதல் லீஸ்திரா வரை | ... | 25 | " |
| அத்தலியா முதல் பெர்கே வரை | ... | 13 | " |

## 51 ஜாதிகள்:

| வேதகால ஜாதிகள் | தற்கால ஜாதிகள் |
|---|---|
| 1.சேம் ஏலீம் மூலமாக : பெர்சியர் | |
| அசூர் மூலமாக : அசீரியர் | ஆரியர்,இந்தியர், |
| ஆராம் மூலமாக : சீரியர் | சீனர், ஜப்பானியர், பர்மியர் |
| 2. காம்: நிம்ரோத் மூலமாக : பாபிலோனியர் | ஆப்பிரிக்கர் (நீக்ரோக்கள்) |
| மிஸ்ராயீம் மூலமாக : எகிப்தியர்,எத்தியோப்பியர் | |
| கஸ்லூகீம் மூலமாக : பெலிஸ்தியர் | |
| கானான் மூலமாக : கானானியர் | |
| 3. யாப்பேத்: மாதாய் மூலமாக : மேதியர் | |
| யாவான் மூலமாக : கிரேக்கர் | கிரேக்கர் |
| 4. ஆபிரகாம்: யாக்கோபு மூலமாக : இஸ்ரவேலர்கள் | யூதர்கள் |
| 5. லோத்து : மூலமாக: மோவாபியர், அம்மோனியர் | |
| 6. ஆபிரகாம் : கேத்தூராள் : மீதியானியர் ஆகார்: அரபுக்கள் | அரபுக்கள் |
| 7. ஈசாக்கு : ஏசா மூலமாக : ஏதோமியர் எலீப்பாஸ் : அமலேக்கியர் | |

(வம்ச அட்டவணைகள் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

தற்கால ஜாதிகள் நான்கு நிலைமைகளில் பிரிந்து இருக்கின்றனர்.

1. பூர்வீக விக்கிர ஆராதனைக்காரர்கள்
2. யூதர்கள்
3. இஸ்லாமியர்கள்
4. கிறிஸ்தவர்கள்

## 52 ரோமச்சட்டங்கள்:

ரோமர்கள் அனுசரித்த வழக்கு சம்பந்தமான சில சட்டங்களையும் மட்டும் கவனிப்போம். அதாவது குற்றவாளியையும் எதிரியையும் முகமுகமாக நிறுத்தி எதிரி சாட்டின குற்றத்திற்கு எதிர் உத்தரவு சொல்ல நியாயாதிபதி அனுமதிக்க வேண்டும். (அப்போ.25:16)

குற்றவாளியை விசாரிக்குமுன் அடிக்கக்கூடாது (அப்போ 22:25)

ரோம பிரஜைகளை அடித்துத்தண்டிக்கக்கூடாது. (அப்போ 16:37: -39

குற்றவாளிக்கு எதிரான சர்ப்பனைகள் எதிரிகள் செய்வார்களானால் அவர்கள் மேலதிகாரிகளிடம் தக்கப்பாதுகாப்புடன் அனுப்பவேண்டும். (அப்.23:18-35) வழக்கின் நிலைமைகள் சிக்கலாகத் தோன்றுமானால் மறு விசாரனையாக ஒத்தி வைக்கலாம் மேலும் விசாரணை (அப்போ 24:1-23)நாட்களை நீடித்து காலங்களைக் கடத்தலாம். (அப்போ 24:24-27)

குற்றவாளி இராயனுக்கு அபயமிட்டால் தக்க பாதுகாப்போடு அவனை அனுப்பவேண்டும் (அப்போ 25:1-12)

மேல் விசாரனைக்குக் குற்றவாளியை அனுப்பும்போது தக்கக்குற்றச்சாட்டினையும் நன்றாக விசாரித்து எழுதி அனுப்ப வேண்டும் (அப்போ 25:13-26)

# ஞானக்களஞ்சியம்

## 33 யூதர் – ஹிட்லர்:

ஹிட்லரின் இனப்படுகொலையை யூதர்கள் எப்படி எதிர்கொள்வது என்று கேட்டபோது, யூதர்கள் அனைவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். அதுவே ஹிட்லரின், ஜெர்மன் மக்களின் மனசாட்சியை உலுக்குவதாக அமையும் என்றவர் காந்தி.

நன்றி - தி.இந்து (8.12.13) பக்கம் 9

## 34 நெல்சன் மண்டேலா:

1918ம் ஆண்டு ஜுலை 18ல் தென்னாப்பிரிக்காவில் உள்ள டிரான்ஸ்கே பகுதியில் பிறந்த மண்டேலாவின் இயற்பெயர் மண்டேலா ரோலிஹ்லாஹ்லா இவரது தந்தை தெம்பு மக்கள் இனத்தலைவராக இருந்தார். தாய் கிறிஸ்தவ சமயத்தவராக இருந்ததால் கிறிஸ்தவமிஷனரிகள் நடத்திய பள்ளிக்கு தம் மகனை அனுப்பினார். அங்கு அவருக்கு நெல்சன் என்ற பெயர் சூட்டப்பட்டது. அதன் பின்பு கிறிஸ்தவராகவே வாழ்ந்தார். தந்தை மரணத்திற்குப் பின் மண்டேலா தம் இனத்தின் தலைவரானார்.

நன்றி - தினமலர் (7.12.13) பக்கம் 14

## 35 கிளாடிஸ் ஆல்வார்ட் :

இவர் இங்கிலாந்திலுள்ள இலண்டன் நகரின் வடக்குப் பகுதியில் வசித்து வந்த ஆல்வார்டு தம்பதிகளுக்கு முதல் மகளாய் பிறந்தார். இவர் இங்கிலாந்து தேசத்தின் சிட்டுக் குருவி என்று செல்லமாக அழைக்கப்பட்டார். இவருக்கு 14 வயது ஆகும் போது, ஒரு சாலையில் சென்று கொண்டிருந்த சமயத்தில் சில வாலிப பெண்களினால் பல வந்தமாக ஒரு ஆலயத்திற்குள் கொண்டு வரப்பட்டு, தேவனுடைய செய்தியைக் கேட்டு, தன் ஆண்டவரின் மீட்பைப் பெற்றார். சில வருசங்களுக்குப் பின்பு, சீனாவுக்கு மிஷனரியாகப் போக வேண்டும் என்ற எண்ணத்திற் குள்ளே வந்தார். இவருக்கு கல்வியறிவு குறைவாக இருந்ததால் எந்த ஒரு மிஷனரி சங்கமும், இவரை சீனாவுக்கு அனுப்ப முன் வரவில்லை. இதனால் இவருக்கு 30 வயதான போது, ஒரு வேலையில் அமர்ந்து, தன் வருவாயின் ஒரு பகுதியைச் சேர்த்து வந்தார். அக்காலத்தில் சீனாவுக்கு ஒரு வழிப் பயணச் சீட்டின் செலவு 47 பவுண்டு ஆகும். இது அக்காலத்தில் மிகப்பெருந் தொகையாகும். இவைகளை அவர் சேர்த்த பின்பு 1932 அக்டோபர் 15ம் தேதி சீனாவுக்குப் புறப்பட்டார். ஏற்கனவே சீனாவில் 73 வயது நிரம்பிய திருமதி இலாசன் அம்மையார் மிஷனரியாக ஊழியம் செய்து வந்தார். கிளாடிஸ் அவரிடம் சென்று அவருக்கு உதவியாக இருந்து, தனது மிஷனரி ஊழியத்தைத் துவக்கினார் ஏறக்குறைய 38 வருசங்கள் தன் ஊழியத்தை நிறைவேற்றி நித்தியத்தில் பிரவேசித்தார்.

## 36 ஆலன் கார்டினர்:

1794ல் இங்கிலாந்தில் பிறந்த இவர் தமது 16ம் வயதில், உயர் கல்வியை முடித்துக் கொண்டு, கடற்படையில் சேர்ந்து நான்கு வருசங்களில் பதவி உயர்வு பெற்று, ஒரு கப்பலை ஏற்று நடத்தும் தலைவன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் தன்னுடைய தந்தை எழுதிய தன் தாயாரின் சுய சரித்திரத்தை வாசித்து, தேவபக்தி, விசுவாசம் இவைகளுக்குள் நடத்தப்பட்டு, வேதாகமத்தை வாசிக்கத் தூண்டப் பெற்றார். பின்பு தன் ஆண்டவரின் மீட்பைப் பெற்றார்.

உலகத்தின் பல பாகங்களிலும் சுற்றித் திரிந்த இவர் பசிபிக் தீவுகளில் ஒன்றான தஹீதி தீவில் தங்க வேண்டியது வந்தது. அங்கு நடந்து கொண்டிருந்த ஒரு பாடசாலையின் அருமைகளை கவனித்து, மிஷனரி ஊழியத்திற்காகத் தூண்டப்பட்டார். பின்பு தனது வேலையை விட்டு விட்டு, தென் ஆப்பிரிக்கா பகுதிகளுக்கு, பல முறை சென்று தனது ஊழியத்தைத் துவக்கினார். ஒவ்வொரு முறையும், அவரின் ஊழியத்தில் பல விதமான எதிர்ப்புகளும், சோதனைகளும், தோல்விகளும், ஏற்பட்டது. தீவுகளில் இவர் ஊழியத்தை ஆரம்பிக்கும் போது, அத்தீவுகளைச் சேர்ந்தவர்கள் அவருடைய உடைமைகளை திருடியதோடு, அவருடைய உயிருக்கும் பலவித ஆபத்துகளை விளைவித்தனர். இதனால் ஒரு மிஷனரி கப்பல் வாங்கி ஊழியத்தில் பயன்படுத்தினால், மிகுந்த பாதுகாப்பாக இருக்கும் என்று நம்பினார். ஆனால் மிஷனரி சங்கங்கள்; அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை. பின்பு தனது சொந்தப் பணத்திலும், சிலருடைய உதவிகளைக் கொண்டும், இரண்டு சிறிய கப்பல்களை வாங்கி, தாங்கள் தீர்மானித்திருந்த தென்அமெரிக்காவின் ஸ்பானியர் துறைமுகம் சென்றடைந்தனர். அவர்களுடைய ஒரு கப்பல்; காற்று அதிகமாக வீசினபடியினாலே உடைந்து போயிற்று. இவர்களுக்கு உணவுப்பொருள்கள் கொண்டு வரக்கூடிய, நிவாரணக் கப்பல் உதவிக்கு வரவில்லை. ஆலன் கார்டினர் குழுவில் ஏழுபேர் இருந்தனர். அவர்கள்

வெளிஉலகுத் துண்டிக்கப்பட்டவர்களாக, ஒரு தீவில் இருந்தனர். தங்களின் பசியை போக்கும் பொருட்டு, ஒரு நரியையும், ஆறு எலிகளையும், சில செடிகளின் தண்டுகளையும் புசித்தனர். அதனால் ஸ்கர்வி என்னும் நோயினால் தாக்கப்பட்டனர். அவர்களுடைய மரண நேரம் வந்தபோது, எங்களைக் காட்டிலும் மேலானவர்களை, பயிற்சி பெற்றவர்களையும், தேவன் எங்களுக்குப் பின்பு அனுப்புவார்; என்ற நம்பிக்கையோடு எழுதி வைத்து விட்டு 1851 செப்டம்பர் 6ம் தேதியில் மற்றவர்களுக்குப் பின் ஆலன் கார்டினரும் இறந்தார்.

ஏறக்குறைய 20 நாட்களுக்குப் பின்பு வந்த நிவாரண கப்பல்; அவர்களுடைய எலும்புக் கூடுகளையும், அவர்கள் எழுதி வைத்த கடிதத்தையும் தான் காண முடிந்தது. ஆலன் கார்டினரின் மிஷனரி வாழ்க்கை மற்ற மிஷனரிகளின் வாழ்க்கையைப் போல் அல்லாமல் வேறு பட்டதாய்க் காணப்பட்டது. அவருடைய மிகுந்த பிரயாசமும், முயற்சியும் எவரையும் கிறிஸ்தவராக்க முடியவில்லை. கிறிஸ்தவ சபையும் உண்டாக்கப் படவுமில்லை. இவருடைய பரிதாபமான மரணத்தைக் கேள்விப்பட்ட இங்கிலாந்து தேச சபைகள்; பின்பு செயல்படத் துவங்கின. அதன் பலனாக அவர் இறந்த அதே இடத்தில் படகோனியா மிஷனரி சங்கம் உருவாயிற்று. மீண்டும் அச்சங்கம் மிஷனரி கப்பல் ஒன்று வாங்கி, அதற்கு ஆலன் கார்டினர் என்று பெயரிட்டனர். அக்கப்பலில் இருந்து கொண்டே அங்குள்ள எல்லா தீவுகளையும் சந்தித்து, மிஷனரி ஊழியங்களை ஆரம்பித்து, அத்தீவார்கள் மீட்கப்பட காரணமாயினர்.

### 37 மரணதண்டனை:

ரோம பேரரசுவின் காலங்களில் பல நாடுகள் அந்நாட்டிற்குக் கீழ்ப்பட்டிருந்தன. எல்லா நாடுகளுக்கும் ஓரளவு சுதந்தரம் ரோமர் கொடுத்திருந்தனர். தற்காலத்தில் நமது இந்திய தேசத்தில் மத்திய அரசுக்கு பல மாநில அரசுகள் கீழ்ப்பட்டிருப்பது போலேயுள்ள பேராட்சி அக் காலத்தில் நடந்தன என்று கூறலாம். எல்லா நாடுகளிலும் உள்ள குற்றவாளிகளுக்கு, அந்நாட்டு பழக்க வழக்கத்திற்கு ஒத்த நிலையில் மரண தண்டனைகள் ரோம அதிகாரிகள் உறுதி செய்த பின்பு நிறைவேற்றப்பட்டன. அதன் படி சிலுவைகளில் அறைந்து கொல்லப்பட்டனர். பனிக்கட்டிகளில் கிடத்தி கொல்லப்பட்டனர். பந்து மாதிரி மனிதர்களை சுருட்டி மலைகளிலிருந்து உருட்டி சின்ன பின்னமாக்கி கொல்லப்பட்டனர். காட்டு மிருகங்களுடைய குகைகளில் தள்ளிக் கொல்லப்பட்டனர். சிரச்சேதம் பண்ணப்பட்டனர். தூக்கிலிடப்பட்டனர், விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டனர், ரோமில் புதிய நிலைமையில் ஒரு மரணதண்டனை கொடுக்கப்பட்டது. அதாவது: ஒருவன் இன்னொருவனை கொலை செய்து விட்டால், கொலை செய்யப்பட்டவனுடைய சரீரத்தை, கொலை செய்தவனுடைய முதுகில் வைத்துக் கட்டி, அதை சமந்து செல்லும் படியாக காவல் சேவகர்களுடன் அனுப்புவர். இவைகளை எல்ல ஜனங்களும் பார்ப்பார்கள். அந்த செத்த சரீரம் அழுகி, நாறி, புழுபுழுத்து, சுமந்தவன் மேல் வடிந்து, அந்த சரீரத்தினாலே அதை கொலை செய்தவனும் சாகவேண்டும். அதுவரை அவனுக்கு விடுதலை என்பது இல்லை. சுமந்தவன் இறந்தவுடன் இரு சரீரத்தையும் சேர்த்து புதைப்பர். பாவம் என்பது இது போன்ற செத்த சரீரத்தை சுமப்பதற்கு ஒப்பாளது என்றும் அதிலிருந்து விடுதலை பெறமுடியாமல், தாம் தவிப்பதாகவும் பவுல் கூறுகிறார். (ரோம 7:24)

### 38 ஒளி:

ஒளி இருவகைப்படும் (1) புறத்தோற்றத்து வெளிச்சம் சரீர வாழ்க்கைக் குரியது.

(2) அகத்தோற்றத்து வெளிச்சம் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரியது.

- ஒளி எடுத்துக்காட்டுகிறது, வெளிப்படுத்துகிறது, ஒன்று சேர்க்கிறது, நடத்துகிறது.
- மார்க்க சம்பந்தப்பட்ட காரியங்களில் ஒளி என்பது மெய் ஞானத்தைக்காட்டுகிறது.
- உலகத்திற்கு குருடாகும் போது ஆவிக்குரிய வெளிச்சம் கிடைக்கிறது.
- மனிதர்கள் சந்தேகம், பயம், நிலையற்றதன்மை, இருமனம் என்ற இருளில் இருக்கிறார்கள்.
- வழிகாட்டும் ஒளியில்லாத வாழ்க்கை பாழ்பட்டதாகும்.
- இயேசுவானவர் உலகத்தின் ஒளியாக தம்மைப் பின்பற்றுகிறவர்களை இன்றும் நடத்துகிறவராயிருக்கிறார். (யோவா 1:4-9,-8:12,9:5,-12:35, அப்போ 26:14-23)

### 39 சதுர அகராதி:

வீரமாமுனிவர் என்ற புனைப் பெயரைக் கொண்ட பெஷிப்பாதிரியார் (Father Besehi) தொகுத்து வெளியிட்டது சதுரகராதி. அதுவே தமிழில் முதன் முதலில் உண்டான அகராதி. அதில் நான்கு வேறு பிரிவுகள் இருப்பதானல் சதுரகராதி என்ற பெயர் வந்தது. (சதுர் - நான்கு)

### 40 கிரகங்கள் – PLANETS :

1. சூரியன் - Sun
2. சந்திரன் - Moon
3. செவ்வாய்- Mars
4. புதன் - Mercury
5. குரு - Jupiter
6. சுக்கிரன் - Venus
7. சனி - Saturn
8. இராகு - The Moon's Ascending Node
9. கேது - The Dragon's Descending Node.

### 41 பூதங்கள் (ஐந்து):

1. நிலம் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வானம்

### 42 கள்ளப்போதகர்கள்:

பாரம்பரிய சபையின் தலைவர்களும், புரொட்டஸ்டண்ட் சபையின் தலைவர்களும், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு கம்யூனிஸ்ட் கொள்கைகளை ஆதரித்துப் பேசினர். பாரம்பரிய சபையின் பிஷப் ஒருவர் தன்னுடைய மேல்

அங்கியில் அரிவாள், சுத்தியல் சின்னத்தை அணிந்துக் கொண்டு, தன்னுடைய பாதிரிமார்களைப் பார்த்து, நீங்கள் இனி என்னை கிருபை நிறைந்தவரே என்று அழைக்காதீர்கள்: பிஷப் தோழனே என்று அழையுங்கள் என்றார். கம்யூனிசத்தின்படி ஒருவர் மற்றவரைப் பார்த்து, தோழனே என்றுதான் அழைக்க வேண்டும்.

பின்பு ஒரு சமயம் ரெஸிட்டா என்ற பட்டணத்தில் பாப்திஸ்துகளின் மாநாடு செங்கொடியின் கீழ் நடைபெற்றது. மாநாட்டின் முடிவில், சோவியத் யூனியனின் தேசிய கீதம் பாடப்பட்டது. அப்போது எல்லோரும் எழுந்து நின்றனர். மாநாட்டில் பாப்திஸ்து சபையின் தலைவர் எழுந்து நின்று, ஸ்டாலின் தேவனுடைய கற்பனைகளை நிறைவேற்றினாரேயன்றி வேறொன்றும் செய்யவில்லை என்று பிரசங்கம் செய்தார். அது மாத்திரமல்ல, ஸ்டாலின் வேதாகமத்தை மிக.மிக. நன்றாக போதித்து வந்தார் என்றும் அவர் மீது புகழுரை பாடினார்.

யாராஸ்,காயு, ரோஸிமானு என்ற பாதிரிமார்களும் ஸ்டாலினை மிக அதிகமாகப் புகழ்ந்தனர். பின்னால் அவர்கள் இருவரும் கம்யூனிஸ்டுகளின் இரகசிய போலீஸ் அதிகாரிகளாயினர். ராப் என்ற ருமேனியா லுத்தரன் சபையின் துணை பிஷப், வேதாகமப் பயிற்சிப் பள்ளியொன்றின் மாணவர்களிடத்தில் தேவன் மூன்று வெளிப்பாடுகளை அளித்திருக்கிறார். ஒன்று மோசேயின் மூலமாக, மற்றொன்று இயேசுவின் மூலமாக, மூன்றாவதாக ஸ்டாலின் மூலமாக இதில் மூன்றாவதாக வரும் ஸ்டாலின் அவருக்கு முந்தினவராகிய இயேசுவையும் கடந்து முன்னேறிச் சென்று விட்டார் என்று போதித்தார் (ரிச்சர்ட் உம்பிரண்ட்)

## 43 பிரசங்கம் : (இது ஐந்து வகைப்படும்)

1. **ஆராதனைப் பிரசங்கம்:-** இது இயேசுவானவரின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், மகிமை இவைகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும்.
2. **ஜெபத்திற்குரிய பிரசங்கம்:-** இது ஜெப வாழ்க்கை, பாவ அறிக்கை, பிரதிஷ்டை, ஒப்புக் கொடுத்தல், வாக்குத்தத்தங்கள் இவைகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும்.
3. **சுவிசேஷப் பிரசங்கம்:-** இது மனந்திரும்புதல், இரட்சிப்பு, மீட்பு, சுத்திகரிப்பு, பரிசுத்தம், ஒப்புக்கொடுத்தல், தேவராஜ்யம், மரணம், நியாயத்தீர்ப்பு, நித்திய அழிவு இவைகளை பற்றியதாக இருக்கும்.
4. **வேத ஆராய்ச்சிப் பிரசங்கம்:-** இது தேவன், சிருஷ்டிப்பு, ஆளுகை, மகிமை, வேத புருஷ, ஸ்திரீகளின் சரித்திரங்கள், காலங்கள், தீர்க்கதரிசனங்கள், உபதேச வியாக்கியானங்கள், போதனைகள் ஆகிய இவைகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும்.
5. **பொதுப் பிரசங்கம்:-** இது விசேஷத்த சமயங்களுக்காக பொருத்தமாக தயாரிக்கப்படுகிற பிரசங்கத்தைக் குறிக்கும். அதாவது ஞானஸ்நானம், ஊழியர் பிரதிஷ்டை, ஜெபக்கூட பிரதிஷ்டை, விவாகம், மரணம், குழந்தையின் பிறப்பு, பெயரிடல், பிறந்த நாள் நினைவு கூருதல், போன்றவைகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும்.

## 44 பாடல்கள்:

பாடல்களும் மேற்கூறிய ஒழுங்கின்படியே ஐந்து வகைப்படும். சபைகளில் சமயத்திற்கேற்ற பாடல்களை பயன்படுத்தாததினால் வளர்ச்சி குன்றி இருக்கிறது. நினைத்த சமயத்தில் நினைத்த பாடல்களை படிக்க முயற்சிப்பது நல்ல ஒழுங்கல்ல. சிலர் தன் விருப்பங்களை நிறைவேற்ற முயற்சிக்கிறதினால் கர்த்தருடைய பிரசன்னம் கெடுகிறது. கர்த்தருடைய கிரியை இராது. பாடல்களில் உயிர்மீட்சி பெற வேண்டிய ஜனங்கள் மறுமலர்ச்சி இல்லாது திரும்பி போவார்கள். பாடல்களைப் படிக்கும்போது கவனிக்க வேண்டிய சில காரியங்கள் உண்டு.

1. துர்போதனை உள்ள பாடல்களை நீக்க வேண்டும்.
2. இலக்கணப் பிழை, அச்சுப்பிழை உள்ள பாடல்கள் பாட்டினுடைய அர்த்தங்களை மாற்றக் கூடியதாக இருக்கும்
3. ஆராதனைக்கோ, ஜெபத்திற்கோ, சுவிசேஷம் அறிவிப்பதற்கோ, வேத ஆராய்வு உணர்வு ஏற்படுவதற்கோ ஒரு வகையிலும் பொருந்தாத சில தத்துவப் பாடல்கள் உண்டு.
4. வேத சரித்திரங்களை முன் பின் மாற்றி சரணங்கள் அமைத்து, சிந்தனைகளை சிதற அடித்து குழப்பக் கூடிய சில பாடல்கள் உண்டு.
5. அர்த்தமற்ற வார்த்தைகள், மாம்ச எழுப்புதலுக்கேற்ற ராகங்கள் உள்ளப் பாட்டுகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிக நல்லப்பாட்டுகளாக கருதப்படுகிறது. சுருக்கமாகக் கூறிய இந்த வகைப் பாடல்களை நீக்கினால் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் புத்துணர்ச்சி பெறுவார்கள் என்பது உறுதி.

## 45 சிங்காரம்:

ஆரம் எனப்படுவது ராஜாக்கள் தங்கள் கழுத்தில் அணியக்கூடிய ஒரு சரப்பணியாகும். இதில் பலவித இரத்தினங்களும், முத்துகளும் பதித்திருக்கும். ஒருஅரசன் தன் ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளும் போது இதை அணிந்து கொள்கிறான். சிங்காரம் எனப்படுவது, சிங்கத்தின் முகத்தைச் சுற்றிலும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் சிகையைக் குறிக்கிறது. சிங்கம் தன் கோபத்தில் தன்னுடைய சிகையை கிளர்த் தெழும்பச் செய்யும். அதன் தோற்றமே சிங்காரம் எனப்படும். இவ்வார்த்தையை அலங்காரத்திற்காகப் பயன்படுத்துகின்றனர். உண்மையில் சிங்காரம் என்றால் தனக்குத்தானே நிகர், அதாவது: வாழ்விலும் தாழ்விலும் பிறரை சார்ந்து கொள்ளாத நிலை அல்லது கெம்பீரத் தோற்றம் எனவும் பொருள்படுகிறது.

# மனதிற்கு இன்பமில்லையே!

அமுதையும் தேனையும் அள்ளிப் பருகினாலும்
மனதிற்கு இன்பமில்லையே !- இயேசையா!
அத்தனே உந்தனின் தேன் மதுர நாமத்தை
எண்ணியே இன்பமுற்றனே !- இயேசையா!

வெள்ளியும், பசும்பொன்னும் மலை போல குவித்தாலும்,
நிலையாயிருப்பதில்லையே !- இயேசையா!
அத்தனே உன் ஞானம் ; ஜீவனாகும் போது
நித்திய வாழ்வு ஆகுமே ! - இயேசையா !

ஒளிரிடும் முத்துக்கள்; பன்னிரு இரத்தினங்கள்
எத்தனையானலுமே - இயேசையா !
அத்தனே உன் முகம் ஒளிரிடும் மகிமைபோல்
பாரினில் ஒன்றும் இல்லையே ! இயேசையா !

இலவங்கத்தில் நளதத்தில், குங்குமத்திலும்
சுகந்த வாசனையுண்டோ ! - இயேசையா !
அத்தனே உன் ஜீவன் சுகந்தமாய் வீசிடும்
வாசனை போல உண்டோ ! - இயேசையா !

பஞ்ச பூதங்களும், அஞ்சி நடந்திட,
உன் வன்மை போலயுண்டோ ! - இயேசையா !
அத்தனே, அண்ட அகிலாண்டமானாலும்
உன் பாத படிகளாகுமே ! -இயேசையா !

